

# கிழவன் சேதுபதி

மீ. மனோகரன்

# கிழவன் சேதுபதி

மீ. மனோகரன்

அகரம் சிவகங்கை

Title:- KILAVAN SETHUPATHI

Author: Mee. Manoharan
32, Teppakulam East St
Sivaganga 623 560

Brief Indication of contents: A comprehensive study of Kilavan Sethupathi first independent Tamil monarch after Chera-Chola-Pandyas, based on historical Facts, research findings and literary evidences —with special reference to Sethupathis' connections with Ceylon.

Edition: First, Oct. 1983.

Printer & Publisher: AKARAM.
Sivankoil South St-
SIVAGANGA-623 560

Price: Rs. 16

Size of the book: Demy 1 × 8

Paper used: White Printing 16 kg

No of Pages 156

V21196
N83

84180

விலை: ரூபாய் பதினாறு

முதற் பதிப்பு: 1983

உரிமை: ஆசிரியருக்கே

அச்சும் அமைப்பும்: அகரம்
சிவகங்கை-623 560

வீரர்கள் வாழும் திராவிட நாட்டை
வென்றவர் கிடையாது
வேலும் வாளும் தாங்கிய மறவர்
வீழ்ந்ததும் கிடையாது
தன்னிகரில்லா மன்னவர் உலகில்
தமிழே நீதிபதி
தரணியிலே இதன் பெருமை உரைத்தோன்
கிழவன் சேதுபதி

—கவியரசு கண்ணதாசன்

நன்றி: ''சிவகங்கைச் சீமை''

# ஆசிரியர் பற்றிய குறிப்பு

28-5-1932 ஆம் நாள் மீனாட்சி சுந்தரம் — இலக்குமி தம்பதியினரின் மூத்த மகனாகப் பிறந்த இந்நூலாசிரியர் கல்வி பயின்றது முகவை அரசர் மேல்நிலைப் பள்ளியிலும் மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும். கவிஞர் மீரா இவர் தம்பியாவார்.

இவரது முதல் நூல் ''தென் அமெரிக்காவின் சோழர்கள்'' *1976*-இல் வெளியிடப்பெற்றது.

மானிடவியல், வரலாறு மற்றும் இலக்கியத்திறன் குறித்த இவரது கட்டுரைகள், கலைக்கதிர், அணுக்கதிர், முத்தாரம், திராவிட நாடு, அறப்போர், ஆராய்ச்சி, அன்னம் விடு தூது, *SPAN*, *KURAL NERI*, *LITTCRIT* முதலிய இதழ்களில் வெளிவந்துள்ளன.

அவற்றுள் சில, பத்திரிகைகளின் பாராட்டையும் பெற்றுள்ளன.

இவர் தமிழ்நாடு நீதிஅமைச்சியல் துறையில் பணியாற்றுகிறார்.

'தென் அமெரிக்காவின் சோழர்கள்' பற்றி வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் கே. சேஷாத்ரி ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' (13-1-79) இதழில் எழுதிய மதிப்புரையில் ஒரு பகுதி;

*''In the book the author discusses striking similarities between the later Cholas of South India and the Mayas and Incas of South America in their customs and manners in the course of seven conveniently divided chapters. With an excellent forward from the reputed historian Dr. N. Subrahmanian, the book is well documented and will be of real use to those interested in comparative study of the two cultures.*

டாக்டர். கே. சேஷாத்ரி, எம்.ஏ,. எம்.லிட்., பி.எச்.டி.,
வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
புதுக்கோட்டை
மாமன்னர் அரசினர் கலைக் கல்லூரி

# அணிந்துரை

சேதுபதிகள் மறவர்களின் தலைவர்களாகக் கருதப்படுகின்றனர். அவர்கள் செம்பி நாட்டு மறவர் என்றும், 'சேதுகாவலர்' என்றும் அழைக்கப்படுகின்றனர். மதுரை நாயக்கரைப் பற்றி முதன் முதலில் ஆய்வு செய்து ஒரு நூலை வெளியிட்டார், பேராசிரியர் சத்தியநாத அய்யர். அந்த நூலில்தான், சேதுபதிகளைப்பற்றிப் பல முதன்மை மூலங்களிலிருந்து கிடைக்கப் பெறும் செய்திகளை ஒன்று திரட்டி நமக்குத் தந்தார், அவர். அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி திரு. நடராசன் என்பவர் சேதுபதிகளைப் பற்றி ஆய்வு செய்து ஓர் ஆய்வுக் கட்டுரையை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எம். லிட்.,பட்டத்திற்காக சமர்ப்பித்தார்.

பேராசிரியர் திருவேங்கடாச்சாரியும் சேதுபதிகளைப் பற்றிச் சுருக்கமாக எழுதியுள்ளார். பிறகு டாக்டர் கதிர்வேலு மறவர் வரலாற்றை ஆராய முனையும்போது சேதுபதிகளைப்பற்றி பல அரிய செய்திகளையும் நமக்குக் கூறியுள்ளார். அவரைத் தொடர்ந்து நான் அவர்களைப் பற்றி மேலும் ஆராய்ந்து ஓர் ஆய்வுக் கட்டுரையை மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் சமர்ப்பித்து 1978-இல் டாக்டர் பட்டம் பெற்றேன். இப்போது கிழவன் சேதுபதியைப் பற்றி இந்நூல் வெளிவந்துள்ளது.

இந்நூலிற்கு அணிந்துரை வழங்க வேண்டுமென்று நூலாசிரியர் என்னை அணுகியபோது நான் சிறிது

சிந்தித்தேன். ஏனெனில் ஏற்கெனவே மேற்கூறியவர்கள் கிழவன் சேதுபதியைப் பற்றிப் பல அரிய செய்திகளை வெளியிட்ட பிறகு திரு மீ. மனோகரன் என்ன புதிய செய்திகளைக் கூறப்போகிறார் என்று நினைத்தேன். ஆனால், இதைப்படித்த பிறகுதான் இவர் இந்நூலை வெளியிட்டது சரி என்று தோன்றியது.

இவர் சேதுபதிகளைப் பற்றி இதுவரை கிடைத்த செய்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டி, ஆய்ந்து, அவர்களிலேயே தலைசிறந்தவரான கிழவன் சேதுபதியைப் பற்றி ஓர் விரிவான நூலை எழுதியது அனைவரின் பாராட்டிற்குமுரியது. கிழவன் சேதுபதி தகுதி அடிப்படையின் கீழ்த்தான் ஆட்சிக்கு வந்தார் என்ற எனது ஆணித்தரமான கருத்தைச் சரி என்று இவர் ஏற்றுக்கொண்டது கிழவன் சேதுபதியின் வாரிசுரிமையை மேலும் வலுப்படுத்துகிறது. கிழவன் சேதுபதிக்கும் சீதக்காதிக்கும் இடையே இருந்த உறவை வலியுறுத்தும் வகையில் இந்நூலின் இறுதியில் ஒரு பிற்சேர்க்கையும் உள்ளது.

இவர் ஏற்கெனவே தென் அமெரிக்காவின் சோழர்களைப் பற்றி எழுதிப் புகழ் பெற்றவர். ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' மூலம் நானே அந்த நூலுக்கு மதிப்புரை வழங்கியுள்ளேன். அந்நூலிலும் சரி, இந்நூலிலும் சரி இவரது நடை நீரோடை போல் உள்ளது. அதே நேரத்தில் அவர் கருத்துக்களைச் சொல்லும் பாணியில் ஓர் சிறந்த ஆய்வாளரின் முதிர்ச்சி தெரிகிறது. இவர் தொடர்ந்து இந்நூலைப் போல் பல அரிய இனிய நூல்களைத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு நல்குவார் என்பது திண்ணம். இவருக்கு எனது உளங்கனிந்த பாராட்டுக்கள்.

கே. சேஷாத்ரி

புதுக்கோட்டை
தேதி: 26-9-83

# முகவுரை

*''வரலாற்றினுல் மக்களுக்கு என்ன பயன்?''*

—இவ்வாறு கேட்பவர்களும் உண்டு.

*''வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி''*

—இந்தப் பாடலை விடையாகச் சொல்லலாம்.

குறைந்த பட்சம் நம் முன்னோர்கள் செய்த தவறுகளை யாவது நாம் திரும்பச் செய்யாமல் திருந்தி வாழ வரலாறு பாடமாக அமையலாம்.

●

வரலாற்று நூல்கள் எனும் போது அவை பெரும்பாலும் தேசிய அளவிலேயே தீட்டப்படுகின்றன. வட்டார வரலாற்றில் உரிய அக்கறை காட்டப்படுவதே இல்லை. பண்டைப் பெருமை மிகுந்த இந்த நாட்டில் முறையாக ஆதாரங்கள் திரட்டப்பட்டால் வட்டார வரலாறுகள் செழுமையும் செறிவும் நிறைந்ததாகத் தீட்டப்பெற முடியும் என்பது வரலாற்றறிஞர் கருத்தாகும். வட்டார வரலாறுகள் வளர்ச்சிபெருத நாட்டில் தேசிய வரலாறு செம்மையாக அமையாது.

வெளி நாட்டார் ஆட்சியில் வட்டார வரலாறுகள் உரு வாவதில் அக்கறை காட்டப்படாதிருந்தது ஆச்சரியத் திற்குரியதன்று. ஏன்? இந்த நாட்டு வரலாறே முழுமை யாகக் கற்றுத்தரப்படுவதில்லை என்றிருந்த காலம் அது. ஒரு நெப்போலியன், ஒரு வெலிங்டன், ஒரு டிஸ்ரேலி— இவர்களைப் பற்றித் தெரிந்தஅளவு, இந்தப் பகுதியைச் சேர்ந்த தளபதி வெள்ளையன் சேர்வைகாரர், சேது நாட்டு விடுதலை வீரன் மேலப்பன், முதலமைச்சர் முத்து இருளப்பப்பிள்ளை — ஆகியவர்களைப் பற்றி எத்தனை பேருக்குத் தெரியும்? தெரியாமலிருப்பதற்குக் காரணம் வட்டார வரலாறு வளர்ச்சி பெருத நிலையேயாம்.

●

மூவேந்தர்களுக்குப்பின்னே சுதந்தரமாக ஆட்சி புரிந்த ஒரே தமிழ்மன்னர்பரம்பரைஎன்று சொல்லக்கூடியவர்கள்

சேதுபதிகள் மட்டுமே. அத்தகைய சேதுபதிகளைப் பற்றித் தமிழில் பேராசிரியர்கள் மு. இராகவையங் காரும் ரா. இராகவையங்காரும், ஆங்கிலத்தில் பேராசி ரியர் ஆர். சத்தியநாதய்யர், திரு. நடராசன் (அண்ணு மலைப் பல்கலைக் கழகம்) திவான் டி. ராஜாராம்ராவ் பேராசிரியர்கள் எஸ். திருவேங்கடாச்சாரி, டாக்டர் எஸ். கதிர்வேல், டாக்டர் கே. சேஷாத்ரி ஆகிய வரலாற்றறிஞர்களும் எழுதியுள்ளார்கள். எனக்கு முன் ஞேடியாக இத்துறையில் உழைத்திருக்கும் அவ்வறிஞர் பெருமக்கள் என் வணக்கத்திற்குரியவர்கள்.

மேற்குறிப்பிட்டவர்களுள் எவர் ஒருவரும் தனியொரு சேதுபதியைப்பற்றி நூல் எழுதவில்லையாதலால் கிழவன் சேதுபதி (1674-1710) யின் வரலாற்றை எழுதும் முயற்சியில் இறங்கினேன்.

மற்றெல்லாச் சேதுபதிகளையும் விடுத்து இச் சேதுபதி யைப்பற்றித் தனிநூல் எழுதும்படியாக அமைந்துள்ள சிறப்புத்தான் என்ன? சுருக்கமாகச் சொல்லப்போனல், கிழவன் சேதுபதிக்கு முன்னும் சரி பின்னும் சரி வெள்ளை யரான அந்நியரின் வெளிப்பகட்டு நாகரிகத்திற்கும் சூழ்ச்சிக்கும் பலியான சமஸ்தானதிபதிகள் ஏராளம். எடுத்துக்காட்டாக, இலங்கையில் போர்த்துகீசியர் ஆட்சி நடந்துகொண்டிருந்த கால கட்டத்தில் தளவாய் சேதுபதி (1635-46) யைத் தோல்வியுறச் செய்ய வேண்டுமென்பதற்காக சேதுக்கடற்கரையை போர்த்துக் கீசியருக்குத்தருவதை திருமலைமன்னர் ஒரு பொருட் டாகக் கருதவில்லை என்கிருர் திரு. க. சி. கமலையா, இராமப்பய்யன் அம்மானை ஆராய்ச்சியில்.

கிழவன் சேதுபதியோ அந்நியருக்கு அனுசரித்துப் போய் முடிவில் அடிமையாகப் போகவிருக்கும் போக்கை விரும்பாதவன். அவன் ஏகாதிபத்திய எதிர்ப்புவாதியாக வாழ்நாள் முழுமையும் விளங்கிவந்திருப்பதொன்றே அவனைப்பற்றித் தனிநூல் எழுதும் தாகத்தை என்னுள் ஏற்படுத்தியது. எனது இந்த முயற்சியினல் ஏதாவது பயன் விளையுமானல் தமிழகவரலாறு எனும் மாளிகை கட்ட நானும் ஒரு செங்கல்லையாவது வழங்கியதாக மகிழ்வேன்.

இந்நூல் அச்சாகி முடியும் தருவாயில், ஒரு நற்செய்தி! வர்த்தக இலாப நோக்கினைக் காரணம் காட்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'சேதுக்கடல் திட்டம்' அண்மையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் காரணமாகவும் திரிகோணமலையைப் பற்றித் தெரிவிக்கப்படும் செய்திகளைக் கருத்தில் கொண்டும், இந்திய நாட்டின் இராணுவ முக்கியத்துவம் கருதி, மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்—என்று அறிவித்ததன் மூலம் கப்பல்—போக்குவரத்துத்துறை அமைச்சர் மாண்புமிகு விஜயபாஸ்கரரெட்டி அத்திட்ட நிறைவேறுதலுக்குப் பச்சைக் கொடி காட்டிவிட்டார் ( 'SETHU PROJECT SURE TO COME'' INDIAN EXPRESS, Madurai dt. 2-10-83) 'சேது எக்ஸ்பிரஸ்' போல சேதுக் கடல் திட்டம் விரைந்து வருக!

•

இலங்கையில் வேர்விட்ட போர்த்துக்கீசிய, டச்சு ஏகாதிபத்திய நச்சு மரத்தின் நிழல் கூட சேதுக் கடலில் படியாது தடுத்த அழியாப் புகழ்க் கிழவன் சேதுபதிக்கு ''சேதுக்கடல் திட்டம்'' நிறைவு பெற்றவுடன், அதுவே ஒரு நிலையான நினைவுச் சின்னமாய் விளங்கும்.

•

''சிவகங்கைச் சீமை'' திரைப்படப் பாராட்டு விழா சிவகங்கையில் நடந்த பொழுது கிழவன் சேதுபதியின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக எடுக்கப் போவதாக கவியரசு கண்ணதாசன் அறிவித்திருந்தார். ஆனால் அவர் பின்னால் அந்த எண்ணத்தைக் கை விட்டு விட்டார். அவரது அவாவை நினைவு கூரும் வகையில் கிழவன் சேதுபதியைப் பற்றிய கவிஞரின் பாடலை நன்றியுடன் முகப்பில் இடம் பெறச் செய்துள்ளேன்.

வரலாற்று நாயகர்களின் புகழுக்குரிய செயல்களை மட்டும் சொல்லி அல்லாதவற்றை மறைக்கும் முறையில் தீட்டப்பெறுவது காலப்போக்கில் புராணமாகவே கருதப் படும்; வரலாறாக ஒப்புக் கொள்ளப்படமாட்டாது. இந்த வகையில் கிழவன் சேதுபதியின் புகழும் இகழும் மறைக் கப் படாது உள்ளபடி தரப்பட்டுள்ளன, இந்த நூலில். வரலாற்று நாயகர்கள் ஒரு காலத்தில் வாழ்ந்திருந் தவர்கள்; திரைப்படத்தில் தோன்றும் கதாநாயகர்

களல்லவே, குறைகளற்றவர்களாய் எப்போதும் காட்சியளித்திட!

சேதுபதிகளின் ஆட்சிக்காலத்தில் மறவர் சீமையில் கிறித்தவப் பாதிரிமார்கள் தங்கள் மதப் பிரச்சாரத்திற்காகத் தங்கி வாழ்ந்தார்கள். அவர்கள் ஆண்டு தோறும்ஐரோப்பாவிலுள்ள தங்கள் தலைமையிடத்திற்கு இங்குள்ள நிலைமைபற்றி கடிதம் மூலம் அறிக்கைகள் அனுப்பினார்கள். சிறந்த வரலாற்றுக் கருவூலங்களான அவை இலத்தீன், இத்தாலியன், போர்த்துகீசிய மொழிகளில் எழுதப் பட்டவை. அவற்றை ஏசுசபையைச் சேர்ந்த ஜே. பெட்ராண்ட் எனும் பாதிரியார் பிரெஞ்சில் மொழிபெயர்த்து நான்கு தொகுதிகளாக வெளியிட்டார். இவற்றில் சிலவற்றை பேராசிரியர் ஆர். சத்தியநாதய்யர், தான் மதுரை நாயக்கர் வரலாற்றை எழுதுவதற்கென்று பிரெஞ்சுமொழி கற்றுக் கொண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அவை சேதுபதிகள் வரலாற்றை அறிய உதவுவனவாம்.

யாழ்ப்பாண வரலாறும் சேதுபதிகளின் ஈழத்தொடர்பை ஓரளவு தெரிவிக்கிறது. இந்த வகையில் இலங்கையின் வரலாறும் சேதுபதிகள் வரலாற்றை அறிய உதவுகிறது.

கிழவன் சேதுபதியோடு தொடர்புடைய வள்ளல் சீதக்காதி, சேதுபதிகளின் வீரத்தளவாய் வெள்ளையன் சேர்வைகாரர்; முதலமைச்சர் முத்து இருளப்பப்பிள்ளை ஆகியவர்களின் வாழ்க்கை வரலாறுகள் பிற்சேர்க்கையில் முறையே 1, 2, 3 இணைப்புக்களாகத்தரப்பட்டுள்ளன. குறைவாக அறியப்பட்டுள்ள இவர்களைப்பற்றிய செய்திகள் இன்னும் தெரியவருமானல் வட்டார வரலாறு வளரும்.

சேதுபதிகளின் ஆட்சியாண்டுகள் குறித்து வரலாற்றாசிரியர்கள் வேறுபடுகின்றனர். பல்வேறு வரலாற்றாளர்களும் தந்துள்ளஆட்சியாண்டுப் பட்டியல்கள் தொகுக்கப் பெற்று அட்டவணை வடிவத்தில் இணைப்பாகப் பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளது; சேதுபதிகள் பற்றி மேலும் ஆராய்பவர்களுக்கு இது பயன்படலாம்.

இந்நூல் ஆய்வு முறையில் அமைவதற்குப் பெரிதும் செய்திகள் தந்து உதவியது சிவகங்கை வட்டத்தில் உள்ள பாகனேரியில் உள்ள காசிவிசுவநாதன் செட்டியார் (நூலக ஆணைக்குழு) நூல் நிலையமாகும். கிழவன் சேதுபதியின் பிறந்த ஆண்டை அறிய முடிகிற வகையில் செய்தி தருவது பிரிட்டோ பாதிரியாரின் வாழ்க்கை வரலாறு. முதலில் பிரெஞ்சில் எழுதப்பட்டு, ஜெர்மனில் மொழி பெயர்க்கப்பட்டு அதனைத் தழுவி ஆங்கிலத்தில் ஆக்கம் பெற்ற அரிய தொரு நூலாகும். தி.தெ.இ.சை. நூற்பதிப்புக் கழகத்தை நிறுவியவர்களுள் ஒருவரான தமிழ்ப்புலமையாளர் பாகனேரி வெ.பெரி.பழ.மு. காசி விசுவநாதன்செட்டியார், தான் சேகரித்துவைத்திருந்த, இது போன்ற 8000க்கு மேற்பட்ட அரிய பல நூல்களையும் அவற்றிற்கான பேழைகளையும் சிவகங்கையில் உள்ள மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் பாகனேரிக்கிளை நூலகத்திற்கு, நூலக ஆணைக்குழுத் தலைவர் திரு உ. பில்லப்பன் எம் ஏ., பி.எல்.. அவர்கள் வேண்டுகோளின் பேரில் அன்பளிப்பாகவழங்கியுள்ளார்.

நூற் கொடை வள்ளல் பாகனேரி திரு. காசிவிசுவ நாதன் செட்டியார் அவர்களுக்கும்,

அந்நூலகத்தினைப் பயன்படுத்த வருவோர்க்கு இன் முகத்துடன் பயனுள்ள முறையில் உதவிடும் கிளை நூலகர் திரு பி. முத்தையாவிற்கும்,

மேற்கு முகவை—திருவில்லிபுத்தூரிலிருக்கும் தனியார் அறக்கட்டளையால் சிறந்த முறையில் நிருவகிக்கப்பட்டுவரும் பெனிங்டன் (PENINGTON LIBRARY) நூல் நிலையத்திலிருந்து சில அரிய நூல்கள் கிடைக்கச் செய்தமைக்கு அவ்வூரைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு ஆர். சி. சங்கரசுப்பிரமணியன் அவர்களுக்கும்,

அதே போல அரிய நூல்கள் சிலவற்றிலிருந்து குறிப்பெடுத்துக் கொள்ள உதவிய மதுரை காமராசர் பல்கலைக் கழக நூலகத்துறையைச் சேர்ந்த திரு எம். எஸ். முத்துவேலு, திரு பாலசுப்பிரமணியன் ஆகியவர்களுக்கும்

புதுக்கோட்டை அரசினர் கல்லூரி நூல் நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்ள உதவியவரும்

புதுக்கோட்டையில் இந்நூல் சம்பந்தப்பட்ட என் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றித் தந்த வருமான கவிஞர் பாலாவிற்கும்

புதுக்கோட்டை சம்பந்தப்பட்ட நூல்களை, அங்குள்ள அருங்காட்சியகத்தில் படித்துக் குறிப்பெடுத்துக் கொள்ள அனுமதித்த காப்பாளர் (Curator) திரு கே. இலக்குமிநாராயணன் (தற்போது காப்பாளர், அரசு அருங்காட்சியகம், சேலம்) அவர்களுக்கும்

மறவர் சம்பந்தப்பட்ட இரண்டு அரிய வரலாற்று நூல்களைப் படித்திடத்தந்த சிவகங்கை —திரு. பாப்பாதுரை என்ற திருவரங்கராசன் அவர்களுக்கும்

நூலின் கைப்பிரதியில் சில பகுதிகளை தட்டச்சு செய்து தந்த திருமதி பார்வதி பழனிச்சாமிக்கும்

சேதுபதிகளைப்பற்றி ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவர் என்ற அடிப்படையில் பொருத்தமானவர் என்று கருதி நான் இந்நூலுக்கு அணிந்துரை தர அணுகிய சில நாட்களிலேயே விரைந்து, உவந்து அணிந்துரை நல்கியமைக்காக டாக்டர் பேராசிரியர் கே. சேஷாத்ரி அவர்களுக்கும் நான் நன்றியுடையேன்.

இந்நூல் செம்மையுற அமையுமாறு அச்சுமூலத்தை சரி பார்த்துத் திருத்தம் செய்வதில் பெரும் பங்காற்றியிருக்கும் என் இளவல் மீரா, வித்துவான் திரு இராம. வரதராசன் ஆகியோரும்

அதே பணியில் அவர்களுடன் ஒத்துழைத்த அகரம் அச்சக நிர்வாகி கவிஞர் ச. நடராசனும் என் நன்றிக்குரியவர்கள்.

அழகுற அச்சும் அமைப்பும் செய்தளித்தஅகரம் அச்சகப் பணியாளருக்கும் வெளியிடும் அகரம் பதிப்பகத்திற்கும் என் நன்றி.

இங்ஙனம்,
அன்பன்
மீ. மனோகரன்
2-10-83

'புத்தர் இல்லம்'
35/5 தெப்பக்குளம்
கிழக்குத்தெரு
சிவகங்கை-623 560

# காணிக்கை

நான் கல்லூரிக் கல்வி பெறுவதில் பெருநாட்டம் காட்டிய
என் தந்தை

**முகவை. சா. மீனுட்சி சுந்தரம் அவர்களுக்கு**

திருவளரும் வொளிநிறையும் அகண்ட வெளி
பூரணத்தின் தெய்வத் தன்மை
அருள் வளரும் ஆண்டவனை யனுதினமும்
மனதில் நினைந்தவனைப் போற்றித்
தெருள்வளருந் தனமியற்றிச் செல்வமிகப்
பெற்றுயர்ந்து செகத்தோர் வாழ்த்தப்
பொருள்வளருந் தென்முகவை பொன்மணி மீ
னுச்சுந்தரப் பொற்கை யோனே

(அவர் பர்மா நாட்டில் மோனிவா நகரில்
வணிகராகத் தொழில் நடத்தி வந்த நாளில்
அவர்மீது புலவர் ஒருவர் பாடியது)

# புகு முன்


1 சேது நாடும் மறவர் மரபும்

1 முன்னோட்டம் 17
2 செந்தமிழ் நாட்டிலே, சேதுபதி பூமியிலே 18
3 மூவேந்தர் வழியில் 20
4 பழஞ்சுவடி தெரிவிக்கும் பழங்குடிப் பெருமை 21

2 செம்பியரோ? சேதுகாவலரோ?

1 சேதுநாடும் செம்பி மறவரும் 24
2 ஈழமும் பாண்டி மண்டலமும் 25
3 சிங்கையாரியன்—சேதுகாவலன்? 26
4 ஆதி சேது எதுவோ? 29
5 ''முன்னோர் புகழ்கள் எல்லாம் தம் புகழாய்க் கொண்டோர்'' 32
6 யாழ்ப்பாணம் அழித்து, யானைவேட்டையாடி 34
7 ஆதி சேதுபதிகள் 37

3 நாயக்கர் ஆளுகையில் நாடாண்ட சேதுபதிகள்

1 மீண்டும் சேதுபதிகள் 40
2 சடைக்கத்தேவன் உடையன் ரகுநாதசேதுபதி 42
3 கூத்தன் சேதுபதி 43
4 இரண்டாவது சடைக்கன் என்ற தளவாய் சேதுபதி 43
5 இரகுநாத சேதுபதி என்ற திருமலை சேதுபதி 45
6 கட்டயத் தேவர் என்ற இராஜ சூர்ய சேதுபதி 47
7 அதன ரகுநாத சேதுபதி 47

4 தகுதியால் தலைமை பெற்றான்

1 உறவும் உரிமையும் 48
2 உறுதி கொண்ட நெஞ்சினாய் வா!வா!!வா!!! 51

3 உரிமை பூண்டான்,
கிழவன் எனும் பெயர் கொண்டான் 53

5 போரும் புகழும்

1 'செருவில் அரியதுரை சேதுபதி வாழியவே!' 56
2 கோட்டைகள், கொத்தளங்கள், கிடங்கில்கள் 58
3 மதுரையை மீட்ட மறவர் தலைவன் 61
4 மதுரையுடன் முதல் போர் 63
5 மதுரையுடன் இரண்டாவது போர் 64
6 தஞ்சையுடன் முதல் போர் 66
7 மதுரையுடன் மூன்றாவது போர் 66
8 தஞ்சையுடன் இரண்டாவது போர் 67
9 மறவர் ஆளுகையில் மதுரை 67
10 இப்படை தோற்கின் எப்படை வெல்லும்? 68

6 ஆட்சியின் மாட்சி

1 ஆட்சியில் ஆற்றலாளன் 69
2 ''சேதுபதி பூமியிலே ஒரு சிவகங்கைச் சீமை'' 71
3 புலிவேட்டையும் புதுக்கோட்டையும் 72
4 புதியதொரு தலைநகர் முகவையில்
அமைந்தது 73
5 ஓவிய மாளிகைக்கு அடி கோலியவன் 74
6 ஊரும் ஊருணியும் 75
7 மக்கள் தொண்டும் மகேசன் பணியும் 76
8 நாணயமும் வாணிபமும் 77
9 முத்துச்சிலாபமும் டச்சுக்காரரும் 81
10 'மரக்காயரின் சொந்தக்காரர்' 82
11 செந்தமிழ்ப்புலவரும் சேதுபதியும் 83

7 பரிதாபத்திற்குரிய பாதிரியாரின்கதை

1 இளவரசனின் தோழன் ஏசு நெறித்
துறவியானவன் 85
2 அல்லல்பட்ட அருளானந்தர் 86
3 மீண்டும் மறவர் மண்ணில் 89

4 அந்தப்புரத்திலும் அந்தரத்திலும் 90
5 தீர்த்துக் கட்டிய தீர்ப்பு 92
6 ஒரு 'ஆஷ்' புதன்கிழமையில்
ஒரியூர் கண்ட உயிர்ப்பலி 93
7 மதமாற்றமும் மணி முடியும் 94
8 தீர்ப்புரையும் கருத்துரைகளும் 101

8 மன்னவன் வாழ்வின்
மாலைப்பொழுதில்

1 புயல், மழை, வெள்ளம் 103
2 கழனிகளோ, பழனி சென்று
வந்தோர் தலைகளோ? 106
3 'ஏத்து மீன் ஏருதோ, எங்கள்
பஞ்சம் தீராதோ?' 108
4 பஞ்ச காலத்து தஞ்சைப் பகைவர் 109
5 ஒரு சேதுபதியும் 47 தேவியரும்
ஒருங்குடன் மாய்ந்த காட்சி 110

9 அழியாப் புகழ்க் கிழவன் சேதுபதி

1 அசைக்க முடியாத அரசியல் சக்தி 115
2 கிழவனின் வாரிசு 116
3 பிற்காலச் சேதுபதிகள் 119
4 சுதந்தர உணர்வுள்ள ஒரு மனிதன் 119
5 நிலை பெற்ற நினைவுகள் நீங்குவதில்லை 124
6 ஓர் ஒளி ஒலிக் காட்சி அரங்கேறுகிறது 125

10 பிற்சேர்க்கை [இணைப்புகள்]

இணைப்பு : 1 சேதுக் கரைதனிலே
ஒரு சீதக்காதி 127
இணைப்பு : 2 வீரத்தளவாய்
வெள்ளையன் சேர்வைகாரர் 134
இணைப்பு : 3 முதலமைச்சர்
முத்து இருளப்பப்பிள்ளை 140
இணைப்பு : 4 சேதுபதிகள் ஆட்சியாண்டுகள்
கால பேத அட்டவணை 148

மேற்கோள்—நூல்கள் 150

# 1
# சேது நாடும்
# மறவர் மரபும்

## 1. முன்னேட்டம்

கிழவன் சேதுபதியின் வாழ்க்கை வண்ண மயமானது. அவனது வாழ்க்கை எனும் திரைச்சீலேயில் பல வண்ணப் புள்ளிகள் பளிச்சிடுகின்றன. அதே சமயம் அங்கே இரண்டொரு கரும்புள்ளிகளும் இல்லாமற் போகவில்லே.

அதனுல் தான் வரலாற்ருசிரியர் இராபர்ட் சியூவெல் "அவனது ஆட்சி பல்வேறு காரணங்களுக்காக குறிப்பிடத்தக்கதாகும்[1]" என்று கூறியுள்ளார். பல்வேறு காரணங்கள் என்று அவர் குறிப்பிடுவனவற்றுள் தலேயாயது, முழுக்க முழுக்கச்சுதந்தர பூமியை ஆண்ட முதல் சேதுபதியாக அவன் வரலாற்றில் இடம் பெற்றுள்ளமையாகும்.

---

1 Robert Sewell, "A Sketch Of The Dynasties Of Southern India" P-90

அதற்கு முன்பு இருந்த சேதுபதிகள் சுயேச்சையாக ஆண்டதில்லையா? சேது நாடு அதற்கு முன்பு எவ்வாறு இருந்தது?— இவற்றிற்கெல்லாம் விடை தெரிந்தால் கிழவன் சேதுபதிக்கு சுதந்தரதாகம் ஏற்பட்டதற்கான காரணம் சொல்லாமலே விளங்கும்.

எனவேதான், இங்கே கிழவன்சேதுபதியின் ஆட்சி பற்றிக் கூறத் தொடங்குமுன், சேதுநாடு, சேதுபதிகள் சார்ந்த மறவர் குலம். ஆதிசேதுபதிகள், யாழ்ப்பாணம் வென்ற சேதுபதிகள், கிழவனுக்கு முன்னிருந்த இன்னும் சில சேதுபதிகள் யார் யார் என்பன குறித்த வரலாற்றுச் செய்திகள் முன்னோடியாக விவரிக்கப்படுகின்றன.

## 2. செந்தமிழ் நாட்டிலே, சேதுபதி பூமியிலே ...

> ''சேதுபதி சமஸ்தானம் என்பது (ஆங்கிலேயரின் நேரடி ஆளுகைக்குட்பட்ட) இராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தெற்கிலும் கிழக்கிலும் அமைந்துள்ள நிரந்தர ஜமீன் நாடு; அது 2104 சதுர மைல்கள் பரப்பளவும் கிட்டதட்ட ஏழரைலட்சம் மக்கள் தொகையும் உடையது; முகவை (இராமநாதபுரம்), திருவாடானை, பரமக்குடி, திருச்சுழி, முதுகுளத்தூர் ஆகிய ஐந்து ஜமீன் தாலுகாக்களை உள்ளடக்கியது''[2] —

என்று அதன் பரப்பும் பான்மையும் தெரிவிக்கப்படுகிறது.

சேதுபதிகளின் ஆட்சி ஒரு கட்டத்தில் வடதிசையில் தென் மைசூர், தென்திசையில் வடஇலங்கை வரை பரவியிருந்ததுண்டு. ஆனால் நீடித்திருக்கவில்லை. கொள்ளிட முகத்துவாரத்துக்கருகில் சீர்காழிக்கு 10 மைல் வடக்கே உள்ள தேவிகோட்டை எனுந் தீவிலும் ஆச்சாள் புரத்திலும் சேதுபதி நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இலங்கைத் தீவின் வடபாகத்திலிருந்தும் சேதுபதி நாணயங்கள் கிடைத்துள்ளதாக பிரின்செப்ஸ், ரைஸ்டேவிட்ஸ் முதலிய ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.[3]

---

2 ப. ஆ. முத்துத்தாண்டவராய பிள்ளை, ''சேதுபதிகளும் அவர்களுடைய நாணயங்களும்'' (செந்தமிழ்ச் செல்வி—தொகுதி XIV 1935 நவ-டிச.இதழ்)

3 Ibid

கிழவன் சேதுபதி காலத்தில் வடக்கே தஞ்சைச் சீமையும் மேற்கிலும் தெற்கிலும் மதுரைச் சீமையும் கிழக்கில் வங்கக் கடலும் சேதுநாட்டின் எல்லைகளாக அமைந்திருந்தன.[4]

சேதுநாடு வெளிநாடுகளில் வேறு பெயரில் அறிமுகமாகி யிருந்தது. பண்டை எகிப்தியப் பயணி ஒருவர் (Cosmos Indico Plensies 530-550 A. D ) தமிழ் நாட்டில் 'மாறல்லோ' பகுதியில் இருந்து சங்கு நிறைய ஏற்றுமதியானதாகக் குறிப் பிட்டுள்ளார்.[5]

யூல் என்ற அறிஞர் 'மாறல்லோ' என்பது மறவர் நாடு (அதாவது சேது நாடு) என்பதன் மரூஉ என "சீனமும் அதற்கான வழியும்" எனும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்[6] கிறித்தவநற்பணி மன்றத்தைச் சேர்ந்த ஏசுசபைப் பாதிரியார் கள் தங்கள் தலைமையிடத்திற்கு ஆண்டுதோறும் அனுப்பிய ஆண்டறிக்கைக் கடிதங்களில், இப்பகுதியில் பணியாற்றிய இடம், தேதி பற்றி குறிப்பிடும்போது இடம் என்பதில் 'மறவா' (MARAVA) என்றே எழுதியுள்ளனர்.[7]

சேது நாட்டில் வையையாற்றுடன், ரகுநாதக் காவேரி என்ற குண்டாறு, நாராயணக்காவேரி, கிருதமால், கோட்டக்கரை, விருசலை, பாம்பாறு, தேனாறு, மணிமுத்தாறு, வெள்ளாறு முதலிய சிற்றாறுகளும் ஓடுகின்றன.[8]

இராமேசுவரம், குந்துக்கல், பள்ளிவாசல், முயல்தீவு, பூமறிச் சான், முள்ளித்தீவு, மணலித்தீவு, வாலித்தீவு, ஆப்பத்தீவு, நல்லதண்ணீர்த்தீவு, உப்புத்தண்ணீர்த்தீவு,[9] குருசடைத்தீவு உள்ளிட்ட 16 தீவுகளையும் கொண்டது சேதுநாடு.[10]

---

4 Henry Doering. From Royal Page To Martyr'' P. 76.

5 K. A Nilakanta Sastri. ''Foreign Notices of South India''

6 ''Marallo was the corrupted form of 'Maravar' the name of the chief caste of the Ramnad District''
Yule. ''GATHAY AND THE WAY THITHER '-quoted by Mr. B. Arunachalam in his ''The History of The Pearl Fishery of The Tamil Coast''.

7 ''Th s warlike people, well known for the wars that they had conducted more than once with advantage against the Europears ot the sea-coast gave (their name to the Country) Marava, situate between Madurai and the sea''— Letter of Proenza to Nickel 1659—LA MISSION DU MADURE-III (in French) in to English by R. Sathyanatha Iyer ''A HISTORY OF THE NAYAKS OF MADURA'' P268

8 T. Rajaram Row ''RAMNAD MANUAL'' PP2, 379

9 Ibid.P. 13.

10 அ. சம்பந்த மூர்த்தி 'வைகைக் கரையிலே' ப. 132

## 3. மூவேந்தர் வழியில்...

சேதுபதிகள் மறவர் மறபினர். மறம் என்பது வீரத்தைக் குறிப் பதால் பண்டைய தமிழ்இலக்கியங்களில் 'மறவர்'எனக் குறிப் பிடப்படுவோர் சேதுபதிகள் சார்ந்த மறவர்குலத்தினரேஎன்று பொதுவாகக் கூறப்படுகிறது. அந்த அடிப்படையில் மறவர் மூவேந்தர் வழியினர் என்று உரிமையுடன் பெருமைபடப் பேசப்படுகிறது. இந்த வகையில் தெரியவந்துள்ள சில ஆய்வுக் கருத்துக்களை மட்டும் இங்கு பார்ப்போம்.

மறம் என்ற சொல் வீரத்தைக் குறிப்பிடுவதால், ஒரு குறிப் பிட்ட மரபினர், வெறும் பெயரைமட்டும் வைத்து அதற்குத் தாமே உரிமை உடையோர் என்று பெருமை பேசிட முடியா தல்லவா? எனவே அது தவிர்த்த வேறு பொருத்தமான கருத் துக்களையும் காண்போம்.

கள்ளர், மறவர், அகமுடையர் ஆகிய மூன்று மரபினரும் 'தேவர்' என்பதனைத் தம் பெயருடன் சேர்த்துக் கொள்கின் றனர். எடுத்துக்காட்டாக மதுரை மாவட்டத்தில் பிரமலைக் கள்ளரும், அகமுடையருஞ், அனைத்து மறவரும் 'தேவர்' என்றே தம் பெயருக்குப் பின் குறிப்பிடுகின்றனர்.

இதே போல மூவேந்தர்களின் கல் வெட்டுக்களின் இறுதிச் சொற்றொடராக இன்ன 'தேவர்க்கு யாண்டு' என்று முடி கிறது. மூவேந்தர்க்குப் பின் தமிழகத்தில் அந்நியர் ஆட்சி ஏற்படும் வரை சுதந்திர ஆட்சி புரிந்த ஒரே தமிழ் மன்னர் மரபினர் சேதுபதிகள்: அவர்களுடன் உறவுரிமை பூண்ட சிவகங்கை அரசகுலத்தினரும் மறவர் மரபினரே.[11] மதுரை மன்னர் விசுவநாத நாயக்கர் காலத்தில் அமைச்சர் அரியநாத முதலியாரின் மூளையில் உருவான 72 பாளையக் காரர்கள் பட்டியலில் இவர்களின் பெயர்கள் இல்லை என்பதே இதற்குப் போதுமான சான்று.

மூவேந்தர்களைப் போலவே சேதுபதிகள் தம் அறக் கொடை

11 "These zamindaris - revenue estates-formerly were independent king doms whose legal nature was drastically altered by the establishment of the East India Company"
—RESOURCES AND RULE IN ZAMINDARI SOUTH INDIA (1802-1903) SIVAGANGA AND RAMNAD AS KINGDOMS UNDER THE RAJ (Doctoral Dissertation of PAMELA GUYUNNE, Ph.D, University of Wisconsin-Madison 1979) included in the "SOUTH INDIAN STUDIES" (Abstracts of American Doctoral Dissertations relationg to South India) edited by Busnagi Rajannan and Thamizh Nadan.

களை செப்புப் பட்டையங்களாக அளித்துள்ளனர்; நாணயங்கள் வெளியிட்டுள்ளனர் [12]

புதுக்கோட்டைப் பகுதியில் தொண்டைமான் தோற்றத்திற்கு முன்னர் 2 நூற்றாண்டுகளுக்கும் மேலாக சூரக்குடியில் பதினெட்டு மறக்குல வேந்தர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர் [13]

மதுரை விசுவநாத நாயக்க மன்னர் 72 பாளையங்களை உருவாக்கியபொழுது, தம் மரபினரைத் தலைவர்களாக நியமித்தது போக மீதம் உள்ள பாளையங்களுக்கு ஏற்கனவே குறுநில மன்னர்களாக விளங்கிய மறக்குலத்தலைவர் (Chieftains) களையே பாளையக்காரர்களாக நியமித்தார்.

மதுரை நாயக்க மன்னர்கள் ஆட்சியில், கி.பி.1702 தொடங்கி 1795 முடிய எட்டு சேதுபதிகள் கப்பம் கட்டாது சுதந்தர மன்னர்களாக ஆட்சி புரிந்துள்ளனர். ஆக மூவேந்தர்களுக்குப் பின்பு சேதுபதிகள் உள்ளிட்ட மறவர் மரபினர் மட்டுமே தமிழகத்தில் தொடர்ந்து ஆளுகின்ற வாய்ப்பினைப் பெற்றவர்களாக விளங்கியுள்ளார்கள்.

## 4. பழஞ்சுவடி தெரிவிக்கும் பழங்குடிப் பெருமை

சேதுபதி மன்னர் மரபு பற்றிய விளக்கம் தரும்சிறுநூலொன்று ஓலைச்சுவடிகளில் இருந்து வந்துள்ளது. 18 ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் சென்னை மாநிலத்தின் நில அளவுத் துறைத்தலைவராக விளங்கிய ஆங்கிலேயர் மகின்சி (Lieut Colonel COLIN MACKENZIE, C.B.E. 1754-1821, Surveyor-General of Madras Presidency) சேகரித்தஓலைச் சுவடிகளில் அந்நூல் காணப்பட்டது.

ஓலைச்சுவடியில் இருந்த அந்நூல் அச்சிடப் பட்டு வெளிவந்துள்ளது. அதன் பதிப்புக் குறிப்பில், அது இராமநாதபுரம் மற்றும் சிவகங்கையிலிருக்கும் மறவர்களுடையசாதியையும் ஒழுக்கங்களையும் எடுத்துணர்த்துவது என்றும் வசனநடை பிழையுடன் இருத்தலோடு ஏடுகள் சிதிலமுற்றிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. பதிப்பிக்கப்பட்ட சிதைவுருத பகுதி வருமாறு:-

12 The Setupatis had coinage of their own'' — Robert Sewell ''A Sketch of The Dynasties of Southern India'' P.87.

13 ''The line of Tevans that ruled Surakudi:- They continued in power at least 230 years. 18 rulers are known. They made grants to the temples of Tirumayam Taluk.''
—K.R. Venkatarama Ayyar. ''A Manual of Pudukkodttai State'' P.23

*இராமநாதபுரம் சீமை. சிவகங்கைச் சீமையில் இருக்கப் பட்ட மறவர் சரித்திரம்:- செம்பு நாட்டு மறவர் என்றும் கொண்டயங் கோட்டை மறவர் என்றும், ஆப்ப னூர் நாட்டு மறவர்என்றும், உப்புக்கட்டிமறவர் என்றும் குருச்சிக் கட்டு மறவர் என்றும்... ... மறவரில் ஏழுவகை சாதி (உண்டு) இந்த மறவரில் செம்பு நாட்டு மறவர் சிரேட்டர். சேதுபதி, சிவகங்கை உடையாத்தேவர், (க)முதி உடையாத்தேவர், ஒருர் உடையாத்தேவர், பாப்பனம் பந்தலுடையாத்தேவர்—இந்தநாலு பேரும் சேதுபதிக்கு பந்துக்களாகவும் மாமன் மச்சினனுகவும் சேதுபதிக்குக் கீழ்ப்பட்ட பாளையக்காரராகவும் இருக்கப் பட்டபேர்... இந்த மறவர் தாயார் கிளையிலேகலியாணம் பண்ணக் கூடாது. தகப்பன் கிளையிலே சித்தப்பன், பெரி யப்பன் முதலான தாயாதக் காரருடைய பிள்ளை பெண் களைக் கலியாணம் பண்ணிக் கொள்ளுகிறது. மறவர் நீங் கலாகு மற்ற சாதிகள் எல்லாம் தாயார் கோத்திரத் திலேயே கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறது. தகப்பன் கோத்திரத்திலேயேகலியாணம் பண்ணக்கூடாது. இந்தச் செம்பி நாட்டு சேதுபதி உடையாத்தேவர் கலியாணம் பண்ணியிருக்கிற பெண் பிள்ளைகள் மட்டும் புருஷன் மிருதன். ஆனல் புருஷனேடே கூட அக்கினிப் பிரவேச மாகிறது. மறவர் சாதி விளக்கம் சம்பூர்ணம்[4]*

மகன்சி சேகரித்த "மறவர் ஜாதி வர்ணனை" எனும் ஓலைச்சுவடி யில் ஏழு பிரிவுகள் கூறப்பட்டுள்ளன. மானிடவியலார்(Anthropologists) பழங்குடியினர் எனக்கருதும்மறவர்பற்றியவிபரம் இவ்வோலைச் சுவடியில் கிடைக்கிறது. மறவர் பிரிவுகளாக 1) செம்பு நாட்டு மறவர் 2)கொண்டையங் கோட்டை மறவர் 3) அகத்தா மறவர் 4)ஒரு நாட்டு மறவர்5)உப்புக்கட்டி மறவர் 6)குறிச்சிக் கட்டி மறவர் 7) ஆப்பனூர் மறவர்—ஆகிய ஏழு பிரிவினர் அதில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மறவர், கள்ளர்களிடையே ஒவ்வொரு உட்பிரிவிலும் கிளைகள் உண்டு. ஒரே கிளைக்குள் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. (பிராமணர்களது கோத்திரம் தந்தை வழியில் வருவது; மறவ ரின் கிளையோ தாய் வழியில் வருவது). இதனுல் மறவரின்

14 Manuscripts of Mackenzie's Collections-No 2321 of Taylor's Vol III P8 Vide "A Descriptive Catalogue of the Tamil Manuscripts in the Government Oriental Manuscripts Library", Madras.

இக்கிளைகளை, மானிடவியலார், 'புறமணக் கிளைகள்' (Exogamous Septs)என்பர்.[15]

"'மறவர் பாடல்'' எனும் நூலில் கிளைகள் பற்றிய விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்து திருமணச் சட்டம் வருவதற்கு முன்பே சமுதாய முற்போக்கு அம்சங்களான மணவிலக்கும் அதன் விளைவான மறுமணங்களும், விதவைத்திருமணங்களும் மறவர்களிடையே அனுமதிக்கப் பட்டு வந்துள்ளன,[16]. செம்பு நாட்டு மறவர் தவிர்த்து [17]

''திராவிடப் பழங்குடிகளாம் முப்பெரும் மறவர் மரபினரே இந்தியத்தீபகற்பத்தின் தெற்கே முதலில் குடியேறியவர்கள். இன்றைக்கும் பிராமண செல்வாக்கு அவர்களைப் பொறுத்த மட்டில் குறைவாகவே உள்ளது. மொத்தத்தில் அவர்கள் 13 இலட்சத்திற்கு மேலிருப்பார்கள். பழைய காலத்தில் மூர்க்கமாகக் கொந்தளித்தெழுகிறவர்களாயும் போர்வீரப்புகழ் மிக்கவர்களாயும் விளங்கினார்கள். தற்சமயம் ஓரளவு துணிச்சலும் சட்டத்திற்குக் கட்டுப்படாத தன்மையும் உடையவர்களாய் விளங்கினாலும் மற்றபடி பிற விவசாயிகளைப் போன்றவர்களே இவர்களும்'' — என்றவாறு மறவரின் பிற்கால நிலையைப் பற்றிக் குறிப்பிடுகிறார், 1935ல் அவர்களைப் பற்றிக் கூறவந்த பாதிரியார் ஒருவர்[18]

---

15 R. Pate, "TINNEVELY DISTRICT GAZETTEER" Vol I P 133

16 Edgar Thurston, "CASTES AND TRIBES OF SOUTHERN INDIA" Vol V PP 82.40

17 K.Seshadri "socio-Economic [Life under the Setupatis" (TAMIL STUDIES "Quarterly, July 1982)

18 "The Agamudaiyars, the Kallars and the Maravars are three closely allied Dravidian tribes, probably the first who penetrated to the south of the peninsular India. They are even now little affected by Brahminical influence. Together they come to over 13 Lakhs. In former days they were a fierce and turbulent race, famous for their military prowess; Now they are much the same as other cultivators (ryots], though perhaps somewhat more bold and lawless."
—Joseph C. Houpert, "The Madura Catholic Mission From 1535 to 1935" p.145

# 2
# செம்பியரோ? சேது காவலரோ?

## 1. சேது நாடும் செம்பி மறவரும்

செம்பி நாட்டு மறவராம் சேதுபதிகளுக்கும் செம்பியர்களாம் சோழ வேந்தர்களுக்கும் உள்ள தொடர்பை சில வரலாற்றுாய் வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். சேதுபதிகள் சோழ கரந்தையர் என்றும் முதன் முதல் தஞ்சாவூருக்குக் கிழக்கிலும் தென் கிழக்கிலும் வசித்த குடிகள் என்றும் அங்கிருந்து கடல் வழி தொண்டித்துறை மூலம் இங்கு வந்தவர்கள் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.[1]

சேது நாட்டைச் 'செம்பி நாடு' என்று புள்ளை அந்தாதிகுறிப் பிடுகிறது.[2] சேதுநாட்டிற்கு 'ராசேந்திர மங்களநாடு' [3]என்

---

1 ப. ஆ முத்துத்தாண்டவராய பிள்ளை, ''சேதுபதிகளும் அவர்களுடைய நாணயங்களும்'' (செந்தமிழ்ச் செல்வி-1935 பிப்-மார்ச் இதழ்)

2 K. C. Kamaliah, ''Bhaskara Setupati'' (பார்க்க: இராமேசுவரம் அருள் மிகு இராமநாத சுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேக மலர், 1975)

3 கே. இராமசுவாமி அய்யர், 'புதுக்கோட்டை இராஜ்ஜியச் சரித்திரம்' ப.37.

றும் 'மங்கல நாடு'[4] என்றும் முன்பு பெயர்கள் வழங்கி வந்துள்ளது. ஆக இவையெல்லாம் சோழர் தொடர்பை உறுதிப்படுத்துவனஅல்லவா?

சோழர் தொடர்பின் சுவடுகள் மறவர் மண்ணில் தென்படக் காரணம் என்ன? இராசராச சோழன் கி.பி.1059இல் இலங்கை மீது படை எடுத்தபோது, சென்ற பாதையில் பாதுகாப்பிற்காக ஒரு படை நிறுத்தினன் எனவும் அப்படையின் தலைவனின வழி வந்தோனே பின்னால் சேதுபதி எனுஞ் சிறப்பினைப் பெற்றான்எனவும் கூறப்படுகிறது.[5]

## 2. ஈழமும் பாண்டிமண்டலமும்

அடுத்து, 12ஆம் நூற்றாண்டில் இரண்டாம் இராசாதிராச சோழன் (கி.பி. 1163-1178) காலத்தில் மதுரை அரசுக்காக வாரிசுரிமைப் போர் தொடங்கியது. குல சேகர பாண்டியனுக்குச் சோழனும் பராக்கிரம பாண்டியனுக்கு இலங்கைப் பராக்கிரமபாகுவும் ஆதரவு தந்தனர். பராக்கிரம பாண்டியன் கொல்லப்பட்டதறிந்து இலங்கைப் படை இராமேசுவரம் முதலிய ஊர்களைக் கைப்பற்றியது; பராக்கிரம பாண்டியன் மகன் வீரபாண்டியனை அரியணையில் அமர்த்தியது. ஆனால் கி.பி. 1167இல் சோழர் படை குலசேகர பாண்டியனுக்கு ஆதரவாகப் படையெடுத்து வந்து, மதுரையைக் கைப்பற்றி அவனிடம் அளித்தது. இந்தப் போர்கள் நிகழ்ந்த காலம் கி.பி 1167லிருந்து 1175க்குள் ஆகும்.[6]

இந்தக் காலகட்டத்தில், இலங்கை பராக்கிரமபாகு கி பி. 1173ல் இராமேசுவரம் கோவிலின் கருவறையைக் கட்டுவித்தான். இச்செய்தி இலங்கையில் தும்பலா எனுமிடத்தில் உள்ள கல்வெட்டால் புலப்படுகிறது.[7]

இலங்கையுடனான தென்தமிழ்நாட்டின் தொடர்பு மிகப்பழமையானது. 'மகாவம்சம்' மூலம் இது தெரிய வருகிறது. இந்நூல் கி.பி.459-477க்கிடையில் எழுதப்பட்டதாகும். இந்நாட்டிலிருந்து அங்கே குடியேறிய முதல் அரசன் விஜயா தனக்குப் 'பட்டத்தரசி இருந்தால்தான் முடி சூட்டிக் கொள்வேன்' என்று

---

4 சி.எம். இராமச்சந்திரஞ்செட்டியார் பதிப்பித்த, "இராமய்யன் (இராமப்பய்யன்) அம்மானை" ப 8

5 Ramanathapuram District Gazetteer (1972) P. 140 & Edgar Thurston, "Caste and Tribes Of Southern India" Vol V P. 25.

6 தி. வை. சதாசிவ பண்டாரத்தார், "பிற்காலச் சோழர் சரித்திரம்" தொகுதி II ப. 131 (S. I. I. Vol. VI No. 456; Ep. Ind Vol. XXI No. 31.)

7. N. Vanamamalai, "The Sethu and Rameswaram" P. 65.

நிபந்தனை விதிக்க அமைச்சர்கள் பெண் தேடிப் புறப்பட்டனர். தென் இந்தியாவில் மதுரையை ஆண்டு கொண்டிருந்த பாண்டு(டி) மன்னனின் மகளை மணம் முடிக்க இசைவு பெற்றனர். பாண்டியன் மகள், தூதுவர் ஆக800 பேர் உள்ளிட்ட பரிவாரங்கள் கலங்களில்இலங்கைக்குப் பயணமாயினர். பாண்டியனின் செல்வி முதல் ஈழ வேந்தனின் பட்டத்தரசி ஆனாள்.[8] கி பி.914இல்முதற்பராந்தகசோழன் காலத்தில் இலங்கை மீது தொடங்கியசோழர் ஆதிக்கம் சிலஆண்டுகள் தொடர்ந்தும்சில ஆண்டுகள் விட்டு விட்டும்15ஆம் நூற்றாண்டுவரை நீடித்தது[9]. சோழர் வலிகுன்றிய பிறகு, அவர்களது ஆதிக்கம் இலங்கை மீது விடுபட்ட பிறகு சேதுபதிகளின் கவனம் இலங்கை மீது திரும்பியிருக்கலாம். இலங்கைக்கு அண்மையில் ஆட்சி புரிந்து கொண்டிருந்தவர்கள் என்ற அடிப்படையில் பார்க்கும் பொழுது அந்த எண்ணம் அவர்களுக்குத் தோன்றியதில் வியப்பில்லை.

இன்றைய மறவரின்முன்னோர் இலங்கையின் பெரும்பாகத்தை வென்று பலகாலம் தங்களின் கீழ் வைத்துக் கொண்டிருந்தார்கள் என்று ''சென்னை மாநிலப் படைவீரர் வரலாற்''றில் குறிப்பிட்டிருப்பது இத்திசையில் நம்மை மேலும் சிந்திக்கத் தூண்டுகிறது.[10]

## 3. சிங்கையாரியன் சேது காவலன்?

போர்த்துகீசியர் 1618இல் கால்கொள்ளும் வரை யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்த கலிங்க மன்னர்கள் எனப்படுவோர் தம்மை ஆரிய அரசர்கள் என்று கூறிக் கொண்டுள்ளனர். இராமன் இலங்கையை வென்ற பிறகு திரும்பும் வழியில் இராமேசுவரம், யாழ்ப்பாணப் பகுதிகளை ஆள நியமித்து விட்டுப் போன இரு ஆரிய அரசர்களின் வழித்தோன்றல்கள் தாங்கள் என்று அவர்கள் சொல்லிக் கொண்டுள்ளனர்.

அத்துடன் இராமர் தங்களுக்கு கொற்றக் குடையும், ஒற்றைச் சங்கும் காளை (ரிஷப)க் கொடியும் சேதுச் சின்னமும் அருளி

8 ''Mahavamsa or The Great Chronicle of Ceylon'' Translated into English by Wilhem Geiger (Ceylon Government Publication) PP 59-61

9 M.C. Rasanayagam, ''Ancient Jaffna'' P. 264

10 ''Our attention must now be dircted to the extreme South where the brave Maravars of Ramnad and Tirunelvelly whose ancestors had conquered and held for several centuries the grater part of Ceylon were to inflict on British troops more than one serious reverse'' Lt-Col. F. G. Phythian Adams ''The Madras Soldier'' P. 45

விட்டுப் போனதாகப் பெருமைப் பட்டும் கொண்டுள்ளனர் இதனை யாழ்ப்பாணப் புலவர் ஒருவர் இயற்றிய ''செகராஜ சேகரம்'' எனும் சோதிட நூலும் பிற்காலக் கல் வெட்டுக்களும் தெரிவிக்கின்றன.[11]

இராமேசுவரத்தைச் சேர்ந்த பார்ப்பன குலத்தினன் ஒருவன் யாழ்ப்பாணத்தை ஆண்ட கலிங்கவமிசமன்னன் உக்கிரசிங்கன் மகளை மணந்தான் என்றும் அவன் வழி வந்த யாழ்ப்பாண அரசர்களே தம்மை ஆரிய அரசர்கள் என்றுசொல்லிக் கொள்வதாகவும் ஒரு செய்தி வரலாற்றில் காணப்படுகிறது.[12]

'ஆரிய' எனுஞ் சொல் யாரைக் குறிக்கிறது என்பதில் வரலாற்றுப் பேரறிஞர் திரு எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் தெரிவித்துள்ள கருத்து முற்றிலும், மற்றவர்கள் தெரிவிப்பதினின்றும் மாறுபட்டது. மகாவம்சத்தின்படி, இலங்கையை ஆண்ட என்ரும் பராக்கிரமபாகு (கி.பி 1288-1293) காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட ஐந்து சகோதரர்கள் (பஞ்ச பாண்டியர்கள்), தமிழ்பெருமக்களில் தலையாயவன் (மதத்தால் முகமதியன் எனினும்) என்று தாங்கள் கருதுகிற சர்வ வல்லமை பொருந்திய ''ஆரியச் சக்கரவர்த்தி'' என்கிற தங்கள் தலைமை அமைச்சன் தலைமையில் இலங்கையைப் பிடிக்கப் படைகளை அனுப்பினார்கள் என்று கண்டிருக்கிறது. இந்தக்கால கட்டத்தில் தமிழ் நாட்டுத் தலைவர்கள் 'ஆரிய' என்பதனை பட்டமாகச் சூட்டிக்கொண்டதுண்டு என்றும் படை நடத்திவந்தவன் சிங்களவனல்லன் என்று வேறுபடுத்திக் காட்டவே 'ஆரியன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் வரலாற்றுப் பேரறிஞர் கருதுகிறார்.[13]

---

11 M.C Rasanayagam. ''Ancient Jaffna' P. 293-296

12 Ibid-P. 310

13 ''In recording the history of Parakramabahu III, who ruled from A.D 1288 to 1293 according to this authority (Mahavamsa) there is a reference made to a famine in Ceylon ..... It was then five brethr n sent to this island at the head of an army, a gregt minister of much power. who was chief among the Tamils known as Ariya chakravarti, albeit he was not an Ariya. The term Ariya chakravarti has been taken to imply a Muhammadan general as there happened to be at that time It is hardly necessery to pointout that the existence of a Muhammadan In high position in Pandya country willnot warrant his identification with this Ariya chakravarti when he is described by the chronicle (MAHAVAMSA) as Chief among the Tamils. He is said to be an Ariya for the simple reason that he was a Tamil, a distinction that is maintained in the previous section of the narrative as between the Tamils and tha Singhalese. The term Ariya Chakravarti was a title, and many Tamil chieftains love similar titles during this period) —S Krishnaswami Aiyangar, ''SOUTH INDIA AND HER MUHAMMADAN INVADERS'' —P. 57

யாழ்ப்பாணத்தை ஆண்ட இந்த அரசர்கள் ஆரியச்சக்கர வர்த்திகளாக மட்டும் இருந்திருந்தால் நாம் இவ்வளவு தீவிரமாக இவர்களைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கத் தேவையில்லை. 'சேது காவலர்' என்றும்அல்லவா சிறப்பிக்கப் பட்டுள்ளார்கள்!

''போது போனது வந்தது தனிமையும் புகுந்தது பனிவாடை
தூது போனவண் டிவ்வழி மறந்தது சொல்லுவதினியாதோ
ஓது வார்புகழ் மணவைய ரதிபதி யோருல கொவ்வாதான்
சேது காவல ஞரிய சேகரன் திருவுளந் தெரியாதோ''[14]

எனும் பாடலில் மணவை (யாழ்ப்பாண)யர் அதிபதியான அம்மன்னன் சேது காவலன், ஆரிய சேகரன் என்று சிறப்பிக் கப்பட்டான்.

''சேது காவலன் விஞ்சை விஞ்சு செகராச சேகரன்'' என்று 'செகராச சேகரம்' எனும் நூலும்

'சிங்கையாரியன் சேதுகாவலன்' என்று பண்டிதராசர் இயற் றிய தட்சின கைலாச (திரிகோணமலை) புராணமும் இவ் வாரிய அரசர்களுக்கு சேது காவலன் எனுஞ்சிறப்புப் பெயரும் இருப்பதை மெய்ப்பிக்கின்றன.[15]

சோழர்கல்வெட்டுக்களில் ''ஸ்வஸ்தி ஸ்ரீ'' என்று காணப் படும் சொற்றொடருக்கு ஈடாக ''சே-து'' என்பதை இலச் சினை எழுத்துக்களாக யாழ்ப்பாணத்து அரசர்கள் பயன்படுத்தி யுள்ளார்கள் என்பது அவர்கள் வெளியிட்டுள்ள நாணயங் களிலிருந்தும் கொட்டகாமா (Kotagama) எனும் இடத்தில் உள்ள கல்வெட்டிலிருந்தும் தெரியவருகிறது.[16]

மேலும் ராபர்ட் சியூவெல் எழுதியுள்ள 'அடையாளம் காணக் கூடாத நாணயங்கள்' எனும் கட்டுரையில் யாழ்ப்பாண அர சர்களின் மூன்று நாணயங்களில் அவர்களது இலச்சினை எழுத் துக்களான 'சேது' என்பன நாணயத்தின் மேற்பகுதியில் 'து' என்ற எழுத்து நடுவில் ஒரு கோடு அதற்குக்கீழே 'சே' என்ற எழுத்து என்றவாறு இடம் பெற்றுள்ளன.[17]

14 மு. இராகவையங்கார், 'சேதுநாடுந்தமிழும்' —ப. 4 மு. இராகவையங்கார் பதிப்பித்த 'பெருந்தொகை' ப 287

15 M.C. Rasanayagam. ''Ancient Jaffna'' p 299

16 Ibid-p 300.

17 Robert Sewell ''Doubtful Coins of Southern India'' (Essay in Indian Antiquary) quoted by M. C. Rasanayagam in his ''Ancient Jaffna'' p. 301.

## 4. ஆதி சேது எதுவோ?

ஆக அங்கேயும் ஒரு சேதுகாவலர்! இங்கேயும் ஒரு சேது காவலர்!! யார் உண்மையிலே சேது காவலர் என உரிமை பூண்டவர்கள் என்ற கேள்வி எழுகிறதல்லவா? இந்தக் கேள்விக்கு விடை காண்பதற்கு சேது என்பது எது என்று தெளிதல் வேண்டும்,

சேது என்பது அணை என்று பொருள் கொள்ளக்கூடிய சொல். தன் மீது அமைந்துள்ள திட்டுக்கள், மேடுகள் மூலம் இரண்டு எதிர் நிலப் பரப்புக்களையும் அணைக்கவல்லது, சேது. இராமேசுவரம் தீவுக்கு இலங்கைப்பக்கம் ஒரு சேதுவும் இந்தியப் பெரு நிலத்தின் பக்கம் ஒரு சேதுவும் அமைந்துள்ளன.

இந்தியாவின் பக்கமுள்ளதே நம் இலக்கியங்களில் சேது என்று பேசப்படுகிறது. இந்தியப் பெரு நிலத்தில் உள்ள மண்டபத்தையும் தீவில் உள்ள பாம்பனையும் ஒரு சுழலும் தூக்கு பாலம் (SCHERZER ROLLING LIFT BRIDGE) இணைக்கிறது. ஆதியில் இந்த இடைப்பகுதி தரைப்பகுதி யாகவே இருந்ததாம். விழாக்காலங்களில் இராமேசுவரம் இராமநாதசுவாமி உலாவாக வந்து இந்தப்பகுதியில் உள்ள ஒரு மண்டபத்தில் தங்கி மண்டகப்படி நிகழ்ந்த பின்னர் திரும்பிச் செல்வது வழக்கமாம். அந்த மண்டபம் இருந்த இடத்தைச் சுற்றியுள்ள பகுதியே தற்போது மண்டபம் என்ற ஊராக விளங்குவது என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.[18] இப்போது போல அந்தக்காலத்தில் கடல் சூழ்ந்திருக்குமாயின் மேற்சொன்னவாறு நிகழ்ந்திருக்க முடியுமா?

1480-இல்ஒரு புயல்அடித்து தரைப்பகுதிநீருள் மறைந்தது.[19] அதன் பின்னர் அந்த இடத்தில் ஒருசிற்றாறு ஓடியிருக்க வேண்டும். இன்றைக்கும் பயணப்படும்போது இடைஞ்சல் எனும் படி ஏதேனும் குறுக்கே வந்தால் 'இராமேசுவரம் போகிற பொழுது பாம்பனாறு குறுக்கிட்டாப் போலே' எனும் பழமொழி முகவைப் பகுதி மக்களிடத்தில் புழக்கத்தில் உள்ளது.

---

18 "The tradition is even now current that there was no channel here between Mandapam and Pamban. The name Mandapam is said to have been given to the place as it did contain a Mantapa to which the God of Rameswaram used to be carried on occasions of certain Annual festivals. Of course that could not be done across the sea."
—S. Krishnaswamy Aiyangar, 'South India and her Muhammadan Invaders"

19 T. Rajaram Row. "Ramnad Manual" P. 14.

இதை திரு கி. இராஜநாராயணன் தமது வட்டார வழக்குச் சொல்லகராதியில் சேர்த்துள்ளார்.[20]

பண்டைய குமரிக் கண்டத்தின் குமரியாறு மறைந்து குமரி முனைப்பகுதி மட்டும் எஞ்சியிருப்பது போல, ஆறு மறைந்து அந்த இடத்தில் ஆழி புகுந்து கொண்டது. 15 ஆம் நூற்றுண்டில் கிருஷ்ணம நாயக்கன் கட்டிய ஒடு பாலம் இதில் அழிந்தது[21]

''சிங்களத்தீவினுக்கோர் பாலம் அமைப்போம்''— என்று பாடிய பாரதியார், இங்கு ஏற்கனவே தரைப்பகுதி இருந்ததை நினைவில் இருத்தி,
''சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்'' என்ருர்.

பாரதி பாட்டிலும் இராமய்யன் அம்மானையிலும் நாட்டு வழக்கிலும் மண்டபத்திற்கும் இராமேசுவரம் தீவிற்கும் இடைப்பட்ட பகுதியே சேது என்றும் அதனைக் காக்கும் பொறுப்பில் உள்ள மன்னர் பரம்பரை சேதுபதிகள் என்றும் இருந்து வருகிறது.

இனி இன்னெரு சேதுவைப் பார்ப்போம். பூகோளப்படத்தில் இலங்கைக்கும் இராமேசுவரம் தீவுக்குமிடையில் பாக் நீர்ச் சந்தியில் ' ஆடம்ஸ் பிரிட்ஜ்'' (Adam's Bridge) என்று குறித்திருக்கும் பகுதியே இது. இந்த ஆதாம் அணை மலைகளாலும் பாறைகளாலும் கடலுக்குள் உருவானது. மன்ஞர் குடாவை வடக்கிலும். வடகிழக்கிலும் வியாபித்திருக்கிறது. அதன் மேற்கு முனை சேது நாட்டு இராமேசுவரம் தீவையும் அதன் கிழக்கு முனை இலங்கை மன்ஞர் தீவையும்தொடுகிறது. இதன் நீளம் 30 மைல்கள். அகலம் $1\frac{1}{4}$ மைல். சில இடங்களில் நீருள் அமிழ்ந்தும் சில இடங்களில் திட்டுக்கள் தலையை நீட்டிக் கொண்டும் காட்சியளிக்கிறது, இவ்வணை. திட்டுக்கள் மூழ்கினுலும் ஆழம் மூன்றுஅல்லது நான்கு அடிகளே இருக்கும்.[22] இஸ்லாமிய மரபுப்படி இந்த அணைஆதாம் அணைஎனப்பட்டது. ஆனல் தமிழில் இது இதன் சிறப்பு குறித்து திரு அணை எனப்பட்டது. இந்து பௌராணிக மரபுப்படி நளசேதுஎன்றும்இராம சேது என்றும் அழைக்கப்படுவதுண்டு. இவற்றிற்கெல்லாம் மேலாக இதற்குள்ள மற்றெரு பெயர்தாம் நாம் கவனத்தில்

20 கி. ராஜநாராயணன் ''வட்டார வழக்குச் சொல்லகராதி'' ப. 247
21 N. Vanamamalai, ' The Sethu and Rameswaram'' P. 32
22 T. Rajaram Row, ''Ramnad Manual'' P. 14

கொள்ள வேண்டியதொன்றாகும். அதுவே இந்த அணைக்கு 'ஆதி சேது' என்று பெயர் ஏற்பட்டிருப்பது.[23] ஆகஇதிலிருந்து என்ன தெரிகிறது? முதல் சேது இந்தப்பகுதியே என்றாகிறது. முதல் தமிழ்க்கலைக்களஞ்சியம் என்றுகருதப்படுகிற ''அபிதான சிந்தாமணி''யில் சேது என்பதற்கு 'இராமேச்சுரத்திற்கும் இலங்கைக்குமுள்ள அணை'' என்று பொருள் தரப்பட்டிருக் கிறது.[24]

இந்த ஆதாம் அணையே யாழ்ப்பாணத்தவருக்கும் 'சேது' வாகத்திகழ்ந்தது எனக் கருதக் காரணங்கள் உள்ளன. இந்தியாவிலிருந்து படையெடுப்பு நிகழ்ந்தது, இந்த அணை யைத் தாண்டிப்போய்த்தான் என்பதால் அதைக்காக்க உறுதி கொண்ட யாழ்ப்பாணத்தரசர்கள் சேதுகாவலர் என அழைக் கப்பட்டிருத்தல் வேண்டும். அதன் காரணமாகத்தங்கள் இலச்சினையில் 'சே-து' எனும் எழுத்துக்களைப் பொறித் திருக்க வேண்டும்.

இதற்கு மாறாக 'பண்டைய யாழ்ப்பாணம்' எனும் நூலின் ஆசிரியர், இராமேசுவரம் யாழ்ப்பாணத்தரசர் ஆளுகையில் இருந்ததாலோ அல்லது யாழ்ப்பாணத்தரசரின் முன்னோ ரான பார்ப்பனர் இராமேசுவரத்திலிருந்து வந்தவர் என்பதாலோ யாழ்ப்பாணத்தரசர் 'சேது' எனும் எழுத்துக் களை தம் இலச்சினையில் கொண்டிருந்தனர்[25] என்பது பொருத்தமாயில்லை. ஏனெனில் அவரே பிறிதோரிடத்தில் யாழ்ப்பாணத்து நல்லூர்க் கோயிலில் பணியாற்ற குருக்கள் இராமேசுவரத்திலிருந்து சேதுபதி தயவினால் கொண்டு வரப் பட்டதாகக் கூறுகின்றார்.[26] இராமேசுவரம் யாழ்ப்பாணத்தரசர் ஆளுகையில் இருந்திருப்பின் இராமேசுவரத்து பட்டரைக் கொண்டுவர சேதுபதியின் தயவை நாடுவானேன்? இதை அவர் விளக்கவே இல்லை.

---

23 Adam's Bridge:- devived from the Muhammadan tradition that Adam on his expuesion from the paradise, crossed to Ceylon by the bridge In Tamil it is called Tiruanai. Its Sanskrit name is Nala Sethu meaning Nala the monkey, sethu, the causeway. It is also called Ramasethu meaning Ramas' bund. There is also another name adi-Sethu meaning first bridge'' —RAMANATHAPURAM DISTRICT GAZETTEER'' P 908-9

24 ஆ. சிங்காரவேலு முதலியார், 'அபிதான சிந்தாமணி (Encyclopedia of Tamil literature) ப.736

25 M.C. Rasanayagam ''ANCIENT JAFFNA'' P. 299

26 Ibid-P. 334

27 Ibid. p 334—335

## 5. முன்னோர் புகழ்கள் எல்லாம் தம் புகழாய்க்கொண்டோர்

கி.பி; 1659 முதல் டச்சு ஆதிக்கம் யாழ்ப்பாணத்தில் தொடங்கியது. அதற்கு முன்பு 1618முதல் போர்த்துகீசியர் ஆதிக்கம் தொடங்கியது. எனவே யாழ்ப்பாணத்து நல்லூர்க்கோயில் 1618க்கு முன்பு கட்டப்பட்டிருக்கவேண்டும் என்பதை மிகமிக உறுதியாகச் சொல்லலாம். முத்துராசாக்கவிராயர் எழுதிய 'கைலாயமாலை' எனும் நூலில் நல்லூர்க்கோயில், முதல் அரசனால் கட்டப்பட்டது என்ற குறிப்பு உள்ளது. இதையெல்லாம் வைத்து அக்கோயில்கி.பி 1604க்கு முன்பு கட்டப்பட்டிருக்கவேண்டும் என்பது ''பண்டைய யாழ்ப்பாணம்''—நூலின் ஆசிரியர் கருத்தாகும்.அதேசமயம், அக்கோயிலுக்கும் சேதுபதிகளுக்கும் உள்ள தொடர்பை அறவே மறுக்கிறார். அதற்கு அவர் கூறும் காரணம் ''சேதுபதிகள் வமிசமே கி.பி. 1604இல்தான் முத்துக்கிருஷ்ண நாயக்கனால் நிறுவனம் ஆயிற்று; அதற்கு முன்பு சேதுபதிகள் ஏது''? என்பதாகும்.[27] 1604க்கு முன்பு சேதுபதிகள் இருந்ததில்லையா? இருந்திருக்கிறார்கள் என்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட சான்றுகள் உள்ளன.

யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்த ஆரியச் சக்கரவர்த்திகள் என்போர் பரராஜசேகரன், செகராஜசேகரன் என்ற பட்டப் பெயர்களைச் சூட்டிக்கொண்டார்கள் என்பது 'யாழ்ப்பாண நாட்டு வளப்பம்' எனும் நூலின் மூலம் தெரியவருகிறது. 1414இல் யாழ்ப்பாணத்தை ஆண்டுவந்தபரராஜசேகரன் என்பவன் இராமேசுவரம் கோவிலுக்குள் சில முக்கிய உட்கோவில்களைக் கட்டினான் என்று அக்கோயிலில் மூலவர் அடியில் இருந்த கல் வெட்டால் தெரியவந்தது.[28]

யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராஜசேகரன் என்ற ஆரியச் சக்கரவர்த்தியை வென்றதாக திருமலை உடையன்சேதுபதியின் சகம் 1529 (கி.பி.1608) செப்பேடு தெரிவிக்கிறது.[29]

27. Ibid—P. 334-335
28 Ibid-P 366 (Archaelogical survery S.I. Vol. iv p 56-57)
29 Inscription of AD1608:-Tamil and Grandha. SS.1529 expired Rameswaram; Tirumalaiudayan setupati; the lord of the city of Tevai; the responsible agent for the protection of the Setu enbankment...the chief of all other kings The destroyer of the army of Ariyaraya ... who conquers all the country that he sees and never gives back a country once conquered—Burgess; 'Setupat Grant NO 2'] Vide Appendix 'D' in R.Sathyanatha Aiyar's HISTORY OF THE NAYAKS oF MADURA'' P 348

இதேபோன்ற வெற்றிச் செய்தியை ரகுநாதசேதுபதியின் சகம் 1581கி.பி. 1659 செட்பேடு தெரிவிக்கிறது.[30]

1604 க்குப்பின் மதுரை நாயக்க அரசர்களுக்குக் கட்டுப்பட்டு ஆட்சி புரிந்து வந்தவர்கள் சேதுபதிகள். அப்படிப்பட்ட நிலையில் இருந்த சேதுபதிகளுள் இருவர் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்துச் சென்று வெற்றிகொள்வது எவ்வாறு இயலும்? அதுவும் ஒரே மாதிரியான செய்தி இரண்டு சேதுபதிகளுக்கும் ஏற்றிச் சொல்லப்படுவதால் நம்பமறுக்கின்றனர். இதற்குக் காரணம் ''1604க்கு முன்பு சேதுபதிகளேஇல்லை'' என்ற ஒரே முடிவுடனே அனுகுவதுதான். மதுரை மன்னன் முத்து கிருஷ்ணப்ப நாயக்கன் சேதுபதி மரபைப் புதிதாக உண்டாக்கியவன் அல்லன், மறு நிறுவனமே செய்தான்என்று ராபர்ட்சியூவெல் போன்ற வரலாற்றுசிரியர்கள் குறிப்பிடுவதை ஏனோமறந்து விடுகின்றனர்.

17ஆம் நூற்றுண்டுச் சேதுபதிகள் 15 ஆம் நூற்றுண்டில் ஆண்ட யாழ்ப்பாணத்தரசனை வென்றனர் என்பது முரணனை செய்திதான். நேரடியாக அணுகும்பொழுது அப்படித்தான் தோன்றும். சேதுபதிகளின் செப்பேடுகளைத் தொகுத்த பர்கஸ் (Burgess) கி.பி.1414-15ல் ஒரு உடையன் சேதுபதி ஆண்டிருக்கிறுன் என்று கூறுகிறுர். அவனே யாழ்ப்பாணத்தரசன் பரராஜசேகரனை வென்றவனுதல் வேண்டும்.

அரசர்களின் பெருமைகளைக் கூறும் பொழுது முன்னோர் பெருமைகளைப் பின்னவர் மீதேற்றிச் சொல்லும் மரபு இருந்திருக்கிறது.

''நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம் உன்புகழ் ஆக்கிக் கொண்டாய்'' என்று குகன் பரதனுக்குக் கூறிய அடிப்படையில் பிற்காலச் சேதுபதிகள் தங்கள் செப்பேடுகளில் முன்னிருந்த தங்கள் மரபினோர் புகழ்களை எல்லாம் தங்கள் புகழ்களாகக் காட்டியுள்ளனர் போலும்.

முதல் செப்பேடு 1608 ஆம் ஆண்டுக் குரியது. 1604க்கும் 1621க்கும் இடையில் ஆட்சிபுரிந்தவன் பெயர் திருமலை சடைக்க உடையன் சேதுபதி. பரராஜசேகரனை வென்றவனுக பர்கஸ் குறிப்பிடும் சேதுபதியும் உடையன் தான். பெயர் ஒற்றுமையினுல் மாற்றிச் சொல்லி விட்டார்கள் என்று கருது

30 Burgess, 'Setupati Grant No 5 Inscription of AD 1659 Ibid P. 356.

வதற்கும் இடமில்லை. ஏனெனில் அடுத்து ரகுநாதசேதுபதியின் 1659 ஆம் ஆண்டுச் செப்பேட்டிலும் அதே பெருமிதச் செய்திகள் அந்த சேதுபதிக்கும் சொல்லப்பட்டுள்ளன.

## 6. யாழ்ப்பாணம் அழித்து யானை வேட்டையாடி...

17ஆம் நூற்றுண்டின் முதல் கால்பகுதியில் வெளியிடப்பட்ட சேதுபதிகளின் செப்பேடுகளில் யாழ்ப்பாணம் குறிப்பிடப் பட்டுள்ளதாக ''பண்டைய யாழ்ப்பாணம்'' நூலாசிரியர் கூறுகிருர்.

''ஈளமும், கம்பளமும் யாழ்ப்பாணமும் பட்டணமும்
அளித்துகெசவேட்டை கொண்டருளிய-''

என்று முத்துவிஜய ரகுநாத சேதுபதியின் சகம்1526 செப்பேட்டிலும்,

''ஈளமும் கொங்கும் யாழ்ப்பாணப் பட்டணமும்
இம்மண்டலமுமளித்து
கெசவேட்டை கொண்டருளிய—''

—என்று இரணியகர்ப்பயாக ரகுநாத சேதுபதி கட்டத்தேவரின் சகம் 1607 செப்பேட்டிலும்,

இன்னும் பிற்காலத்திய சேதுபதிகளின் செப்பேடுகளிலும் இதே அடிப்படையில் தான் ஈழம், யாழ்ப்பாணம் அழித்து, யானை வேட்டை (கெசவேட்டை) யாடிவந்ததாக சேதுபதிகள் சிறப்பிக்கப்பட்டுள்ளனர்.[31]

1604-இல் இருந்து 1702 வரை மதுரை நாயக்க மன்னர்களுக்குக் கட்டுப்பட்டுஆட்சிபுரிந்த சேதுபதிகள் பற்றி செப்பேட்டில் சொல்லியுள்ள வெற்றிச் செய்திகள் மேலோட்டமாசு பார்த்தால் வெற்றுச் செய்திகள் என்றே சொல்லத் தோன்றும். ஆய்வுக்கல்லில் உரசிப் பார்த்தாலே செப்பேட்டுச் செய்தி பொன் போல் போற்றத்தகும் உண்மையா அல்லது போலியா எனப் புலப்படக் கூடும்.

---

31 Yalpanam is mentioned in Several inscriptions of the Setupatis in the first quarter of the 17th century.
a) In a copper plate graut of Saka 1526 Muth Vijapa Raghumatha Setupati is said to have destroyed Ilam, Kambalan and Yalpana town and had an elephant hunt;
b) In a copper plate grant of Saka 1607 granted by Hiranya Garbhayagi Raghunatha Setupai Katta Tevar... similar eulogies appear in several inscriptions of other Setupatis extending even as far as Saka 1706...)
—M.C.Rasanayagam. Ancient Jaffna-P.3.

சாதாரண மக்கள் தங்கள் பெயரின் முன்னே தந்தை பெயரின் முதல் எழுத்தைக் குறிப்பிடுவர். இன்னும் சிலர் குடும்பப் பெயரை (surname)க் கூட பெயர் முன் சேர்த்துக் கொள்வர். அரசர்களுக்கோ வெனில் அவர்களின் பீடும் பெருமையும் கூறும் அடைமொழிகள் பெயரில்சேர்த்து வழங்கப்படுகின்றன. அந்தப் பெருமையில் அவர்களின் முன்னோர் ஈட்டிய வெற்றிகளை தம் பெயரின் முன் அடைமொழியாகச் சேர்த்துக் கொண்டனர்.

ஈழத்தின் மீது பண்டைத் தமிழர் நிகழ்த்திய படையெடுப்பு குறித்துக் குறிப்பிட வந்த சர் எமர்சன் டென்னட் என்ற அறிஞர் தனக்குக் கிடைத்த செய்தி ஒன்றினை விவரித்துள்ளார். கி.மு 3 அல்லது 2-ஆம் நூற்றாண்டில் ஈழத்தின் மீது படையெடுத்த தமிழ் நாட்டவர் நல்லூர் எனுமிடத்தில் தலை நகரினைக் கொண்டிருந்தவர்கள் என்று கூறுகிறார். பண்டைய சேதுபதிகள் தேவபுரம் என்ற வீரவ நல்லூர், தொண்டி,ரெகுநாதபுரம் ஆகிய இடங்களில் தலைநகரங்களைப் பலகால கட்டங்களில் கொண்டு விளங்கியவர்கள் எனத் தெரிகிறது. குலோத்துங்க சோழ நல்லூரையடுத்து விரையாத கண்டன் எனும் வீரவ நல்லூர் ஒரு காலத்தில் சேதுபதிகளுக்குத் தலை நகரமாக இருந்திருக்கிறது.[32]

''குலோத்துங்க சோழ நல்லூர்க் கீழ்பால் விரையாத கண்டனிலிருக்கும் வங்கிசாதிபர்'' என ஒரு சேதுபதி பெயர் சாசனங்களில் காணப்படுகிறது.[33]

சிங்கள நூல் மகாவம்சத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு இலங்கை மீது படை எடுத்துச் சென்ற ஏழு சேதுபதிகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறது; இந்த நல்லூர்வீரவநல்லூராயிருக்கலாம் என்று கூறப்படுகிறது; இது கி. பி. 2 ஆவது அல்லது 3 ஆவது நூற்றாண்டில் நடந்ததாகத் தெரிகிறது என்றும் ஆராய்ச்சியாளர் திரு ப.ஆ. முத்துத்தாண்டவராயபிள்ளை தகவல் தந்துள்ளார்.[34]

படையெடுப்புக் காலம்ஆராய்ச்சிக்குரிய போதிலும் இங்கிருந்து படையெடுத்துச் சென்ற ஊர் நல்லூர் என்பதில் வேறுபாடு காணப்படவில்லை. அதே சமயம் யாழ்ப்பாணத்துக்கருகில் கோவில் எழுப்பப்பட்ட ஊரும் நல்லூர் எனப் பெயர் அமைந்

32 T Rajaram Row, Ramnad Manual -PP. 201 202, 207

33 ரா. இராகவையங்கார், ''சேதுபதிகள்'' (''செந்தமிழ்''— தொகுதி 2; பகுதி 2; சோபகிருது- மார்கழி இதழ்)

34 ப.ஆ.முத்துத்தாண்டவராய பிள்ளை ''சேதுபதிகளும் அவர்களுடைய நாணயங்களும்'' (செந்தமிழ்ச் செல்வி''— தொகுதி XIV 1935 பிப், மார்ச் இதழ்)

திருப்பது சிந்திக்கத் தக்கது. ஆங்கிலேயர் அமெரிக்காவில் குடியேறிய போது தம் ஊர்ப்பெயர்களை அந்த நாட்டுக் குடியேற்றங்களுக்கு வைத்தது போல நல்லூரில் இருந்து சென்ற சேதுபதிகள் அங்கு யாழ்பாணத்தை அடுத்து ஒரு நல் லூரை நிறுவியிருக்க வேண்டும்.

இராமநாதபரம் சமஸ்தானத்தில் இருந்த ஒரு செப்பேட்டின் ஓலை நகலில் சாலிவாகன ஆண்டு 1248 (கி.பி 1325-26)-இல் ''வென்றரசு கொண்ட தேவர்'' எனும் பெயருடைய இராமநாதபுரத்தரசர் மங்கைபாகக் குருக்களுக்கு அழகிய விநாயகர் கோவில் வழிபாட்டிற்காக மருதங்குளம் கிரா மத்தை வழங்கிய செய்தி காணப்படுகிறது. அதில் சேதுபதிக் குரிய விருதாவளியில் சேதுபதிக்கு ஈழத்தின் மேலிருந்த ஆதிக்கம் அடங்கியுள்ளது; இந்த விருதாவளி அல்லது பெரு மிதப் பட்டங்கள் பிற்காலச் செப்பேடுகளில் உள்ளன போலவே காணப்படுவதாக இராம்நாட் மானுவலின் ஆசிரி யர் குறிப்பிடுகிருர்.[35]

மேற்குறிப்பிட்ட இராமநாதபுரத்தரசரின் ஆட்சிக்காலம் முக மதிய சுல்தான்களின் கீழ் தமிழகம் ஆட்சி செய்யப்பட்டு வந்த கால கட்டமாகும். அப்போது கூட சேது நாட்டில் சுல்தானின் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி இருந்து வந்தது என்றும் சுல்தானின் ஆட்சி அப்பகுதியில் நீடித்திருந்திருக்க வாய்ப்பில்லை என்றும் இராமநாதபுரம் பகுதிக்கடற்கரையில் இறங்கிய இபன்பதூதாவின் குறிப்பின் அடிப்படையில் கால்டு வெல் அடிகளார் 14-ஆம் நூற்ருண்டுச் சுதந்தரச் சேது நாட்டை அடையாளம் காட்டுகிருர்.[36]

35 T. Rajaram Row, Ramnad Manual-p 202 and
Ramanathapuram District Gazetteer-P 79

36 ''...At length one of those governors (of Ma'bar including Pandya and Chola countries), Jelal-ud-din Hasan, a Sherif or Seiad, revolted against Muhammad Toghlak and made himself independent. This circumstance is mentioned by Ferishta. The power of the Muhammadans, however, does not seem to have been vary firmy established for Ibn Batuta (who visited Ma'bar in 1348-49) found that there had already been several internal revolts, on landing Ma'bar he found the reigning Sultan at war with 'the heathen', that is probably with some surviving representatives of. or sympathisers with, the expelled Pandya princes. Possibly, however, the Sultan's foes may have been the Maravas of Ramnad, for as Ibn Batuta was wrecked, on his voyage across the Gulf of Manaar from Ceylon, in the shallow part of the sea, the place where he landed and near which he found the Sultan must have been in the Ramnad country, the country of the Maravas, a warlike race not likely to remain long in quiet sujbection to petty Muhammadan princes. This Muhammadan interregnum is mentioned in Taylor's Historical Manuscripts. It is therein said to have lasted from 1323 to 1370.
—Bishop R.Caldwell, A History of Tinnevelly -P.42

## 7. ஆதிசேதுபதிகள்

சேதுபதிகள் யாழ்ப்பாணத்தை வென்றது ஆய்வுக்குரிய செய்தி என்ற போதிலும் அச்செய்தி முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கன் 1604இல் சேதுபதி பரம்பரையை மறு நிறுவனம் செய்வதற்கு முன்பே சேதுபதிகள் இருந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள உதவுகிறது. டாக்டர் பர்கஸ் என்ற வரலாற்று விற்பன்னர் கருத்துப்படி, கி.பி.1414-15 இல் உடையன் சேதுபதி என்று ஒரு சேதுபதி முகவைச் சீமையில் ஆட்சிபுரிந்திருக்கிறான்; இராமேசுவரம் கோவிலுக்குள் பல சிறுகோவில்கள் கட்டு விக்கச் செய்தான்; நான்கு கிராமங்களை அவற்றிற்கு மானியமாக விட்டான்; 1489-90 இல் சின்ன உடையன் சேதுபதி என்று ஒரு சேதுபதி ஆட்சிபுரிந்திருக்கிறான்; இவன் இராமேசுவரம் கோவிலுக்கு மேலும் கட்டுமானப் பணிகள் செய்வித்தான்; 1500-1501ல் ஆட்சி புரிந்த திருமலை சேதுபதி அக்கோயிலின் இரண்டாம் சுற்றில் ஒரு பகுதி கட்டி முடிக்கச் செய்தான்; 1539-40ல் ஆட்சிபுரிந்த ரகுநாதத் திருமலை சேதுபதி அவனது மகனாவான்.[37]

இது தவிர பாண்டித்துரைத் தேவரின் பொருளுதவியால் வெளிவந்த அபிதான சிந்தாமணியும்[38] பேராசிரியர் திரு. எஸ். வேங்கடாச்சாரியின் ''இராமநாதபுரம் சேதுபதிகள்[39] எனும் நூலும் ராபர்ட் சீயூவெலின் பட்டியலைத்தழுவி சடைக் கத்தேவர் உடையன் சேதுபதிக்கு (அதாவது கி.பி.1604)க்கு முந்தியவர்களாக கீழ்க்காணும் 10 சேதுபதிகளைக் குறிப்பிடு கின்றன.

1 ஆதிரெகுநாத சேதுபதி:- பெயருக்கேற்ப ஆதி முதலானவனாக இவன் குறிப்பிடப்படுகிறான்.

2 ஜெயதுங்க ரகுநாத சேதுபதி.

3 அதிவீரரெகுநாத சேதுபதி:- சோழனை வென்று பாண்டியனிடம் தொண்டியைப் பரிசாகப் பெற்று 'தொண்டியன் துறையன்' என விருதுப் பெயர் பெற்றவன்.

---

37 Robert Sewell, ''A Sketch of the Dynasties of Southern India'' P 87

38 ஆ. சிங்காரவேலு முதலியார், ''அபிதான சிந்தாமணி'' ப. 1628. &Robert Sewell's ''List of Antiquities'' vol II

39 S. Thiruvenkatachari, ''The Setupatis of Ramnad'' P.128.

4 வரகுண ரகுநாத சேதுபதி:- சோழ நாட்டிலிருந்து தெலுங்கரை விரட்டி பாண்டியனுக்கு உதவிய சேதுபதி

5 குலோத்துங்க சேதுபதி:- படை எடுத்த சோழனை விரட்டி அறந்தாங்கி பட்டுக்கோட்டைப் பகுதிகளைப் பிடித்துக் கொண்டதன் மூலம் ''கண்டது விடான், வென்றது கொடான்'' என்று விருது பெற்றவன்

6 சமரச கோலாகல சேதுபதி:- சோழனுக்கும் பாண்டியனுக்கும் எழுந்த எல்லைத் தொல்லையைத் தீர்த்து முத்துக்குளி உரிமையும் விருதும் பெற்றவன்

7 மார்த்தாண்ட பைரவ சேதுபதி.

8 சுந்தர பாண்டிய சேதுபதி.

9 காங்கேய ரெகுநாத சேதுபதி.

10 விஜய முத்துராமலிங்க சேதுபதி[40]

''ஒரு விருத்தாந்தத்தில் கி. பி. 1153-இல், பராக்கிரமபாகு காலத்தில் அவனுடைய சேனுதிபதி லங்காபுரத்தண்டநாதன் கி.பி. 1170-71 இல் தென்னிந்தியாவின் மீது படையெடுத்து, பாண்டியர்களை ஜெயித்ததாகவும் அப்போது சேதுபதிகளை அடக்கியதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது; அவன் இராமேசுவரத்தில் ஒரு கோயிலைக்கட்டிக் கொண்டு சில காலம் தங்கியிருந்தான்; இலங்கைக்குத் திரும்பிப் போகுமுன் சேதுபதிகளின் வீரத்தையும் வலிமையையும் கண்டு அவர்களைச் சுயாதிபதிகளாக்கினுன்'' என்பதிலிருந்து 12 ஆம் நூற்ருண்டிலேயே சேதுபதிகள் அதாவது கி.பி. 1604க்கு முன்பே சுயாதிபதிகளாக விளங்கியது தெரிகிறது.[41]

மேற்குறிப்பிட்ட விருத்தாந்தத்தில் பாண்டியரையும் சேதுபதிகளையும் தனித்தனியே சொல்லியிருப்பதிலிருந்து பிற்காலப் பாண்டியர்களுக்கு அடங்கிய நிலையில் சேதுபதிகள் இருந்திருக்க முடியாது என அறியலாம். அதனுல்தான் கால்டுவெல் அடிகளார் சேதுபதி போன்ற ஒரு சில அரசர்களுக்கு

40 ரா. இராகவையங்கார் ''சேதுபதிகள்'' (''செந்தமிழ்'' தொகுதி -2சோப— கிருது-தை இதழ்)
T. Rajaram Row, ''Ramnad Manual'' PP 205-206

41 ப.ஆ.முத்துத்தாண்டவராயபிள்ளை ''சேதுபதிகளும் அவர்களுடைய நாணயங்களும்'' (செந்தமிழ்ச்செல்வி'' தொகுதி XIV 1935 பிப்-மார்ச் இதழ்)

ஆட்சி உரிமை பண்டைய பாண்டியர்களால் வழங்கப்பட்டது என்று எழுதியிருக்கிறார்.[42]

சேதுபதிகளால் கோவில்களுக்கு விடப்பட்ட மானியங்கள், கோவில் திருப்பணிகள் சம்பந்தமான கி.பி. 1414, 1484, 1500, 1540-ஆம் ஆண்டுகளுக்குரிய கல்வெட்டுகளிலிருந்து மேற்சொன்ன சேதுபதிகளைப்பற்றிய விவரங்கள் தெரிகின்றன.[43]

மேற்குறிப்பிட்ட சேதுபதிகளுக்குப் பின்னால் ஜெயதுங்க ரகுநாத சேதுபதி[44] என்று ஒருவனை 'மதுரைச்சீமை' வரலாற்றை எழுதிய நெல்சன் குறிப்பிடுகிறார். பட்டியலில் இரண்டாவதாக வரும் சேதுபதியும் அவனும் ஒருவரா என்பது உறுதியாகத் தெரியவில்லை. கடைசிப் பாண்டிய மன்னனால் கொலையுண்டவன் இந்த ஜெயதுங்க ரகுநாத சேதுபதி. இவரது பேரனே முத்துகிருஷ்ணப்பனால் நியமனம்பெற்ற சடைக்கன் உடையன் சேதுபதி[45]

சேதுபதிகளின் பழமை குறித்த பல செய்திகள் இருந்திட, சேதுபதிகள் இன்ன ஆண்டிலிருந்து இன்ன ஆண்டுவரை ஆட்சிபுரிந்தார்கள் என்று தெளிவாக 1604 முதல்தான் தெரிய வந்த போதிலும் அறுதியிட்டுச் சொல்லும்படி "கி.பி. 11 அல்லது 12 ஆம் நூற்றாண்டளவிலேயே சேதுபதி பரம்பரை தோற்றம் பெற்றது" என இராமநாதபுரம் மாவட்ட கெசட்டியர் கூறுகிறது.[46]

---

42 "...Very few of the Zamindars (the principal exception is the Setupati of Ramnad) can claim that their estates or chiefships were conferred upon them by the old Pandya kirgs."
—Bishop R.Caldwell. A History of Tinnevelly-P.58

43 ப.ஆ. முத்துத்தாண்டவராயபிள்ளை "சேதுபதிகளும் அவர்களுடைய நாணயங்களும்" (செந்தமிழ்ச்செல்வி-தொகுதி XIV 1935—ஏப்ரல்-மே இதழ்)

44 T.Rajaram Row, Ramnad Manual-P. 205

45 J.H.Nelson, The Madura country-PP. 110-115 qoted by Robert Sewell in his Book-A Sketch of the Dynasties of Southern India-P.87

46 Ramanathapuram District Gazetteer-P.140

# 3

# நாயக்கர் ஆளுகையில் நாடாண்ட சேதுபதிகள்

## 1. மீண்டும் சேதுபதிகள்

கிழவன் காலத்திற்கு 70 ஆண்டுகள் முன்னர் தொடங்கி, ஆளத் தொடங்கிய சேதுபதிகள் அனைவரும் மதுரை நாயக்கர் அரசர்களுக்குக் கட்டுப்பட்டே ஆட்சி புரிந்திருக்கிறார்கள். அவர்கள் எவ்வாறு நாயக்க மன்னர்க்கு கட்டுப்பட்டவர் ஆனார்கள் என்பதில் மதுரை வரலாறு அடங்கியிருக்கிறது. கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் மத்தியில் விஜய நகர அரசு பலவீனம் அடைந்தது. விஜய நகரத்தாருக்கு கப்பம் கட்டி வந்த சந்திர சேகர பாண்டியனை வீரசேகர சோழன் வென்று பாண்டியனை வசப்படுத்தினான். முன்பு பாண்டியனும் பாண்டியனும் அடித்துக் கொண்டு ஈழத்தவரை அழைத்து வந்தது போல இவர்கள் இருவரும் விசயநகர நாயக்கர் மதுரையில் காலூன்றக் காரணமாயினர்.

சந்திரசேகர பாண்டியன் விசயநகர அரசுக்குப் புகார் கொடுத்தான். விசய நகர மன்னன் நாகம நாயக்கன் தலைமையில் படையை அனுப்பினான். வந்தவன் வீர சேகரனை வென்றான். ஆனால் வெற்றிக்கனியைத்தானே வைத்துக் கொண்டான். பாண்டியனிடம் அரசு ஒப்புவிக்கப் படாமல் போகவே, வடதிசை நோக்கி மீண்டும் அபயக்குரல் எழுந்தது. இம்முறை நாகமனைப் போரில் வென்று, பாண்டிய நாட்டை மீட்க அனுப்பப்பட்டவன் வேறு யாருமல்ல; அவன் மைந்தனே!

மகன் விசுவநாதன் தந்தை நாகமனை அடக்கி விசயநகரத்திற்குக் கொண்டு சென்று பேரரசனிடம் ஒப்படைத்தான். விசுவநாத நாயக்கன் விசுவாச நாயகனாக விளங்குவதைக் கண்ட விசய நகரப் பேரரசன் மதுரையில் அவனையே தனது அரசின் பிரதிநிதியாக நியமித்தான். இதுநடந்தது கி.பி. 1559-இல்.

விசுவநாதனுக்கு ஆள உதவியாக அரியநாதன் என்பவனை விசயநகரத்தரசர் அனுப்பி வைத்தார். தொண்டை மண்டலத்து மெய்ப்பாடு எனுஞ் சிற்றூரைச் சேர்ந்த அரியநாதன் கணக்கர் வேலைக்காக விசயநகரம் சென்றவன், அரசாங்கப் பணியில் படிப்படியாகத் தன் திறமையினால் முன்னேறினான் தளவாயாக மதுரை வந்து முதலமைச்சனாகி அதன் காரணமாக 'முதலி' என்று அழைக்கப் பட்டான். இந்த அரிய நாதனின் மூளையில் உதித்ததுதான் 'பாளையப் பட்டு' என்ற அரிய திட்டம்.

விசுவநாத நாயக்கன் காலமுதல் இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கன் காலம் வரை பணி புரிந்த அரியநாதன் கி பி. 1600-இல் தனது 80-ஆவது வயதில் மறைந்தான். நாட்டில் சிறுசிறு பகுதிகளை அங்கங்கே சிலர் தலைவர்களாக ஆண்டு கொண்டிருந்தார்கள். ஆனாலும் ஒருங்கிணைந்த ஓர் அரசு இல்லாததால் நாட்டில் அமைதியின்மையும் குழப்பமும் நிலவி வந்த காலகட்டத்தில் அரியநாதன் பாளையப்பட்டுத் திட்டத்தைச் செயலாக்கினான். செல்வாக்கு மிக்க பழைய உள் நாட்டுத் தலைவர்களையும் பாளையக்காரர்களாக ஆக்கினான். புதிய பாளையக்காரர்களும் உருவானார்கள். மொத்தம் 72 பாளையங்கள் அரியநாதர் திட்டத்தால் உருவாயின.

மதுரையில் நாயக்கர் ஆட்சியின் தொடக்க காலத்தில் மறவர் நாட்டிலும் மற்றபகுதிகளைப் போலவே குழப்ப நிலை இருந்து

வந்தது. எந்த சேதுபதியும் அப்போது அப்பகுதியில் ஆட்சியில் இல்லாத காலம்.

அந்தக் காலத்தில் மறவர் நாடு இப்போதைக் காட்டிலும் மிகுதியும் காடடர்ந்த பகுதியாகக் காட்சி யளித்தது, என்--கிருர் ராபர்ட் சியூவெல். கள்வர் பாடு கொண்டாட்டமாக இருந்தது. தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் ஆயினர். மறவர் நாட்டில் அமைதி ஏற்படுத்தவும் வரியை ஒழுங்காக வசூலிக்கவும் இராமேசுவரம் கோவிலுக்குச் செல்லும் பயணிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் வலிமையுள்ள ஒரு தலைவனை மதுரை நாயக்க மன்னன் முத்து கிருஷ்ணப்பன் (1601-1609) நியமித்தான்.[1]

அவனே 72 பாளையக்காரர்களுக்கும் தலைவன் என அறிவிக்கப்பட்டான். 1604-இல் பண்டைய சேதுபதிகளின் வழியில் வந்த சடைக்கத் தேவன் மறவர் நாட்டுத் தலைவனுக நியமிக்கப்பட்டான். அவன் காலமுதல் தொடங்கிய சேதுபதிகளின் வரலாறுதான் முழுமையாக நமக்குக் கிடைக்கிறது.

## 2. சடைக்கத்தேவன் என்ற உடையன் ரகுநாத சேதுபதி (1604-21)

இவன் தந்தை ஜெயதுங்க தேவன் என்பான். மறவர் நாட்டில் வலிமை மிக்க எழுவருள் தலைவனுக விளங்கி வந்தான், ஜெயதுங்கன்.[2] அவனது மதியும் வலியும்மிக்க மைந்தன் சடைக்கத் தேவனை மதுரை நாயக்க அரசு மறவர் நாட்டைஆள சேதுபதியாக அறிவித்தது. எதிர்பார்த்தது போல குழப்பம் விளைவித்தவர்களை அடக்கினுன். வடக்கு வட்டகை, காளையார்கோயில், பட்ட மங்கலம் ஆகிய பகுதிகளின் தலைவர்களை அடக்கினுன்.[3] போகலூரிலும் இராமநாதபுரத்திலும் பெரும் மண்கோட்டைகளைக் கட்டினுன்.[4]

இவன் போகலூரைத் தலைநகரமாகக் கொண்டிருந்தான். இராமநாதபுரத்திற்கு வடமேற்கே 10-மைல் தொலைவில்

1 Robert Sewell, "A SKETCH OF THE DYNASTIES OF SOUTHERN INDIA" P. 89
2 T. RajaramRow, "RAMNAD MANUAL" P. 212
3 Robert Sewell, "A SKETCH OF THE DYNASTIES OF SOUTHERN INDIA" P.89.
4 Subrahmanian, "HISTORY OF TAMILNAD (AD1565-1956)

அமைந்துள்ளது. தற்போது சத்திரக்குடி எனும் புகைவண்டி நிலையம் அமைந்த ஊராகும்இது.

இராமேசுவரத்திலும் திருவாடானையிலும் உள்ள கோவில்களுக்குச் சில கிராமங்களை நிவந்தங்களாக அளித்தான். நான்கு பிள்ளைகளும் ஒருபெண்ணும் இவனது வழித் தோன்றல்கள்.[5]

## 3. கூத்தன் சேதுபதி (1621-35)

சடைக்கன் சேதுபதியின் நான்கு மைந்தர்களுள் மூத்தவன் இவன். தந்தையைப் போலவே இராமேசுவரம் திருவாடானை முதலிய ஊர்களிலுள்ள கோவில்களுக்கு அறப்பணிகள் புரிந்த இவன், மக்கட் பேறின்றி இறந்தான்.[6]

## 4. இரண்டாவது சடைக்கன் என்ற தளவாய் சேதுபதி (1635-46)

கூத்தன் சேதுபதியின் சுவீகாரமைந்தன் இவன்[7] கூத்தன் சேதுபதியின் உடன் பிறந்தான் என்பாரு முளர்.[8]

இவனது ஆட்சியின் மூன்றும் ஆண்டில் தன்னுடைய சுவீகார மைந்தன் ரகுநாதனை தனக்கு வாரிசு என்று அறிவித்தான். அவன் தளவாய் சேதுபதியின் தங்கை மகனவான்.

அப்போது காளையார் கோயிலில் சேதுபதியின் பிரதிநிதியாக ஆளுநர் பொறுப்பில் இருந்தவன் தம்பித்தேவன்; சடைக்கத் தேவனுக்கு காமக்கிழத்தி மூலம் பிறந்தவன்.[9] தளவாய்சேது பதிக்குப்பின், தான் அரசனுகலாம்என்று எண்ணியிருந்த தம்பித் தேவனை சேதுபதியின் அறிவிப்பு ஆத்திரமடையச் செய்தது. இவனுக்கு பெத்தன நாயக்கன் என்ற பெயருமுண்டு.[10]

தம்பி மதுரை மன்னன் திருமலையிடம் முறையிட்டான். இதன் காரணமாக மறவர் சீமையில் போர் மேகம் சூழ்ந்தது.

72 பாளையக்காரர்கள் அனுப்பிய படைகள் புடைசூழ திருமலை மன்னரின் தளபதி, இராமப்பய்யன் தலைமையில்மதுரைப் படை

5 T. RajaramRow, "RAMNAD MANUAL" P. 213

6 I bid-P.214

7 N Subrahmanian, "HISTORY OF TAMILNAD (AD 1565-1956 P 64

8 Robert Sewell, "A SKETCH OF THE P.89. DYNASTIES OF SOUTHERN INDIA"

9 S. Thiruven katachari, "THE SETUPATIS OF RAMNAD" P.21.

10 PHAROAH'S GAZETTEER OF SOUTHERN INDIA qu ted in Robert Sewel's A SKETCH OF THE DYNASTIES OF SOUTHERN INDIA' P.88

தம்பிக்காக, தளவாய் சேதுபதிக்கு எதிராக மறவர் சீமை நோக்கிப் புறப்பட்டது.

மறவர் படையை இலேசாக எடை போட்டுப் படையோடு நடைபோட இருந்த, தன் தளவாயை திருமலை மன்னன் எச்சரித்து அனுப்பினன்:-

*''வேண்டாமடா ராமா வீரியங்கள் பேசாதே*
*பண்டுமுன்னுள் நம்சேனை பாருலகு தானறிய*
*குழல்† வாய்க் திரையாக கொள்ளைக் கொடுத்தோமே*
*யின்றி பகைத்தால் எதிர்த்த மன்னர் தானகைப்பார்*
*சேதுக் கரைதனிலே சென்றவர்கள் மீண்டதில்லை*
*வாளுக்கிரையிட மறவன் வலுக்காரன்*
*துப்பாக்கி மெத்த உண்டாந்தோலா மறவனுக்குத்*
*தன்னரசு நாடு தனிக்கோட்டை யாளுவனும்*
*மதுரைப் படையென்ருல் மதியான் மறவனுந்தான்*[11]

புதுக்குடி, அரியாண்டிபுரம், இளையான்குடி, அத்தியூத்து, போகலூர், முகவை, ஆற்றங்கரை முதலிய இடங்களில் உள்ள கோட்டைகள் அழிந்த பின்னர், போர்க்களம் இராமேசுவரத்திற்கு மாறியது. தளபதி இராமப்பய்யன் பாம்பன் கால்வாயில் பாலம் அமைத்துப் படைநடத்த எடுத்துக் கொண்ட முயற்சியை விவரிக்கும் பகுதி ''இராமய்யன் அம்மானை''யில் சுவையான பகுதியாகும்.

பாம்பன் கோட்டையும் பிடிபட்டவுடன், போர் இராமேசுவரம் கடலிலும் நடந்தது. கொச்சியிலிருந்தும் இலங்கையிலிருந்தும் ஐரோப்பியர் அடங்கிய கப்பற்படைகள் வந்து சேர்ந்தன. போர்த்துகீசியர் திருமலை நாயக்கருக்கும் டச்சுக்காரர் சேதுபதிக்கும் உதவிபுரிந்திருப்பதாக பேராசிரியர் சத்திய நாதய்யர் தெரிவித்துள்ளார்.[12]

பேரிழப்பிற்குப் பின்னர் மதுரைப்படை வெற்றி பெற்றது. சேதுபதி சிறையில் அடைக்கப்பட்டார். தம்பி சேதுநாட்டுக்கு அரசனுக்கப்பட்டான். ஆனல் நாட்டில் அவனுக்கு எதிர்ப்பு மிகுந்தது. அதை அவனல் சமாளித்து ஆட்சி நடத்த இயலவில்லை.

---

† குழல்-பீரங்கி

11 சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் பதிப்பித்த ''இராமய்யன் (இராமப்பய்யன்) அம்மானை'' ப 11.

12 R. Sathyanatha Aiyar 'HISTORY OF THE NAYAKS OF MADURA'' P. 123

இதைக் கண்டு ஒரு முடிவுக்கு வந்த திருமலை மன்னன் சிறையிலிருந்த சேதுபதியை விடுவித்து சேதுநாட்டை மீண்டும் அவனிடம் ஒப்படைத்தான். சிறை மீண்டபின் 5 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த பின்னர் இறந்தான். ஆனால் தம்பித்தேவனால் கொலை செய்யப்பட்டு இவன் இறந்ததாக நெல்சன் கூறுகிறார்[13]

முகவையில் உள்ள சொக்கநாதசாமி கோயிலைக் கட்டியவன் இவனே. இவன் இராமேசுவரம் கோவிலுக்கும் பல சிறு கோவில்களுக்கும் கூட நிபந்தங்கள் அளித்துள்ளான். [14]

## 5. இரகுநாத சேதுபதி என்ற திருமலை சேதுபதி (1647-72)

இவன் சடைக்கத்தேவன் உடையன் சேதுபதியின் மகளான கங்கை அல்லது கண்காணும் நாச்சியாரின் மைந்தனாவான்.[15]

''மண்ணுந் தமிழ்ப் பயிர் வாடாது மாரி யிற்பாரின் முத்தும்
பொன்னும் சொரியும் ரகுநாதன்'' —என்றும்
''பால் வாய்ப் பசுந்தமிழ் வீசிய வாசம் பரந்தவையைக்
கால் வாய்த்த வீரையர் கோன் ரகுநாதன்''—என்றும்

'ஒருதுறைக் கோவை'யில் சிவகங்கை - பொன்னுங்கால் அமிர்த கவிராயரால் போற்றிப் புகழப்படும் இச் சேதுபதியே சேதுபதிகளிற்சிறந்தவன், பெருமைக்குரியவன் என்று சிறப்பித்துக் கூறியுள்ளார் வரலாற்றுசிரியர் டாக்டர் ந. சுப்பிரமணியன்.[16] திருமலை நாயக்கருக்கு மிகுதியும் உற்ற பெருந்துணையாக விளங்கியதால் திருமலை சேதுபதி என்று பெயர் ஏற்பட்டது.

தஞ்சாவூரை வெற்றி கொண்டதன் காரணமாகத் திருவாரூர் மன்னார்குடி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி தேவகோட்டை- இவைஎல்லாம் சேதுபதி சீமையில் சேர்க்கப்பட்டன.

மைசூர் மதுரை மீது படையெடுத்த போது 25,000 மறவர் படையுடன் சென்று மைசூர்படையை முறியடித்து வெற்றியை ஈட்டியதற்காக திருப்புவனம், திருச்சுழி, பள்ளிமடம் முதலிய

13 N. Subrahmanian, ''HISTORY OF TAMILNAD1565 1956''
Robert Sewell A SKETCH OF THE DYNASTIES OF SOUTHERN INDIA'' P 88
14 T Rajaram Row ''RAMNAD MANUAL'' p 216
15 Robert Sewell, ''A SKETCH OF THE DYNASTIES OF SOUTHERN INDIA'' p. 88.
16 N. Subrahmanian, ''A HISTORY OF TAMILNAD (1565-1956) p 66

இடங்களையும் 'தாலிக்கு வேலி' எனும் பட்டத்தையும் திருமலை மன்னரிடமிருந்து பெற்றான்.

மதுரையின் மீது முஸ்லீம் தளபதி குதுப்கான் தொடுக்கவிருந்த தாக்குதலைத்தடுத்து நிறுத்தியதற்காக, 'நவராத்திரி' கொண்டாடும் உரிமை திருமலை மன்னனால் இச்சேதுபதிக்கு வழங்கப்பட்டது.

எட்டயபுரத்தரசர் தலைமையில் பாளையக்காரர்கள் சிலர் திருமலை மன்னருக்கு எதிராகக் கிளப்பிய கலகத்தை அடக்கியமைக்காக இச்சேதுபதிக்கு நெல்லைச்சீமையில் அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள மன்னார் கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகள் வழங்கப்பட்டதுடன் மன்னார் வளை குடாவில் முத்துச் சிலாபத்தில் உரிமையும் அளிக்கப்பட்டது[17] மன்னார்குடாப் பகுதி சேதுபதி சீமைக்குள் இருந்தாலும் அதற்கு முன்பு முத்துச்சிலாப உரிமை இல்லாதிருந்தது, சேதுபதிகளுக்கு.[18]

திருமலை நாயக்கரின் பேரன் சொக்கநாத நாயக்கன் அரசனானதும் இச்சேதுபதிக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் தொடக்கத்தில் வெற்றி பெற்ற போதிலும் இறுதியில் தோல்வியையே தழுவின.

திருமலை நாயக்கருடன் மிகுந்த தொடர்பிருந்ததன் காரணமாகவோ என்னவோ தமிழுடன் தெலுங்கு மொழிக்கும் ஆதரவு நல்கினான்.

சிவகங்கை வட்டம் பொன்னாங்கால் எனும் ஊரினரான அமிர்தகவிராயர் இவன் மீது "நாணிக்கண் புதைத்தல் எனும் ஒரு துறைக் கோவை" பாடி அரங்கேற்றிய போது பாடல் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தங்கத் தேங்காய் இவனிடம் பரிசிலாகப் பெற்றாராம்[19] அழகிய சிற்றம்பலக் கவிராயரும் இவனால் ஆதரிக்கப் பெற்றவர். தாயுமானவர் இவன் காலத்தவர். 'இரணிய கர்ப்பம்' எனும் யாகம் செய்தான்.[20]

ஆனையூர், மேலச்சிறுபோது, வெள்ளிமுத்தி, விடத்தகுளம்,

---

17 S. Thiruvenkatachari 'THE SETUPATIS OF RAMNAD'' pp 24-25

18 குருஹதாசப்பிள்ளை "திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம்" ப. 39.

19 "கோவைத்துறைக்குப் பதினாயிரம் பொன் கொடுத்திசைகொள் தேவைத் துறைக்குத் துரை" (தேவை-இராமேசுவரம்)
கா. நயினார் முகமது பதிப்பித்துள்ள 'நாணிக்கண் புதைத்தல் எனும் ஒரு துறைக்கோவை"

20 N. Subrahmanian "HISTORY OF TAMILNAD 1565-1956" pp 66-69.

திருச்சுழி முதலிய இடங்களில் உள்ள கோவில்களைக் கட்டினான். முகவை நகரில் மாரியம்மன் கோவிலும் கோட்டைக் காவல் தெய்வத்திற்கு வன சங்கரி அம்மன் கோவிலும் கட்டினான். இராமேசுவரம் கோதண்டராமர் சத்திரத்திற்கு நிவந்தம் வழங்கினான்.[21]

## 6. கட்டயத்தேவர் என்ற இராஜ சூர்ய சேதுபதி(1672)

இவன் திருமலை சேதுபதியின் மூத்தமகனவான்.[22] ஆனால் ராபர்ட்சியூவெல் இவனை திருமலை சேதுபதியின் சகோதரனை நாராயணத்தேவனின் மகன் என்று குறிப்பிட்டுள்ளார்.[23] ஆறுமாத காலமே இவனது ஆட்சி நீடிக்க முடிந்தது. மதுரை நாயக்க மன்னன் சொக்கநாதனுக்கு எதிரியான செங்கமல தாசை ஆதரித்ததனால் வஞ்சகமாகச் சிறையில் அடைக்கப் பட்டுதிருச்சியில் கொல்லப்பட்டான்.[24]

இவன் நினைவாக இராஜ சூரிய மடை எனும் கிராமம் முகவைக்கருகில் உள்ளது.

## 7. அதன ரகுநாத சேதுபதி (1672-73)

இவன் இராஜசூர்ய சேதுபதியின் தம்பியாவான். இவனும் மூன்று மாதங்களே ஆளமுடிந்தது. இவனைப் பற்றி தங்கள் நூலில் சேதுபதிகளின் வரலாற்றுப் பகுதியில் ராபர்ட் சியூ வெலும் டாக்டர் கதிர்வேலும் ஒன்றுமே குறிப்பிடவில்லை.

நாயக்க அரசர்களின் கட்டுப்பாட்டில் ஆட்சி புரிந்து வந்த சேதுபதிகளின் வரிசை இவனுடன் முற்றுப் பெற்றது போலவே கொள்ளலாம். இராஜசூர்யனுக்கோ அவன் தம்பி அதனரகுநாதனுக்கோ பிள்ளைகள் இல்லை. வாரிசுகளை நியமித்து விட்டுப் போனார்கள் என்ற தொல்லையும் இல்லை.

21 T. Rajaram Row "RAMNAD MANUAL" p 221.
22 N. Subrahmanian. "HISTORY OF TAMILNAD 1565 1956" p 69
23 Robert Sewel "A SKETCH OF THE DYNASTIES OF SOUTHERN INDIA" p. 88.
24 V, Vriddhagirisan, "THE NAYAKS OF TANJORE" p.165

# 4

# தகுதியால் தலைமை பெற்றான்

## 1. உறவும் உரிமையும்

அதன ரகுநாத சேதுபதியின் மரணத்திற்கும் கிழவன் சேது பதி ஆட்சிக் கட்டில் ஏறியதற்கும் இடையில் கால இடை வெளி இரண்டு ஆண்டுகளுக்கும் சற்றே குறைய என்றும் அது அவ்வாறில்லை என்றும் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஏனெனில் திருமலை சேதுபதி இறந்ததே 1674 தொடக்கத்தில் தான் என்றும் அந்த ஆண்டே இராஜசூர்ய சேதுபதி பட்ட மெய்தினன் என்றும் அதே ஆண்டிலேயே கிழவன் ஆட்சி உரிமை பெற்றான் என்றும் டாக்டர் கதிர்வேல் கருத்தறிவிக் கிறார்.[1]

கிழவனின் இயற்பெயர் இரகுநாதத்தேவன். திருமலை சேது பதிக்கும் இரகுநாதசேதுபதி எனும் பெயர் இருந்திருப்பதால் இவனை இரண்டாவது இரகுநாதசேதுபதி என்பர்.

1 Dr. S. Kathirvel "A HISTORY OF THE MARAVAS" p 33

கிழவன் சேதுபதி அரியணையை அவ்வளவு எளிதாக அடைந்து விடவில்லை. அவன் அரசனானதே ஒரு சுவையான கதை. எந்த யானையும் வந்து அவன் கழுத்தில் மாலையைப் போட்டு மன்னனாக்கி விடவில்லை. நாயக்கர் கால சேதுநாட்டு முதல் அரசன் சடைக்கத்தேவன் சேதுபதியானதற்குக் கூட இது மாதிரி கதை நாட்டில் வழங்குகிறது. ஒரு நாள் சடைக்கத் தேவன் வேட்டையாடிவிட்டுக் களைத்து ஒரு மரத்தடியில் படுத் துக் கண்ணயர்ந்திருந்தான். அப்போது அவன் தலைக்கு மேலே ஒரு நல்ல பாம்பு தன் படத்தை விரித்து ஆடிக் கொண்டிருந்த தாம். அவ்வழியே இராமேசுவரம் சென்று கொண்டிருந்த பைராகிகள் விரைவில் அவன் அரசனாகப் போகிறான் என்று சொல்லிச் சென்றார்களாம். பின்னால் சடைக்கத்தேவன் முத்துக்கிருஷ்ணப்பனால் சேதுபதி ஆக அறிவிக்கப்பட்டதும் இந்நிகழ்ச்சி அந்நிகழ்ச்சியுடன் முடிச்சுப் போட்டுக் காண் பிக்கப்பட்டது.[2]

இவ்வாறெல்லாம் எந்த விதமான உத்பாதமும் நிகழாமல், எந்தக் கட்டுக்கதைக்கும் நாயகனாக ஆகாமல், தன் ஆற்றலி னால் அரச பீடத்தை அடைந்தவன் கிழவன் சேதுபதி. அவ னது வீரதீரச் செயல்களே அவன் அரியணையை அடையக் கட்டியங்கூறும் படிக்கட்டுகளாய் அமைந்தன. இவ்வாறெல் லாம் அவனைப் பற்றிச் சித்திரிப்பானேன் என்று கேட்கத் தோன்றும். அதற்கு அவசியம் இல்லாமலில்லை. காரணம் அவன் ஆட்சி பீடத்திற்கு நேரடியான வாரிசு அல்ல என்பது தான். அதுமட்டுமல்ல; வேறுபல தடைகளும் இருந்தன.

கிழவன் எனும் இரகுநாதன் ராஜசூர்ய சேதுபதியின் ஐந்தா வது மனைவிக்கு[3] கி.பி. 1630-31 இல் பிறந்தவன். இவன் பிறந்த ஆண்டைத் தெரிவிக்கும் தெளிவான சான்றுகள் கிடைக்கவில்லை. கிறித்துவப் பாதிரிமார்கள் கிழவன் சேதுபதி தனது 80 ஆவது வயதில் கி.பி. 1710இல் இறந்தான் என்று எழுதியிருப்பதை வைத்து 1630 அல்லது 1631 என்று இவன் பிறந்த ஆண்டைக் கணிக்க முடிகிறது.[4] இவனது தாய் ஒரு கொண்டையங்கோட்டை மறக்குல மங்கை யாவாள்[5]

---

2 T- Rajaram Row, ''RAMNAD MANUAL'' p. 219
3 Dr. S. Kadhirvel. A HISTORY OF THE MARAVAS-p. 33
4 Henry Doerihg (Arch-Bishop of Poona) 'FROM ROYAL PAGE TO MARTYR-The Blessed, John de Britto-p. 132.
5 Dr S. Kadhirvel, A HISTORY OF THE MARAVAS-p. 33

முந்திய சேதுபதி குடும்பத்திற்கும் கிழவன் சேதுபதிக்கும் என்ன உறவு? இதில் கருத்து வேறுபாடு உள்ளது. இராபர்ட் சியூவெலும்[6] நெல்சனும் கிழவன் சேதுபதியை இராஜ சூர்ய சேதுபதியின் மைந்தன் என்று ஒப்புக்கொண்டாலும் காமக் கிழத்திக்கோ அல்லது உரிமை மனைவி அல்லாத ஒருத்திக்கோ பிறந்தவன் என்றே கருதுகின்றனர். மக்லீனும் ''பரோ'' நிறுவனம் வெளியிட்ட தென்னிந்திய கெசட்டியர் தொகுப்பாளரும் இராம்நாட் மானுவல் ஆசிரியரும்[7] இவனை அதன சேதுபதியின் பெரியப்பன் அல்லது சிற்றப்பன்பேரன் என்று கருதுகின்றனர். சேதுபதிகள் பற்றி ''கல்கத்தா ரிவ்யூ'' இதழில் கட்டுரை தீட்டியவர் இவனை இராஜசூர்ய சேதுபதியின் பெரியப்பன் அல்லது சிற்றப்பன் மைந்தன் என்று கூறுகிறார். அண்மையில் சேதுபதிகள் பற்றி ஆய்வு செய்துள்ள டாக்டர் சேஷாத்ரி இரண்டாவதாகச் சொன்ன கருத்தையே ஆதரிக்கிறார்.[8]

இராமநாதபுரம் சமஸ்தான 'வம்சாவளி' பற்றிக் கூறும் ஓலைச் சுவடி விளக்கும் நெறிமுறையின்படி சேது நாட்டுக்கு அரசனாகும் உரிமை சேதுபதி சார்ந்த செம்பி நாட்டு மறவர் குலப் பிரிவின் வழிவந்த மனைவிக்கு பிறந்த மூத்த ஆண்குழந்தைக்கே உண்டு. ஆண்மகவு இல்லை எனில் அந்த உரிமை பெண் மகவுக்குச் சாரும். அதுவுமில்லா விடில் அரசனின் தம்பிக்கு வந்து சேரும். தம்பியுமில்லாவிடில் அரசனுக்கு ஆண் வழியில் நெருங்கிய உறவினருக்குப் போய்ச் சேரும். மறவர் குலத்தின் உட்பிரிவினருக்குள் நிகழ்ந்த திருமணங்கள் கூட மறவரால் கலப்புத்திருமணமாகக் கொள்ளப்பட்டன. சேதுபதிகள் தமதல்லாத மறக்குலத்தின் வேறு உட்பிரிவுகளுக்குள் மணம் செய்து கொள்ளத்தடை இல்லை. ஆனால் அவை சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட மாட்டாது. எப்படியெனில், அந்தத் திருமணங்களின் மூலம் பிறக்கும் குழந்தைகட்கு அரசாளும் உரிமை கிடையாது. இவ்வாறெல்லாம் ''மறம் பாடல் சுவடி'' விளக்குகிறது.[9]

ஆக இந்தச் சுவடி சொல்லும் நெறிப்படி சேதுபதியின் செம்பி நாட்டு மகளிரல்லா மனைவியர் உரிமை மகளிராகார்.

6 Robert Sewell, A SKETCH OF THE DYNASTIES OF SOUTHERN INDIA pp.88 90
7 T. Rajaram Row, RAMNAD MANUAL-p.222
8 Fr. Laynes (Shenbaganur Collections) quoted by Dr. K. Seshadri "THE SETUPATHIS OF RAMNAD" (1976) (Doctoral Diss.rtation unpublished)
9 Dr. S Kadhirvel, "A HISTORY OF THE MARAVAS" Foot Note 4at page 34

இந்த நெறி முறை பற்றிய விளக்கமான செய்திகள் தெரிய வராததால் பேராசிரியர் சத்தியநாதய்யர் போன்றவர்கள் இரகுநாதத் தேவன் ஆகிய கிழவன் சேதுபதியை இராஜசூர்ய சேதுபதிக்கு காமக்கிழத்தி மூலம் பிறந்த மைந்தன் (iilegiti mate son) என்பது போலக் குறிப்பிட்டு விட்டனர் என்று கூறுகிறுர் டாக்டர் கதிர்வேல்.[10]

''மூவேந்தர் குலத் தேவமார் சமூக வரலாறு'' எனும் நூலின் ஆசிரியர் ''கிழவன் சேதுபதியின் தாயார் அகமுடையர் குலப்பிரபு ஒருவரின் மகள்'' என்றும் ''அந்தக் குலத்தில் பெண் எடுத்துக் கொள்ளும் வழக்கம் சேதுபதிகளிடையே ''இருந்தது'' என்றும், அத்திருமணங்களின் மூலம் பிறக்கும் குழந்தைகளுக்கும் அரசுரிமை இருந்தது'' என்றும் தெரிவித்துள்ளார்.[11]

கிழவன் சேதுபதியின் தாய் அகமுடையர் குலத்தினள் என்ருலும் சரி கொண்டையங்கோட்டை மறத்தி என்ருலும் சரி, அவள் செம்பி நாட்டு மறவர் பிரிவைச் சேர்ந்தவள் அல்ல எனும் நிலையில் ''மறம் பாடல் சுவடி'' சொல்லும் நெறி முறைப்படி கிழவன் அரசாளும் உரிமை கோர முடியாத நிலையில் இருந்தான். இருந்தபோதிலும் அவனிடம் அரசாளும் தகுதியும் திறமையும் இருந்தது. ''இராமநாத புரம் சேதுபதிகள்'' நூலின் ஆசிரியர் மதிப்பிடுவது போல ''அவன் சாமர்த்தியசாலி, மதிநுட்பமிக்கவன்...''[12]

## 2. உறுதி கொண்ட நெஞ்சினுய்-வா!வா!!வா!!!

கூந்தல் உள்ள சீமாட்டி கொண்டையும் போடலாம்; கூந் தலை அவிழ்த்தும் விடலாம்''— எதுவும் எடுப்பாகவும் எழிலாக வும் இருக்கும். அதுபோல அந்தக் கொண்டையங்கோட்டை மறத்தியின் மைந்தனுக்கு வீரப் பேராற்றல் இருந்ததால் அரசஞக முடிந்தது. ஏற்பட்ட எதிர்ப்புக்களை துணிவென்னும் துணைகொண்டு தூள்தூளாக்கிடவும் முடிந்தது.

கிழவன் ஆட்சி உரிமையை மக்களாட்சி நெறிமுறைப்படி அடைந்தான் என்று சொன்னுல் அது தவருகாது.

10 I bid

11 பி. முத்துத்தேவர். ''மூவேந்தர் குலத் தேவமார் சமூகவரலாறு'' ப.119

12 ' He (Kilavan Setupati) was clever, intelligent and highly independent''- S. Thiruvenkatachari, THE SETUPATIS OF RAMNAD—P-31

இரகுநாதன் (கிழவன்) அரசனுகும் முன்பு சேது நாட்டுப் படையின் தளபதியாக இருந்து கொண்டிருந்தான். சேது பதிக்கு நெருங்கிய உறவுடையவன் சிறுவாழி பாளையத்தின் தலைவனுன தாதியத்தேவன் ஆவான். எனவே இவ்விரு வருமே அரசுரிமைக்குப் போட்டியிட்டனர்.[13] போட்டி ஏற்படு கின்ற சந்தர்ப்பங்களில் மறவர் நாட்டுத் தலைவர்கள் கூடி யாரைச் சேதுபதியாக்குவது என்று முடிவு செய்வது வழக்கம்

தாதியத்தேவனும் சேதுபதியின் நேரடியான வாரிசு அல்லன். அவன் தாய் வழியில், மறைந்த திருமலை சேதுபதிக்கு நெருக் கமான உறவுடையவன்; அவ்வளவே; உறவு எனும் ஒரு தகுதி மட்டும் தான் அரசனுவதற்கு உரிய தகுதியாக எங்கும் இருந்து வந்துள்ளது. ஆனுல் நம் தமிழ் நாட்டில் மட்டும் அறி வுக்கும் ஆற்றலுக்கும் முன்னுரிமை அளித்து அரசுரிமை வழங்கிடும் மரபும் இருந்துள்ளது. பாண்டியன் நெடுஞ்செழி யன் போற்றிய அத் தமிழ் மரபு கிழவன் சேதுபதி வரலாற்று லும் தெரிய வருகிறது.

இரகுநாதன் படைத்தளபதியாக இருந்து அனுபவ அறிவு பெற்றவன். படைத்தளபதி எனில் பத்தோடு பதினொன்று, அதில் இவனொருவன் என்ற மாதிரியில் போர்களில் பங் கெடுத்த தளபதியல்லன். போர்க்களத்தில் எதிரிகள் எண்ணற் றோரின் மார்பில் ஈட்டிகளைப் பாய்ச்சிப் புகழ் ஈட்டிய படை வீரன், செல்வாக்கு மிக்க தளபதி.

*''உற்றுழி... ... ... ... ... ...*
*... ... ... ... ... ... ... ... ... ...*
*ஒரு குடிப் பிறந்த பல்லோர் உள்ளும்*
*மூத்தோன் வருக என்னுது அவருள்*
*அறிவுடையோன் ஆறு அரசு செல்லும்*
*... ... ... ... ... ... ... — புறநானூறு—183*

என்று ஆட்சியாளர் தேர்வுக்குப் பாண்டியன் பண்டுரைத்த பண் பாட்டின்படி சேது நாட்டின் தலைவர்கள் அறிவுடையோன் வழி அரசு செல்லட்டும் என்று எண்ணினர் போலும்! அறிவும் ஆற்றலும் மிக்க இளைஞன் இரகுநாதனையே சேதுபதியாக்கும் தங்கள் முடிவினைத் தெரிவித்தனர்.

குல மரபு அடிப்படையில் சேதுபதிகள் ஆட்சி உரிமை பெற வேண்டும் என்ற இலக்கணம் மீறப்பட்டு அறிவாற்றல் தகுதி

13 Dr. S. Kadhirvel, A HISTORY OF THE MARAVAS—P.33

அடிப்படையில் இரகுநாதன் தேர்வு செய்யப்பெற்ருன்[14]. வெற்றியன்றி வேருென்றறியா அவன் வீர வரலாறு இத் தகுதியை இறுதி மட்டும் உறுதி செய்ததல்லவோ?

ஆக அன்று செந்தமிழ்வளர் சேதுநாட்டில் இலக்கணம் மீறிய கவிதை ஒன்று அரங்கேறிற்று. இருந்தும் மக்கள் இத் தேர்வை ஏற்று, போற்றினர். ''உறுதி கொண்ட நெஞ்சினுய் வா! வா!! வா!!!'' என்று பாடுவதுபோல சேதுநாட்டுப் பெண்டிர் வீரனெருவன் வேந்தனுனதைக் குலவையிட்டு வர வேற்றனர்.

## 3. உரிமை பூண்டான், கிழவன் எனும் பெயர் கொண்டான்

குல மரபுப்படி ஆட்சிக்குவர உரிமை இல்லாதிருந்தும் தகுதி அடிப்படையில் உரிமை பூண்டவன் (கிழவன்=உரிமை பூண்டவன்) கிழவன் என்பதை உலகுக்குப் பறை சாற்றவே இரகுநாதன், கிழவன் எனும் பெயர் சூடினன் எனக் கருதக் காரணங்கள் உள்ளன.

இளங்கரிகாலன் நீதிபதியாக அறங்கூறவையத்தமர்ந்து விசாரணை மேற்கொள்ள, கிழவன் வேடம் புனைந்தது போல இவனுக்கு அவசியம் ஏற்பட்டதாக நாட்டில் எந்தக் கதையும் வழங்கிடக் கேட்டிலோம். கி.பி. 1774-இல், 44வது வயதில் அரசு கட்டிலேறினன். என்ருலும் அது ஒன்றும் கிழவயதல் லவே, கிழவன் என வயது அடிப்படையில் பெயர் அமைவதற்கு!

கிழவன் சேதுபதி முகவையில் எழுப்பிய கோட்டையின் தென் மேற்கு மூலையில் ஒரு கொத்தளம் இருக்கிறது, 'மூலைக் கொத்தளம்' எனும் பெயரில். அதை ஒட்டி மேற்கில் 'கூரிச் சாத்த அய்யனர் கோவில்' இருக்கிறது. இதைக் கிழவன் கோவில் என்றும் அழைப்பார்கள். இந்தக் கோவிலுக்கும் கிழவன் எனும் பெயருக்கும் தொடர்புண்டா என்பது ஆய்வுக் குரியது.

வரலாற்றுப் பேராசிரியர் சத்திய நாதய்யர் கூட, கிழவன் சேதுபதி என்ருல் முதிய சேதுபதி (Old or Aged Setupati) என்றே பொருள் காண்கிருர்[15] ஆனல் பண்டைத் தமிழ்

14 Ibid-p. 34.
15 R. Sathyanatha Aiyar, HISTORY OF THE NAYAKS OF MADURA-p. 184

இலக்கியங்களில் கிழவன் எனுஞ் சொல் எந்தப் பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்தது என்று கருதிப்பார்த்திருப்பாரே யானல் கிழவன் என்பதற்கு முதியவன் எனப் பொருள் கொண்டிருக்க மாட்டார்.

பண்டைத்தமிழ் இலக்கியங்களில் மருதநிலத்துத் தலைமக்களை கிழவன், ஊரன், மகிழ்நன் என்று குறிப்பிட்டுள்ளனர். 'கிழமை' என்பதற்குப் பொருள் 'உரிமை' என்பதால் கிழவன் என்பதற்கு உரிமை உடையவன் எனும் பொருளில் பயன் படுத்தப்பட்டுள்ளது.

இரத்தம் உலர்ந்து காணப்பட்ட போர்க்களத்திற்கு உரிமை பூண்டவனே எனும் பொருளில் தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியனை,

*குருதித் துகளாடிய களம் கிழவோயே*

—என்றவாறு புறநானூறு புகழ்கிறது.

காவிரி வளமூட்டும் நாட்டுக்கு உரிமை உடையவனே எனும் பொருளில் கரிகாலனை.

*காரி நெல்லின் சிறைகொள்வேலியாயிரம் விளையூட்டாக*
*காவிரி புரக்கும் நாடு கிழவோயே*

—என்றவாறு பொருநராற்றுப்படை போற்றுகிறது.

நாட்டுக்கு உரிமை உடையவனே எனும் பொருளில் சோழன் முடித்தலைக் கோப் பெரு நற்கிள்ளியை,

*கொழுமீன் விளைந்த கள்ளின்*
*விழுநீர் வேலி நாடு கிழவோயே*

—என்றவாறு குறிக்கிறது.

இதே போல காவிரிக்கு உரிமை பூண்டவன் எனும் பொருளில் சோழன் கிள்ளிவளவனையும்

*காவிரிக் கிழவன் மாயா நல்லிசைக்*
*கிள்ளி வளவன் உள்ளி அவற் படர்தும்*
*செல்லேன் செல்லேன் பிறர்முகம் நோக்கேன்*

என்றவாறு ஒரு கிழவன் ஆக்கிக்காட்டுகிறது புறநானூறு.

பொதுவாகத் தமிழுக்கு உரிமை பூண்ட மூவேந்தரையும்,

*மண் திணி கிடக்கைத் தண் தமிழ்க் கிழவர்*
*முரசு முழங்குதானை மூவருள்ளும்*
*அரசெனப் படுவது நினதே பெரும*

என்றவாறு பன்மை கருதி கிழவர் ஆக்கிப் போற்றுகிறது புற நானூறு.

மேற் சொன்னவையெல்லாம் பழந்தமிழ் இலக்கியங்களில் கிழவன் எனும் சொல் முதுமை எய்தியவன் எனும் பொருளில் அல்லாது உரிமை உடையவன் எனும் பொருளில் வழங்கி வந்திருப்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன[16]

இறுதியாக, கிழவன் என்பதற்கு உரிமையுடையவன் என்று அகராதியில் பொருள் தரப்பட்டிருப்பதை [17] ஆதாரமாகக் கொண்டு கிழவன் எனும் பெயர் அவன் சட்ட பூர்வமாக ஆட்சிக்கு உரிமை பூண்டதைக் குறிப்பதாக வரலாற்றுப் பேராசிரியர்[18] டாக்டர் சேஷாத்திரி மிகச்சரியாகக் கூறிவிட்டார்.

கி.பி. 1674 ஆம் ஆண்டு. சேதுபதியாகத் தேர்வு செய்யப் பெற்ற இரகுநாதத் தேவரின் மாளிகையில் சேதுபதியின் உறவினர், நாட்டின் பெருமக்கள் தலைநகரின் அதிகாரிகள் அனைவரும் கூடினர். இரகுநாதத் தேவருக்குப் பட்டம் சூட்டினர்.[19] சேதுநாட்டரசிற்கு மறவர் சீமைக்கு உரிமை பூண்ட பெருமையைக் கொண்டாட அன்று முதல் தன் பெயர் கிழவன் என்றே சேதுநாட்டு மக்கள் நாவிலும் செந்தமிழ்ப்புலவர் பாட்டிலும் பயிலட்டும் என்று ஆணைபிறப்பித்திருக்க வேண்டும். அது முதல் கிழவன் என்றே இரண்டாம் இரகுநாதத்தேவன் அறியப்படுகிறான்.

அவன் செய்த முதல் வேலை ஆட்சி உரிமையை அடையத் தனக்கு எதிரியாக செயல்பட்டவர்களை அடக்கி ஒடுக்கியது தான். சேதுபதிபட்டத்திற்கு தன்னுடன் போட்டியிட்ட தாதியத்தேவனுக்கு **தன்** அண்ணன்மகளைத் திருமணம் செய்து கொடுத்து அவனது பகையைத் தவிர்த்தான்; தணித்தான்.[20] வாரிசுத் தேர்வுப் போட்டியில் செல்வாக்குடன் விளங்கிய இருவரை ஒழித்துக் கட்டினான்,[21] அதே செல்வாக்கைப் பயன்படுத்தி அவர்கள் வேறு ஒருவனை சேதுபதியாகக் கொண்டு வராமலிருக்க அந்த இருவரும் சேதுபதி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறுவர்[22]

---

16 இரா தேவ ஆசிர்வாதம் ''மூவேந்தர் யார்'' ப.135
17 ந. சி கந்தையா பிள்ளை ''தமிழ்-ஆங்கில அகராதி'' ப 16
18 Dr.K Seshadri 'THE SETUPATIS OF RAMNAD' (1976 Doctoral Dissertation Unpubhished)
19 THE CHRONICLES OF THE SETUPATIS-p. 5 O.H M.S S -Vol II Quoted by Dr- Seshadri in ''THE SETUPATIS OE RAMNAD'' (1976: Doctoral Dissertation unpublished)
20 Fr De Britto to Very Rev. Fr. General from the MARAVA dated 22 7-1692 (Shenbaganur collections) quoted by S.Kadhirvel in his ''A HISTORY OF THE MARAVAS'' p. 34
21 S. Thiruvenkatachari ''THE SETUPATIS GF RAMNAD'' p. 31.
22 N. Subrahmanion, ''HISTORY OF TAMILNAD 1565-1956'' p.70

# 5
# போரும் புகழும்

## 1. ''செருவில் அரியதுரை சேதுபதி வாழியவே!''

கிழவன் சேதுபதி காலம் வரை சேதுபதிகள் மதுரை நாயக்க மன்னர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகவே ஆட்சி புரிந்து வந்திருக்கிருர்கள். ஒரோர் சமயம் கப்பம் கட்டாமல் இருந்திருக்கிருர்கள்.

மகின்சி (MACKENZIE) திரட்டி வைத்துள்ள ஓலைச்சுவடி சேதுபதிகள் கப்பம் கட்டி வாழ்ந்த நிலையைச் சுட்டிக்காட்டுகிறது:-

> ''சேதுபதி உண்டான வரலாறு
> என்ன வென்ருல் முன்னே தஞ்சை
> நகரம் விசைய ரகுநாத நாயக்கர்,
> திருச்சிராப்பள்ளி திருமலை நாயக்கர்,
> மதுரைச் சொக்கநாத நாயக்கர்—
> இப்படி இராச்சியம் ஆண்டு கொண்டிருந்தார்கள்.
> இராமநாதபுரத்திலே கோட்டையும்
> போட்டுக் கொண்டு அந்தந்த

*தெற்குச் சீமையை கட்டிக் கொண்டு*
*திருச்சிராப்பள்ளியிலே நாயக்கருக்குத்*
*தோப்பாவுங் கொடுத்துக் கொண்டு*
*'சேதுபதி' 'சேதுபதி' என்று*
*அப்போது உண்டான செய்தி''*[1]

இயல்பாகவே விடுதலை உணர்ச்சி உள்ள கிழவன் சேதுபதி, தோப்பா கட்டிக்கொண்டு ஆயுள் முழுவதும் அடிமையாக வாழ்வதைவிட ஒரு நாளேனும் சுதந்திர மனிதனாகவாழ, போராடி மடிந்தாலும் குற்றமில்லை என்று எண்ணியவன். அதற்காக எண்ணற்ற இடர்களை எதிர் கொள்ள வேண்டும். சமர்கள் பலவற்றைச் சந்திக்க வேண்டிவரும் என்பதை நன் கறிந்தவன்.

அவன் போரில் புலி எனப்புகழ் பெற்று விளங்கினான்.[2] அதனால் தான் ஒரு புலவன் கிழவன் சேதுபதியை

''*செருவில் அரியதுரை சேதுபதி வாழி!*''[3]

என்று வாழ்த்திப்பாடினான்.

அரசபதவி ஏற்றவுடன் கிழவன் சேதுபதி முதல் நடவடிக்கையாகப் படையைப் பலப்படுத்தினான். கோட்டை கொத்தளங்களை எழுப்பினான். பலம் மிக்க, பகைவர் கண்டஞ்சிய, இவனது பெரும் படையின் தளபதி இலந்தாரி அம்பலகாரன் என்பவன் ஆவான்[4] தன் இறுதி நாள் வரை கிழவன் சேதுபதி தானே படை நடத்திச் சென்றுள்ளதால் தளபதியின் பெயர் அதிகமாக அறியப்படவில்லை.

பாதுகாப்புக் கருதி தன்னுடைய தலை நகரை போகலூரில் இருந்து இராமநாதபுரம் ஆகிய முகவைக்கு மாற்றினான். வையையின் முகத்துவாரத்திற்கு அருகே அமைந்திருப்பதால் அந்நகருக்கு முகவை என்று பெயரிட்டனர். சேதுநாடு கடலோர நாடு. போர்த்துக்கீசியர், டச்சுக்காரர் நடமாட்டம் கடலோரங்களில் அதிகமாக ஏற்படத் தொடங்கிய காலம் அது. எனவே தன்னுடைய நேரடிக் கண்காணிப்பு இருப்பதற்கு, தலைநகர் கடற்கரைக்கு அருகில் இருப்பது நல்லது என்

1 Doct No 3081. MANUSCRIPTS OF MACKENIE'S COLLECTIONS Vol VIII P2685
2 ''He was very famous for his bravery in war'' —Dr S.Mohammad Husayn Nainar in his introduction to ''செய்தக்காதி நொண்டி நாடகம்'' P x
3 ''செய்தக் காதி நொண்டி நாடகம்''-பாடல் வரி 221
4 கே. இராமசுவாமி அய்யர், 'புதுக்கோட்டை இராஜ்ஜியச் சரித்திரம்,' பாகம் II ப.7.

றெண்ணியிருக்கலாம். தவிரவும் அந்தக் காலத்தில் கடற்கரை இப்போதிருப்பதைக் காட்டிலும் முகவைக்கு இன்னும் அருகில் இருந்ததெனத் தெரிகிறது.[5] அவ்வாறு இருந்தும் தலை நகரை அங்கு மாற்றியதற்குக் காரணம் மேற் சொன்னவாறு தான் இருத்தல் வேண்டும்.

## 2. கோட்டைகள், கொத்தளங்கள், கிடங்கில்கள்

கிழவன் சேதுபதி காலத்திற்கு முன்பெல்லாம் சேது நாட்டில் கோட்டைகளுக்கு மண் மதில்கள் அமைப்பது வழக்கமாயிருந்தது. முன்பு போகலூர் சேது நாட்டின் தலை நகரமாயிருந்து, கிழவன் காலத்தில் முகவை நகர் தலை நகரமாகி விட்டதென்று முன்பு கண்டோமல்லவா? தலை நகரைப் பாதுகாப்புள்ளதாக்க கிழவன் எண்ணினன். முகவை நகர்க் கோட்டைக்குச் சுற்றுச் சுவர்களாக இருந்த மண் மதில்களை இடித்திடச் செய்தான். அதற்குப் பதிலாக அங்கே கற்கோட்டை எழுப்பினன்.[6]

அன்றைய சேது நாட்டின் தலைநகரிலமைந்த கோட்டையைச் சுற்றிப்பார்ப்போம். கோட்டைச் சுவர் 5 அடி கனமும் 27 அடி உயரமும் கொண்ட கற் சுவராக எழுப்பப்பட்டது. கோட்டையின் சுவரில் முக்கியத்துவம் உள்ள 32 இடங்களில் கொத்தளங்கள் அமைக்கப்பட்டன. கோட்டை மதிலுக்குப் பின்னே சரிவாக, எழுந்து மேடையாக முடிவடையும் பகுதியே கொத்தளமாகும். எட்டாத உயரத்தில் இருந்து எதிரியைத் தாக்க ஏதுவாக கோட்டைகளில் கொத்தளங்கள் அமைக்கப்பட்டன. முகவைக் கோட்டையின் 32 கொத்தளங்களில் ஒன்று மட்டும் அண்மைக்காலம் வரை அழியாது எஞ்சியிருந்தது. மதுரை இராமேசுவரம் நெடுஞ்சாலையில் நகரின் தென் மேற்கு மூலையில் அமைந்திருந்ததால், இக் கொத்தளம் மக்களால் 'மூலைக் கொத்தளம்' என்றழைக்கப்பட்டு வந்தது. அந்தோ! சென்ற ஆண்டு கிழவன் சேதுபதி கட்டிய கோட்டையில் எஞ்சியிருந்த மூலைக்கொத்தளத்தில் பெரும் பகுதி இடிக்கப்பட்டு

5 Dr. R. Nagaswami & N.S. Ramaswami, "Ramanathapuram District —Archaeological Guide" P.105.

6 He (Kilavan Setupathi) pulled down the mud walls of Ramnad fort and erected a stone fortification"—CALCUTTA REVIEW, Vol 133 P 483 J R.A.S. III P165-168—quoted by Dr S Kadhirvel in his" A HISTORY OF THE MARAVAS' P 35

விட்டது.¶ பலரும் எதிர்ப்புத் தெரிவித்த பின்னரே இடிப்பது நிறுத்தப்பட்டது.

கோட்டை மேடு என்றழைக்கப்படும் பகுதி அரண்மனையின் மேற்குத்திசையில் உள்ளது. அரண்மனை வாயிலில் கீழ்த்திசையில் பெரிய கடை வீதியில் பிள்ளையார் கோயில் ஒன்றுள்ளது. அதன் பெயர் இன்றளவும் ''கோட்டை வாசல் பிள்ளையார் கோயில்'' என வழங்குகிறது. இவையெல்லாம் கோட்டையின் எல்லைகளை இன்றளவும் குறிப்பனவாக விளங்கும் சான்றுகளாகும்.

நாட்டுக்கு அரண் கோட்டை. கோட்டைக்கு அரண். கொத்தளம். கோட்டை கொத்தளத்திற்கு அரண் அகழி. தமிழ்நாட்டில் கோட்டைகளைச் சுற்றி அகழிகள் பெருமளவில் இருந்ததால் அகழியைக் குறிக்க உடு, ஓடை, கேணி, பரிகம், புரிசை, பாம்புரி, கிடங்கில் எனப்பல சொற்கள் தமிழில் உள்ளன[7] நீண்ட ஆழமான அகழி அமைந்த கோட்டைக்கு அதிபதி என்பதைக்குறிக்க ஒய்மான் நல்லியக் கோடனை, சிறுபாணாற்றுப்படை ''கிடங்கிற் கோமான்'' என்று புகழ்கிறது.[8] கிழவன் சேதுபதியும் தான் கட்டிய கோட்டை கொத்தளத்திற்கு அரணாக சுற்றிலும் ஆழமான அகழியினை வெட்டுவித்தான்[9]. இன்றைக்கும் முகவை நகரில் கோட்டை - வாசல் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் ''அகழ்க்கிடங்குத் தெரு'' (அகழி + கிடங்கில் + தெரு) எனப் பெயர்வழங்கும் தெரு அகழி அமைந்திருந்ததற்கு உயிர்ப்புள்ள சான்ருகத்திகழ்

¶ இந்நூலாசிரியர் இதுகுறித்து ''இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில்'' எழுதியதில் ஒரு பகுதி:-

PROTECT THE MONUMENT

Sir,-I read with d strees in a Tamil daily that the historic 'Moolai-k-Kothalam' at Ramnad on D lhi-Rameswaram National Highways is being destroyed since it has been sold.

The Moolai -k -Kothalam (the Corner Bastion), tbe only r mnant of a rampart is used to be called ike that in Tamil as it stood at the south-west corner of the fortress......

The present 'Moolai—k-Kothalam' the only bastion which remains telling the story of tne hoary past of this soil is now facing extinction ... ... ...

May I request the Goverment of Tamilnadu which has set up a Museum for protection of mural paintings at Ramalinga Vilasam palace at Ramnad to interfere in the matter and protect this historic monument at Ramnad.

—M. Manoharan, Sivaganga

(The Indian Expres /Madurai datad 15-7 1982)

7 ந- சி. கந்தையாபிள்ளை, ''திராவிடர் நாகரிகம்''. பகுதி 1 ப. 14.

8 ரா. பி.சேதுப்பிள்ளை, தமிழர் வீரம்'' ப. 55. 56.

9 T. Rajaram, Row ''RAMNAD MANUAL'' pp 227-228

கிறது. கோட்டையின் புறப்பகுதியான வெளிப்பட்டணம் செல்லும் வழியில் அமைந்திருப்பது ''கேணிக்கரை'' என் னும்ஊருணி. ''கேணி'' என்ருல் அகழி என்று பொருள் அமைந்திருப்பதும் இவ்வூருணி பாம்பு போல் நீண்டிருப் பதும் இது அகழியின் ஒருபகுதியோஎன்பது ஆய்தற்குரியது.

கிழவன் சேதுபதியின் நண்பரும் பெரும் வணிகரும் செல் வந்தருமான கீழக்கரை சீதக்காதி மரக்காயர் முகவைக் கோட்டையைக் கட்டுவதற்குப் பெரும் பொருளும் கட்டிடப் பொருள்களும் கொடுத்து உதவியிருப்பதாக அறிகிரேம்.[10]

தலை நகரில் கிழவன் கட்டிய கோட்டை அழிந்து விட்ட போதி லும் தன் நாட்டின் எல்லையில் அவன் கட்டிய கோட்டை உருக் குலையவில்லை. புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் நகரினை நோக்கிப் புகைவண்டியில் வருவோரின் கண்களிலும் சரி பேருந்தில் வருவோரின் கண்களிலும் சரி இக்கோட்டை கம்பீரமாக வெகு தூரத்திலேயே காட்சி தந்து ஆவலைக் தூண்டுகிறது. இக்கோட்டை மருது பாண்டியர் காலத்து வரலாற்றில் மீண்டும் ஒரு முறை இடம்பெற்றது.

அன்றைய சேது நாட்டின் வடக்கெல்லையாகத் திகழ்ந்தது திரு மெய்யம்(திருமயம்).எல்லையில் தொல்லை இல்லை எனும்படி பாதுகாப்பான நிலையை உருவாக்கிடத்திட்டமிட்டான்,கிழவன் சேதுபதி. அதன் பயனுக,திருமயத்திலே ஒரு மலையரண் உருப் பெற்றது. 1687இல் திருமயம்மலைக்கோட்டை கட்டி முடிக்கப் பட்டது அதன் திறப்பு விழாவின் போது நிகழ்ந்ததாகக்குறிப் பிடப்படும் செய்தி நம்மை அதிர்ச்சியடையச் செய்கிறது. புதிய கோட்டை கட்டி முடிந்ததும் நுழைவு விழாவினை முன் னிட்டு இரண்டு மனித உயிர்கள் பலியிடப்பட்டதாக அங்குள்ள செப்பேடு தெரிவிக்கும் விந்தைச் செய்தியே, அது.[11] கிழவன் எனும் பெயரினை திருமயம் வட்டார நகரத்தாரிடையில் கூடக் காணலாம்.

கிழவனின் படைபலத்தைப் பொறுத்த மட்டிலும் குறைந்த கால முன்னறிவிப்பின் பேரிலேயே 30,000 முதல் 40,000 வரையில் எண்ணிக்கை கொண்ட மறவர்பெரும் படையை அவனுல்திரட்ட முடிந்தது.[12]

10 Ibid, P.228
11 K.B. Venkatarama Iyer, "A MANUAL OF PUDUKOTTAI STATE" P.545
12 Fr.Martin, S.J to Fr Devillette S.J., —Letter dated 10 12-1713 (Shenbaganur Collections) quoted by Dr- S.Kadhirvelin his' A HISTORY OF THE MARAVAS" P.35

சேதுபதிக்குச் சேனை தயார் ஆகவேண்டும் என்று உள்நாட்டுப் பகுதித் தலைவர்களுக்கு செய்தி சொல்லி அனுப்பினலே போதும்திரண்டு வரும் திறன் மிகு மறவர் படை.

## 3. மதுரையை மீட்ட மறவர் தலைவன்

ஆண்டால் சுதந்திரமாக ஆளவேண்டும் என்ற எண்ணம் கொண்ட கிழவன் சேதுபதிக்கு இசைவாகப் போர்கள் எனும் பெயரில் புதியபுதிய சந்தர்ப்பங்கள் உருவாயின. களம் என்ருல் கரும்பு என்று கருதியவன் கிழவன். சந்தர்பபம் வந்தால் கேட்கவேண்டுமா?

அப்போது மதுரை நாயக்க மன்னராக ஆண்டு கொண்டிருந்த சொக்கநாதன் (1659-82) தான் மேற்கொண்ட பல விதப் போர்களினுல் பலவீன மடைந்திருந்தான். கி.பி.1663 இல் பீஜப்பூர் சுல்தான் படை யெடுப்பை எப்படியோ ராஜதந் திரத்தால் சமாளித்தான். அடுத்து தஞ்சை, மைசூர் அரசர் களின் படையெடுப்பை கிபி. 1663-1673 கால கட்டத்தில் சமாளிக்க நேரிட்டது. [13]

கிழவனின் ஆட்சி தொடக்கத்தில் சொக்கநாதனுடன் நட்பே நிலவி வந்தது. சொக்கநாதனுக்கு உள்ளும் புறமும் எதிரிகள் ஏராளமாக இருந்தனர். ஒருசமயம் அவனது அவைப்பிரபுக் கள் சிலர் கூடி சதி செய்து 'மன்னனுக்கு மனநோய், ஆகவே அவன் இருக்க வேண்டிய இடம் சிம்மாசனம் அல்ல சிறைச் சாலை' என்று கூறிச் சிறையில் அடைத்துவிட்டனர். இந்த சந்தர்ப்பத்தை வெகுசாதுரியமாக முஸ்லீம் தளபதி ''ருஸ்தும் கான்'' பயன்படுத்திக் கொண்டான். மன்னனை விடுவிக்க வந்த வீரனுக வெளிக்காட்டிக் கொண்டு மன்னனை விடுதலை செய்தான். ஆனுல் அரண்மனைக் கைதியாக கம்பியில்லாச் சிறையில் வைத்தான். அதிகாரம் முழுவதையும் தான் வைத் துக் கொண்டான். அரியணையில் அழகுப்பொம்மையாக அரசனை அமரச் செய்தவன்! [14]

சோர்வுற்ற சொக்க நாதன் கானின் செயலைக் கண்டு கலங்கி தன்னைக்காப்பாற்றும்படி சேதுநாடு நோக்கி அபயக்குரல் கொடுத்தான். ஒரு அந்தரங்கத்தூதுவன் மூலம் முகவைக்கு முடங்கல் அனுப்பினுன். இந்த அடாத செயல் பற்றி அறிந்

13 Dr. S Kadhirvel, ''A HISTORY OF THE MARAVAS'' p. 36
14 Dr. N. Subrahmanian, ''A HISTORY OF OF TAMILNAD 1565 1956'' p. 70

ததும் வெகுண்டெழுந்தான் சேதுபதி. சினத்தீ பொங்க இரு பதினாயிரம் சேனை புழுதி பறக்கப்பூமியதிரப்புறப்பட கிளர்ந்தெழுந்தான், கிழவன் என்றோர் இளைஞன். படைத்தலைமையைத் தானே ஏற்றுப் படை நடத்தி வந்தான் அந்த மறவர் தலைவன். தளவாய் கோவிந்தப்பய்யனும், கன்னிவாடி சின்ன காத்ரியும் உதவிக்கு வந்தனர்.[15]

மதுரையைச் சுற்றி மறவர் படையின் முற்றுகை! நேரம் ஆக ஆக முற்றுகை முற்றியது. ருஸ்தும்கான் நிலைமை மோசமாவதைக் கண்டு யோசித்தான். சொக்கநாதனையும் அவன்குடும்பத்தையும் தீர்த்துக்கட்டி விடுங்கள்'' என்று ஆணையிட்டான். இது எப்படியோ சேதுபதியின் செவிகளுக்கு எட்டியது.

சேதுபதி உணர்ச்சிப் பிழம்பானான் மதுரை மன்னன் குடும்பத்தோடு கொல்லப்பட்டு இறந்தபின், தானும் தன்படையும் வெற்றி பெற்றாலும் அதுவியர்த்தமாகிவிடும் என்பதை எண்ணி உருகினான். உடனே அன்று இரவே படைத்தலைவர்களை அழைத்து போர்க்களச்சொற்பொழிவொன்றை நிகழ்த்தினான். அந்தச் சொற்களைக் கேட்டுக் கோழையும் வீரனாவான் எனும்படி இருந்திருக்க வேண்டும்.[16]

போர்க்களத்தில் திருப்பு முனை ஏற்பட்டது. ''மிகவும் எச்சரிக்கையாக 3000 வீரர்கள் பாதுகாப்பில் மையம் கொண்டிருந்த ருஸ்தும் கானின் அரண்வாயிலின் மீது இடி முழக்கம் போல் தாக்குதல் ஓசைகேட்டது '' இரண்டாயிரம் முறை குண்டுகள் பொழியப்பட்டன என்றால் அதன் கடுமையை யூகித்துக் கொள்ளுங்கள். கிழவன் சேதுபதி வாளைச்சுழற்றிக் கொண்டே முன்னேறுகிறான். கோட்டையின் தெற்கு வாசல் கொளுத்தப்பட்டது. கிழவன் இன்னும் முன்னேறி, கோட்டைக்குள் புகுந்து விட்டான். அப்புறம் என்ன?[17]

ஆயுதங்களின் ஓசைகட்கிடையில் ருஸ்தும்கானின் தலை அறுபட உடல்துள்ளி விழுகிறது. உடனே சேதுபதி எதிர்ப்புக்களைச் சமாளித்து, வாளைவீசிக்கொண்டே தளபதிகள் புடை சூழ, எதிரிகளின் தலைகள் உருள, சிறைக் கொட்டடியை அடைந்தான். மறவர் சேனாவீரர் வெற்றி எட்டுத்திக்கும் எட்ட முரசு கொட்டினர். சிறைப்பட்டிருந்த மன்னவன், மனைவி மக்களோடு விடுவிக்கப்பட்டான்.

15 Ibid
16 பி. முத்துத்தேவர், ''மூவேந்தர் குல தேவமார் சமூக வரலாறு'' ப.120.
17 Dr. K.Seshadri ''THE SETUPATIS OF RAMNAD'' (Doctoral Dissertation-un published)

சிறைமீட்கப்பட்ட சொக்கநாதன் சேதுபதியின் வீரதீரச்செயல்களில்சொக்கிப் போனான். சேதுபதிக்கு விலைமதிப்பில்லாப் பரிசுப்பொருட்களை வழங்கி மகிழ்ந்தான்; வந்திருந்த படைவீரர்களுக்கும் ஆடையணிகளும் பொருளும் போதுமான அளவு கொடுத்தபின்னரே முகவைக்குச் செல்ல அவர்களுக்கு விடை கொடுத்தான்.[18]

இராமேசுவரம் செல்லும் வட நாட்டவர்க்குப் பாதுகாப்பாக இருப்பதால் சேதுபதிகளுக்கு ''ஆரியர் மானங்காத்தார்'' என்ற பட்டப் பெயர்உண்டு.[19] சேதுபதி தனது மானத்தையும் உயிரையும் காத்தார் என்பதால் நன்றிப்பெருக்கு மிகுந்ததால் சேதுபதியைச் சிறப்பாக கௌரவிக்க விழைந்தான், சொக்கநாதன். அதனால் இராமநாதபுரத்திற்கே சென்று சேதுபதியை இராஜ மரியாதைகளுடன் அழைத்து வந்தான்.

மதுரையில், அரசவையில், ஆரவாரத்திற்கிடையே 'பர ராஜ கேசரி' (அயல் அரசர்க்கு அரிமா) என்றபட்டத்தினைக் கிழவன் சேதுபதிக்குச் சூட்டினான்[20] ''அன்பின் பரிசாக உயிரற்ற பொருள்களைத்தானே தந்தோம்'' என்று எண்ணினானோ என்னவோ நடமாடிடும்அறிவூற்று ஒன்றையும் அனுப்பிவைத்தான். ஆம்! தன்னுடைய அமைச்சர் குமாரபிள்ளையின் சேவையை முகவைக்குப்பரிசாக அளித்தான், மதுரை மன்னன்[21] இது நிகழ்ந்தது கி.பி.1680-ல் ஆகும்.[22]

## 4. மதுரையுடன் முதல் போர்

மதுரையின் பிடிப்பு சிறிது கூட இல்லாமல் இருக்க விரும்பிய கிழவன் சேதுபதியால் மதுரை மன்னனோடு அதிக நாள் நட்பு பாராட்டிக் கொண்டிருக்க முடியவில்லை. சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருந்தான். அதே சமயம் மதுரை மன்னனால் இராணுவ ரீதியாகக் கிழவன் சேதுபதியின் வளர்ச்சியைக் கவனிக்கவோ கட்டுப்படுத்தவோ முடியவில்லை. 1665இல் மதுரையில் இருந்து தலைநகரைத் திருச்சிக்கு மாற்றியதும் இதற்குக் காரணமாகும்.

18 பி.முத்துத்தேவர், ''மூவேந்தர்குல தேவமார் சமூகவரலாறு'' ப. 120

19 ப,அ. முத்துத்தாண்டவராய பிள்ளை ''சேதுபதிளும் அவர்களுடைய நாணயங்களும் ''(செந்தமிழ்ச் செல்வி-தொகுதி XIV பிப்-மார்ச் 1935 இதழ்)

20 N. Vanamamalai Pillai, THE SETHU AND RAMESWARAM'' p. 118

21 Dr N. Subrahmanian, HISTORY OF TAMILNAD 1565-1956 p. 70

22 அ.கி.பரந்தாமனர் மதுரை நாயக்கர் வரலாறு. ப 279

இந்நிலையில் மைசூர்ப் படைகள் இரண்டாவது தடவையாக மதுரையைத்தாக்கின. இப்போது அவன் பழைய சேதுபதி அல்லவே? மதுரையில் விசய நகரப் பேரரசின் பிரதிநிதி களாக ஆளவந்தவர்கள் இன்று அவர்களே ஆளத் தொடங்கி விட்டார்கள். நான் மட்டும் என்ன இளைத்தவனா? இவர்களுக் குச் சளைத்தவனா? என்று சிந்திக்கத் தொடங்கியிருந்த சேது பதி, உதவிக்குப் போகவில்லை. போகாதது மட்டுமல்ல, மைசூராருடன் இவனும் சேர்ந்து கொண்டான்.

இந்தப் போரில் ஈடுபட்டதன் காரணமாக சேதுபதிக்கு கணிச மான பலன் கிட்டியது. மதுரை தஞ்சையிடமிருந்து 1673இல் பிடித்த பகுதியை சேதுபதியிடம் பறிகொடுத்தது. மதுரையின் ஒரு பகுதியும் சேதுபதிக்குச் சேர்ந்தது.[23]இது நடந்தது கி.பி. 1682இல் ஆகும்.[24]

## 5. மதுரையுடன் இரண்டாவது போர்

உள்நாட்டுப்பூசல்களை அடக்குவதற்காக, கிழவன் சேதுபதி மேலும் படையெடுப்புக்களில் ஈடுபடாது தலைநகர் முகவை யில் இருந்திட வேண்டியதாயிற்று.

சொக்கநாத நாயக்கரை அடுத்து மூன்றும் ரங்ககிருஷ்ண முத்துவீரப்பன் அரசனானபோது மைசூர்ப் படைகளையும் மராத்தியப்படைகளையும் அடிக்கடி சந்திக்க வேண்டியதா யிற்று.[25]

சொக்கநாத நாயக்கருக்குச் சகோதரன் முறை உறவுடைய அழகிரி நாயக்கர் கி.பி. 1674இல் சொக்கநாதன் தோல்விக் குப்பின் தஞ்சை அரசனாக்கப் பட்டான். அழகிரியின் ஆட்சியும் பீஜப்பூர் சுல்தானின் மராட்டிய தளபதி எக்கோஜியால் 1675 இல் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டது. இது நிகழ்ந்தது கூட, தஞ்சை நாயக்கமன்னன் செங்கமலதாசின் தளவாயின் வேண்டு கோளினால் தான் [26]

இந்த நிலையில் தான், சுதந்தரமாக ஆட்சி நடத்த விரும்பிய கிழவன் சேதுபதி மதுரை நாயக்க மன்னன் மூன்றும் முத்து

23 Letter of John De Britto to Paul Oliver 1683 quoted by Dr S. Kadhirvel 'A HISTORY OF THE MARAVAS'' p. 36

24 W.Francis, ''Madura District Gazetteer'' p 52

25 Dr. S- Kadhirvel 'A History of the Maravas'' 36-37

26 R. Sathyanatha Aiyer, ' HISTORY OF THE NAYAKS OF MADURA'' p 193.

வீரப்பனுக்கு எதிரான சக்திகளை ஒன்று திரட்ட முடிவு செய்தான்.

முத்துவீரப்பனால் விலக்கப்பட்ட அவனது முன்னாள் தளவாய் வெங்கடகிருஷ்ணப்பனுடன் தொடர்பு கொண்டான். கிழவன் கி. பி. 1686இல் அப்போது தஞ்சையில் ஆட்சி செய்துகொண்டிருந்த மராத்திய தளபதி எக்கோஜியுடன் ஒரு உடன் படிக்கை செய்து கொண்டு, மதுரை நாயக்க மன்னனுக்கு எதிராக ஒரு படை எடுப்பு நிகழ்த்தத் திட்டமிட்டான். ஆனால் நாயக்கரால் அனுப்பப்பட்டுசேதுபதியிடம் பணிபுரிந்து வந்த தளவாய் குமாரபிள்ளை அத்திட்டத்தைக் கைவிட வேண்டினார். சேதுபதி இணங்க வில்லை. பிறந்தகப்பற்று குமாரபிள்ளையை புகுந்த இடத்துத் துரோகியாக்கிற்று.

தன்னையும் மதுரைத் தளவாய் வெங்கடகிருஷ்ணப்பனையும் மதுரை மன்னனிடம் பிடித்துக் கொடுக்க, குமாரபிள்ளை சதி செய்வது கிழவன் சேதுபதிக்குத் தெரியவே, அதை முளையிலேயே கிள்ளி எறிந்தான். குமாரபிள்ளைகரங்களும் பாதங்களும் வெட்டப்பட்டுக் கழுவிலேற்றப்பட்டான். அவன் குடும்பத்தினருக்கும் மரண தண்டனை அளிக்கப் பட்டது [27]

முகவையில் குமாரப்பிள்ளையை எரித்த இடத்தில் துரோகிகளை எச்சரித்துக் கல்வெட்டுக் காணப்பட்டதை வரலாற்றாசிரியர் குறிப்பிட்டுள்ளனர். [28]

தங்களுடைய தளவாயைத் தண்டித்த சேதுபதியைப் பழி வாங்க வேண்டும் என்ற ஆத்திரம் மதுரை நாயக்க மன்னனுக்குக் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. சேதுபதியை அடக்கினால் மற்ற உள்நாட்டுத் தலைவர்களும் அடங்குவார்கள் என்பதனால் ஒரு வலிமையான படையைத் தயார் செய்து முகவையை நோக்கி அனுப்பினான்.

இதற்கிடையில் எக்கோஜிக்குப் பின் வந்த தஞ்சை மராட்டிய மன்னன் ஷாஜி 1686இல் சேதுபதியுடன் எக்கோஜி செய்து கொண்ட ஒப்பந்தத்தை கௌரவித்துசேதுபதிக்கு உதவியாகப் படைகளை அனுப்பி வைத்தான். முகவைக்கு அருகில் உள்ள சேதுபுரம் என்ற இடத்தில் மதுரைப் படைகள் ஒரு புறமும் மறவர்—மராத்தியப்படைகள் ஒருபுறமும் எதிர் நின்று மோதிக்

27 J. H. Nelson. "MADURA COUNTRY" p 213 quoted by Dr K. Seshadri "THE SETUPATIS OF RAMNAD" (Doctoral Dissertation 1976 unpublished)

28 Ibid

கொண்டன.[29] சேதுபுரம் சத்திரத்தில் உள்ள கல்வெட்டு மராட்டிய தளபதியின் போர்த்திறத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது மராட்டியனை மறவனை எனும்படி போரிட்டான் எனப் பாராட்டிக் குறிப்பிடுகிறது.[30] இறுதியில் மதுரைதோல் வியைத்தழுவியது. ஒப்பந்தப்படி செய்த உதவிக்கு சேதுபதி தஞ்சைக்கு பாம்பாற்றுக்கும் புதுக்கோட்டைக்கும் இடையில் உள்ள பகுதியை விட்டுக் கொடுத்தான்.[31] என்ருலும் இந்தப் போரின்மூலம் சேதுபதியின் கிரீடத்தில் இன்னுமொரு வண்ண இறகு செருகப்பட்டது.

## 6. தஞ்சையுடன் முதல் போர்

தஞ்சை மராட்டிய மன்னருக்கும் சேதுபதிக்கும் 1686 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஏற்பட்டு 12 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. அதன்படி மராட்டிய மன்னர் பாம்பாற்றுக்கு வடக்கே உள்ள, சேது நாட்டிடமிருந்து தாம் பெற்றிருந்த பகுதிகளை இக்கால கட்டத்திற்குள் திரும்ப சேதுபதியிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். கேட்டுப் பார்த்தான் கிழவன் சேதுபதி. பலனில்லை. தஞ்சையைத் தாக்கியது, முகவைப்படை.கிழவன் சேதுபதிக்கு மீண்டும் ஒரு வெற்றி கிட்டியது. தஞ்சையைச் சேர்ந்த அறந்தாங்கி, திருமயம், பிரான் மலை ஆகிய இடங்களில் உள்ள கோட்டைகளையும் புதுக்கோட்டைதவிர்த்து அம்பாரி ஆற்றுக்குத் தெற்கிலுள்ள அனைத்துப் பகுதிகளையும் இழந்ததையும் சேர்த்துக் கைப்பற்றினன்.[32]

## 7. மதுரையுடன் மூன்ருவது போர்

மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கனுக்குப் பின் அவன் பேரன் விஜயரங்க சொக்கநாதன் வயதுக்கு வராததால் அவனுக்குப் பிரதிநிதியாக சொக்கநாதன் மனைவி மங்கம்மாள் (1689-1706) மதுரையில் ஆண்டு கொண்டிருந்த காலம்.

தஞ்சை மராத்தியனையும் முகவைச் சேதுபதியையும் பழிவாங்கக் காலம் கருதிக் கொண்டிருந்தாள் அரசி மங்கம்மாள்.மராத்தியனுக்கும் மறவனுக்கும் மூண்ட பகைத் தீயில் சுகமாகக் குளிர்காயக்கருதினள் மங்கம்மாள். கி.பி. 1702இல் தஞ்சைப் படையின் உதவியுடன் முகவை மீது தாக்குதல் தொடுத்தாள்.

29 S. Thiruvenkatachari, "THE SETUPATIS OF RAMNAD" p. 32.
30 Dr. S. Kadhirvel, "A HISTORY OF THE MARAVAS" Footnote No 25 at page 39
31 Ibid -P-39.
32 T. Rajaram Row "RAMNAD MANUAL" p. 224

மறவர் பக்கம்,

''முகவை யெனும்பெயரே முத்தமிழின் சொத்தாக
இலங்கும் தமிழ்க்கோடி எழிற்சேது மண்டலத்தில்
வீரம் நிலமாக வெற்றியதன் பயிராக
ஆக்கிப் படைத்தான் அருந்தலைவன் சேதுபதி
பல்லாயிரம் காலம் பாண்டியரின் பொன்னாட்டை
காத்துப் புகழ்படைத்த காளையரின் திருநாடே
முகவை வளநாடாம்! மொய்குழலார்தன்னாடாம்!
தன்னேரிலாத் தமிழ்க் கிழவன் சேதுபதி''

தலைமையில் மறவர் படை புறப்பட்ட காட்சியை

''வல்லயமும், வேலும் வளரித்தடிகளுமே
ஆயுதங்களாய்க்கொண்டார்; ஆர்ப்பரித்துக் கிளம்பி
விட்டார்''

என்பதாக கவியரசு கண்ணதாசன் நம் கண் முன்னே நிறுத்தி விட்டார்.[33]

தஞ்சைத் தரணியும் மதுரைச் சீமையும் சேர்ந்து வந்தும் சேது நாட்டுப் படையைத் தோற்கடிக்க முடியவில்லை. வீரன்கு இரகு நாதனை வெல்வதற்கு யாருமில்லை என்றாயிற்று. மங்கம்மாள் தன் தளபதியை இழந்தாள். நரசப்பையா இப்போரில் மாண்டார். மதுரை முகவையை மறந்தது.

இது நிகழ்ந்தது 1702 இல்.[34]

## 8. தஞ்சையுடன் இரண்டாவது போர்

தோற்றோடிய தஞ்சை ஏழு ஆண்டுகள் கழித்து மறவர் சீமை பஞ்சத்தில் வதைபட்டுக் கொண்டிருந்த நேரத்தில் படை எடுத்துவந்து தொல்லை கொடுத்ததைப் பின்பு பார்ப்போம். ஆனால் அதிலும் கிழவனுக்கு வெற்றியே கிட்டியது.

## 9. மறவர் ஆளுகையில் மதுரை

கிழவன் சேதுபதியின் படைவலிமை முன் மதுரை நாயக்கர் படை மிகச்சாதாரணம் என்றானது. கிபி 1698லிருந்து 1700 வரை இரண்டு ஆண்டுக் காலம் மதுரை மாநகரம் கிழவன்

33 ''கிழவன் சேதுபதி'' பார்க்க: ''கண்ணதாசன் கவிதைகள்''—ப. 272,277.
34 Dr. N. Subrahmanian ''HISTORY OF TAMILNAD 1565-1956'' p.71

சேதுபதியின் ஆளுகையின் கீழிருந்திருக்கிறது,[35] என்ருல் பார்த்துக் கொள்ளுங்கள், சேதுபதியின் சேனுபலத்தை.

மதுரையை வென்ற சோழ மன்னர்கள் ''மதுராந்தகன்'' என விருதுப் பெயர் புனைந்து கொண்டுள்ளார்கள். மதுரையை வென்ற கிழவன் சேதுபதியை ''மறவர் நாட்டு மதுராந்த கன்'' என்று கூறிஞல் தவறில்லை அல்லவா?

## 10. இப்படை தோற்கின், எப்படை வெல்லும்?

மதுரை நாயக்க மன்னர் படையையே சிறிய அந்தச் சேது நாட்டின் படை வெல்ல வல்லமை பெற்றதாயிருந்திருந்தால் அதன் மாட்சிதான் என்னே!

''அந்தப் படை எண்ணிக்கையால் மட்டும் சிறப்புப் பெற வில்லை. எண்ணத்தாலும் சிறப்புப் பெற்றது. அவர்கள் உருவத்தால் பலர். உள்ளத்தால் ஒருவர், ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் போல. எனவே உயர்ந்தனர்'' என்பது வரலாற்ருசிரியர் மதிப்பீடு.[36]

---

35 Kilavan Setupati of Ramnad was in a position even to occupy the capital city of Madura itself for two years and could be removed only by the most energetic measures of the Madura Dalavay Narasappaiah.

——Dr. N.Subrahmanian, HISTORY OF TAMILNAD 1565-1956 -p. 100.

36 They (Kilavan Setupati's army) marched to battle like a numerous band of the brothers led by a common father and were able to forget for the moment all petty animosities and feuds.

—J.H. Neslon, THE MADURA COUNTRY—pp 235-236 quoted by Dr.K. Seshadri in his 'THE SETUPATIS OF RAMNAD' (Doctoral Dissertation, 1976-unpublished)

# 6
# ஆட்சியின் மாட்சி

●

## 1 ஆட்சியில் ஆற்றலாளன்

> *''ராணி மங்கம்மாள் காலத்தில் அவளது படை எடுப்பை முறியடித்து வெற்றிக் கொடி நாட்டிய பின் காலம் காலமாக இருந்த அடிமைத் தளையை அறுத்தெறிந்து சுதந்திர நாடாக மறவர் சீமையை மலர வைக்கிருர் கிழவன் சேதுபதி''*[1]

—என்று கி.பி.1702ல் சேது நாட்டில் மலர்ந்த சுதந்தர ஆட்சியை உவகையுடன் காணுவோர் பலருண்டு.

சுதந்தரம் மலர்ந்தது! அதைத் தொடர்ந்து சுபிட்சம் பிறந்தால் தானே சுதந்திரம் மலர்ந்ததற்குப் பொருளுண்டு. சுபிட்சம் பிறக்க சிறந்த நிர்வாகம் நடக்க வேண்டும்.

> *''இவனுடைய அரசாங்கத்தின் நிர்வாக வன்மையால் மறவர் நாடு உன்னதச் சிறப்பு வாய்ந்ததாய் விளங்கியது''*

---

1 இரா. நிர்மலாதேவி, சொக்க நாதக் கவிராயரின் ''பணவிடு தூது''—பதிப்புரையில் ப. 31

—என்று கிழவன் சேதுபதியின் நிர்வாக நேர்த்தி குறித்து சான்று தருகிருர் மார்ட்டின் பாதிரியார்.[2]

*''மறவர் சீமையின் மதிப்பும் வலிமையும் உயரக் காரணமான திறன் மிக்க நிர்வாகி''*

—என்றும்

''நாட்டின் ஆட்சியை பெரும் வீரியத்துடனும் விவேகத்துட னும் நடத்திக்காட்டின குறிப்பிடத்தக்க ஆற்றலாளர்''

—என்றும் வரலாற்றுப் பேராசிரியர் சத்தியநாதய்யர்கிழவன் சேதுபதியின் ஆட்சித் திறனே மதிப்பீடு செய்கிருர்.[3]

இந்தத் திறமை திடீரென்று வரக்கூடியதல்லஎன்பதும் உண் மையே. கிழவன் சேதுபதி ஆட்சிக் கட்டிலுக்குப் புதியவனே யன்றி ஆட்சிக்குப் புதியவனல்லன். திருமலைசேதுபதி காலத் திலிருந்தே செல்வாக்குமிக்க படைத்தளபதியாக விளங்கிவந்த தால் அரசாங்க விவகாரங்களில் தொடர்பும்பயிற்சியும் உடைய வனுயிருந்தான்.[4] அந்த அனுபவம் அவன் ஆட்சிக்கட்டில் ஏறியபோது பேருதவியாயிருந்தது.

சேதுநாடு மதுரை நாயக்கர் ஆட்சியின் கீழோ, கிழவன்சேது பதி காலத்திலோ,அதற்குப் பின்போ எந்தக் காலத்திலும் ஒரு பாளையம் என்று கருதப்பட்டதில்லை. சேதுபதியையும் வெறும் பாளையக்காரராக யாரும் கருதியதில்லை. சேதுநாடு ஒரு பாளை யமாக இருந்திருக்குமானுல் அதற்குள்ளே பல பாளையங்கள் திகழ்ந்திருத்தல் கூடுமா?

மதுரை நாயக்க மன்னரின் கீழ் 72 பாளையங்கள் இருந்ததைக் குறிப்பிடுவது போல மதுரைக் கோட்டையில் 72 கொத்தளங் கள் இருந்தன. கிழவன் சேதுபதி கட்டிய முகவைக் கோட்டை யில் 32 கொத்தளங்கள்அமைந்திருந்ததை வைத்துஅவன்நாட் டில் 32 பாளையங்கள் இருந்ததெனக் கொள்ளலாம். ஆனுல்

2 Letter from Fr. P.Martin to Fr. de V I ette quoted by p. Andi Thevar in his ''மூவேந்தர்குல தேவமார் சமூக வரலாறு'' ப.118.

3 Kilavan Setupati was a capable administrator who was mainly instrumental in raising the status and power of the Marava Country... He was a man of remarkable ability who conducted the administration of the country with great vigour and wisdom.

—--R. Sathyanatha Aiyer, HISTORY OF THF NAYAKS OF MADURA-pp.185. 225.

4 Raghunatha Thevar (Kilavan Setupati) had the advantage of having associated with the State's affairs from the days of Thirumalai Setupathi and as he was an army Chief of repute he commandedr espect from the army.

—Dr. S. Kadhirvel, A HISTORY OF THE MARAVAS, footnote No.5 at page 34.

சேது சமஸ்தானத்திற்குள் 18 பாளையங்கள் இருந்ததற்கான குறிப்பே காணப்படுகிறது. ''மறவர் இராச்சியம் கிழவன்சேது பதியின் கீழ் ஒரு பெரிய சர்வாதிகாரமுள்ள ராஜ்யமாகத் திகழ்ந்தது. தனக்குக் கீழ்பல சிற்றரசர்களை தன்னிஷ்டம்போல் நீக்கவும் நியமிக்கவும் அதிகாரம் சேதுபதிக்கு இருந்தது. கிராமங்களின் நிலங்கள் பிரபுக்களின் ஆதிக்கத்திலிருந்தன. சேதுபதிக்குச் சேனைகள் தேவைப்படும் போது பிரபுக்கள் சேனைகள் அனுப்ப வேண்டும்.''[5]

இதன்படி கிழவன் சேதுபதி ஆணைபிறப்பித்த எட்டே நாட்களுக்குள் 30,000 முதல் 40,000 வரை சேனைகள் திரட்ட முடிந்தது.[6]

## 2. சேதுபதி பூமியிலே ஒரு சிவகங்கைச் சீமை

கிழவன் சேதுபதியுடன் அரசு கட்டிலுக்கு எதிர்த்துப்போட்டி யிட்ட தாதியத் தேவரின் ஆதரவாளர்கள் எங்கெங்குஇருக் கிறார்களோ அங்கெல்லாம் புதுப்பாளையங்கள் உருவாக்கித் தரப்பட்டதாக டாக்டர் கதிர்வேல் கருதுகிறார். ஆனால் கிழவன் சேதுபதி நாட்டின் எல்லைப்பகுதி என்றுகருதுகிற இடங்களில் பலம்மிக்க வீரர்களைப் பாளையக்காரர்களாக நியமித்தான்.

கிழவன் சேதுபதியின் நெருங்கிய உறவினரான கன்று மேய்க்கி பெரிய உடையாத் தேவரின் ஊர் சிவகங்கை அருகில் 4 கல் தொலைவில் உள்ள சோழபுரத்தையடுத்துள்ள நாலு கோட்டை என்பதாகும். இந்த நாலுகோட்டை தாதியத் தேவனின் சிறுவாழி பாளையத்தினை ஒட்டி இருப்பதாகும்.[7]

அந்த நாட்களில் பெரிய உடையாத்தேவர் சிவகங்கைப் பகுதியில் பெரிய வீரராகத் திகழ்ந்தார், அவரது வீரப்புகழ் சேதுபதி செவிகளுக்கு எட்டிற்று. அப்படிப்பட்ட வீரரின் திறமையை தனது அரசுக்குப்பயன் படுத்திக் கொள்ள விரும்பினார். வீரரை வீரரே மதிக்கத் தெரிந்தவர் அல்லவோ?

300 படைவீரர்கள் கொண்ட ஒரு படையை பராமரிப்பதற்குப் போதுமான வருவாயுள்ள கிராமங்களை உள்ளடக்கிய ஒருநிலப்

5 பி. ஆண்டித்தேவர் ''முவேந்தர்குல தேவ மார் சமுக வரலாறு'' ப.118
6 T. Rajaram Row''Ramnad Manual'' p 224
7 Dr. S Kadhirvel, ''A HISTORY OF THE MARAVAS'' p. 35

பகுதியை நாலுகோட்டையில் இருந்து ஆளுமாறு கொடுத்தார். அதுமுதல் பெரிய உடையாத்தேவர் நாலுகோட்டை பாளையக்காரர் ஆனார்.[8] இந்தநாலுகோட்டைப் பாளையமே பின்னர் சிவகங்கைச் சீமையாயிற்று.

## 3. புலிவேட்டையும் புதுக்கோட்டையும்

கிழவன் சேதுபதி புதுக்கோட்டைப் பகுதியில் உள்ளகாடுகளில் நிறைய விலங்குகளிருப்பதாகஅறிந்து அங்கு வேட்டையாடச் சென்றார். புலி வேட்டையாடச் சென்றவர்புள்ளி மானைக் கண்டார். கண்களின் சந்திப்பு காதலில் முடிந்தது. அந்தப்புள்ளி மான் புதுக்கோட்டை கள்ளர்குலத் தலைவன் ரகுநாதப் பல்லவராயத் தொண்டைமானின் தங்கை 'கதலி'யாவாள். கதலி என்ற காதலியைக் கைப்பிடித்தார்.[9]

இந்தத் தொண்டைமான்கள் ஆதியில் திருவேங்கடத்தில் பல்லவர்களிடத்தில் இருந்தவர்கள். பிறகு அன்பில் நாட்டில் தங்கி பின்னர் புதுக்கோட்டைக் கரம்பக்குடியில் குடியேறினர்கள். இவர்கள் யானையை அடக்குவதில் வல்லவர்களாய் இருந்தவர்கள். கள்ளர் நாடான ''பாகனேரி'' பற்றி யானையை வீரனொருவன் அடக்கிய கதை வழங்கி வருகிறது.

சேது நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலகத்தை அடக்க ரகுநாதத் தொண்டைமானும் அவன் தம்பி நமனத் தொண்டைமானும் கிழவன் சேதுபதிக்கு உதவினர்.[10]

தொண்டைமான் கள்ளர் குலத்தவன். என்றாலும் அவன் தங்கையை மணப்பது சேதுபதிக்குச்சிக்கலை ஏற்படுத்தவில்லை. ஏற்கனவே செம்பிநாட்டு மறக்குல மங்கை ஒருத்தியை முதல் மனைவியாக அடைந்திருந்தான். இவளை இரண்டாவது மனைவியாகத்தானே அடையப் போகிறன்[11] என்பதனாலும் சிக்கல் ஏற்படவில்லை எனலாம்.

---

8 T. Rajaram Row, ''RAMNAD MANUAL'' P.224

9 ''As a young man he (Kilavan Setupati) fell in love with Kathali, a girl of the Kallar tribe and married her.''
–S. Radhakrishna Ayyar ''HISTORY OF PUDUKKOTTAI'' pp 127-129

10 கே. இராமசுவாமி அய்யர் ''புதுக்கோட்டை இராஜ்ஜியச் சரித்திரம்'' பாகம் 1 ப 53 பாகம் II ப. 4

11 T RajaramRow ' RAMNAD MANUAL'' p. 224-225

வெள்ளாற்றுக்குத் தெற்கே இன்றைய புதுக்கோட்டைப் பகுதியில், தொண்டைமானுக்கு முன்பு சேதுபதியின் கீழ் ஆண்டு கொண்டிருந்த செவந்தெழுந்த பல்லவராயன் சேதுபதியின் தொடர்பை முறித்துக்கொண்டு தஞ்சைச் சீமையுடன் உறவு கொள்ளலாமா, என்று ஊசலாடிக் கொண்டிருந்த நேரம், எல்லையில் உள்ள புதுக்கோட்டைப் பகுதியினைப் பாதுகாத்தது போலவும் ஆயிற்று. தனக்கு உதவிய மைத்துனனுக்கு உதவி செய்தது போலவுமாயிற்று— என்ற அடிப்படையில் செவந்தெழுந்த பல்லவராயனிடமிருந்த அப்பகுதியைப் பறித்து தொண்டைமானுக்கு அளித்து 1686ல் புதுக்கோட்டை எனும் புதிய அரசு அமைந்திடச் செய்தான், கிழவன் சேதுபதி[12]

## 4. புதியதொரு தலைநகர் முகவையில் அமைந்தது

கிழவன்சேதுபதி காலத்தில்தான் தலைநகர் போகலூரில் இருந்து முகவைக்கு மாற்றப்பட்டதாக முன்பே கண்டோம். அதற்கும் முன்பு சேதுபதிகளின் தலைநகரம் கலந்துங்க சோழ நல்லூர், கரந்தை, வீரை, தேவை (இராமேசுவரம்), மணவை, மழவை முதலிய இடங்களிலும், அதற்கு முன்பு வீரவநல்லூர் என்ற நல்லூரிலும் இருந்திருக்கிறது. [13]

தொண்டியிலும் தலைநகரம் இருந்திருப்பதாக அறிகிறோம்.

*... ... ... ... ... நரபதி*
*செகபதி சேதுபதி ரகுநாதன்*
*பொருந்த மனுமுறை செய்யும்—ராமநாத*
*புரத்தில் ... ... ... ... ...* ''[14]

—என்று ''செய்தக்காதி நொண்டி நாடக''த்தில் கிழவன் சேதுபதியின் தலைநகரமாகச் சிறப்பிக்கப்படும் முகவையாகிய இராமநாதபுரத்தைச் சுற்றிக் கற்கோட்டை எழுப்பியதுடன் அதன் நடுநாயகமாக அழகியதோர் அரண்மனையும் கட்டுவிக்கச் செய்தான், கிழவன் சேதுபதி.

---

12 K.R Venkatarama Ayyar ''A MANUAL OF THE PUDUKKOTTAI STATE'' p.30

13 ப.அ. முத்துத்தாண்டவராயபிள்ளை, ''சேதுபதிகளும் அவர்களுடைய நாணயங்களும்'' (''செந்தமிழ்ச் செல்வி'' தொகுதி XIV பிப்- மார்ச் 1935 இதழ்)

14 டாக்டர் முகமது ஹுசைன் நயினர் பதிப்பித்த ''செய்தக்காதி நொண்டி நாடகம்'' பாடல் வரி 170.

## 5. ஓவியமாளிகைக்கு அடிகோலியவன்

அரண்மனைக்குள் இராமலிங்க விலாசம் எனும் அரசவைக்கூடம் (Durbar Hall) கலைத்திறனுடன் கட்டப்பட்டது. இதுவே சேதுபதிகள் முடிசூட்டிக் கொள்ளும் மண்டபமுமாகும். கோட்டையைக் கட்டுவதற்கு உதவியாக இருந்ததுபோலவே, இந்த இராமலிங்க விலாசத்தைக்கட்டுவதற்கும், கீழக்கரைவள்ளலும் சேதுபதியின் உற்ற நண்பருமான சீதக்காதி மரக்காயர் உதவிகரமாக இருந்தார். இராமலிங்க விலாசம் எனும் எழில் மிகுமாளிகை மூரிஷ் (Moorish) பாணியில் பைஜாந்திய (Byzantine) வளைவுகளுடன் கூடிய கட்டிடக்கலை அடிப்படையில் கட்டப்பட்டதாகும்.[15]

இராமலிங்க விலாசம், அரண்மனைக்குள் வடபுறத்தில் அமைந்துள்ளது; ஒரு நீண்ட விரிவான அரங்கம் போல் அமைந்துள்ளது.1872இல் இராமநாதபுரத்தின் மீது படையெடுத்து வந்த ஆங்கிலேய தளபதி ஜோசப்ஸ்மித் இந்த அரண்மனை குறித்து நாட்டில் தான்கண்ட சிறந்த மாளிகைகளுள் இதுவும் ஒன்று என்று கூறுகிறான்[16]

'இராமலிங்கவிலாசம்' —கூடத்தை ஒவ்வொன்றும் ஒரு கருங்கல்லில் இழைக்கப்பட்டதான பல தூண்கள் தாங்கி நிற்கின்றன. இங்குள்ள ஓவியங்களுக்காகவே இந்த மாளிகை புகழ் பெற்று விளங்குகிறது. சேதுபதியின் செருக்களச் செயல்களும் கண்ணனின் ரசலீலைகளும் சுவரோவியங்களாக (Mural paintings)த் தீட்டப்பட்டுள்ளன.[17]

கிழவன் சேதுபதியை அடுத்து ஆட்சிக்கு வந்தவன் முத்து விஜயரகுநாத சேதுபதி(1710—1725). கிழவன் சுவரை எழுப்பினான் எனில் முத்துவிஜய ரகுநாதன் அதில் சித்திரங்களைத் தீட்டினான். காலஞ்சென்ற இராமநாத சேதுபதி இவ்வரிய கலைக்கருவூலத்தை மக்கள் கண்டுகளிக்க அருங்காட்சியகமாக அமைக்க தொல்பொருளாய்வுத் துறையிடம் ஒப்படைத்து

---

15 Vanamamalai Pillai, THE SETHU AND RAMESWARAM, p. 141.

16 On the fall of the fort, Smith wrote to the Madras Council thus:
"The fort of Ramnad is old, but the palace is one of the best buildings I ever saw in the country and the inhabitants lived truly in Eastern luxury."
—"Military Consultations" —Vol.42 P.488; Letter from Smith to Madras Council dated 8-6-1772—quoted by Dr. K. Rajayyan in his 'RISE AND FALL OF THE POLIGARS OF TAMILNADU' p. 165.

17 T. Rajaram Row "RAMNAD MANUAL" p. 228

விட்டார். இதனைப் பராமரித்துவரும் தமிழ்நாடு அரசின் தொல்பொருளாய்வுத்துறை வெளியிட்டுள்ள துணைமடல் அங்குள்ள ஓவியங்களைப் பற்றி விளக்கமாகச் சொல்கிறது.[18]

இவ்வோவியங்கள் முன்னர் மாளிகை முழுவதும் தீட்டப்பட்டிருந்ததாகவும் இப்பொழுது உட்புறத்தில் மட்டுமே காணப்படுவதாகவும் அறிகிறோம்.

இவ்வோவியங்கள் வரலாற்றுச் செய்திகளைச் சித்திரிப்பதால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகப் பாதுகாக்கப்பட வேண்டியவை. தவிரவும் தமிழக ஓவியக்கலையில் தனி இடம் வகிப்பனவுமாகும். அன்று வாழ்ந்த மக்களையும் அவர்களது ஆடை அணிகலன்களையும் நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றன. இரண்டரை நூற்றாண்டுகளுக்கும் மேலாகியும் ஓவியங்களின் வண்ணங்கள் மங்காமல் இன்றைக்கும் பளிச்சென்று இருக்கின்றன.[19]

## 6. ஊரும் ஊருணியும்

*''ஊருணி நீர்நிறைந்தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு''*

—என்ற குறட்பா காட்டும் நெறிக்கிணங்க கிழவன் சேதுபதி தலைநகரத்தின் குடிநீர்த் தேவை கருதி ஒரு ஊருணி தோண்டச் செய்தான். அரண்மனையின் மேற்குச் சுவரினை ஒட்டி தோண்டப்பட்ட. இவ்வூருணி ''முகவை ஊருணி''* என்றே பெயர் வழங்கலாயிற்று.

மழைநீர் வற்றிய காலத்தும் மக்கள் அவதியுரு வண்ணம் ஊருணிக்குள் ஆங்காங்கே நல்ல நீர் ஊறுகின்ற கிணறுகள் தோண்டப்பட்டன. இந்த நற்பணிக்காகக் கிழவன் சேதுபதியை 'முகவை ஊருணி அய்யா'' என்று மக்கள் அன்பொழுக அழைத்தனர்[20]

18 ''இராமநாதபுரம் சேதுபதி அரண்மனை-இராமலிங்க விலாசம்''-(1980) தமிழ்நாடு அரசின் தொல் பொருளாய்வுத் துறை வெளியீடு.

19 Ibid

* முகவை ஊருணியின் தென்கரையில் கிழவன் சேதுபதி காலத்திற்குப்பின் எழுந்த மாளிகை ஒன்றுள்ளது. இந்த மாளிகையில்தான் ஆங்கில தளகர்த்தன கர்னல் மார்ட்டின்ஸ் 1792இல் வசித்தான். இந்த மாளிகை உள்ள வீதி இன்னும் கர்னல் பங்களாத் தெரு என அழைக்கப்படுகிறது. அரசர் மேல்நிலைப்பள்ளி இந்த வீதியில் அமைந்துள்ளது. இந்த மாளிகையில் தான சுவாமி விவேகானந்தர் தங்கினார். இது உள்ளூர் மக்களால் ''சங்கரவிலாசம்'' என்று அழைக்கப்படுகிறது (Col MARTINZ OF RAMANATHAPURAM' by L.C. Richared in THE HINDU dated 15.3.1964)

20 T. Raja ram Row ''RAMNAD MANUAL'' p. 228

கோட்டை வாசலைத்தாண்டி வெளிப்பட்டணம் என்று சொல் லப்படும் கோட்டை வெளி செல்லும் வழியில் உள்ள தெரு சிகில்காரத் தெரு. சிகில்காரன் என்றால் கத்திகளுக்குச் சாணை பிடிப்பவன் என்று பொருள். போர் மறவர்கத்திகளைத் தீட்டிக் கொடுப்போர் கோட்டைக்குப் பக்கத்திலேயே குடியிருந்துள்ள னர்.

அதையடுத்து உள்ளது, கேணிக்கரை என்னும் ஊருணி அமைந்தபகுதி. பண்டைத் தமிழ்நாட்டில் கேணி என்பது அகழி என்றும் கிணறு[21] என்றும் பொருள்பட வழங்கிவந்துள்ளது.

தலைநகர், கோட்டை என்றும் வெளிப்பட்டணம் (நகரின் வெளிப்பகுதி) என்றும் பிரிக்கப்பட்டுள்ளது. வெளிப்பட்டணத் தில் வணிகரும், சாயங்காய்ச்சுவோரும், பொற்கொல்லரும் இஸ்லாமியரும் வசிக்கின்றனர்.

## 7. மக்கள் தொண்டும் மகேசன் பணியும்

வைகையில் கிழவன் சேதுபதி அணை கட்டினான் என்றும்[22] அதன்மூலம் ரகுநாத சமுத்திரம் என்ற சிற்றுறை உருவாக்கிய வன் இவன் என்றும் சகம் 1629 (கி.பி.1707) கல்வெட் டொன்று கூறுகிறது.[23]

1679-இல் திருவாடானையில் உள்ள கோவிலுக்கு கிழவன்சேது பதி நிவந்தங்கள் வழங்கியுள்ளமை தெரிகிறது. 1684-இல் சுந்தர பாண்டியன்பட்டிணத்தில் உள்ள கோவிலுக்கும் தென் னலையிலிருக்கும் எழுவாப்பூர் ஈசுவரர் — அகிலாண்டேசு வரிக்கும் புதுக்கோட்டை, கள்ளிக்குடி, இடையரேந்தல் ஆகிய மூன்று கிராமங்களை அளித்தான்.[24]

இச்சேதுபதி இராமேசுவரம் செல்லும் பயணிகளுக்காக தோணித்துறையில் ஒரு சத்திரம் கட்டினான்; தோணித்துறை, புதுமடம் சத்திரங்களுக்கு நிவந்தங்கள் அளித்தான். நவ ராத்திரி விழா சமயத்தில் கலைஞர்களுக்குப் பரிசுகள் வழங்கி னான்.[25]

21 தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு
— திருக்குறள்

22 Dr. N. Subrahmanian "A HISTORY OF TAMILNAD 1565—1956" p. 74

23 M E.R. 1912 p. 55 quoted by Dr K. Seshadri in his "THE SETUPATIS OF RAMNAD" Doctoral Dissertation 1976 unpublished

24 Dr. K. Seshadri "THE SETUPATIS OF RAMNAD"—Do—

25 T. Rajaram Row, RAMNAD MANUAL, p-228.

## 8. நாணயமும் வாணிபமும்

தன்னாட்சி உரிமை பெற்றிருந்த சேதுபதிகள் ஆட்சியில் சேது நாடு பொருளாதாரரீதியில் வளப்பமாகவே இருந்ததாகவும் பிற்காலத்தில் அதுசீர் குலைந்து போனது என்றும் ஆங்கிலேயரே குறிப்பிட்டுள்ளனர்.[26]

உறுதியான பொருளாதாரநிலை இருந்ததால் கிழவன் சேதுபதி போன்ற சேதுபதிகளின் ஆட்சியில் அரசாங்க நிர்வாக எந்திரத்திற்குத் தீனி போடுவதில் சிரமம் இருந்ததில்லை. மாதம் முடிந்தால் சம்பளம் உறுதி என்றிருந்தது.

''*அரைக்காசு சம்பளம் என்றாலும் அரண்மனைச் சேவகம்*'' என்று இராமநாதபுரம் வட்டாரத்தில் வழங்கும் பழமொழி அந்த நாளைய அரண்மனைப்பணியின் பெருமையைப் பறை சாற்றுவதாக அமைந்துள்ளது. ஆனால் தன்னாட்சித் தன்மை இழந்து அடிமைப்பட்ட நிலையில் முத்துராமலிங்க சேதுபதி காலம் முதல், குறிப்பிட்டுச் சொல்லப்போனால் கி.பி.1765-இல் இருந்து, பொருளாதாரச் சரிவு தொடங்கியது.

நவாபிற்கு அடங்கியிருந்த நிலையிலும் அதன்பின்னர் ஆங்கிலேயர்க்கு அடிமைப்பட்ட நிலையிலும் அவர்களுக்குக் கப்பம் கட்டுவதற்காகவும் அரச குடும்பத்தினர்களுக்குள் நிகழ்ந்த உரிமை வழக்குகளில் செலவழிப்பதற்காகவும் கருவூலம் காலியானதால் நாட்டுக்கோட்டை நகரத்தார்களிடம் சேதுபதிகள் கடனுதவி பெற்றனர். அதற்கு ஈடாக தேவகோட்டையையும் அதைச்சுற்றியுள்ள வளமான கிராமங்களையும் 20 ஆண்டுகள், 50 ஆண்டுகள் என்று குத்தகையாக விட்டுக் கொடுத்தனர். இவ்வாறு பலகிராமங்களைக் கட்டியாளும் வாய்ப்பினைப் பெற்ற நாட்டுக்கோட்டைப் பெருவணிகருக்கு ஜமீன்தார் என்ற கவுரவத்தை ஆங்கிலேய அரசு அளித்தது.[27]

இது குறித்து ''*செட்டிகாசு குட்டி போடுது, சேதுபதி காசு கிசுகிசுன்னு போகுது*'' எனும் பழமொழி இராமநாதபுரத்தில்

26 In the opinion of the British administratars the economy of Ramanathapuram appeared prosperous when the Setupatis were in power, but it collapsed by 1765 when the Nawab assumed the direct administration. —"MILITARY CONSULTATIONS" Madras dated 15-6-1772; Vol. 42 p. 488 —quoted by Dr.K. Rajayyan in his ' RISE AND FALL OF THE POLIGARS OF TAMILNADU" p 26

27 Essay on "A L.A.R. Arunachalam Chettiar-Zamindar of Devakottah' in the ENCYCLOPAEDIA OF THE MADRAS PRESIDENCY AND THE ADJACENT STATES 1920-21 at pp.478-479.

எழுந்தது. செட்டியாரின் பணம் வட்டியால் பெருகுவதனல் குட்டி போடுகிறதாம்! அதேசமயம் சேதுபதியின் பணம் கரைகிற சுவடுதெரியாமல் கைவிட்டுப் போகிறதாம்!! (மிதிவண்டியின் ரப்பர்குழாயில் காற்று பெரிய சத்தமின்றி வெளியேறுவதைப் போல என்று வைத்துக் கொள்ளுங்களேன்!) இப்படிப் படம் பிடிக்கிறமாதிரி பாமரர் நாவில் அந்தப் பைந்தமிழ்ப் பழமொழி உருவாயிற்று.— இது பிற்காலத்திய நிலை!

ஆனல் கிழவன் சேதுபதி காலத்தில் வளப்பமானபொருளாதார நிலைஇருந்ததனல் அரசகுடும்பத்திற்கு வட்டிக்குவாங்கும்இழி நிலை ஏற்பட்டதில்லை. அத்தகைய பொருளாதார உயர்வுக்கு முக்கிய காரணம் கடலோர நாடான இப்பகுதியில் நிகழ்ந்து வந்த வாணிபத்தில் இவ்வரசனுக்கு இருந்த ஈடுபாடே எனலாம். இந்தியாவில் இருந்த ஐரோப்பிய வணிகருடன் மலபார்,கிழக்குக்கரை, இலங்கை, ஏன் வங்கம்வரைகூட, இவன் ஆட்சியில் வாணிபத் தொடர்பு இருந்தது. சேதுநாட்டுக்குப் பல பயன்களைத் தரத்தக்க புதியவர்த்தக ஒப்பந்தம் ஒன்றை டச்சுக்காரருடன் 1684இல் கிழவன் சேதுபதி செய்து கொண்டான். 1690இல் மறவர்சீமையில் வாணிபம் செய்யவும் பாம்பன் வழியே போக்கு வரத்துக்கு அனுமதித்தும் டச்சுக்காரருடன்மற்றும் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது[28]

இவ்வாறு உள்நாட்டவருடன் அல்லாமல் வெளிநாட்டவருடனும் வாணிபம் பெருகிவந்த காரணத்தினல் நாணயம்வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆம்! நாணயம் வெளியிடுவது கிழவன் சேதுபதிகாலத்திற்கு முன்பே தொடங்கி விட்டது. சேதுபதிகளுக்கென்று தனியே நாணயம் இருந்திருக்கிறது.[29] என்று முன்பே கண்டோமல்லவா?

28 "In the second half of the 17th century, the Sethupathi of Ramanathapuram and his principality grew increasingly in power and became virtually independent of the Nayak of Madura whose vassal he once was. One of the major factors that assisted this growth was the increasing interest and participation of this prince in the trade of the area. Both the Thevar (Sethupathi) and his subjects featured prominently in the country trade with Malabar, Coromandel and Ceylon and in our period (1660-1690) has even extended his trade connections to Bengal and with the European traders in India.

...a new treaty was negotiated in 1684 (with the Dutch) in which the Thevar (Kilavan Sethupathi) forced more concessions. ...The treaty of 1693 which resulted gave the Dutch substantial rights in the Thevar's (Kilavan Sethupathi's) lands and over passage through the Pamban channel."
.. S Arasaratnam (University of Malaya. Malaysia), COMMERCIAL POLICIES OF THE SETHUPATHIS OF RAMANATHAPURAM 1660-1690"
(Vide -ABSTRACTS OF PAPERS of the II INTERNATIONAL CONFERENCE SEMINAR OF TAMIL STUDIES. Madras, 1968)

29 Robert Sewell, A SKETCH OF THE DYNASTIES OF SOUTHERN INDIA, p. 87

செந்தமிழ்ப் புலவர் நாநயம் போற்றிய சேதுபதிகள் நாணயம் வெளியிட்டு வாணிபம் போற்றினர் என்பதை விளக்க, ஆராய்ச்சியாளர் வித்துவ சிகாமணி ப.அ. முத்துத்தாண்டவ ராய பிள்ளை 1935ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் சேதுபதிகளுடைய நாணயங்களைப்பற்றி அரிய ஆய்வுரை நிகழ்த்தினர். அது விரிவான செய்திகளைத் தருகிறது.

1904இல் டென்மார்க் நாட்டினர் கோட்டை கட்டியுள்ள தரங் கம்பாடியில் தம் சேதுபதி வமிசத்தார் நாணயங்கள் கிடைத்த தைக்கண்டு காவிரியின் சங்கமம் வரை தம்முன்னேர் ஆதிக்கம் பரவியிருந்திருப்பதை எண்ணி வியந்தாராம், இராஜா தினகர் பகதூர்.*

1889-90இல் வெளிவந்த இலக்கியம், வேதியியல் பற்றிய இதழின் 'சேதுபதி நாணயங்கள்' என்ற கட்டுரையில் ஜேம்ஸ் இ. ட்ரேசி என்ற பாதிரியார் இத்தகைய நாணயங்கள்வடக்கே தஞ்சை வரை பரவியிருந்ததாகக் கூறுகிருர்.[30]

சேதுபதி நாணயங்களை ஆராய்ந்தவர்களாக டாக்டர் ட்ரேசி, கேப்டன் டப்னல் ஆகிய இவர்களின் பெயர்கள் குறிப்பிடப்படு கின்றன.[31]

இலங்காபுரத்தண்ட நாதன் சேதுபதிகளுக்குச் சுதந்திரம் வழங்கி இலங்கைக்கு ஏகிவிட்ட காலம் முதல் (கி.பி. இரண் டாம் நூற்ருண்டு) சேதுபதிகள் நாணயங்கள் போடத்தலைப் பட்டனர். ஆதலின் தொடக்கத்தில் அந்நாணயங்கள் அப் போது புழக்கத்தில் இருந்த இலங்கை நாணயங்களைப் போலவே அமைந்திருந்தன.

சேதுபதிகள் பொன் நாணயங்களை வெளியிட்டதாக ஆதாரம் ஏதும் இல்லை. சில்லரைக் கொடுக்கல் வாங்கல்களில் செம்பு நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன.

* தினகர சாமித்தேவர் என்ற இராஜாதினகர் 1889 முதல் 1903 வரை இராம நாதபுரம் சமீனை ஆண்ட பாஸ்கர சேதுபதியின் சகோதரர். ''BALLADS OF BOER WAR'' எனும் ஆங்கிலப் பரணி நூலையாத்தவர். இவரது அரண்மனை முகவை நகரில் வெளிப் பட்டணம் செல்லும் வழியில் அமைந்துள்ளது. அந்த அரண்மனை வளாகத்தில் அவர்நினைவாக கிறித்தவ நற்பணி மன்றத்தார் ஒரு பள்ளி நிறுவி நடத்திவருகின்றனர்.

30 ப.அ.முத்துத் தாண்டவராயபிள்ளை, ''சேதுபதிகளும் அவர்களுடைய நாண யங்களும்'' (''செந்தமிழ்ச் செல்வி'' தொகுதி XIV 1935 நவ-டிசம்பர் இதழ்

31 ஷெ (செந்தமிழ்ச் செல்வி- தொகுதிXIV 1935 ஆக-செப் இதழ்)

சேதுபதி நாணயங்களின் நிறைகள் இலங்கை 'மாஷா'வுக்கு என்ன நிறையோ அதே நிறைதான். 68 தானிய மணி நிறையில், ஒருநாணயம்; 34 தானியமணி நிறையில், ஒரு நாணயம்; 17 தானியமணி நிறையில், ஒரு நாணயம்—இப்படி மூன்று தர நிறை உள்ள நாணயங்கள் அடிக்கப்பட்டுப் புழக்கத்தில் விடப்பட்டன.

நாணயங்களின் பெறுமானங்களைப் பற்றி ஒரு நாணயத்திலும் குறிக்கப்படவில்லை. பெரியது, சிறியது, நடுத்தரமானது என மூன்றுவித பரிமானமுள்ளவையாக அந்நாணயங்கள் வெளியிடப்பட்டன. இந்த மூன்றுவித பரிமானமுள்ள நாணயங்கள் டேனிஷ்காரர்கள் (டென்மார்க் நாட்டவர்) உலாந்தர் (ஆலந்து நாட்டவர்) ஆகிய ஐரோப்பிய வர்த்தகக் குழுவினரின் 50 காசு 10 காசு, 5 அல்லது 4 காசு ஆகிய மூன்று வகை நாணயங்களை ஒத்திருந்தன.

நாணய ஆராய்ச்சியாளர் முத்துத்தாண்டவராயர் ''செந்தமிழ்ச்செல்வி'' இதழில், ஒரு அட்டவணையில், சேதுபதி நாணயங்களின் நிறை, செலாவணி-மதிப்பு இவற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு வெளியிட்டுள்ளார்.[32]

சேதுபதியரசர்களின் ஒருவராகன் ரூ $3\frac{1}{2}$க்கும் சூளிப்பணம் 12 காசுக்கும் வெள்ளிப்பணம் 15 காசுக்கும் சமம் என்று தெரிய வருகிறது.[33]

ஆராய்ச்சியாளர் கருத்துப்படி நாணயங்களின் பின்பக்கத்தில் ஒரே சேதுபதியின் உருவமே பொறிக்கப்பட்டிருப்பதால் ஏதோ ஒரு சேதுபதி காலத்தில் அடித்த நாணயங்களே அந்த சேதுபதிக்குப் பின்வந்தவர்களின் காலத்திலும் வேறுபபடின்றி வழங்கப்பட்டிருக்க வேண்டும்.[34] அல்லது புதிய மாதிரி வடிவமைப்பு தயாரிக்காது பழைய வடிமமைப்பிலேயே பின்வந்த சேதுபதிகளும் நாணயங்கள் வெளியிட்டிருக்கலாம். ஆகவே கிழவன் சேதுபதி காலத்தில் அவன் காலத்தில் அடிக்கப்பட்டனவும் அதற்கு முன்பு அடிக்கப்பட்டனவுமான நாணயங்கள் செலாவணியில் இருந்திருக்க வேண்டும்.

---

32 ஷை (செந்தமிழ்ச் செல்வி- தொகுதி XIV '935 ஜூலை-ஆக. இதழ்)

33 அ. சம்பந்த மூர்த்தி, ''வைகைக் கரையிலே'' ப. 62

34 ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை, ''சேதுபதிகளும் அவர்களுடைய நாணயங்களும்'' செந்தமிழ்ச் செல்வி ''தொகுதி XIV 1935 ஜூலை-ஆக இதழ்

''சேதுபதி நாணயம்'' எனும் நூல் கிடைத்திலது.[35] சேதுபதிகளின் நாணயங்கள் பற்றி தெரிவிக்கக்கூடிய மற்றொரு நூல் ''பணவிடு தூது''. 1981ல் மதுரையில் நிகழ்ந்த உலகத்தமிழ் மாநாட்டின்போது உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தால் இந்நூல்ஏட்டுப்பிரதியிலிருந்து அச்சிட்டுவெளியிடப்பட்டது. முத்துவிசயரகுநாத சேதுபதிமீது பலபட்டடைச் சொக்கநாதக் கவிராயரால் பாடப்பெற்றது.

இந்நூலின் பாட்டுடைத்தலைவன் முத்துவிசயரகுநாத சேதுபதி 1710 முதல் 1725 வரை ஆட்சி புரிந்தவர். இந்நூல் எழுதப்பட்ட காலம் 1710 முதல் 1715க்குள்ளாகும். கிழவன் சேதுபதி ஆட்சி முடிவுற்ற காலத்தினை ஒட்டி இருப்பதால் இதில் குறித்துள்ள நாணயங்கள் கிழவன் சேதுபதி காலத்திலும் இருந்தனவாதல் வேண்டும். இந்நூலில் பணத்தைக் குறிப்பிட பொன், த்ாது, அத்தம், ஆடகம், வெறுக்கை, ஈகை, வேங்கை, சாதரூபம், கல்யாணம், ஏமம், மா, நிதானம், அரி, மாடு, மோகரம், சம்பங்கி, சாணான் காசு, ஈடு, தங்கக்காசு, சந்தமிக்காசு, பெருங்காசு, கருவெருமை நாக்கு, பெருங்கீற்று, சன்னகீற்று, வராகன், மாடை, வெட்டு, நாணயம், கோழி விழுங்கல், நண்டுக்கால், ஊணையம், உள்ளான், கீழாநெல்லிக்கொட்டை, சில்லரை, மட்டம், கம்பட்டம் போன்ற சொற்கள் ஆளப்பட்டுள்ளன. 'கோழி விழுங்கல்' போன்றவை குற்றமுள்ள நாணயங்களைக் குறிப்பிட ஆளப்படுகின்றன.[36]

## 9. முத்துச்சிலாபமும் டச்சுக்காரரும்

சேதுபதிகளின் அரண்மனையான இராமலிங்க விலாசத்தில் ஒரு ஓவியம், கிழவன் சேதுபதி டச்சுக்காரர்களுடன் சேது நாட்டுக் கடற்கரையைச் சேர்ந்த முத்துச்சிலாபத்தில் அவர்கள் கோரும் சலுகைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதைச் சித்திரிக்கிறது.[37]

---

35 கடிகைமுத்துப்புலவர் இயற்றிய ''மதன வித்தார மாலை'' (கழகப் பதிப்பு) தஞ்சை சு, இராமச்சந்திரனர் எழுதிய ஆராய்ச்சி முன்னுரை-ப.9.

36 சொக்க நாதக்கவிராயரின் ''பண விடு தூது'' விற்கு பதிப்பாசிரியர் இரா. நிர்மலாதேவியின் நூலாராய்ச்சி உரை ப.44(உலகத்தமிழாராய்ச்சி நிறுவனப் பதிப்பு)

37 ''There is one picture showing the Kilavan Sethupathi negotiating with the Dutch for the concessions they desired for pearl fishery in the bay alongside the Ramnad coast''—L.C. Richard ''COL. MARTINZ OF RAMANATHAPURAM'' (THE HINDU dated 15-3-1964)

சேதுபதிகளின் நாணயங்களின் பின்புறம் மூன்று புள்ளிகள் உள்ளன. இவைமுத்துச்சிலாபத்தைக் குறிப்பனவாகும்.[38] சேது நாட்டுக் கடலில் உள்ள முத்துச்சிலாபத்தில் ஈடுபடுவோர் ஒரு நாள் பிடிப்பில் கிடைக்கும் முத்துக்களை சேதுபதிக்குத் திரையாகச் செலுத்தவேண்டும் என்ற பழையவிதி தொடர்ந்து இருந்து வந்தது. கிழவன் சேதுபதி காலத்தில் 1694 மே 8-ஆம் நாள் டச்சுக்காரருடன் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி முத்துச் சிலாபத்தில் ஈடுபட டச்சுக்காரர்களும் அனுமதிக்கப்பட்டனர்[39] முதல் குளிப்பில் அகப்படுகிற முத்துக்கள் சேதுபதிக்கே சொந்தம். சிலாபம் குளிக்கும் இடங்கள் தமக்குச் சொந்தமென்று டச்சுக்காரர்கள் சொல்லிக் கொண்டதில்லை. சேதுபதியின் முத்துக்குளி உரிமையையும் முத்துக் கிடைக்கும் கடலோரப் பகுதியையும் கிழவன் சேதுபதியிடமிருந்து விலைக்கு வாங்க முயன்ற டச்சுக்காரரின் முயற்சி பலிக்கவில்லை. 1700இல் எழுதப்பட்ட மார்ட்டின் எனும் பிரெஞ்சுப் பாதிரியாரின்கடிதத்தில் சேதுபதியின் முத்துச்சிலாப உரிமை பற்றிக் கூறப்பட்டுள்ளது.[40] நெல்சனும் இதனைத் தமது 'மதுரைச்சீமை' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[41]

## 10. மரக்காயரின் சொந்தக்காரர்

தொண்டி, கீழக்கரை, பெரியபட்டணம், தேவிபட்டணம், பாம்பன் முதலிய துறைகளின் வழியாக சேதுநாட்டின் கடல் வழி வாணிபம் நடைபெற்றது. துறைமுகங்களில் காணப்பட்ட மரக்கலங்களில் பெரும்பாலானவை இஸ்லாமியப் பெருவணிகர்களான மரக்காயருக்குச் சொந்தமானவை. மரக்கலராயரின் சுருக்கமே மரக்காயர்.

மரக்காயர்கள் கிழவன் சேதுபதிக்கு மிகவும் உதவியாயிருந்தனர்.[42] அதனால் மரக்காயர்க்குத் தாம் உறவினர் எனும்படி சேதுபதிகள் தம்மை ''மரக்காயர் கிளை'' எனச் சொல்லிக் கொண்டனர்.

38 ப.அ.முத்துத்தாண்டவராய பிள்ளை ''சேதுபதிகளும் அவர்களுடைய நாணயங்களும் (செந்தமிழ்ச் செல்வி தொகுதி XIV 1935 ஆக.செப்.இதழ்)
39 T. Rajaram Row 'RAMNAD MANUAL' p 225
40 Bishop R. Caldwell 'A HISTORY OF TINNEVELLY' 'P.790
41 குருஹதாசப்பிள்ளை ''திருநெல்வேலிச்சீமைச் சரித்திரம்'' ப.329
42 ''He (Kilavan Sethupathi) found useful allies in the Marakayars of Madura who were now settled in his kingdom and were his advisers and confidents''— S. Arasaratnam of University of Malaya. Malaysia'' COMMERCIAL POLICIES OF THE SETHUPATHIS OF RAMANATHAPURAM 1660 - 1690 (Vide:Abstracts of Papers of the International Conference seminar of Tamil studies. Madras. 1968).

## 11. செந்தமிழ்ப் புலவரும் சேதுபதியும்

நாட்டில் அமைதியும் வளமும் நிறைந்திருந்தாலே மொழியும் கலையும் வளர முடியும். சேதுபதிகள் ஆட்சியில் கன்னித் தமிழும் கலைகள் பலவும் வளர்ந்தோங்கின.

சேதுபதிகளின் ஆட்சிக்காலத்தில் பொன்னுங்கால் அமிர்த கவிராயர், சிற்றம்பலக்கவிராயர், சொக்கநாதப்புலவர், கந்த சாமிப்புலவர், படிக்காசுப்புலவர், சொக்கநாதக்கவிராயர், சவ் வாதுப்புலவர், சுப்ரதீபக்கவிராயர், சர்க்கரைப்புலவர் இருவர், நமச்சிவாயப்புலவர், கடிகை-முத்துப் புலவர், பகழிக்கூத்தர், அட்டாவதானி கிருட்டின அய்யங்கார், வேம்பத்தூர் பிச்சுவையர் முதலிய செந்தமிழ்ப் புலவர்கள் ஆதரிக்கப் பெற்றனர். திரு. ரா. இராகவையங்கார் இன்னும் பலர் அடங்கிய நீண்ட பட்டியல் தந்துள்ளார்.

கிழவன் சேதுபதியால் ஆதரிக்கப் பெற்றவர்கள் என்றுதெரிய வரும் இரண்டொரு புலவர்களைத் தவிர அவனால் ஆதரிக்கப் பெற்ற மற்ற புலவர்களைப் பற்றி ஆதாரம் கிடைக்கவில்லை. உமறுப்புலவர், படிக்காசுப்புலவர், கும்பகவி—இவர்கள் கிழவன் சேதுபதியின் சமகாலப் புலவர்கள். குடந்தைவாசி யான கும்பகவி கிழவன் சேதுபதியால் ஆதரிக்கப்பெற்றவர். படிக்காசுப் புலவரோடு பகைமை பூண்டவர். அவரைத் தொண்டைமான் அரசவையில் வென்றவர்.[43]

இவர்களுக்குள் இருந்த பகையை திருமலை சேதுபதி தீர்த்து படிக்காசுப் புலவர் கும்ப கவியை பின்வரும் பாடலால் பாராட்டும் படியான நிலையை ஏற்படுத்தினர்.

> கும்பா கனக சபாபதியீன்ற குளிர்ந்து ரசிக்
> கும்பா வலர் சிரோமணி நின்றமிழ்க் கோப்பசுவின்
> கும்பா தபாலுடன் றேனையுங் கூட்டிக் குழைத்துச்
> செம்பொற்
> கும்பா விலே யெடுத்துக் குடித்தாலந்தக் கூறெக்குமே[44]!

—இப்படிப்பட்ட கும்ப கவியின் திறமையைப் போற்றிகிழவன் சேதுபதி தன் அவையில் வைத்து சன்மானம் வழங்கினர்.[45]

---

43 ந. சி. கந்தையா பிள்ளை, ''தமிழ்ப் புலவர் அகராதி'' ப. 133.

44 ''பழங்கவித்திரட்டு'' (பார்க்க- சி. கு. நாராயணசாமி முதலியார் எழுதிய ''படிக்காசுப் புலவர் சரிதம்''ப. 47)

45 எஸ். சோமசுந்தர தேசிகர் ''தமிழ்ப் புலவர் வரலாறு - பதினேழாம் நூற்றுண்டு'' ப. 153.

''பண்பாகப் பகர் சந்தம் பாடுவதில் படிக்கா சலாதொருவர் பகரொணுதே'' என்று புகழப்பட்டவர், படிக்காசுப்புலவர். திருமலை சேதுபதியால் ஆதரிக்கப் பெற்ற இப்புலவர் கிழவன் சேதுபதியாலும் ஆதரிக்கப் பெற்றவர் என்று கூறப்படுகிறது.[46]

46 RAMANATHAPURAM DISTRICT GAZETTEER p. 106

# 7

# பரிதாபத்திற்குரிய பாதிரியாரின் கதை

## 1. இளவரசனின் தோழன் ஏசுநெறித் துறவியானன்

கிழவன் சேதுபதியை பற்றி எழுதப்படும் எந்த வரலாற்ரு சிரியரும் அருளானந்த சாமியார் என்று மக்களால் அழைக்கப் பெற்ற ஜான் தி பிரித்தோ (The Blessed John De Britto 1647-1693) பாதிரியாரைப் பற்றி எழுதிடத் தவறுவதில்லை. சமயத்தொண்டு காரணமாக பிரித்தோ பாதிரியார் உயிரிழக்க நேர்ந்தது ஒரு துயரக்கதை.

1647-ல் போர்த்துகலில் கத்தோலிக்கக் கிறித்தவக் குடும்பத் தில்பிறந்தார். தந்தை பெயர் ''தான் சால்வதோர் தி பிரித்தோ பெரைரா'' (Don Salvador De Britto Pereyra) என்பதாகும். தாய் பெயர் ''தோணு பீட்டி பெரை ரா'' (Dona Beatrix Pereyra) என்பதாகும். தந்தையார்

இந்தியாவைப் போல் பல மடங்கு பரப்பளவுள்ள பிரேசில் (BRAZ!L) நாட்டில் அரசப்பிரதிநிதி (VICEROY)யாக விளங்யவர்[1]. பிரேசில் போர்த்துகலின்ஆளுகையில் இருந்தது. அரச குடும்பத்திற்கு நிகரானமதிப்புடன் விளங்கியவர்கள் பிரித்தோ குடும்பத்தினர். பள்ளியில் பயிலும் காலத்தில் ஜான் தி பிரித்தோ இளவரசனின் பள்ளித் தோழனுக விளங்கியவர். பள்ளியில் பயிலுங் காலத்திலேயே சமயத் தொண்டு அவரைக் கவர்ந்தது. பெற்ருேரும் அரச குடும்பத்தினரும் தடுத்தும் தூர தேசங்களில் ஏசுவின்நெறியை எடுத்தோதும் திருத்தொண்டை ஏற்றுக்கொண்டார். 1662-இல் குருமார்கள் சபையில் சேர்ந்தார். வேற்றுநாட்டில் சமயத் தொண்டு செய்வதில் ஆபத்து உள்ளது என்று தெரிந்திருந்தும் சாவுக்குத் தன் உயிரைக் காவுகொடுப்பது, உயிர்த்தியாகி ஆவது என்ற முடிவுடனேயே தன்பணியில் அடியெடுத்து வைத்த அடிகளார் அவர்.

அவர் சமயப்பணிசெய்வதற்காக தனது 26-ஆவதுவயதிலேயே 1674-இல் இந்தியாவில் வந்திறங்கிஞர்.1686மே5-இல் தான் அவர் மறவர் நாட்டிற்கு வந்து சேர்ந்தார். மறவர் நாட்டிற்கு மதப்பணி செய்யப்போவதென்பது மரணத்திற்கு மாலையிடுவதைப் போல என ஐரோப்பாவில் கருதப்பட்டு வந்த கால கட்டம்.

## 2. அல்லல் பட்ட அருளானந்தர்

பனங்குடி அருகில் உள்ள வெள்ளைக் குளத்தில் அடிகளார் தங்கியிருந்தார். 1686 ஜுலை 17-ஆம் நாள்! வெள்ளைக் குளத்தில் தொழுகையை முடித்து விட்டு புகழ் மிக்க நகரமான சிவகங்கை வழியாக பாகனேரிக்கு 4 மைலில் உள்ள மேலமங்கலம் நோக்கிப் போய்க் கொண்டிருந்தார். அவருடன் மதமாற்றமாகிய ஒரு பார்ப்பனர் உள்பட 4 பேர் இருந்தனர்.

அப்போது கிழவன் சேதுபதியின் முதல் அமைச்சர் குமார பிள்ளையின் உத்தரவின் பேரில்ஒரு மறவர் தளபதியின் தலைமையில் வந்த படை வீரர்களால் பிரித்தோவும் அவரைச் சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டனர்[2].

---

1 Joseph C-Houpert "THE MADURA CATHOLIC MISSION From 1535 TO 1935" P.58

2 "While he(De Britto) was passing near the famous town of Sivaganga,he was arrested by the soldiers of a Marava General,' —Dr.K.Seshadri, 'THE SETUPATIS OF RAMNAD" (Doctoral Dissertation, 1976. unpublished)

கைது செய்யப்பட்டவர்களைக் கொண்டு சென்ற முறை மிகவும் கொடூரமானது. படை வீரர்கள் அவர்களைக் குதிரையுடன் சங்கிலியால் கட்டி இழுத்துச் சென்றனர். பரியுடன் கட்டப் பட்ட பாதிரியாரின் பரிதாப நிலையைக் கண்டு இரங்காதார் இல்லை எனலாம். மறுநாள் பலமுறை நீரிலே தூக்கிப்போட்டு அமுக்கிச் சித்திரவதை செய்தனர். பிறகு அருகிலிருந்த காளை யார் கோயில் கோட்டைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். அங்கே பிரித்தோவுக்கும் அவருடன் வந்த உபதேசியார்களுக் கும் சுவருடன் இணைத்துக்கைகளில் விலங்குக்கட்டை மாட்டப் பட்டது. கடுமையான கசையடி கொடுக்கப்பட்டது. எட்டுப் பேர் நின்று கொண்டு கடுமையான வெயிலில் இவர்களைப் பாறை மேல் போட்டுப்புரட்டித் துவைத்து எடுத்தனர். ஒரு குறுகிய சிறைக்கொட்டடிக்குள் 28-ஆம்தேதி வரை, அதாவது 10 நாட்களுக்கும் மேலாக, வைத்திருந்தனர். அங்கிருந்து அவர்களைப் பாகனேரி கொண்டு சென்றனர். பாகனேரி கொண்டு செல்லப்படும் பொழுது அரை உயிரே இருந்தது, அவர்களுக்கு. அதையும் போக்க, அதாவது கைகளையும் கால் களையும் வெட்டிக் கழுவிலேற்றும்படி தண்டனை உத்தரவாகி உள்ளதாக அவர்களிடம் சொல்லப்பட்டது.[3]

பாகனேரியில் பிரித்தோபாதிரியார் சித்திரவதை செய்யப்பட்ட வளாகம் இன்றும் ஒரு நகரத்தார் குலச் செல்வந்தர்க்குரிய தாய் உள்ளது. அருகே ஒரு கோவில் உள்ளது. இவற்றின் புகைப்படம் 'அரசனின் உற்ற தோழன் முதல் உயிர்த்தியாகி வரை' எனும் ஆங்கில நூலில் வெளியிடப்பட்டுள்ளது.[4]

இந்நிலையில் பாகனேரியிலிருந்து அவர்களைக் கூட்டி வரும்படி கிழவன் சேதுபதியிடமிருந்து ஓலை வந்தது. காலில் எதுவும் இன்றி கரடு முரடான பாதையில் ஓட்டமும் நடையுமாக அவர்களைக் கூட்டிச்சென்றனர்கள். தலை நகரில் அவர்களை முத லில் ஒரு குதிரைக் கொட்டடியிலும் பின்னர் ஒரு குறுகிய இருட்டறையிலும் அடைத்து வைத்தனர்.

பார்ப்பனரான சனாதனிகள் பிரித்தோ இருந்த அந்த நிலையி லும் அவரைக் கேலி செய்தனர். இருந்தாலும் அவர் தன் சமயத்தை விட்டுக்கொடாது வாதாடினர். சனாதனிகள் அரசர்

3 Joseph C. Houpert "THE MADURA CATHOLIC MISSION FROM 1535 TO 1935" P. 56

4 Henry Doering, 'FROM ROYAL PAGE TO MARTYR" P. 80

முன்னிலையிலேயே அவர் திறமையை ஒப்புக்கொண்டனர். இது பிரித்தோ பற்றித் தெரிந்து கொள்ள அரசனை அவாவுறச் செய்திருக்க வேண்டும்.

அரசர் அருளானந்த அடிகளாரை-பிரித்தோவை-அரண் மனைக்கு அழைத்து வரச்சொன்னார். அரசர் அவரை அமரச் சொல்லி, தானும் பக்கத்தில் அமர்ந்துஅவர் சமயக் கொள்கை களை விளக்கமாக உரைத்திடக் கேட்டார். தன்னுடையவர் களை நோக்கி ''இந்தத் துணிச்சலைப் பாராட்டுகிறேன்'' என்றார். அடிகளார் கடவுளின் சட்டம் இது, நாம் கடைப் பிடிக்க வேண்டியவை இன்னின்னவை என்று தம்சமய நெறிக்குட்பட்டு தெளிவாக விளக்கினார். கிழவன் சேதுபதி அகமகிழ்ந்தார். இந்த நிலையைக் கண்டார், குள்ளமதி படைத்த முதலமைச்சர் குமாரபிள்ளை. எங்கே அரசர் மனம் வேறு திசையில் திரும்பி விடுமோ என்று அஞ்சினார் அமைச்சர்.

''ஒவ்வொருவருக்கும் ஒரு கடவுள் இருக்கலாம். ஆனால் எல்லோருக்கும் சேர்த்து ஒரே ஒரு கடவுள் தான் உண்டு''. இந்த விவாதம் குமாரபிள்ளையையும் சனாதனிகளையும் விழித் துக் கொள்ளச் செய்தது. மன்னனை எப்படியாவது மனமாற்றம் பெறச் செய்ய வேண்டும். இல்லையேல் அவனும் மதமாற்றத் திற்குத் தலையசைத்து விடுவான் என்று முடிவு கட்டிச் செயலில் இறங்கினர்.

சேதுபதி குடிப்பழக்கம் உள்ளவர்;பலதார மணம் புரிந்திருப்ப வர். அமைச்சரும் சனாதனிகளும் இவற்றுக்குப் புதியமதம் எதிரா னது என்று மன்னரிடம் எடுத்து விளக்கி ஓரளவு மனமாற் றத்தை ஏற்படுத்தினார்கள். ஆகவே கிழவன் சேதுபதி அடிக ளாரைப் பார்த்து இவ்வாறு எச்சரித்தார்.

''நீங்கள் என் நாட்டில் எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம். உங்கள் கடவுளை வணங்குவதையோ உங்கள் மதத்தை நீங்கள் பின்பற்றுவதையோ நான் தடுத்து உத்தரவிடப் போவதில்லை. ஆனால்.... எங்கள் நடைமுறைகளுக்கு ஏற்காத நெறியை இங்கே நீங்கள் உபதேசிப்பதை அனுமதிக்க முடி யாது. மீறி நடந்தால் உங்கள் இதயம் நெஞ்சாங்குழியிலிருந்து நீக்கி எடுத்தெறியப்படும். நினைவிருக்கட்டும்''[5]

5 Ibid-PP.82 to 85

இந்தநிலையில் குமாரபிள்ளை தனக்கு எதிராக மதுரை நாயக்க மன்னனுடன் சேர்ந்து சதி செய்வது தெரிந்து அவனைத் தண்டிப்பதில் முனைந்ததால் பிரித்தோவை அத்துடன் விட்டுவிட்டான். அரசனை மீண்டும் சந்திக்க பிரித்தோ எடுத்துக்கொண்ட முயற்சி பலிக்கவில்லை. 1687-ல் பிரித்தோ போர்த்துகல் திரும்பினார். தாயகம் திரும்பிய அவருக்கு ஒரு அரசனுக்குரிய மரியாதைகளுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆனால் சேது நாட்டில் ஏசு நெறி பரப்புவதற்கென்று தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அவரால் மறவர் சீமையை மறந்து இருக்க இயலவில்லை.

## 3. மீண்டும் மறவர் மண்ணில்...

அருளானந்தரின் மனவெளியில் ''போர்த்துகல் போ, போ'' என்றது; ''இந்தியா வா,வா என்றது.'' 'மறவர் மண் என்னை அழைக்கிறது' என்று பயணத்திற்கு ஆயத்தமானார்.

பிரித்தோ அரசிளங்குமரனுக்குப் பள்ளித்தோழன். ஒரு பெரிய நாட்டின் (பிரேசில் நாடு) ஆளுநரின் ஒரே மைந்தன். அரச போகங்களில் திளைத்திருக்க வேண்டியவர். ''வேண்டாம் இந்தத் துறவு'' என்று பெற்றோரும் பேரரசர் குடும்பத்தினரும் தடுத்த போது, ராஜபுதனத்து ராணாவைப் பார்த்து மீரா அரச போகம் வேண்டேன். அறுசுவை உண்டி வேண்டேன்'' என்று சொன்னது போல அவற்றைத் தட்டிக் கழித்து சராசரி மனித சபலங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். அவர் கொண்ட ஒரே உறவு?...ஆம். அதுதான் துறவு.

அவர் இதனை 'தேகோஸ்தா' எனும் பாதிரியாருக்கு எழுதிய கடிதத்தில் வெளிப்படுத்தியுள்ளார்:—

> *''நான் மறுபடியும் போர்த்துகல் போகமாட்டேன். என் இதயம் இறைவன் இருக்கும் விண் நோக்கி ஏங்குகிறது. மண்நோக்கிச் சாயவில்லை. போர்த்துகல் மன்னனின் லிஸ்பன் அரண்மனையைவிட மறவர் நாட்டு ஆரண்யங்களே எனக்கு மேல்.''[6]*

மறவர் கரடு முரடானவர் என்று அஞ்சி ஒதுங்கவில்லை. எங்கே

---

6 To Father de Costa he (De Britto) says he has the good news to communicate- he shall never return to portugal. Then he adds ''My heart yearns upwards to Heaven and not towards the Earth For dearer to me are the forests of Marava than the palace of the being in Lisbon'' -Ibid. 109

முட்கள் சுற்றிலும் இருக்கின்றனவோ அங்கே ரோஜாக்கள் இருக்க வேண்டுமே என்று தேடலில் இறங்கியவர், அந்த முட்களின் கீரலால் துளிர்த்த குருதியை ரோஜாமலர் என்று கருதியவர்.

பிரித்தோலிஸ்பனிலிருந்து ஓராண்டு கப்பல் பயணத்தின்பின் 1690இல் இந்தியாவில் கோவா வந்தடைந்தார். சிறிதுகாலம் கழித்து மதுரை வந்து தன் பணியை மீண்டும் தொடங்கினர். மறவர் நாட்டில்.

## 4. அந்தப்புரத்திலும் அந்தரத்திலும்

சிறுவாழி பாளையக்காரரான தாதியத்தேவன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவன்; சேதுபதியாவதற்குக் கிழவனுடன் போட்டியிட்டவன் என்று முன்பு கண்டோம் அல்லவா?அவன்பிரித்தோவின் பணியால் கவரப்பட்டான். இந்த நிலையில் ஏதோ ஒரு நோய் அவனைப் பீடிக்க, அதிலிருந்து அவனல் விடுபட முடியவில்லை. மருத்துவர்களால் அவ்வியாதியைக் குணப்படுத்த முடியவில்லை. கடைசியாக அருளானந்த அடிகளாருக்குச் சொல்லியனுப்பினன்.

அடிகளார் வந்தார். நோய் நீங்கிற்று. விளைவு? தன்னை ஏசுவழியில் ஈடுபடுத்திக்கொள்ள விரும்பினன், தாதியன். எனவே ''ஞான ஸ்நானம்'' செய்விக்கப்பெற்றுன்,

அவனுக்கோ அன்பு மனைவியர் ஐவர். அங்கு தான் தொல்லை தொடங்கிற்று. ''நான் சார்ந்த புதிய நெறிப்படி முதலாமவள் மட்டுமே என் மனைவி. மற்ற நால்வர் என் உடன்பிறப்புகளுக்குச் சமம்'' என்று முடிவாகவே கூறிவிட்டான். அந்த மங்கையரின் கெஞ்சலோ மஞ்சத்துக் கொஞ்சலோ அவனைச் சிறிதும் அசைக்க முடியவில்லை.

''ஒருத்திமட்டும் அந்தப்புரத்தில் மற்றவர்கள் அந்தரத்தில்!'' —கூடிப் பேசினர் கோதையர்;'நம்மிலே உன் ஒருத்தி சொல்தான் அம்பலம் ஏறும்' என்று அந்தஒருத்திக்கு உச்சந்தலையில் பனிக்கட்டி வைத்தது போல் பேசி அவளைத் தம் கட்சித்தலைவியாக்கினர். [7]

அவள்தான் இருப்பவர்களில் இளையவள்; ஐந்தாவது மனைவி;

7 Dr. K. Seshadri, ''THE SETUPATIS OF RAMNAD'' (Doctoral Dissertation 1976 unpublished)

—பணிமூப்பின்படி கடைசியாக இருப்பவர்களுக்கு (Junior most) வேலை பறிபோவது போல அல்லவே, இந்த இல்லற வாழ்க்கை என்பது. இளையவர்களுக்குத்தானே மதிப்பு மிகுதி அந்த வயதில். ஆனாலும் தாதியத்தேவன் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை.

அவள் பெயர் காதலி. காதலி நாச்சியார் இளையவள் என்பது மட்டுமல்ல,இறையோச்சும் மன்னவனின் தம்பி மகளாவாள். மறவர்கிளை மரபுப்படி மருமகள் உறவுக்காரி, [8]

காதலி நாச்சியார் மாமன் கிழவன் சேதுபதியிடம் சென்று அவன் காலில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தாள். மாமனின் கால்களைக் கண்ணீரால் கழுவினாள். தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எடுத்துரைத்தாள்,அந்த இளையவள்.

''அந்த அயல்நாட்டுச் சன்னியாசி பேச்சைக்கேட்டு ஏசு வழியில் போகிற இவர் தன் குடும்பம் என்னாகும் என்று யோசித்தாரா? தாரம் இனித்தங்கையாம்! அரிதாரம் பூசிய தாரமா நாங்களெல்லாம், வேடத்தைக் கலைத்துவிட்டுப் போய்விட. தாலிகட்டிய மனைவியர் என்பது கூடவா மதம் மாறியவுடன் மறந்து போய்விடுகிறது. இந்த அநீதியைக் கேட்பதற்கு யாருமே இல்லையா? மாமன் என்ற முறையில் அல்ல, மன்னன் என்ற அடிப்படையில் முறையிடுகிறேன். எங்களுக்கு ஒரு வழி சொல்லுங்கள்'' என்று விழிகள் குளமாக வீழ்ந்திருந்தாள், மன்னவன் காலடியில்.

அங்கே எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்ப்பதற்கென்றே காத்திருந்தனர், உள்ளூர்ச் சனாதனிகள் ''பம்பாவனம்'' என்பவன் தலைமையில்.

ஓ!அவர்கள் அந்த சந்தர்ப்பத்திற்காகத் தானே காத்துக் கொண்டிருந்தார்கள். குடம் குடமாய்க் கொட்டிவிடமாட்டார்களா, எரிச்சல் எண்ணெயை. [9]

அவர்கள் அந்த ஆகுதியில் நெய்யாக ஒன்றை விட்டனர். தாதியத்தேவனை கிறித்தவனாக்கி அவன் தலைமையில் மறவர் நாட்டு மக்களைக் கிறித்தவர்களாக்கி, ஒரு கிறித்தவ சாம்ராச்சி

8 டாக்டர் கே.கே.பிள்ளை ''தமிழக வரலாறு — மக்களும் பண்பாடும்'' ப.448

9 ''Not content with this Kattali induced a Brahmin named Pampavanam well known for his opposition to De Britto's missoinary activities to lead a deputation of Brahmins to the Sethupathi and tell him that the safety of the Marava country was imperilled by the progress of Christianity''—RAMANATHAPURAM DISTRICT GAZETTEER p. 89

யத்தை நிறுவி கிழவன் சேதுபதியைப் பதவியிலிருந்து இறக்கு வது பிரித்தோ பாதிரியாரின் நோக்கம்என்று கூறியதே, அந்த நெய்.

மருமகள் முறையிடுகிருள் தன் 'வாழ்வே பறி போய்விட்டது' என்று. மக்களில் சிலர் முறையிடுகின்றனர் "இந்த நிலேநீடித் தால் நாடே பறிபோய்விடும்'' என்று கேட்ட சேதுபதிக்கு ஆத் திரம் மேலிட்டிருக்க வேண்டும். தாதியத்தேவன் மீது ஏற்பட வேண்டிய ஆத்திரம் அயல் நாட்டுத்துறவி மீது பாய்ந்தது. ஆத்திரம் ஆணையாகப் பிறந்தது,[10]:—

—''மாதா கோவில்களை இடித்துத் தரை மட்டமாக்குங்கள்! அந்த மதோன்மத்தர்களை இழுத்து வாருங்கள்!!''

## 5. தீர்த்துக்கட்டிய தீர்ப்பு

1693 ஜனவரி 8—ஆம் நாள் சேதுபதியின் படைவீரர்கள் பிரித் தோவையும் அவருடன் இருந்த மதம் மாறிய இரண்டு உப தேசியார்கள் ஆகியவர்களையும் தேவகோட்டைக்கு அருகில் உள்ள முனி என்ற கிராமத்தில் கைது செய்தனர். சங்கிலியால் பிணைக்கப்பட்டு நான்கு குதிரைகளின் சேணங்களுடன் இணைத் துக்கட்டி இழுத்து வரப்பட்டனர். வழி நெடுகிலும் கொடுமைக் குட்படுத்தப் பட்டனர்.

ஜனவரி 11 ஆம் நாள் இராமநாதபுரம் கொண்டு வரப்பட்ட அவர்கள் சிறையில் தள்ளப்பட்டனர். தலைநகர் திரும்பியசேது பதி பிரித்தோவைப்பற்றி முடிவு செய்யமுடியாமல் பலநாட்கள் குழம்பினர். ஒருபக்கம் சனுதனிகள் கிறித்தவப்பாதிரியாரை ஒழிக்க வேண்டுமென்று வற்புறுத்துவதை முழுக்க ஏற்கவும் முடியவில்லை. மறுபுறம் பரவிவரும் கிறித்தவமதத்தின் ஆதிக் கம் குறித்து பயப்படாமலும் இருக்க முடியவில்லை.

இறுதியாகக் கிழவன் சேதுபதி பிரித்தோ நாடு கடத்தப்பட்ட தாக அறிவித்தார். ஆனுல் தன் உடன்பிறந்தான் உடையத் தேவன் ஆளுநராக இருக்கும் ஓரியூர் (அதாவது சேதுநாட்டின் வட எல்லையில் உள்ளது) அனுப்புவதென்று முடிவு செய்தான். உடையத்தேவனுக்கு ஒரு ரகசியக் கடிதம் எழுதினுன், அங்கு அனுப்பப்படும் பிரித்தோவின் தலையைக் கொய்து விடும்படி. அந்த ரகசியக் கடிதத்துடன் படைவீரர்கள் சகிதம் பிரித்தோ

10 Rajaram Row "RAMNAD MANUAL" pp.142-143

பாதிரியாரை ஓரியூருக்கு உடையத் தேவனிடம் அனுப்பிவைத்தான்.[11]

பயணத்தினால் பிரித்தோ பாதிரியார் மிகவும் களைத்துப் போயிருந்தார். படைவீரர்கள் அவரைப் பதைக்கும் வெயிலில் இழுத்துச் சென்று கொண்டிருந்தனர். அடிகளார் தாகவிடாயினால் தவித்துக் கொண்டிருந்தார்.

செல்லும் வழியில் ஒரு சிற்றூர். அந்தச்சிற்றூரைச் சேர்ந்த ஒரு தாய் ''ஐயோ,பாவம்! யார்பெற்ற பிள்ளையோ? இப்படிச் சீரழிகிறது?'' என்று கண் கலங்கினாள். அவள்அறிவாளா, உலகிலே பரப்பில் ஐந்தாவது இடம் வகிக்கக்கூடிய ஒரு நாட்டின் ஆளுநரின் மகன் அவர் என்று!

உடன் வந்த வீரர்களைச் சரிக்கட்டிவிட்டு, அந்தத்தாய் ஒரு குவளை பால் தந்தாள் பாதிரியார் தாகமும் பசியும் தீர. அருளானந்தரின் இதயத்தின் அடித்தளத்திலிருந்து எழுந்த நன்றியினை எடுத்துவைத்தார், வார்த்தைகளின் வடிவில். ''தாயே இது என்ன ஊர்?''

'பில்லூருங்க'

''நன்று. இனி இவ்வூர் நெல்லூர் ஆகுக'' என்று நெஞ்சார வாழ்த்தினார்.

பில்லூர் விட்டுப்புறப்பட்டு அரைமைல் வந்தாயிற்று. பொழுது சாயத்தொடங்கிற்று. ஓரியூர் அடைய இன்னும் வடக்கே மூன்று மைல்கள் செல்லவேண்டும். அங்கே இரண்டு மண்டபங்கள் இருந்தன. மண்டபம் ஒன்றில் இரவு முழுவதும் அடைத்துவைக்கப்பட்டனர்.[12]

## 6. ஒரு ''ஆஷ்'' புதன்கிழமையில் ஓரியூர் கண்ட உயிர்ப் பலி

பொழுது புலர்ந்தது அருளானந்தரை 1693 ஜனவரி 31ஆம் நாள்ஓரியூர் கொண்டு வந்து சேர்த்தனர். பாம்பாறு எனும் சிற்றாற்றின் கரையில் உள்ளது ஓரியூர். சேதுநாட்டின் வட எல்லையாக இருப்பதால் ஒரு வலிமையான கோட்டையும் அமைந்திருந்தது. ''ஆறூர் சேர்ந்த ஓரூர்'' என்று சிறப்பிக்கப்பட்ட ஊர், ஓரியூர். எல்லையில் அமைந்த நாடாகையினால்

11 T Rajaram Row ''RAMNAD MANUAL'' P. 145.
12 Henry Doering ''FROM ROYAL PAGE TO MARTYR'' P. 118

தன் உடன் பிறந்தானை அதற்கு ஆளுநராக நியமித்திருந்தான் கிழவன் சேதுபதி. தன் ரகசியக் கட்டளையை நிறைவேற்றத் தயங்காதவன் என்பதனுல்தான் உடையத்தேவனுக்குக் கடிதம் அனுப்பி வைத்தான்.

ஆனல் உடையத்தேவன் மனைவியோ கிறித்தவ மதத்தினள். அவள் அருளானந்தர் தன் கணவரால் கொல்லப்படுவதற்கு இணக்கம் தருவாளா? அதனுல் சில நாட்கள் சுணக்கம் ஏற்பட்டது. ஆனல் அமைச்சர் கிறித்தவமத எதிரி. உடையத்தேவனின் அமைச்சர் முருகப்பபிள்ளை உத்தரவின் பேரில் 1693 பிப்ரவரி 4ஆம் நாள் ''ஆஷ்'' புதன் கிழமை (Ash Wednesday) யன்று கண்டம் விட்டுக் கண்டம் வந்து சமயப் பணிபுரிய வந்த அந்த அடிகளாரின் உடல் கண்ட துண்டமாக வெட்டப்பட்டு காக்கை கழுகுகளுக்கு இரையாகப் போடப்பட்டது. தலையும் கால்களும் கோட்டை முன் தொங்கவிடப்பட்டன, மற்றவர்களைப் பயமுறுத்த.

ஓரியூர் ஆளுநர் உடையத்தேவர் அதன் பிறகு நீண்ட நாள் வாழவில்லை இவனுக்குப் பின் வந்த இவன் அண்ணன் மகன் வடுகநாதன் காலத்தில் கிறித்தவர்களுக்கு முழு சுதந்தரம் கிடைத்தது. 1735இல் பிரித்தோ உயிர் பிரிந்த இடத்தின் அருகே ஒரு தேவாலயம் எழுப்பப்பட்டது. ஒவ்வொரு புதன் கிழமையும் ஓரியூரில் ஒரு புனித நாளாகும்[13] ஓரியூருக்கருகில் உள்ள தேவகோட்டையில் பிரித்தோ நினைவாக ஒரு உயர் நிலைப்பள்ளி ஏற்படுத்தப்பட்டது. கிறித்தவ நற்பணி மன்றத்தாரால்.

## 7. மதமாற்றமும் மணி முடியும்

வரலாற்றில் பிரித்தோ பாதிரியாருக்கு ஏற்பட்ட இந்த அவல முடிவு கிழவன் சேதுபதியைப் பற்றிய ஒரு கோரமான சித்திரத்தை நம் முன் காட்டுகிறது. பலவகையிலும் திறமை சாலி, புத்திக் கூர்மையுள்ளவன் என்று வரலாற்றுசிரியர் பேனவால் அழகிய ஓவியமாகத் தீட்டப்பட்டிருக்கும் இவன் உருவம் இந்த ஒரு கோணத்தில் காணும் போது மட்டும் கோரமாகக் காட்சிதரக் காரணமென்ன? உள்ளபடியே கொடுமைக்காரனு? உண்மையில் மத விரோத மனப்பான்மை கொண்டவனு? கிழவன் சேதுபதி கிறித்தவர்கள் அந்நிய மதத்தினர் என்று

13 Ibid p. 128.

வெறுப்புற்றுரு? அப்படியானுல் திருவாடானைத் தாலுகா அனுமந்தக்குடியில் ஒரு மசூதி கட்டிக்கொள்ள முஸ்லீம் களுக்கு நிலமளிக்கும்படியாகவும் சகம் 1594 (கிபி 1672) ஆம் ஆண்டுக் கல்வெட்டில் கண்டுள்ள அவனுல் பிறப்பிக்கப்பட் டுள்ள ஆணையை அறியும்பொழுது அப்படியும் கொள்ள முடியவில்லை.[14]

கிழவன் சேதுபதி சுதந்திர உணர்ச்சி மிக்கவன் என்பதை முன்பே கண்டோம். அவன்தன் நாட்டில் அந்நிய சக்தி எந்த உருவத்திலும் ஊடுருவுவதை விரும்பவில்லை. அது அங்காடி வாணிபம் என்று சொல்லிக்கொண்டு வந்தாலும் சரி அர்த்த முள்ள புனித மதம் என்று சொல்லிக்கொண்டு வந்தாலும் சரி அவன் அனுமதிப்பதாயில்லை. பொதுவாகவே பழங்குடிகள் புதிய மதங்களைச் சாமானியமாக ஏற்றுக் கொள்ள மாட்டார் கள். இதைக் கிறித்தவப் பாதிரிமார்கள் தென் அமெரிக்கா வில் செவ்விந்தியப் பழங்குடிகளிடையே அனுபவ ரீதியாகக் கண்டிருக்கிறுர்கள்.[15]

தனித்தன்மையான சில பண்பாடுகளின் அடிப்படையில் மறவர் மரபினரை இந்தப் பகுதியிலே வாழும் பழங்குடிகள் (Tribe) என்றே மானிடவியலார் குறித்துள்ளனர். அவர்கள் தங்கள் தலைவர் சொல்வதை கண்ணை மூடிக்கொண்டு பின் பற்றுபவர்கள் என்பதை வரலாற்றுசிரியர் குறித்துள்ளனர்.[16] ''தன் நாட்டில் உங்கள் மதத்தை எங்கள் மன்னர் தடை செய் தார்; உங்கள் போதகரைத் தண்டித்தார், மதியூகம் மிக்கவர் எங்கள் மன்னர். அவரே ஒரு முடிவுக்கு வந்துதான் அவ்வாறு செய்திருக்க முடியும். உங்கள் மதத்தைத்தடை செய்வது என்று அவரே முடிவுக்கு வந்து விட்டாரென்றுல், அதெப்படி உங்கள் மதம் நல்லதாக இருக்க முடியும்?'' என்று ஒரு செல்வாக்குமிக்க மறவர் தலைவர் கிறித்தவ உபதேசியார் ஒருவரிடம் கேட்டதாகத் தெரிகிறது! அந்த அளவு கிழவன்

---

14 V. Rangachari, ''INSCRIPTIONS OF MADRAS PRESIDENCY'' p. 1196 quoted by Dr. K. Seshadri in 'THE SETUPATIS OF RAMNAD'' (Doctoral Dissertation 1976 unpublished)

15 William Prescott ''CONQUEST OF PERU''

16 As we have already noticed elsewhere the Maravas have a noted sense of loyalty to their leaders and follow them blindly.
—Dr. S Kadhirvel, A HISTORY OF THE MARAVAS (Appendix-A) p. 218.

சேதுபதிக்கு மக்களிடையே செல்வாக்கு இருந்திருக்கிறது.[17]

தவிரவும் சேதுபதிகளின் இந்து மதப்பற்று உலகறிந்தது. இந்த இந்தியப் பெருநாட்டில் எத்தனையோ இந்து அரசர்கள் இருக்க சேதுபதி பரம்பரையில் வந்த ஒருவர்தானே இந்து சமயப் பெருமை பரப்ப சிகாகோவில் நிகழ்ந்த சமயங்களின் பேரவையில் கலந்து கொள்ளுமாறு விவேகாநந்தரை அனுப்பி வைத்தார். அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்து சேதுநாட்டுப் பாம்பன் மண்ணில் இறங்கிய விவேகாநந்தர் சேதுபதியை இதற்காக எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்று சேதுபதிகளின் இந்து சமயப் பற்றை உலகத்திற்கே எடுத்துரைத்தார், பாஸ்கர சேதுபதியைப் பாராட்டிப் பேசும் பொழுது.[18] குமரிமுனை விவேகானந்தர் நினைவாலயத்தில் பாஸ்கர சேதுபதிக்கும் பாராட்டு நினைவுச் சின்னம் இன்று நிறுவாத குறையை விவேகானந்தர் ஆற்றிய பாராட்டுரை போக்கி விட்டதாகக் கொள்ளலாம்.

கிழவன் சேதுபதியின் இந்து மத ஈடுபாட்டிற்கு மற்றொரு எடுத்துக்காட்டு அவன் இரண்ய கர்ப்பயாகம் செய்தான் என்று அவனது 1707,1712 ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்களால் தெரியவந்திருப்பது.[19]

பிரித்தோ பாதிரியாரின் பிரசாரம் மதமாற்றப் பணி இவற்றின் வேகமும் சேதுபதியை ஆத்திர மடையச் செய்திருக்கக் கூடும்.

---

17 A rich and powerful Marava asked a Christian catechist: "How can this religion (Christianity) be good and holy when our king, so full of sagacity, has put its preacher to ignominous death and severely prohibited this dectrine in his dominions?" (J. H. Nelson, MADURA COUNTRY- pp 206-244) The Setupati's violent action against Christianity seems to have been a popular move. He identified himself completely with the interests of his people and his kingdom.

Prof. R Sathyanatha Aiyar, HISTORY OF THE NAYAKS OF MADURA-p.225 & Swartz Diary, Vol. I p. 239

& Letter of Fr. Peter Martin to Fr. Legobien, Avur dated 11-12-1700 quoted by Dr. S Kadhirvel in his 'A HISTORY OF THE MARAVAS' p. 218

18 It is impossible for me to express my gratitude to H.H. the Raja of Ramnad (Bhaskara Setupati) for his love towards me. If any work has been done by me and through me, India owes much to the good man for it was he who conceived the idea of my going to Chicago, and it was he who put that idea into my head and persistently urged me to accomplish it.

-Swami Vivekananda LECTURES FROM COLOMBO TO ALMORA-p 42

19 Dr. Seshadri, THE SETUPATIS OF RAMNAD (Doctoral Dissertation on, 1976)-unpublished)

ஒரு சமயம் ஒரே நேரத்தில் 8000 மறவரை பிரித்தோ பாதிரியார் கிறித்தவர்களாக்கினுர் என்ருல் அந்த வேகத்தை நாம் ஊகிக்க முடிகிறது.[20] அப்புறம் கிழவனின் ஒன்று விட்ட சகோதரி ஒருத்தியையும் குதிரைப் படைத் தளபதியையும்கூட பிரித்தோபாதிரியார் மதம் மாற்றிவிட்டார். [21] ஆக அங்கே, இங்கே என்று இருந்தது அரண்மனைக்குள்ளும் புகத் தொடங்கியது.

''இறுதியாக தாதியத் தேவனையும் அல்லவா கிறித்தவனுக மாற்றிவிட்டார்?அவனே கிழவனுடன் அரியணைக்குப் போட்டியிட்டவன். வருங்காலத்தில் கிழவன் சேதுபதிக்குப் பின் அரசனுக வரக்கூடிய வாய்ப்புள்ளவன். அரசகுடும்பத்தைச் சேர்ந்த ஒரு பாளையத்தலைவன். சேதுபதியின் மருமகளைத் திருமணம் செய்திருப்பவன். மற்றவர்களை மதம் மாற்றியதைப் போல, சகட்டுமேனிக்கு, இவனையுமல்லவா மதம் மாற்றி விட்டார் இந்த அருளானந்த சாமியார்? [22]அங்கங்கே என்று இருந்தது இப்போது இங்கேயுமல்லவா நெருங்கி வந்து விட்டது. ஆட்டைக்கடித்து, மாட்டைக் கடித்து... என்ற கதை போல் ஆகிவிட்டதே...'' —எவ்வளவு சிந்தித்தும் சேதுபதியால் அதனைச் செரிமானம் செய்ய முடியவில்லை.

அரச குடும்பத்தைச் சேர்ந்தவனே மதம் மாறினுல் மக்களும் கிறித்தவர்களாக மாறத் தயங்கமாட்டார்கள் அல்லவா? அப்படிப்பலர் கிறித்தவர்களாக மாறும் நிலையில் போர்த்துகீசியர் தாதியத் தேவனை கிழவன் சேதுபதிக்கு எதிராகத் தூண்டிவிட மாட்டார்களா? கிறித்துவத்தைஏற்பது மதத்தை ஏற்பது மட்டுமல்ல, போர்த்துகல் மன்னனின் ஆதிக்கத்தை ஏற்பதில் கொண்டுபோய் விடாது என்பது என்ன நிச்சயம்?— என்றெல்லாம் அரசியல் ரீதியாக சிந்தித்த கிழவன்சேதுபதிக்கு அதிர்ச்சி தருவதாக இருந்தது.[23]வரலாற்று அடிப்படையில் அவ்வாறு சேதுபதி அதிர்ச்சி அடைவதற்கு ஆதாரம் இருந்தது. 1532-1582 காலகட்டத்திலேயே கத்தோலிக்கராக்கப்பட்ட மீனவருடன்தூத்துக்குடி மக்களும்போர்த்துகீசியக் குடிகளாகக் கருதப்பட்டார்கள். இதனைக் குறிப்பிட்டிருப்பவரும்

---

20 Dr. N. Subrahmanian. A HISTORY OF TAMILNAD 1565-1956-p. 73.
21 Dr. S. Kadhirvel, A HISTORY OF THE MARAVAS p. 40.
22 Ibid-p.42
23 Ibid-p.43

ஒரு கிறித்தவப் பாதிரியாரே. ஆம்! பிஷப் கால்டுவெல் தெரிவித்துள்ள செய்தியே இது.[24]

இன்னொரு அந்நியரான டச்சுக்காரர்களும் கிறித்தவர்கள் தானே, அவர்களுக்காவது கிழவன் சேதுபதியிடமிருந்து சலுகை கிடைத்ததா?

இராமநாதபுரத்திலிருந்து 12கல் தொலைவிலுள்ள பெரிய பட்டணத்தில் டச்சுக்காரர்கள் நிறையப் பேர்இருந்தனர். தாலமியால் குறிப்பிடப்படும் கடற்கரை வாணிபநகரங்களுள் ஒன்ருக இப்பெரிய பட்டணம் கருதப்படுகிறது. அந்நாளில் இப்பட்டணம் பெரிமுலா அல்லது பெரிமுடா எனப்பெயர் பெற்றிருந்ததாம்.[25] பிளினி இப்பட்டணத்தை பெரிமுலா எனும்பெயருடைய பெரிய வணிகத்துறை எனக்குறிப்பிட்டுள்ளான். இப்பண்டைய பட்டணம் வைகைக் கழிமுகத்தில் அமைந்திருப்பதால், வைகைக் கழிமுகம் முழுமையும் ஆராயப்பட வேண்டுமென்பது அமெரிக்கத் தொல்பொருளாய்வாளர் ஒருவரின் பேரவா.[26]

1292இல் வருகை புரிந்த மார்க்கபோலோ குறிப்பிடும் மன்ஞர் குடாத் துறைமுகங்களுள் இராமேசுவரம் தவிர்த்த இன்னெரு துறைமுகம் பெரியபட்டணம் என்பதாகவும் 1348-49 இல் வருகைபுரிந்த இபின் பதூதா குறிப்பிடும் ஃபட்டன் (Fattan) எனும் துறைமுகப் பட்டணம் இதுவாக இருக்கலாம் என்றும் கால்டுவெல் அடிகளார் கருதுகிருர்.[27]

மார்க்கபோலோ காலத்தில் மன்ஞர்குடாவில் சிறந்து விளங்கிய ஒரு பெரிய துறைமுகப்பட்டணத்தின் மிச்ச மீதமே இன்று பெரிய பட்டணம் என்ற பெயருடன் விளங்கும் சிறிய

24 ...from 1532 for some fifty years the inhabitants of Tuticorin were regarded, like the rest of the baptised Paravas, as Portuguese subjects.
—Bishop R. Caldwell, A HISTORY OF TINNEVELLY-p. 75

25 Ptolemy lists coastal places in Tamil Nadu to which he appends the word 'emporium', meaning an important trade center. Three of these Musiri, Korkai and Kaverippattinam are known .. Another city. called either Perimula or Perimuda, is tantalizingly called 'the greatest emporium of trade in India.' From the description I belive it was on the Vaigai delta near Rameswaram.
—Clarence Malony of Montclair College. U.S A in his essay:- ''Archaelogy in South India'' included In the book ''ESSAYS ON SOUTH INDIA'' edited by Burton Stein. p. 13.

26 ...the whole of Vaigai estuary reed exploration, and though I did not find any ancient sites there. I believe the estuary had ancient towns such as Perimula (great promontory) called by Pliny 'the greatest emporium of trade in India'.
- IBID- p 32.

27 Bishop R. Caldwell, A HISTORY OF TINNEVELLY-p. 40

ஊர்என்று வரலாற்றுப் பேரறிஞர் கிருட்டிணசாமி அய்யங்கார் குறிப்பிட்டுள்ளார். பராக்கிரம பாண்டியனுக்கு உதவிபுரியப் படையெடுத்து வந்த பராக்கிரம பாகுவின் தளபதி லங்காபுரத் தண்ட நாதன் தரை இறங்கி, 'குந்து கல்' எனுமிடத்தில் கோட்டை கட்டினன்.அது பராக்கிரமபட்டணம் எனப்பட்டது. சிறிது தூரத்தில் அதன் தென்பால் அமைந்திருப்பதே இந்தப் பெரிய பட்டணம். பண்டைய நாணயங்களும் பழம் பொருட் களும் அங்குக் கிடைத்துள்ளனவாம். மறைந்து போன அப் பெரும் துறைமுகப்பட்டணத்தின் பெரும் பகுதியை, பூம்பு காரினைப் போலவே, கடலுக்கடியில் தான் தேட வேண்டும் என்கிருர் பேராசிரியர் கிருட்டிணசாமி அய்யங்கார்[28]

பெரும் வரலாற்றுப்புகழ் கொண்ட பெரியபட்டணத்தில் வாணிபத்திற்காக வாழ்ந்து வந்த டச்சுக்காரர்கள் தங்களுக் கென ஒரு கிறித்தவ தேவாலயத்தைக் கட்டிவைத்திருந்தார் கள். ஆனல் அது மாதா கோயில் அல்ல. கோவில் எனும் பெயரில் கட்டப்பட்டுள்ள கோட்டை என்று கிழவன் சேதுபதி யிடம் உறுதியான செய்தியாக உரைக்கப்பட்டதால் 1700-இல் கிழவன் ஆணைப்படி பெரியபட்டணத்தில் இருந்த டச்சு மாதாகோவில் இடித்துத் தள்ளப்பட்டது.[29]

டச்சுக்காரர்களுக்கும் சேதுபதிகளுக்கும் உறவு கெட்டிருந் ததா? அல்ல. தளவாய் சேதுபதிகாலத்தில் நிகழ்ந்த இராமேஸ்வரம் கடற்போரில் போர்த்துகீசியரைப் போல நாயக்கரை ஆதரிக்காமல் டச்சுக்காரர்கள் சேதுபதிக்கு ஆதர வாகக் கடற்படை அனுப்பியவர்களாயிற்றே!கிழவன் சேதுபதி

---

28 ... at the time of Morco Polo there was another great port on the inner side of the Gulf of Mannar, the ruins of which are now known as Periya Pattanam. In the wars of Parakrama Bahu in favour of one of the Pandyan princes, and against his brother, he is supposed to have taken on the mainland and in the peninsula, a village called Kundukala and having fortified it with three circuits of walls and twelve gates called it Parakramapattanam, equi-distant from either sea. A little way to the south and on the coast lie the vast ruins of a city called Periya Pattanam (large port or city) in the Ramnad Zamindari already referred to above, where till recently people pickedup coins and antiquities of sorts and I am informed, a considerable portion of the city could still be traced at low water.

—S. Krishnaswami Aiyangar, "SOUTH INDIA AND HER MUHAMMADAN INVADERS-p 64

29 "In 1700 the Raja of Ramnad destroyed the Catholic Church of Periyapatnam, because be had been assured by Muhammadans that it was a Dutch fortress" —Rev. L. Besse, S. J. 'La Missiondu Madure" (in French) quoted by Joseph C. Houpert in "THE MADURA CATHOLIC MISSION FROM 1535 To 1935" p. 35

காலத்திலும் முத்துச்சிலாபம் சம்பந்தமாக அவனிடம் சுமுக மாக ஒப்பந்தம் செய்து கொண்டு நட்புடன் அல்லவா இருந்து வந்திருக்கிறார்கள். இருந்தாலும் இடித்துத் தள்ள ஆணையிட் டிருக்கிறான், நட்பு பாராட்டுவோரின் மாதாகோவிலையே. இதிலிருந்து என்ன தெரிகிறது? போர்த்துகீசியரோ டச்சுக் காரரோ எவராக இருந்தாலும் மதம் என்ற பெயரில் கூட அந்நியர் மறவர் மண்ணில் காலூன்ற அவன் அனுமதிப்பதாக இல்லை.

அந்நியரின் மதப் பிரசாரம் தடுக்கப்படவேண்டும், அதை நடத்தி வருகிற பிரித்தோ பாதிரியாரைத் தண்டிக்க வேண்டும் என்று அரசியல் ரீதியாக முடிவு செய்திருந்தாலும் சித்ரவதை செய்து கொடூரமாகக் கொல்ல வேண்டுமா? நியாயமான கேள்வி; சித்ரவதைக்கும் தண்டனை விரைந்து நிறைவேற்றப்பட்டதற்கும் காரணன் மதுரை நாயக்க மன்ன னால் தாரைவார்த்தது போல் அனுப்பிவைக்கப்பட்ட அமைச் சனே! அந்தக் கேடு புரிந்த குமாரபிள்ளைக்கு அரசுத்துரோகத் திற்காக மரணதண்டனை கொடுக்கப்பட்டபிறகு கிழவன் சேதுபதி கிறித்தவர்களுக்கு எதிராகக் கடுமையாக நடந்து கொள்ளாததிலிருந்து குமாரபிள்ளையே இந்தக் கொடுஞ் செயலுக்குக் காரணமானவன் எனக்கருத இடமிருக்கிறது.[30] இதனை பிரித்தோவின் கடிதத்திலிருந்தே அறிகிறோம்.[31]

1689-இல் இராணிமங்கம்மாள் கிறித்தவ மதப்பாதிரிமார் களைப் பொறுத்து இரக்கத்துடன் நடந்து கொள்ளும்படி கிழவன் சேதுபதிக்கு அறிவுரைகள் அனுப்பினாள். மதுரையின் ஆதிக்கத்தைத் தூக்கி எறிய முடிவு செய்து விட்டவனிடம் இந்த அறிவுரைகள் எடுபடுமா?[32]

தன் மணிமுடிக்கே ஆபத்து என்று முடிவுக்கு வந்த பிறகே கிறித்தவர்களுக்குக் கொடுமைக்காரனாகக் கிழவன் சேதுபதி மாறினான்.

30 N. Vanamamalai Pillai, THE SETHU AND RAMESWARAM- p. 118

31 From a letter written by Father de Britto to his brother Fernao on the 22nd September 1692 we learn that the minister or general (Kumara Pillai) was accused with his brother of high treason and found guilty. Both of them suffered the same death penalty to which the minister had condemned Father de Britto.

— Henry Doering, FROM ROYAL PAGE TO MARTYR-p.85.

32 Dr. S. Kadhirvel, A HISTORY OF THE MARAVAS p. 44.

V21196
N83

## 8. தீர்ப்புரையும் கருத்துரைகளும்

இனி, கிழவன் சேதுபதியின் செய்கை குறித்து வரலாற்ருசிரியர் கருத்துக்களைக் காண்போம். அரசியல் காரணத்துக்காகவே கிழவன் சேதுபதி பிரித்தோவைக் கொல்லச் செய்தார், மதவெறியினுல் அல்ல- என்பது ''மறவர் வரலாறு'' தீட்டிய டாக்டர் கதிர்வேல் அவர்களின் கருத்தாகும்.[36]

தாம் சார்ந்த சமயத்தால் வேறுபட்ட இரு வரலாற்ருசிரியர்களின் கருத்துக்களை எடுத்துக் கொண்டால் ஒப்புநோக்கி ஆய்வு செய்ய உதவியாக இருக்கும்.

அரசியல் காரணத்துக்காகவே பிரித்தோவைக் கொல்லச் செய்தான், சேதுபதி என்று சொல்வதை டாக்டர் ந. சுப்பிரமணியன் ஒப்புக் கொள்ளவில்லை. காட்டுமிராண்டித்தனமான செய்கைக்காக குற்றவாளியாக அவனை நாம் கொள்ள வேண்டும் என்கிருர். காரணத்தைச் சொல்லிக் காரியத்தை நியாயப் படுத்த முடியுமா? அப்படியானுல் கொடுஞ்செயலில் ஈடுபடும் எந்த மூடபக்தனையும் மன்னித்து விடலாமே என்று எள்ளலுடன் குறிப்பிடுகிருர் அந்த வரலாற்றுப் பேராசிரியர்,[34] தாம் இந்து சமயஞ்சார்ந்த வராயிருந்த போதிலும்.

அதேசமயம் கிறித்தவசமயஞ்சார்ந்த வரலாற்ருசிரியர் மாருன கருத்தைத் தெரிவித்துள்ளார். திரு ஆர். எட்வின் ராஜன் திரு.டி ஞானசேகருடன் இணைந்து எழுதியுள்ள தமிழ் நாட்டு வரலாற்றில் கிழவன் சேதுபதியின் செய்கை குறித்து சில ஒப்புக் கொள்ளக்கூடிய காரணங்கள் சொல்லப் பட்டுள்ளன.

பாதிரியார்கள் வரிசெலுத்துவதில்லை. பாதிரியார்கள் முக்கியமான புள்ளிகளை மதமாற்றம் செய்வதில் மிகவும் குறியாக இருந்தார்கள்; தங்களுடைய தியாகங்களைச் சொல்லி பொது மக்கள் அனுதாபத்தைப் பெறமுயற்சித்தார்கள்; இந்து சமயத்

33 ''... it was a political murder and not a religious persecution.' —Dr. S. Kadhirvel. A HISTORY OF THE MARAVAS p. 219

34 Scholars great as well as petty, have argued that the Setupati was politically motivated in this act of murder and that he was not a religious fanatic. But the defence seems to be halting and feeble. The Setupati was guilty of extreme fanaticism in faith and barbarity in act. If he is to be absolved, all bigots who indulge in all such acts of cruelty are to be exonerated.
-Dr. N. Subrahmanian, A HISTORY OF TAMILNAD 1565-1956. p. 74

84180

தின் அழிவில் தான் கிறித்துவம் வளரமுடியும் எனும்படியான நிலையை உருவாக்கினார்கள் என்பன அக்காரணங்கள்.

மேலும், சேதுபதிகளின் வரலாற்றைப் பொதுவாக ஏசுசபைப் பாதிரிமார்களின் ஆவணங்களையே நம்பி எழுதவேண்டியிருக் கிறது. அவர்கள் எழுதியிருப்பவை இயல்பாகவே கிறித்தவர் களுக்கு ஆதரவாகத்தான் காணப்பட முடியும். ஆனால் வரலாற்றாசிரியரின் கடமை இவற்றினூடே உண்மையைக் காண்பது தாம்—[35]-என்ற ஒருகருத்தையும் அவ் வரலாற்று சிரியர் தெரிவித்துள்ளனர்.

ஒரு இந்து சமயஞ்சார்ந்த வரலாற்றாசிரியர் கிறித்தவர்க்கு ஆதரவு என்று தோன்றக் கூடிய கருத்தையும் கிறித்தவ சமயஞ்சார்ந்த வரலாற்றாசிரியர் இந்துவுக்கு ஆதரவு என்று சொல்லக்கூடிய கருத்தையும் கூறித் தங்கள் நிலையில் நீதியின் பக்கமே நின்றிருக்கிறார்கள். இவை தாம் சார்ந்த சமயத்தின் பால் சாராத கருத்துக்கள்! படிப்பவர்களுக்கு உண்மை காண உதவட்டுமே என்ற அடிப்படையில் இந்த இருவேறு திசையில் அமைந்த கருத்துக்களும் இங்கு ஒரு சேரத்தரப் பட்டுள்ளன.

35 Most of the Historians who have written on this account have mostly dependent on Jesuit records and so their picture is necessarily pro-Christian. The historian's task is to findout the truth. Britto's death issue was carefully propogated in such a way so as to create public sympathy in India and Europe. -R. Edwin Rajan and D. Gnanasekar. HISTORY OF TAMILNADU FROM VISWANATHA NAYAKA TO M G. RAMACHANDRAN p 63-64

# 8

# மன்னவன் வாழ்வில் மாலைப்பொழுதில்...

## 1. புயல், மழை, வெள்ளம்

கிழவன் சேதுபதியின் கடைசிக்காலத்தில் சேது நாட்டிற்கு ஒரு பேரழிவு ஏற்பட்டது. புயல், மழை, வெள்ளம், கோரப் பஞ்சம் ஆகியவை, யாரும் படைஎடுக்கஅஞ்சும்மறவர் நாட்டில் 'தட தட' வென நுழைந்தன. விளைவு? 'வெள்ளப் பஞ்சம்.' வெள்ளமும் பஞ்சமும் இரட்டைப் பிள்ளைகளோ? அப்படிச் சேர்த்துக் கோத்து சொல்கிறார்களே? இல்லை, இல்லை. அவை கை கோத்துக் கொண்டு வரும், கொடுமை புரிய—அதனால் இருக்கலாம்!

1709-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 18-ஆம் நாள்! எல்லா நாளையும் போலத்தான் அன்றும் விடிந்தது! காலை மணி ஏழு ஆயிற்று. கடலில் மையம் கொண்டிருந்த புயல் தரையை நோக்கி சேது நாட்டின் கரையை நோக்கி வீசலாயிற்று. கூடவே மழையும் சாடிற்று. இந்தப் புயல் வடகிழக்குத் திசையில் வீசியது.

அறிவியல் அடிப்படையில் எந்தவித முன் எச்சரிக்கையும் தெரிந்து கொள்ள முடியாத காலம்! மக்கள் செய்வதின்ன தென்று அறியாது கலக்கமுற்ற நிலை.

நடுப்பகல் ஆயிற்று. மழையும் காற்றும் திடீரென நின்றன. அப்பாடா. இத்தோடு இயற்கையின் சீற்றம் ஓய்ந்தது என்று மக்கள் பெருமூச்சு விட்டனர். தைரியமாக இருப்பிடங்களை விட்டு வெளியேறி ஒண்ட ஏதாவது பாதுகாப்பான இடம் கிடைக்குமாவென்று தேடி அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந் தனர். பாவம் அவர்கள் அறியவில்லை அது புயலுக்கு முன் நிலவிக்கொண்டிருந்த அமைதியென்று!

பொழுது சாயத் தொடங்கிற்று. மாலை மணி ஐந்து இருக்கும். திடீரென்று கடலில் காற்று மேலெழுந்தது. இப்பொழுது திசையை மாற்றிக்கொண்டு, தென்மேற்குத் திசையில் காலை யில் வீசியதை விட இன்னும் அதி வேகத்தில் கடும் புயல் வீசிற்று.

''காடெலாம் விறகான செய்தி'' படைக்கும் கடுங்காற்றுக்குத் தான் இடத்திற்கும் வேகத்திற்கும் தக்கவாறு எத்தனை பெயர் கள்? சுழிக்காற்று (Whirlwind); பெரும் புயலுக்கும் மென் காற்றுக்கும் இடைப்பட கடுங்காற்று(Gale); பனி மழையுடன் கொந்தளிப்பும் சேர்ந்த பெருங்காற்று— ''டெம்பெஸ்ட்'' (Tempest) கொந்தளிப்புடன் கூடிய புயல் (Storm); சுழன்றடிக் கும் புயற்காற்று (Cyclone); வெப்பநாடுகளில் குறிப்பாக அட் லாண்டிக் கடற்பகுதிகளில் வீசும் ஒருவகைக் கடும்புயல்— ''டொர்னடோ'' (Tornado); பசிபிக் கடற்பகுதியில் குறிப் பாக சீனக்கடற்பகுதியில் சுழன்றடிக்கும் சூருவளிப் புயல்— ''டைப்பூன்'' (Typhoon) மேற்கிந்தியத்தீவுகளில் திடீர்திடீ ரெனதிசையை மாற்றிக்கொண்டு உக்கிரமான வலிமையுடன் வீசும் ஒரு விதக் கடும்புயலுக்குச் செவ்விந்தியர்கள் தம் மொழியில் சூட்டிய பெயர்—''அரிக்கேன்'' (Hurricane)... இப்படிப்புயலுக்குப் பெயர்கள் பலவாம்!

அப்போது முகவையில் மீண்டும் திசைமாறி வீசிக்கொண்டி ருந்த அசாதாரணமான அந்த அதிவேகப்புயல் 'அரிக்கேன்' வகைப்புயல் என்று வரலாற்றுசிரியர் குறித்துள்ளனர்.[1] இரவு முழுவதும் ''அரிக்கேன்'' எனும்கடும்புயல் வேகங்குறையாது

1 Rajaram Row, ''RAMNAD MANUAL'' P 229

சுழன்றுசுழன்று அடித்து மழைகொட்டியவண்ணம் இருந்தது.

''காற்றடிக்குது. கடல்குமுறுது'' என அஞ்சி மக்கள் கடலின் பக்கம் செல்லாதிருந்தனர். ''வானஞ் சிவந்தது; வையை நடுங்குது'' என வெள்ளம் வரத் தொடங்கியது.

தண்ணீர்! தண்ணீர்!! எங்கு பார்த்தாலும் தண்ணீர்மயம். கண்மாய்கள் நிரம்பி வழிந்து மறுகால் போய்க் கொண்டிருந்தன.

மக்கள் சில சமயங்களில் தண்ணீருக்காகத் தவித்துக் கொண்டிருப்பதுண்டு; அப்போது தண்ணீரே தவித்துக் கொண்டிருந்தது? எதற்காகவாம்? பெரிய கண்மாய் நிரம்பிப்போய் எந்த இடத்தில் இண்டு, இடுக்கு இருக்கும், எங்கு தட்டினால் கதவு திறக்கும் என்பது போல கண்மாய்க் கரைகளை முட்டி மோதித் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தது, தண்ணீர்! ஏதடா, இது— ''எட்டுத் திசையுமிடிய—மழை எங்ஙனம் வந்ததடா, தம்பி'' என்று கேட்கக் கூடிய நிலையில் இருந்தது!

வெள்ளம் வருவது கொஞ்சங் கூடக் குறைவதாக இல்லை. நேரம் ஆக ஆக நீடித்ததே தவிர நிற்பதாக இல்லை. வையையாற்றில் புது வெள்ளம் வண்டலுடன் நுங்கும் நுரையுமாக பெருக்கெடுத்து வந்தது.

குளங்கள் ஏரிகளாக ஏற்றம் பெற்றன. ஏரிகளோ கடல்கள் போலக் காட்சியளித்தன. இந்த 'ஏரி'களும் 'கடல்'களும் தளும்பிடத் தளும்பிடப் பயிர் தழைத்து நின்றவயல்கள் யாவையும் நீரில் அமிழ்ந்தன.

இருட்டு உச்சகட்டத்தில் ஆட்சிபுரியும் நேரம்! நடுநிசி!! எங்கிருந்தோ வந்தது ஒரு பேரலை. மையிருட்டில் மனிதர்கள் ஒருவருடன் ஒருவர் மோதித்தான் வழிகாண வேண்டும். மனைவி மக்களை அழைத்துக் கொண்டு வெள்ளத்திலிருந்து விடுபட்டுத் தப்பிவிட எண்ணி ஓடியவர்கள் அலறினார்கள், 'ஐயோ, என் பிள்ளையை அலை அடித்துப்போய் விட்டதே 'என்று. பிள்ளை பறிபோனது, மனைவியையாவது கரைசேர்ப்போம் என்று கை கோத்துக் கூட்டிச் சென்ற கணவர் பிடியிலிருந்து ஒரு அலை அடித்துச் சென்றது. அந்தோ! அவளும் ஒரு பேரலைக்குப் பலியானாள்! எங்கு பிணமாக ஒதுங்கினாளோ?

மக்கள், மாடு, கன்று, மரம், செடி, கொடி வீடுவாசல் பண்ட பாத்திரம், விலை உயர்ந்த பொருட்கள், அரிசி தவசி அத்தனை

தானியமும் வெள்ளத்தின் சீற்றத்தில் அடித்துச் செல்லப் பட்டன.

இது என்ன வெள்ளம்தானு? இல்லே; ஆழி எனும்கடல் பெருக் கெடுத்து ஊழிக்காலத்தில் உலகிண அழிக்குமாமே, அப்படிப் பட்ட ஊழிப் பெருவெள்ளமா? மக்கள் மயங்கினர். மழலேகள் மலர மலர விழித்தனர். இருளில் வெள்ளத்தில் மிதந்து வந்த பாம்பைக் கயிறு என்று நினேத்துப்பிடித்துக்கரையேற முயன்ற வர்களுமுண்டு; ஆற்றில் மிதந்துவந்த சடலத்தைக் கட்டை என்றெண்ணி மிதப்பாக்கித் தப்பிக்கப் பார்த்தவர்களுமுண்டு.

இருட்டின் ஆட்சியில் கத்தியின்றி ரத்தமின்றி அந்தப் புயலும் வெள்ளமும் கூட்டுக் கொள்ளேயை நடத்தி முடித்தன.

தப்பிப் பிழைத்திருந்த மக்கள் வாழ்வின் முடிவே வந்து விட்டதோ என்று ஏங்கிய நிலேயில் விடிவு வந்தது.

இரவின் ஆட்சி முடிந்தது. எனினும் பகலின் ஆட்சி தொடங் கிய பாடில்லே அழிவின் ஆட்சிதான் ஆரம்பமாகியது. பல்லாண்டுகள் ஆன புளிய மரங்கள் கூட புல்லேப் பிடுங்கிப் போட்டாற்போன்று கிடந்தன என்ருல், நெற் பயிர்கள் எந்த மூலேக்கு?

## 2. கழனிகளோ! பழ்னிசென்று வந்தோர் தலேகளோ!

பெண்டு, பிள்ளேகள், உற்ருர், உறவினரை இழந்தோர் பெரும்பாலோர்; இருந்த பொருட்களும் புயலில் பறிபோய் விட்டன; அல்லது வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. காலமெல்லாம் வாயைக்கட்டி வயிற்றைக் கட்டிச் சேர்த்த தெல்லாம் கண நேரத்தில் கண் முன்னே பறிக்கப்பட்டதால் ஏது வாழ்வினி என்று சோர்ந்தனர், மக்கள். சோதனே போல அந்த ஆண்டு பார்த்து நல்ல விளேச்சல் கண்டிருந்தது,[2] வெள்ளத்திற்கு அர்ப்பணிக்கவோ என்னவோ?

ஆனுலும் அந்த மண்ணுக்கே உரிய மனவளம் வெள்ளத்தால் கொள்ளே போகவில்லே. எது போனுல் என்ன? காடு இருக்கி றது, கை கால் மிச்சமிருக்கிறது; காலம் இருக்கிறது பின்னே என்று ஒருவாறு தேற்றிக் கொண்டனர்.

---

2 ' The harvest has been exceedingly abundant this year(1709)'' Letter of Fr Martin to Fr de Villete dated 8-11-1709 included in John Lockman's 'TRAVELS OF JESUITS' Vol.I P 408 quoted by Prof. R. Sathyanatha Aiyar in his 'HISTORY OF THE NAYAKS OF MADURA' -App. 'B' p.322

ஆனால் அந்தோ பரிதாபம்! உழைத்துப் பிழைத்திடலாம் என்ற உயரிய இலட்சியத்திற்கும் உலை வைத்து விட்டுப் போயிருந்தான் வெள்ளமெனும் கள்வன். அந்த நிலையை வெள்ளம் வடிந்த பின்தான் அவர்களால் நிதானமாகக் கணிக்கமுடிந்தது.

வெள்ளத்தின் விளைவாக எக்கல் அடித்து வயல்கள் அந்த ஆண்டுமட்டுமல்ல அடுத்தடுத்துப் பல ஆண்டுகளுக்குப் பயன் படுத்த முடியாமல் போய்விட்டன. உப்பும் உவடும் சேர்ந்து வயல்களை வளப்பம் இருந்த சுவடு ஒன்றும் தெரியாமல் பாலை வனயாக்கிவிட்டன. இன்னும் தெளிவாகச் சொல்ல நினைத் தால் பாலைவனம் என்று கூடச் சொல்லக்கூடாது. வனம் என்றால் மரங்கள் இருக்க வேண்டுமே, இங்கேது? சுருங்கச் சொன்னால் கழனிகள் எல்லாம் பழனிக்குச் சென்று வந்தோர் தலைகளாகக் காட்சியளித்தன. வரப்புக்கள் பூமிக்குள்ளே மறைந்து விட்டன.

அந்த வயல்களைப் பண்படுத்தி நல்ல நிலைக்குக் கொண்டுவர பணத்தைத் தண்ணீராகச் செலவழித்தால்தான் முடியும். அவர் கள் கைவசம் ஒன்றும் இல்லை. கண்வசம் ஒன்றிருந்தது. அது தான் கண்ணீர்!

காய்ந்து விளைவது இராமநாதபுரம் சீமை என்றொரு பழமொழி யுண்டு. எவ்வளவுதான் வறட்சிப் பகுதி என்று கூறப்பட் டாலும், ஒழுங்காக மழை பெய்கிறகாலத்தில் சேது நாட்டில் அரிசியும் மற்ற உணவுதானியங்களும் மலிவாகவே கிடைத் தன.[3] ஆனால் இப்போதோ விளைவும்இல்லை, விளைவிக்க விதை நெல்லும் இல்லை.

கிணற்று நீர் பல இடங்களில் நஞ்சாகிவிட்டது குளங்கள் தூர்ந்து விட்டன. வறட்சி இரை தேட வலை விரித்து விட்டது. வரலாறு காணாத வறட்சி என்றெல்லாம் கூறப்படுவதுண்டு. ஆனால் அது தான் வரலாறு கண்ட முதல் வறட்சியோ எனும்

---

3 In 1709, drought and extraordinary heat produced great scarcity... When there is abundant rain, rice and other provisions are very cheap here. One fanom will procure upto eight marakkals or large measures of very fine husked rice ... ... But when there is lack of rain, It becomes so dear ... ...

—Fr. Martin in his letter to Villette, MARAVA, 1713 LA MISSION DU MADURE -Vol. IV p. 194 edited by Fr. J. Betrand translated from French by Prof. P. Sathyanatha Aiyar(HISTORY OF THE NAYAKS OF MADRUA -App. "A"-p 294)

படி இராமநாதபுரம் சமஸ்தான வரலாறு (இராம்நாட் மானுவல்)விவரிக்கிறது.[4]

## 3. ஏத்து மீன் ஏருதோ, எங்கள் பஞ்சம் தீராதோ?

வறட்சியின் காரணமாகக் கோரப் பஞ்சம் தலை விரித்தாடியது. வெறும் சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம் என்ற பாரதி பாட்டை நினைத்துப் பார்க்க வேண்டிய நிலையில் இருந்தது அந்தப் பஞ்சம்.

வற்கடம் ஏற்பட்டதால் காசுக்குத் தம்மை விற்றுக் கொண்டு அடிமைகளாயினர் என்று சோழர் வரலாறு சொல்கின்ற நிலையைக்கூட சேதுநாட்டவர் எட்டமுடியாதநிலை. காசுகொடுத்து அடிமைகளாக வாங்கக்கூட எந்தக் கோவிலும் அங்கு இல்லை.

என்ன செய்வார்கள்? விடிவுக்கான முடிவு வெளியேறுவது தான். சேது நாட்டவர் விவசாயக் கூலிகளாக சோழ சீமை (தஞ்சை) நோக்கிப் போகத் தலைப்பட்டார்கள். வானம் பொய்த்த ஆண்டுகளில் அது தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து கொண்டது. அப்போது அவர்களுக்கு இப்படித் தான் பாடத் தோன்றியது.

*மானத்து ராசாவே மழை*
*பேஞ்சா ஆகாதோ?*
... ... ... ... ... ... ...

*மாசி மழை பேயாதோ?*
*மழை வெள்ளம் சாயாதோ?*
*ஏத்து மீன் ஏருதோ?*
*எங்கள் பஞ்சம் தீராதோ?*
... ... ... ... ... ... ...

*நித்தம் கவலைகளோ?*
*நெடு நாளும் துன்பங்களோ?*
*பாரக் கவலைகளோ*
*பல நாளும் தொல்லைகளோ?*
*கஞ்சிக் கவலைகளும்*
*கடன்காரன் தொல்லைகளும்*
*நெஞ்சத் துயரமதை*

---

4 T Rajaram Row "RAMAND MANUAL" pp 229-230.

*யாரோடு முறையிடுவேன்?*
*... ... ... ... ... ... ...*

*அழிச்சி முடிச்சதினால்*
*அரை வயிற்றுக் கஞ்சியில்லே*
*தெய்வத்து சோதனையோ*
*தேசம் விட்டுப் போவதற்கு?*[5]

## 4. பஞ்ச காலத்துத் தஞ்சைப் பகைவர்

பூனை இளைத்தால் எலி மச்சான் முறை கொண்டாடும் என்று வேடிக்கையாகச் சொல்வதில்லையா? அது போலக் கருதி விட்டனர், தஞ்சையை ஆண்டு வந்த மராட்டியர், பஞ்சத்தில் அடிபட்ட சேது நாட்டவரை. பிச்சை எடுப்பவர்களைத் தான், நீ பஞ்சத்துக்கு ஆண்டியா அல்லது பரம்பரை ஆண்டியா என்று கேட்பதுண்டு. எப்போதாவது பஞ்சம் எதிரி நாட்டில் வருகிற நேரம் பார்த்து அவ்வெதிரி மீது படை எடுப்பவர்களை என்னவென்று அழைப்பது? பஞ்சத்துக்கு ஆண்டி போல, அவர்களைப் பஞ்சகாலத்து வீரர் எனலாமா? வீரப்பஞ்சம் ஏற்பட்டதால் பஞ்சம் பரவிய நாட்டின் மீது பாய முற்பட்டனர் போலும்!

1702-இல் அரசி மங்கம்மாளுக்காகப் படையெடுத்துச் சேது பதியிடம் தோற்றதை எண்ணிக்குமைந்து கொண்டிருந்த தஞ்சைத்தரணியாள்பவன் தகுந்த தருணம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். சேது நாட்டில் ஏற்பட்ட பஞ்சம் அவனை நோக்கி மஞ்சத்து மங்கை எனக் கண் சிமிட்டிற்று.

நல்ல சந்தர்ப்பம், நமக்கிது அழைப்பென்று எண்ணி விட்டனர், மராட்டியர். ஐயோ, பாவம்! யானை படுத்தாலும் குதிரை உயரத்திற்குக் குறைச்சலில்லை என்பதை அவன் அறிய வில்லை. மறவர் நாட்டான் பஞ்சத்தில் அடிபட்டு, இளைத்துக் களைத்திருந்த நேரத்தில் மராட்டிய மன்னர் படை முகவை யைச் சுற்றி முற்றுகையிட்டது. கோரப் பஞ்சத்தின் கொடுங் கரங்களின் பிடிக்குள் சிக்குண்டிருந்த நேரத்திலும் வீரமறவர் தீவிரமாகப் போராடினார்கள் என்றால் அவர்கள் தங்கள் தாய் நாட்டிடமும் தங்கள் மன்னன் கிழவன்சேதுபதியிடமும் கொண் டிருந்த பற்றையும் பாசத்தையும் வார்த்தைகளால் வருணிக்க முடியுமா?

5 நாட்டுப்பாடல்- திரட்டியவர்:-தேனூரான் (தினமலர் 12-4-81)

காலம் அவளது அழகுக்கோலத்தை அழித்திடவில்லை என்று ஆங்கிலப் பெருங்கவிஞன் சேக்ஸ்பியர் எழிலரசி கிளியோ பாத்ராவின் அழகைப் புகழ்ந்து பாடியது சேதுநாட்டு வீரர் களுக்குப் பொருந்தும். பஞ்சம் அவர்களது வீரத்தின் திறத் தைக் குறைத்திடவில்லை.

பிணம் தின்ன நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டு வந்த கொடிய விலங்குகள் தாமே பிணங்களாயின. 'சேதுக் கரை தனிலே சென்றவர்கள் மீண்டதில்லை' -எனும் இராமப்பையன் அம்மானைப்பாடல் வரிகள் மீண்டும் ஒருமுறை உறுதிசெய்யப் பட்டன.

## 5. ஒரு சேதுபதியுடன் 47 தேவியரும் ஒருங்குடன் மாய்ந்த காட்சி

> *''மறவர் நாட்டை முழுவுரிமை நாடாக்கி மதிப்புடனும் திறமையுடனும் 36 ஆண்டுகள் மாண்புடன் ஆண்டு மறவர் மக்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட மாவீரர் கிழவன் சேதுபதி (1674-1710) மண்ணுலக வாழ்வை விட்டு மறைந்தார்[6]''*

—என்று கிழவன் சேதுபதி மறைவைக் குறிப்பிடவந்த பேரா சிரியர் அ. கி. பரந்தாமனுர் அவனது மாண்பையும் குறிப் பிடத் தவறவில்லை.

கிழவன் சேதுபதிக்கு 47 மனைவியர் இருந்தனர். சக்கரவர்த்தி யாக வாழ்ந்த சோழப்பேரரசர்கள் இதற்கு விதிவிலக்கு அல்ல. விசயாலயன் முதலிய சோழ மன்னர்களில் இரண்டொருவர் தவிர ஏனைய மன்னர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்டிரை மணந்து கொண்டவர்களே[7]. சோழ மன்னர்கள் தங்கள் அரசை விரிவுபடுத்த முனைந்ததும் அண்டை நாடுகளை நட்பு நாடுகளாக வைத்துக் கொள்ள எண்ணியதும் சில சந்தர்ப்பங் களில் மண வினைகளில் முடிந்தது. இதே போல் மதுரை மன்னர் திருமலையின் அந்தப்புரத்தினை அலங்கரித்த அரிவை யர் இருநூற்றுவர். அவர் மறைந்த போது அவர்களில் சிலர் உடன்கட்டையேறினர்.[8]

இதே அடிப்படையில் தான் கிழவன் சேதுபதி ஒன்றுக்கு மேற் பட்ட பெண்களை மணந்திருந்தான் என்பர். தன் கீழ் ஆட்சி

---

6 அ. கி. பரந்தாமனுர் ''மதுரை நாயக்கர் வரலாறு'' ப. 345

7 தி. வை. சதாசிவப்பண்டாரத்தார் ''பிற்காலச் சோழர் சரித்திரம்'' பகுதி I ப. 35, 60, 64, 71, 77, 89, 131, 186, 213, 225, 248, பகுதி II ப. 53, 103 119, 163, 200.

8 H. R. Pate. "TINNENELLY DISTRICT GAZETTEER" Vol I p. 65.

செய்த பாளையத் தலைவர்களை நட்புடன் வைத்துக் கொள்ளவும் அவர்களின் பாளையங்களைத்தன் அரசுக்கு அரண்களாக ஆக்கிக் கொள்ளவும் கிழவன் சேதுபதி அவர்களிடம் பெண் கொண்டதுண்டு. இத்தகைய மணவினைகள் இராஜதந்திரத் திருமணங்கள் (Political Marriages) எனப்படுகின்றன. கிழவன் சேதுபதியையடுத்து பட்டத்திற்கு வந்த திருவுடையாத்தேவர் என்ற விஜய ரகுநாத சேதுபதிக்கு 360 மனைவியர் இருந்தனராம்.[9] ஒரே மனைவியை உரிமை பூண்டிருந்த இராமனை வணங்கும் தன்முன்னோர் பல மனைவியரைக் கொண்டிருந்ததற்கு பிற்காலத்தில் வந்த பாஸ்கர சேதுபதி (1889-1903) ஒரு சமயம் கண்டனம் தெரிவித்துள்ளார்.[10]

கிழவன் சேதுபதியின் பட்டத்தரசி செம்பி நாட்டு மறவர் குல மங்கையாவாள். இரண்டாவது மனைவியோ அவன் காதலித்துக் கைப்பிடித்த காதலிநாச்சியார்; தொண்டைமானின் தங்கை. மொத்தத்தில் 47 நங்கையர் இருந்தனர்.

கணவன் இறந்தால் மனைவி உடன்பட்டு உடன்கட்டையேறும் பண்டைத் தமிழர் பழக்கம் தொடர்ந்து இருந்து வந்தது. இப்படி உடன்கட்டையேறிய பெண்டிர் எரியூட்டப்பட்ட இடத்தில் 'மாசதிக்கல்' நட்டு மக்கள் வழிபட்டனர்.

'விரும்பி ஒருங்குடன் மாய்ந்த' பெண்டிர்க்குமட்டும் உரியது என்றிருந்த பழக்கம் பிற்காலத்தில் கட்டாய மாயிற்று. அரச குடும்பங்களில் பெண்கள் அத்தை மகனை மணக்க வேண்டும் என்பது மரபாயிருக்கலாம். அவன் நொண்டி, நுடம், கூன், குருடு என்றாலும் மணந்தே ஆக வேண்டும் எனில் அது மரபல்ல, மரணதண்டனையல்லவா? அப்படிப்பட்ட நிலை கிழவன் சேதுபதி மறைவின் போது ஏற்பட்டது.

இறுதி மூச்சு உள்ளவரை சுதந்திர மன்னனாக, அதற்கு முன்பு எந்தச் சேதுபதியும் ஆண்டிராத பெரும் நிலப்பரப்பிற்கு அதிபராக விளங்கிய கிழவன் சேதுபதி 1710 ஆம் ஆண்டு தன் எண்பதாவது வயதில் உயிர்நீத்தார்.[11]

அந்தச் சமயத்தில் அரசனின் அந்திமச் சடங்குகளில் ஒன்றாக, அவனது 47 தேவியரும் உடன்கட்டை ஏறுவதென்று—ஏற்றப்பட வேண்டுமென்று முடிவாயிற்று. ஏன் ஏறுவது, ஏற்றப்படு

9 Dr. N. Subrahmanian, "A HISTORY OF TAMILNAD 1565-1956" p. 75
10 Dr. S. Kadhirvel. "A HISTORY OF THE MARAVAS" Foot note 80 at Page 50
11 Henry Doering, "FROM ROYAL PAGE TO MARTYR" p. 132

வது இரண்டையும் குறிப்பிட வேண்டி வருகிறதென்றல் அத் தேவியருள் சிலர் உடன்பட்டு, விரும்பி, ஒருங்கு மாய்ந்திட, உயிர் விட்டிட முழுமனத்துடன் வரவில்லை என்பது உடன் கட்டையேறிய காட்சியை மார்ட்டின் பாதிரியார் விவரிப்பதை மனக்கண்ணுல் கண்டதினுல் தான்.

தலைநகர எல்லையில் ஒரு பெரிய ஆழமான குழி தோண்டப் பட்டது. ஏராளமான அகிற் கட்டைகள் கொண்டு வரப்பட்டன, பரிமளகந்தம் பூசி பட்டாடையால் போர்த்தப்பட்டது மன்ன வனின் சடலம். இறுதி ஊர்வலம் நகர் வீதிகளைத் தாண்டி எரியூட்டப் படுமிடத்திற்கு வந்து சேர்ந்தது. மன்னவனின் சடலம் குறித்த நேரத்தில் விறகுக்குவியலின் மீது கிடத்தப் பட்டது. அகிற் கட்டைக் குவியலின் கீழே கொள்ளி செருகப் பட்டது. சடங்குகளை நடத்தி வைக்கும் புரோகிதர்கள் மந்திரங்களை ஓதினர். சிதையின் அடிப்பாகம் கனன்று எரியத் தொடங்கியதும் புன்னகை இழந்த அரசனின் மனைவியர் 47 பேரும் தலைமுதல் கால் வரை பொன்னகை அணிந்து, பூவா ரம் பூண்டு, கைகளிரண்டையும் சேர்த்துக் கூப்பிய வண்ணம் சிதையை வலம் வந்தனர்.

சேதுபதியின் முதல் மனைவி-பட்டத்தரசி-கிழவன் சுழற்றிய வாளை எடுத்தாள், தன் கரத்தில். அடுத்து, பட்டத்திற்கு வர இருந்த, கிழவன் சேதுபதியின் அக்காள் உடையக்கா நாச்சி யாரின் மைந்தன் திருவுடையாத் தேவன் கண்ணில் நீர் மல்க நின்று கொண்டிருந்தான்.

அந்த வாளை திருவுடையாத்தேவன் கையில் கொடுத்த பட் டத்தரசி ''இந்த வாள் எதிரிகளை ஒழிக்கவே பயன்படட்டும். வேறு எதற்கும் பயன்படாதிருக்கட்டும்'' என்று விசும்பலுக் கிடையே வீரம் பொங்கிடக் கூறி, மறுகணமே ''அவர் உயிர் இருக்குமிடந்தேடி என் உயிர் செல்லட்டும்'' என்று உணர்ச்சி மேலிட உரைத்த வண்ணம் சிதையில் குதித்தாள்.

அடுத்தது காதலி நாச்சியார் முறை. தமயன் தொண்டை மானிடம் அணிந்திருந்த நகைகளைக் கழற்றிக் கொடுத்தாள். கண்ணில் சொரியும் நீரைத் துடைத்துக்'' கொண்ட புதுக் கோட்டைக் காவலன் தங்கைக்கு என்ன ஆறுதல் புகல்வது எனப் புரியாது நின்ருன். காதலி நாச்சியாரோ உணர்ச்சிகளை ஒடுங்கிடச் செய்த வண்ணம் சேடியரையும் செந்தீயையும் மாறி மாறிப் பார்த்தாள். மறுகணம் சடலத்தின் மீது சடக் கெனப் பாய்ந்தாள். மற்ற மனைவியரும் ஒருத்தியின் பின் ஒருத்தியாக தீயினுக்குத் தங்கள் தேகங்களை விறகாக்கினர்.

ஆனால் ஒருத்தி மட்டும் தனி; இதற்கெல்லாம் அவள் விதி விலக்கு. அவளுக்கோ தீப்புக விருப்பமில்லை. உடன் கட்டை ஏறுதலில் உடன் பாடும் இல்லை. உடன் கட்டை ஏறி விறகாக வெந்து, வெறும் சாம்பலாக நாமென்ன உடை மரமா அல்லது உயிரற்ற சடமா? - என்று நெட்டுயிர்த்தாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். எந்த இந்துவும் இந்த நிலையில் தன்னைக் காப்பாற்றுவான் என்று நினைக்கத் தோன்றவில்லை.

அவள் பார்த்த பார்வை, அந்தக் கூட்டத்தில் தன்னை, அந்தத் தீயிலிருந்து, மத சம்பிரதாயங்களின் பெயரால் நடைபெறும் தீமையிலிருந்து, காப்பாற்ற யாராவது ஆண்பிள்ளை இல்லையா என்று தேடுவது போலிருந்தது. அரசாங்க மரியாதை செலுத்த வந்த படை வீரர் வரிசையில் சிலுவை அணிந்த வீரன் ஒருவன் நிற்கக் கண்டாள். கணவன் இறந்தால் மனைவியும் உடன் சாகவேண்டும் என்று அரச குடும்பங்களில் புகுந்துள்ள இந்துமத சம்பிரதாயத்திற்கு அப்பாற்பட்ட ஏசு வின் புதுநெறியில் புகுந்திருப்பவனாயிற்றே! ஒரு வேளை துணிந்து உதவிடக்கூடும் என்று நம்பிய அவள், கண் மூடிக் கண் திறப்பதற்குள் அவன் மீது சாய்ந்து அவன் கழுத்தைச் சுற்றிக் கொண்டு ''என்னைக் காப்பாற்று, காப்பாற்று'' என்று கதறினாள்; கத்தினாள். அந்த வேரிற்பழுத்த பலாவின் கோரிக்கை விழலுக்கிரைத்த நீராயிற்று; காட்டில் காய்ந்த நிலவாயிற்று.

மதச் சடங்குகள் நடக்கக் கூடிய பகுதிக்குள் பிறமதத்தினனான தான் தடையை மீறி வந்து விட்டதை உணர்ந்த அந்த வீரன் கூடியிருப்போர் கவனமெல்லாம் தன் மீது குவிவதைக் கண்டு ஒரு கணம் துணுக்குற்று, தன் சக்தியை எல்லாம் ஒன்று திரட்டி முரட்டுத்தனமாக அவளைத் தள்ளி விட்டான். அவன் தள்ளிய வேகத்தில் தன் நிலை தடுமாறி, அவள் தலைகுப்புற எரியுள் வீழ்ந்தாள்.

இந்த நிகழ்ச்சி நடந்தது, தீநாக்குகள் கொழுந்து விட்டெரிந்து சிதைக் குழியைச் சுற்றி யாரும் நெருங்க முடியாத படி செந்தழல் தகிக்கின்ற நேரம். மற்றவர்கள் தன்னை அடையாளம் கண்டுகொள்ள முயலுமுன்னே நொடிப் பொழுதில் கூட்ட நெரிசலில் புகுந்து ஓடி விட்டான், அந்தப் படை வீரன். சேதுபதியின் தேவியைத் தீ தீண்டுவதற்கு முன்னே தீண்டிய வனாயிற்றே, அரண்மனை ஆட்கள் விட்டு வைப்பார்களா, இந் நேரம் தேடிக் கொண்டிருப்பார்கள் என்ற எண்ணமே அவன் நெஞ்சில் பதை பதைப்பை உண்டாக்கி அவனை உதறல் எடுக்க

வைத்தது. உள்ளபடி அவன் மீது எந்தக் குற்றமும் இல்லை. என்ருலும் அரண்மனையிலிருந்து எந்த நேரம் தனக்கு மரண ஓலை வரும் என்ற எண்ணமே, அவனுக்குக் கடுஞ்சுரத்தை உண்டாக்கியது. அன்று இரவே அவன் உயிர் பிரிந்தது.

கடைசியாக சிதையில் விழ நேர்ந்த சேதுபதி தேவி மட்டுமே தன் நிலையை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டாள். அப்படியானல் மற்ற மனைவியர் விரும்பித்தாஞ வெந்தழலில் வீழ்ந்தனர்? அல்லவே அல்ல. முதலில் ஏதோ துணிச்சலில், ஊர் உலகத்திற்குப் பயந்து 'தீக்குழி எமக்குப் பூக்குழி' எனச் சொல்லிப் பாய்ந்தவர்கள் வெம்மை பொசுக்கித் தாக்கியதும், தாளமாட்டாமல் குய்யோ முறையோ என்றலறிக் கொண்டு தீக்குழியின் ஓரப்பகுதிக்குத் தப்பித்து ஓட முயன்றனர். ஆனல் கூடியிருந்த புரோகிதர்கள் அவர்கள் மீது விறகுக் கட்டைகளை வீசி எறிந்து வீழ்த்தி, வீழ்ந்தவர்கள் திரும்ப எழ முடியாதவாறு, மேலும் கட்டைகளை எறிந்தனர். அதற்குப் பின்னர் அந்த இரங்கத்தக்க எழிலரசிகளின் தீனக் குரல்கள் எரியுள் உருகி ஒடுங்கின.

இவ்வாறு ஒரு சேதுபதியும் அவனது 47 மனைவிகளும் எரியூட்டப்பட்ட இடத்தில் அவர்களின் நினைவாக ஒரு 'பள்ளிப் படைக் கோவில்' எழுப்பப்பட்டது.[12]

12 Letter of Fr P. Martin to Fr de Villette: Marava, 1713:- Translated from French into English and quoted by Rev L. Besse in his "FATHER BESCHI" PP.24to 28 and by Rajaram Row in his "RAMNAD MANUAL" PP, 225-227

# 9

# அழியாப் புகழ்க் கிழவன் சேதுபதி

## 1. அசைக்க முடியாத அரசியல் சக்தி

முப்பத்தாறு ஆண்டு கால ஆட்சிக்குப் பின், கிழவன் சேதுபதி மறைந்த பொழுது, இராமநாதபுரம் சீமையை ஒரு சமீன் அளவுக்கு விட்டுச் செல்லவில்லை. இன்றைய தஞ்சை, புதுக் கோட்டை, நெல்லை, மதுரை, முகவை மாவட்டங்களில் வியா பித்த ஒரு பரந்த அரசை விட்டுச் சென்றான்.

ஐயாயிரம் சதுர மைல்கள் பரப்புள்ள[1] அவனது அரசு வடக்கே திருவாரூரில் இருந்து தெற்கே திருநெல்வேலி வரை ஒரு கட்டத்தில் வியாபித்திருந்தது.[2] அதாவது இன்றைய இராமநாதபுரம் மாவட்டத்தை விட பரப்பளவில் பெரியதா யிருந்தது.

அது மாத்திரமல்ல, கிழவன் சேதுபதி ஆளுகின்ற காலத்தில் தென்னாட்டிலேயே காவிரிக்குத் தென்பால் உள்ள நாடுகளில் அவனே சக்தி வாய்ந்த அரசனாக விளங்கினான்[3].

---

1 T. Rajaram Row, "RAMNAD MANUAL" p. 236.

2 N. Subrahmanian, "A HISTORY OF TAMILNAD 1565-1956" p 75

3 "There is no doubt that during Kiḷavan Setupati's reign he was the most powerful ruler in all the territories to the south of the Kaveri"
—N. Subrahmanian, , A HISTORY OF TAMILNAD 1565-1956" p.72.

சிறந்த நிருவாகியாகவும் அதே சமயம் ஆற்றல் மிக்க படை வீரஞகவும் கிழவன் சேதுபதி விளங்கியதால் அவஞல் மறவர் சீமையின் மதிப்பையும் மாண்பையும் உயர்த்திட முடிந்தது. 'சேதுபதி சீமை'என்ருலே புருவத்தை உயர்த்தி, 'அவர்களைச் சீண்ட முடியாதே' என்று அச்சப்பட்டுப் பெருமூச்சு விடும் அளவுக்கு அச்சீமையை ஓர் அசைக்க முடியாத அரசியல் சக்தியாக, அங்கீகரித்தாக வேண்டிய சக்தியாக, ஆக்கிக்காட்டினுன்.[4]

## 2. கிழவனின் வாரிசு

இவ்வளவு சிறப்பான அரசாட்சியை உருவாக்கிய கிழவனுக்குப் பின் ஆட்சிக்கு வந்தவன் கிழவனுக்கு என்ன உறவு என்பதில் வரலாற்ருசிரியர்கள் வெகுவாக வேறுபடுகின்றனர்.

கிழவன் சேதுபதியின் அந்தப்புரக்கட்டிலே அவனுடன் பகிர்ந்து கொண்டோர் 47 நங்கையரெனினும் அவனுக்குப் பின் ஆட்சிக் கட்டிலில் அமர அவன் வாரிசாக யாரையும் விட்டுச் செல்லவில்லை என்று வரலாற்ருசிரியர் தெரிவித்துள்ளனர்.[5]

கிழவன் சேதுபதிக்குச் சட்டப்படியான ஆண் வாரிசு இல்லாவிடினும் அவன் காமக் கிழத்தி ஒருத்திக்குப் பிறந்த மகன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் பவானி சங்கரன் என்பதாகும். அவனையே கிழவன் இளவரசஞக நியமித்திருந்தார் என்று டாகடர் ந.சுப்ரமணியனும்[6] டாக்டர் எஸ். கதிர்வேலும் தெரிவித்துள்ளனர். இராமநாதபுரம் சமஸ்தான 'வம்சா வளி' கிழவன் சேதுபதியின் தேவியராகக் குறிப்பிட்டுள்ளவர்களுள் பவானியைப் பெற்றவளின் பெயர் காணப்படவில்லை என்றும் ஆஞலும் அவ்வம்சாவளி பவானியைக் கிழவனின் மகன் என்று ஒப்புக்கொள்வதாகவும் அறிகிருேம்.[7]

பவானி சங்கரனை கிழவன் சேதுபதி ஆட்சிக்கு உரிமைப் படுத்தி விட்டுப் போயிருந்த போதிலும் மறவர் நாட்டு மக்கள் தலைவர்கள் அவனை ஆட்சிக்கு உரிமை உடையவஞக

---

4 ''Being a capable administrator and a skillful soldier, he (Kilavan Setupati) raised the Prestige of the Marava country and made it a force to be reckoned with'' —''RAMANATHAPURAM DISTRICT GAZETTEER'' p. 85

5 There is no evidence of his having left any male off-spring to succeed him'' —S. Thiruvenkatachari, ''THE SETHUPATIS OF RAMNAD'' p. 45-46

6 N. Subrahmanian, ''A HISTORY OF TAMILNAD 1565-1956'' p. 75.

7 Dr. S. Kadhirvel, A HISTORY OF THE MARAVAS-Footnote 80 at Page 50.

அங்கீகரிக்கவில்லை. சேதுபதிசீமைக்கு வாரிசு இல்லாமல் போக நேரிடுகிற போதெல்லாம் மறவர் நாட்டு மக்கள் தலைவர்களே புதிய சேதுபதியைத் தேர்வு செய்வதில் பெரும் பங்கு வகித்தனர். அந்த முறையில்தான் கிழவனின் தமக்கை உடையக்கா நாச்சியாரின் மைந்தன் திருவுடையாத்தேவன் ஆட்சி உரிமை பெற்றான்.

1710-இல் விஜயதசமி நாளில் விஜயரகுநாத சேதுபதி எனும் பெயரில் திருவுடையாத்தேவன் சேதுபதியானான். அவனுடைய அண்ணன் வடுகநாதத்தேவன் அறந்தாங்கி ஆளுநராக நியமனம் பெற்றிருந்தான்.[8]

இதற்கு நேர்மாறான கருத்தும் உள்ளது. திருவுடையாத் தேவனும் அவன் அண்ணன் வடுகநாதத்தேவனும் கிழவன் சேதுபதியின் தாலிகட்டிய மனைவிக்குப் பிறந்த மைந்தர்களே என்பது பேராசிரியர்கள் ஆர். சத்தியநாதய்யர், அ. கி. பரந்தாமனார் ஆகியோரது கூற்றாகும்.[9]

திருவுடையாத்தேவனும் வடுகநாதத்தேவனும் கிழவன் சேதுபதியின் மருமக்களே என்றும், மூத்தவன் வடுகநாதத் தேவன், இளையவன் திருவுடையாத்தேவன் சேதுபதியாக வர, விட்டுக் கொடுத்தான் என்றும் 'மதுரை மிஷன்' பற்றிய நூல் தெரிவிக்கிறது.[10]

திருவுடையாத்தேவனை கிழவன் சுவீகாரம் எடுத்திருந்ததை நெல்சனும்[11] சியூவெலும் குறிப்பிட்டுள்ளனர். திருவுடையாத் தேவனின் தந்தையின் பெயர் கடம்பத்தேவர் என்றும் சியூவெல் குறிப்பிட்டுள்ளார்.[12]

ஆக கடம்பத்தேவருக்கும் உடையக்கா நாச்சியாருக்கும் மைந்தனாகப் பிறந்தவனும், கிழவன் சேதுபதியின் தமக்கை மகனுமான திருவுடையாத்தேவன் அடுத்து ஆட்சிக்கு வந்தான் என்பதை ஒப்புக்கொண்டால், வடுகநாதனும் இவனும் கிழவனின் சுவீகாரப் பிள்ளைகள் என்றாகிறது.

---

8 Rev. L Besse, FATHER BESCHI-Footnote at Page 69
9 Prof. R. Sathyanatha Aiyar, HISTORY OF THE NAYAKS OF MADURA p. 217
& அ.கி. பரந்தாமனார், மதுரை நாயக்கர் வரலாறு-ப. 345
10 LA MISSION DU MADURE (French) Vol.IV quoted by T. Rajaram Row in his RAMNAD MANUAL -p 231
11 T. Rajaram Row 'RAMNAD MANUAL'' p. 231
12 Robert Sewell, ''A SKETCH OF THE DYNASTIES OF SOUTHERN INDIA''p.90.

ஆனால் 'புதுக்கோட்டை ராஜ்ஜியச் சரித்திரம்' கிழவனின் முதல் மனைவிக்கே ஒரு மகன் இருந்தான் என்று கருதுவதற்கு ஆதாரமான நிகழ்ச்சி ஒன்றை விவரிக்கிறது.

வெள்ளாற்றிற்குத் தெற்கே புதுக்கோட்டைப் பகுதியில் கிழவன் சேதுபதிக்குட்பட்ட சீமையில் செந்தமிழ்ப்புலவர்களால் போற்றப்பட்ட 'செவந்தெழுந்த பல்லவராயன்'[13] என்பவன் ஆண்டுவந்தான்.

புதுக்கோட்டைத் தொண்டைமானின் தங்கை காதலி நாச்சியாரை மணந்திருந்த கிழவன் சேதுபதி செவந்தெழுந்த பல்லவராயன் ஆண்டு கொண்டிருந்த பகுதியையும் தன் மைத்துனனுக்கே அளித்துவிட முடிவு செய்து, காளையார்கோவிலில் வந்து சந்திக்குமாறு, செவந்தெழுந்தானுக்கு ஓலை அனுப்பினான். கிழவன் சேதுபதி காளையார்கோவில் வந்து சேர்ந்த பின்னும் செவந்தெழுந்தான் வருவது தாமதமாயிற்று.

> *'அவர் (கிழவன்) தன் மகனைக் கூப்பிட்டுப் பல்லவராயரைப் பிடித்து வா என்று கடுமையாகக் கட்டளையிட்டார். இளவரசன் துள்ளி எழுந்து பல்லவராயரை அவமானம் செய்து கட்டிக் கொணர்ந்தான். பல்லவராயர் அவமானம் பொறுக்க மாட்டாமல் அதே ஏக்கத்தினால் உயிர் துறந்தார்.''*[14]

என்று 'புதுக்கோட்டை ராஜ்ஜியச் சரித்திரம்' புதிய செய்தி ஒன்றினைத் தருகிறது.

கிழவன் சேதுபதி புதுக்கோட்டைத் தொண்டைமானின் தங்கையைச் சிறிது காலத்திற்கு முன்னர் தான் மணந்திருந்தான். அவனுக்கு அவள் இரண்டாவது மனைவி. எனவே தளபதி போல செயலாற்றக்கூடிய மகன், முதல் மனைவியின் மைந்தனாகவே இருக்க வேண்டும். அதுவும் இளவரசன் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருப்பதால் அவன் பட்டத்தரசிக்குப் பிறந்தவனே என்று ஊகிக்க முடிகிறது.

---

13 ''குளக்காவி மலர்த்தொடையான் சிவந்தெழுந்த பல்லவனைக்கூடா நாளில்
இளக்கார மோ பிரிந்த வாறுகண்டோ நானேழையென்று தானே
வுளக்காத துண்டுகோல் பனிநீர்நெய் யானுறங்கு மூசனல்ல
விளக்காக வெனைத்திரியா விடிய மட்டும் எரித்தனையே வெண்ணிலாவே''
—தனிச்செய்யுட்கோவை (பார்க்க:- சி. கு. நாராயணசாமி முதலியார் ''படிக்காசுப் புலவர் சரிதம்'' ப. 34)

14 கே. இராமஸ்வாமி அய்யர் ''புதுக்கோட்டை இராஜ்ஜியச் சரித்திரம்'' 2ஆம் பாகம் ப. 5-6

அந்த இளவரசன் என்ன ஆனான்? பிற்காலத்தில் அவனைப் பற்றிய குறிப்பு ஏதும் இல்லாததால், இடைப்பட்ட காலத்தில் கிழவனின் ஆயுட்காலத்திலேயே அவனுக்கு முந்தியே (Pre-deceased) மரணமடைந்திருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது.

## 3. பிற்காலச் சேதுபதிகள்

திருவுடையாத் தேவர் என்ற விஜய ரகுநாத சேதுபதியை அடுத்து, சுந்தரேஸ்வர சேதுபதி/பவானி சங்கரன், கட்டையத்தேவர் என்ற குமாரமுத்து விஜயரகுநாத சேதுபதி, சிவ குமாரமுத்து விஜயத்தேவர் என்ற முத்துக்குமார ரகுநாத சேதுபதி, இராக்கத்தேவர், செல்லத்தேவர் முத்துராமலிங்கத் தேவர் சேதுபதி ஆகிய சேதுபதிகள் 1795-ஆம் ஆண்டுவரை சுதந்தர மன்னர்களாக ஆண்டிருக்கிறார்கள்.

ஆனால் முத்துராமலிங்கத் தேவர்—சேதுபதி (1762-95) காலத்திலிருந்து தான் ஆங்கிலேயரின் தலையீடு மிகுந்தது. அவரைத் தங்களுக்கு எதிரானவர் என்று கருதி பதவியிலிருந்து நீக்கி விடும் அளவுக்கு ஆங்கிலேயரின் ஆதிக்கம் வலுப் பெற்று வந்த கால கட்டம் அது.

ஆங்கிலேயருக்குக் கட்டுப்பட்டவர்களாக, சமீனை ஆளுபவர்களாக, அவருக்குப் பின் வந்த இராணி மங்களேஸ்வரி நாச்சியார், சிவகாமி நாச்சியார், அண்ணுசாமி சேதுபதி, விஜயரகுநாத ராமசாமி சேதுபதி, இராணிமுத்து வீராயி நாச்சியார், மங்களேஸ்வரி நாச்சியார், துரை ராஜ நாச்சியார், இராணி பர்வதவர்த்தனி நாச்சியார், முத்துராமலிங்க சேதுபதி, பாஸ்கரசாமி சேதுபதி, ராஜ ராஜேஸ்வர முத்துராமலிங்க சேதுபதி ஆகிய சேதுபதிகள் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். நாடு சுதந்தரம் பெறுகிற காலத்திலும் அதன் பின்னரும் சண்முகராஜேஸ்வர நாகநாத சேதுபதியும் சமீன் ஒழிப்புக்குப் பின்பு இராமநாத சேதுபதியும் சேதுபதி குல திலகங்களாகத் திகழ்ந்தவர்கள்.

1947-இல் விடுதலை என்ற குருதிப் பூ மலர்ந்த போது அந்தச் சிவந்த ரோஜாவின் ஒரு இதழாக, சேதுபதி பூமியும் இந்தியப் பூபாகத்தின் சுதந்தரம் பெற்ற பகுதியாக மலர்ந்தது.

## 4. சுதந்தர உணர்வுள்ள ஒரு மனிதன்

"நாயக்க அரசனின் தாக்குதலாலும் மராத்தியரின் படையெடுப்பாலும் பல வகையிலும் சிதறிக் கிடந்த சேது நாட்டை

ஒன்ருக்கி ஒப்பற்ற வீரத்தோடு ஆண்டபெருமை பரராஜகேசரி கிழவன் சேதுபதியையே சாரும். இவனுடைய ஆட்சிக்காலத்தில்மறவர் நாட்டின் புகழ் குன்றின் மேல் இட்ட விளக்கென ஒளிர்ந்தது. வெஞ்சமரில் வெற்றியையன்றிப் பிறிதொன்றைக் கண்டறியாத மன்னன்''—என்பதாக வெற்றித் திருமகளின் கரம் பற்றிய அவனது வீரப்பேராற்றல் அரசாங்க செய்தித்துறை வெளியீடொன்றில் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது [15]

கிழவன் சேதுபதி தானே படைக்குத் தலைமையேற்று நடத்தியவன்; போரில் வெற்றியையன்றி வேருென்றறியாதவன்; ஆதலினுல்தான் அவன் காலத்தில்—

எந்த சேதுபதி காலத்திலும் கண்டிராத அளவு சேது நாடு விரிவடைந்திருந்தது,

புதிய தலைநகரத்தை அவனே உருவாக்கிஞன்; ஊருணியும் அணையும் உருப்பெற்றன.

ஆங்கிலேயரின் ஆட்சியில் தமிழகத்தில் திகழ்ந்த ஒரே ஒரு தனியரசு புதுக்கோட்டை; அந்தப் புதுக்கோட்டை அரசைத் தோற்றுவித்தவன் அவனே.

கட்டபொம்மனின் கடைசி மூச்சுடன் சுதந்தர எழுச்சி ஓய்ந்து விட்டது என்றெண்ணியிருந்த ஆங்கிலேயருக்கு 1801-இல் சிவகங்கைச் சீமையில் ஏற்பட்ட புரட்சி பேரதிர்ச்சியாக இருந்தது. அந்தச் சிவகங்கைச் சீமை உருவாக அடிகோலியவனும் அவனே.

...இப்படியெல்லாம் கிழவன் சேதுபதிக்கேயுரிய பெருமைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனுல் அவனுக்கிருக்கிற பெருமைகளுள் போரால் புகழ் பெற்று பாரில் பரந்து விரிந்த பூமியையாண்ட மன்னவன் என்பதை விட ''மிகுந்த சுதந்தர உணர்வுள்ள (highly independent) ஒரு மனிதன், அவன்'' [16] என்பதே அவனை மற்றவர்களினின்றும் உயர்த்திக் காட்டும் தனிப் பெரும் பெருமையாகும்.

அந்தச் சுதந்தர உணர்வில் எதிர்காலத்தைக் கணிக்கும் தொலை நோக்குப் பார்வை இருந்தது. அந்தத் தீர்க்கதரிசனம்

---

15 கு. ராஜவேலு ''வீர மருது பாண்டியர்'' (பார்க்க: சென்னை அரசாங்க செய்தித்துறை 1957-இல் வெளியிட்ட ''1857 விடுதலைப் போராட்ட நூற்ருண்டு விழா மலர்'' ப. 14)

16 He (Kilavan Setupati) was clever, intelligent and highly independent -S. Thiruvenkatachari. THE SETUPATIS OF RAMNAD-P.31

நட்பு முறையிலான வணிக ஒப்பந்தங்கள் கூட என்றோ ஒரு நாள் ஆதிபத்ய வெறியாக மாறக் கூடும் என்று எச்சரித்தது.

அண்டை நாடான இலங்கையில் கால்வைத்த வெள்ளையருள் போர்த்துக்கீசியரும் பிரிட்டாசாரும் இந்தியாவிலும் ஆதிக்கம் செலுத்தியுள்ளனர். ஆனால் அங்கு ஆதிக்கம் செலுத்திய டச்சுக்காரர்கள் மட்டும் இந்தியப் பெரு நிலத்தில் காலூன்ற முடியாமற் போனதற்குக் காரணம் கிழவன் பேதுபதியே என்றால் மிகையாகாது.

இலங்கையில் போர்த்துகீசியர் 1505-இல் கால் கொண்டு 1655 வரை (150 ஆண்டுகள்) ஆட்சிபுரிந்தனர். டச்சுக்காரர்கள் 1656-இல் அவர்களை விரட்டி விட்டு 1796 வரை (140 ஆண்டுகள் அரசோச்சினர். அதன் பின் 1797-இல் தொடங்கியது, ஆங்கிலேயரின் ஆட்சி[17]. அது 1948 வரை (150 ஆண்டுகள்) நீடித்திருந்தது. இலங்கையில் முதன் முதல் புகுந்தது போலவே இந்தியாவில் இடம் பிடித்த முதல் ஐரோப்பியர் போர்த்துக்கீசியரே. விசய நகரத்தரசரும் கள்ளிக்கோட்டை மன்னரும் கிழவன் சேதுபதியைப் போல விழிப்பாக இருந்திருப்பின் விடுதலைக்குப் பின்னரும் கோவா, டையு, டாமன் எனும் ஊர்கள் இந்திய நிலப் படத்தில் கரும்புள்ளிகளாகக் காட்சி தர வேண்டிய அவசியம் நேர்ந்திருக்காது.

கிழவன் சேதுபதி பிரித்தோ பாதிரியாரின் கிறித்துவ சமயப் பரப்புப் பணியில் போர்த்துக்கீசிய ஆதிக்க ஊடுருவலின் வாடை இருப்பதாக உணர்ந்ததனாலேயே, அவரைப் பொறுத்து, ஒறுத்திடும் அளவுக்கு அவ்வளவு கடுமையாக நடந்து கொண்டான் என்பர். ஏற்கனவே மேற்குக்கரையில் சில ஊர்களில் வேரூன்றிவிட்ட போர்த்துகீசியர் கிழக்குக் கரையில் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்ப முடியாமற் போனதற்குக்காரணன் கிழவன் சேதுபதியே.

அக்டோபஸ் எனும் ராட்சதப் பூச்சி போன்ற கடல் பிராணி ஒரு வகை ஊதா நீரை உமிழ்ந்து அதில் மயங்கிடும் உயிரினங்களைத் தன்கொடுங்கரங்களால் அணைத்து உறிஞ்சிவிடும். அது போல, கடலாதிக்க வல்லமைகொண்ட ஐரோப்பிய நாடுகள் கீழை நாடுகளில் வாணிபம் செய்யவென வந்திறங்குவார்கள். பின்னர் பண்டகசாலை அமைப்பார்கள். கொஞ்சம் இடம்

---

17 Alfred Clark CEYLON-pp 9, 10

கொடுத்தால் கோட்டை கட்டத் தொடங்குவார்கள். பிறகோ கோலோச்சுவோராக மாறிவிடுவார்கள். இது குடியேற்ற ஆதிபத்ய (Colonialism) வெறியர்களின் வாடிக்கையான வரலாறு. இந்த வாடிக்கையான வரலாற்றின் முதல் கட்டத்திலேயே அதனைத்தடுத்து நிறுத்தி விட்டான், கிழவன் சேதுபதி.

கிழவன் சேதுபதியின் காலத்தில் ஆபத்து ஏற்படுத்தக் கூடிய ஆதிபத்யக்காரர்களாக விளங்கியவர்கள் டச்சுக்காரர்கள். ஏனெனில் சேதுநாட்டின் கடற்கரைக்கு எதிர்க் கரையில் உள்ள இலங்கையில் போர்த்துகீசியர் ஆட்சி ஓய்ந்து டச்சுக்காரர்கள் அப்போது ஆண்டு கொண்டிருந்தார்கள். ஐரோப்பாவில் கடலாதிக்கம் மிக்கவர்கள், டச்சுக்காரர்கள். அவர்களிடமிருந்து விடுதலை பெற இந்தோனேசியா எந்த அளவு போராட வேண்டியிருந்தது என்பது உலகம்அறிந்த வரலாறு. ஒரு வேளை கிழவன் சேதுபதி எச்சரிக்கையோடு செயல் படாது ஏமாந்து இருந்திருப்பாரேயானால், இந்தியருக்கு இந்தோனேசியரின் நிலை ஏற்பட்டிருக்கும். அடிமைத்தளை ஒரு நூற்றாண்டிற்கு முன்பே பூட்டப்பட்டிருக்கும்.

உடன்படிக்கைகளின் பேரால், ''நாங்கள் உங்கள் வாணிப மேம்பாட்டுக்கு உதவுகிறோம்; எங்களால் தான் உங்கள் நாட்டின் கடல் வழி வாணிபம் செழித்தோங்குகிறது'' என்று டச்சுக்காரர்கள் பெருமை பேசிட முடியாதபடி தன் செல்வாக்கால் கடல் வாணிபத்தில் வல்லவர்களான தன் நாட்டு மரக்காயர்களைக் கொண்டு டச்சுக்காரர்களின் மதிப்பீட்டை முறியடித்தான். உடன்படிக்கைகள் தங்கள் வாணிபத்தைப் பெருக்கும், ஆதிக்கத்திற்கு நடை பாவாடை விரிக்கும் என்று கருதிய டச்சுக்காரரின் நம்பிக்கைகள் பொய்த்துப் போயின.[18]

நட்புக்கு எனின், அந்நியர் எனினும், கிழவன் கரம் நீளும், குலுக்குவதற்கு. அதே அந்நியரால் நாட்டுக்குஆபத்து எனின்

---

18 Now the Thevar (Kilavan Sethupathi), with the active assistance of the influential trading community (Marakayars) of the coast attempted to pursue a commercial policy that would defeat the aims of Dutch monopoly ... ...

In the face of the Thevar's hostility and with the advantage in geographical position and commercial influence he enjoyed, the Dutch found it difficult to operate tbe contract of 1674. so adverse to the Thevar's interests.

—R. Arasaratnam (University of Malaya. Malaysia), COMMERCIAL POLICIES OF THE SETHUPATHIS OF RAMANATHAPURAM 1660 1690.

—Vide: ABSTRACTS OF PAPERS OF II INTERNATIONAL CONFERENCE-SEMINAR OF TAMIL STUDIES. Madras. 1968.

அதே கரம் நீளும் கழுத்தைப் பிடித்து நெட்டித்தள்ள. கிழவன் சேதுபதி டச்சுக்காரர்களுடன் நட்பு பாராட்டி வந்தாலும், அவர்கள் தன் நாட்டுக்கடலோரத்தில் நிரந்தரமாகக் கோட்டைகள் நிறுவிடும் முயற்சியை முறியடித்தான்.[19] டச்சு ஆதிபத்யத்தை வேருடன் களைய எண்ணியதனாலேயே சேதுநாட்டின் துறைமுகமான பெரியபட்டணத்திலிருந்த டச்சு மாதா கோவிலையே இடித்திட ஆணையிட்டான், அது கோட்டை எனக் கேள்வியுற்றதும். ஆக, கடலோடு வந்தவர்கள்கடலோடுபோய் விட்டார்கள்.

இந்த அளவுக்கு டச்சுக்காரர்களுக்கு எரிச்சல் ஊட்டிய போதிலும் கிழவன் சேதுபதிக்கு எதிராக டச்சுக்காரர் போரில் இறங்காதது ஆச்சரியமாகக் கூடத் தோன்றும். இலங்கையில் அப்போது டச்சுக்காரர்களின் ஆட்சி கொடி கட்டிப் பறந்துகொண்டிருந்தது. அவர்கள் நினைத்திருந்தால் அங்கிருந்து கப்பல்களில் கடற்படையை அனுப்பி கிழவனை இடர்ப்பட வைக்க முயற்சி செய்திருக்கலாம். செய்தார்களா? இல்லையே. காரணம் அவர்கள் கிழவனின் வல்லமையை எடை போட்டு வைத்திருந்தார்கள். சேது நாட்டில் நிலைப்படை மட்டுமல்ல; நினைத்தால் உருவாகிவிடும் தற்காலிகப் படைகளும் உண்டு. சேதுபதி செய்தி சொல்லியனுப்பினாலே போதும், பாளையங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கில் போர் மறவர் வந்துகுவிந்து விடுவர். பாளையத்தார்க்குப் படை வருவது எப்படி? ஏர் பிடித்துக் கொண்டிருக்கும் மறவர் போர் எனக் கேட்டதும் 'போர்வாளினை எடடா' என்று வேளாண்மையைத் தற்காலிகமாக விட்டு விட்டு, வாளாண்மை காட்ட வந்து விடுவர். கிழவன் சேதுபதிக்கு மக்களிடம் இருந்த செல்வாக்கையும் அவன் மீது அவர்கள் வைத்திருந்த பற்றையும் பாசத்தையும் டச்சுக்காரர் அறிந்து வைத்திருந்தனர்.

போரில் அவன் புலி என்பதும் மக்கள் அவனுக்குப் பின்னே பெரும் சக்தியாக விளங்குகிறார்கள் என்பதும் டச்சுக்காரரை அவனுக்கெதிராகப் படையெடுக்கத் தயக்கமுறச் செய்தன.

மருதிருவர் சேது நாட்டின் சிவகங்கைச் சீமையில் அந்நியர் ஊடுருவல்ஏற்பட்ட பின் அதனை எதிர்த்துப் போரிட்டு மாண்ட புகழுக்குரியோர்; கிழவன் சேதுபதியோ அந்நிய (டச்சு)

19 He (Kilavan Sethupathi) kept the Dutch at bay and defeated their attempt to establish Forts on the coast-
Correspondence between Dutchand Raja of Ramnad-quoted by Dr S. Kadhirvel in A HISTORY OF THE MARAVAS-p 217

ஆதிக்கமே வராது தடுத்த வருமுன் காத்தோன். ஆதிக்க நச்சுமரத்தை முளையிலேயே கிள்ளியெறிந்தவன், கிழவன் சேதுபதி.

இவ்வாறு கிழவன் சேதுபதி காலத்திலிருந்து வளர்ந்து வந்திருந்த விடுதலை உணர்வு ஆங்கிலேயருக்கு சேதுபதிகளைப் பற்றி எப்போதுமே ஒருவித ஐயங்கலந்த அச்சத்தை ஏற்படுத்தி வந்துள்ளது. காரணம் மூவேந்தருக்குப்பின், நாயக்கர், மராட்டியர், பாளையக்காரர் எனப் பலர் ஆண்டிருந்த போதிலும் கிழவன் சேதுபதி காலம் முதல் சேதுபதிகள் மட்டுமே ஒரு முக்கிய அரசியல் சக்தியாக அங்கீகரிக்கப் பட்டிருந்தார்கள்.[20]

சேதுபதி ஒருபாளையக்காரர் அல்ல. ஆனல் பாளையக்காரர்களுக்கெல்லாம் தலைமையானவர் என்று கருதப்பட்டவர். எனவே சேதுபதியை அடக்கி விட்டால் மற்றவர்கள் தாமே அடங்கி விடுவார்கள் என்பது ஆங்கிலேயரின் கணிப்பு.[21]

உண்மையில் சேதுபதி- முத்துராமலிங்கத் தேவரின் உள்ளத்தில் கிழவன் கிளர்ந்தெழச் செய்த விடுதலை உணர்வு கனன்று கொண்டிருந்திருக்க வேண்டும். கட்டபொம்மன் சேதுபதியின் அரண்மனையில் இராமலிங்க விலாசத்தில் ஆங்கிலேய மாவட்ட ஆட்சியாளன் ஜாக்சனின் பேட்டிக்கு வந்து சேர்ந்து உரையாடலில் சூடு உண்டானபோது குழப்பம் ஏற்பட்டது. கட்டபொம்மன் ஆங்கிலேயரிடம் அகப்படாமல் தப்பினர். அவ்வாறு கட்டபொம்மன் தப்புவதற்கு சேதுபதியின் உதவியும் ஒத்தாசையும் காரணம் என்ற கருத்து நிலவுகிறது[22] இதுவும் அந்நியர் மனத்தில் சேதுபதி மீது ஐயத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அதனலேயே சேதுபதி முத்துராமலிங்கத்தேவரை பதவி ஏற்ற மூன்று ஆண்டுகளிலேயே ஆங்கிலேயர் ஆட்சியினின்றும் நீக்கினர்.

## 5. நிலைபெற்ற நினைவுகள் நீங்குவதில்லை

கிழவன் சேதுபதியின் நினைவு அழியா வண்ணம் இன்றும் முகவை வட்டாரத்தில் சிற்றூர்களில் பட்டி தொட்டிகளில்

20 The Setupatis were perhaps the one important political factor to reckon from the period of Kilavan Setupati

—S. Thiruvenkatachari, THE SETUPATIS OF RAMNAD-p.59

21 Ibid-p. 60

22 Ibid-Footnote No 48 at page 149

'கிழவன்' எனும்பெயரைப் பெருமையுடன் வைத்துக் கொண் டிருப்போர் பலர்.

முகவை மாவட்டத்தில் இளையான்குடி வட்டத்தில் அச் சேது பதியின் நினைவைப் போற்றும் வண்ணம் 'கிழவனூர்' என் றொரு சிற்றூர் உள்ளது.

இவனது திருவுருவச்சிலை சேதுநாட்டில் சிவகங்கைக்குஅருகில் காளையார்கோயில் ஆலயத்தில் அமைந்துள்ளது. (இந்நூலின் அட்டைப்படத்தில் இடம்பெற்றுள்ளது. முடி சிதைந்துள்ளது)

கிழவன் சேதுபதியின் அரசு அவனுக்குப்பின் அப்படியேநிலைத் திருக்கவில்லை. பிற்காலத்தில் எல்லை சுருங்கியது.

கட்டிய கோட்டைகள் சிதிலம் அடைந்தன. முகவை தான், தலைநகர் என்ற நிலை மாறிற்று

ஆனால் அவன் எழுப்பிய விடுதலை உணர்வும் 'இராமலிங்க விலாசம்' எனும் கலை மாளிகையும் அழியவேயில்லை.

## 6. ஓர் ஒலி-ஒளிக்காட்சி அரங்கேறுகிறது.

கிழவன் சேதுபதியால் கட்டப்பட்ட இராமலிங்க விலாசம் இன்று அரசினர் பொறுப்பில் உள்ளது. அதன் ஒவ்வொரு கல்லும் விடுதலைப் பள்ளுப் பாடும்! சுற்றிப் பூசியிருக்கிற சுன்னம் சுதந்திர கீதமிசைக்கும்!! ஒரு விடுதலை விரும்பி விரும்பிக் கட்டிய மாளிகையல்லவா? அதோ, அந்த மாளிகை யிலிருந்து ஒலி எழுகிறதே-என்னவென்று சென்று பார்க்க லாமா?

ஒலி மாத்திரம்தான் கேட்கிறதா? விட்டு, விட்டு ஒளி வீசு கிறதே! நெருங்கிப் போவோமா?

ஆ! அங்கே ஓர் ஒலி-ஒளிக்காட்சி அரங்கேறும் நேரம்!!

இராமலிங்க விலாசம்! இருள் மறைந்து கொலு மண்டபத்தில் ஒளி, கற்றை கற்றையாய்ப் பாய்கிறது!!

1798 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 18ஆம் நாள்!

பல இடங்களுக்கும்இழுத்தடிக்கப்பட்டு,உலகத்தின்கோடிக்கே போனாலும் கண்டு விடுவது என்ற முடிவுடன் முகவை வந்த டைந்த பதினெட்டாம் நூற்றாண்டுப் பாண்டியன், பாஞ்சாலக் குறிச்சி வேந்தன், களங்கண்டஞ்சாக் கட்டபொம்மன்,

*''வானம் பொழிகிறது*
*பூமி விளைகிறது*
*யாரைக் கேட்கிறாய் வரி''*

என்று அந்த மாளிகை எதிரொலிக்க, வீரம் மேலிடப் பொங்கி யெழுகிறுன், வெள்ளேயனே நோக்கி.

*ஒளி மறைகிறது. இருள் கவ்வுகிறது. மீண்டும் ஒளி வெள்ளம் பாய்கிறது.*

கண்களேக் கசக்கியவாறு மீண்டும் பார்வையைப் பதிக்கிறேம்; கட்டபொம்மன் இருந்த இடத்தில் கிழவன் சேதுபதி!

*காட்சி மறைகிறது.*
*சிறிது ஒளி, சிறிது இருள்.*

அதோ அங்கே அக்கினித்துண்டங்கள் எழுந்து அந்நியனேத் தாக்குகின்றன. விதிர் விதிர்த்து ஓடுகிறுன், வெள்ளேயன்.

விடுதலேப் போரின் முதல் பொறி ஒரு விடுதலே விரும்பியின் மாளிகையில் இருந்து புறப்பட்டு விட்டது.

*காட்சி மறைகிறது.*
*ஒளி மறைகிறது.*
*ஒலி மட்டும் கேட்கிறது*

குதிரைகளின் குளம்படி ஓசை நெருங்குகிறது! ஒலி முழக்கம் பெரிதாகிறது.

*''வாழ்க கிழவன் சேதுபதி''*

# 10
# பிற்சேர்க்கை

இணைப்பு: 1

## சேதுக்கரை தனிலே ஒரு சீதக்காதி

●

*மால் சீதக்காதி,*
*வேற் சீதக்காதி,*
*துரை சீதக்காதி,*
*செத்தும் கொடுத்தான் சீதக்காதி*

என்றெல்லாம் புலவர்களால் புகழ் பெறும் சீதக்காதியின் காலம் 1650-இலிருந்து 1715 வரை என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது.

இவர் கிழவன் சேதுபதியின் சமகாலத்தவர். சேதுபதியை விட வயதில் கிட்டத்தட்ட இருபது ஆண்டுகள் இளையவர்.

1 A. V. Subramania Aiyar. TAMIL STUDIES- p. 113

இவரது பெயர் பலர் நாவில் பலவாறு, பழகி வந்துள்ளது. செய்தக்காதிறு, செய்தக்காதி, சைதக்காதி, சீதக்காதி அல்லது சீதக்காவி என்பன அவை. இவை ஷைகு அப்துல் காதிறு (SHAYKH ABDUL-QADIR) என்னும் பெயரின் மரூஉச் சொற்கள் என்பர்.[2] ஆனல் வரலாற்றறிஞர் பி. டி. சீனிவாசய்யங்கார் இப்பெயர்கள் 'சையீத் அப்துல் காதிறு' என்பதன் மரூஉ என்று கூறியுள்ளார்.[3]

மல்லா சாஹிபு என்னும் பெரியதம்பி மரக்காயருக்கும் சையது அஹமது நாச்சியாருக்கும் இரண்டாவது மகனுகப் பிறந்தார், சீதக்காதி. இவர் பிறந்த ஆண்டு 1650 என்று கருதப்படுகிறது.[4]

இவரை நெல்லை மாவட்டத்துக் காயற்பட்டினத்திலிருந்து சேது நாட்டுக் கீழக்கரை வந்தடைந்த வணிக மன்னன் என்பர்.[5] ஆனல் தென்காயல் என வழங்கும் கீழக்கரையில் பிறந்து வாழ்ந்து மறைந்தவர் என்றுகூறுகிருர், டாக்டர் முகமது உசைன் நயினர்.

இவர் பிறந்தது மரக்காயர் மரபிலாகும். மரக்காயர்கள் தமிழ் மொழியைப் போற்றும், தமிழ்பேசும் முஸ்லீம்களாவர். அவர்கள் ஷாபி பிரிவைச் சேர்ந்தவர்கள். மற்ற பெரும்பாலான முஸ்லீம்கள் ஹனபி பிரிவைச் சேர்ந்தவர்கள் ;சில திருமணச் சடங்குகளைக் கடைப்பிடிப்பதிலும் மரக்காயர் மற்ற முஸ்லீம்களினின்றும் தனித்து நிற்கின்றனர் என்பது போன்ற விவரங்களையெல்லாம் விவரித்திருக்கிருர் டாக்டர் முகமது உசைன் நயினர்.[6]

சேது நாட்டில் மரக்காயர்கள் எப்போதும் சேதுபதிகளுக்கு விசுவாசமுள்ளவர்களாகவே விளங்கியுள்ளனர். மரக்காயருக்குத் தாம் உற்ருர், உறவினர் எனுமாறு, சேதுபதிகள் தம்மை 'மரக்காயர் கிளை' என உறவு வெளிப்பட்ட உரிமையுடன் கூறிக்கொண்டுள்ளனர். மரக்காயர்கள் மறக்குல அரசர்களின்

---

2 கலைக்களஞ்சியம்-தொகுதி V ப. 9

3 P. T. Srinivasa Ayyangar in the JOURNAL OF ORIENTAL RESEARCH Vol. III-p.24 quoted by Dr. S. Mohammad Husayn Nainar in his introduction to ''செய்தக்காதி நொண்டி நாடகம்'' ப. viii.

4 A. V. Subramania Aiyar, TAMIL STUDIES-p.113

5 கலைக்களஞ்சியம்-தொகுதி V ப.9

6 Dr. S. Muhammad Husayn Nainar in his Introduction to ''செய்தக் காதி நொண்டி நாடகம்''—ப. viii

மதிப்பிற்குரியவர்களாகத் திகழ்ந்தனர். இந்த நட்பு கிழவன் சேதுபதி காலத்தில் இருந்து வெளிப்படையாகத் தெரிகிறது.

சீதக்காதி மரக்காயர் கிழவன் சேதுபதியின் நெருங்கிய நண்பராக விளங்கினார். சேதுபதியின் ஆதரவில் சீதக்காதியின் வாணிபம் செழித்தது. அதேபோல சேதுபதிக்கு சீதக்காதி அவர் காரியம் யாவினும் கைகொடுத்தார். மரக்காயரைக் கலவாமல் சேதுபதி எதுவுமே செய்வதில்லை.[7]

தலைநகர் மாற்றமென்பது பெரும் பொருட்செலவு பிடிக்கக் கூடியதாகையால் ஆட்சியாளர் தயக்கம் காட்டக்கூடிய செயலாகும். கிழவன் சேதுபதி போகலூரில் இருந்து முகவைக்குத் தலைநகரை மாற்றுவதென்று முடிவு செய்துவிட்டார்: செயலாக்க முனைந்தபோது, சீதக்காதி அப்பெரும் பொறுப்பில் சேதுபதிக்குத் தோள் கொடுத்து உதவினார். புதிய தலைநகருக்கான கோட்டையைக் கட்டுவதற்கும், அரசவை மாளிகையாம் இராமலிங்க விலாசத்தினை எழுப்புவதற்கும், சீதக்காதி பணமும் தளவாடங்களும் வேலை ஆட்களும் தங்குதடையின்றித் தந்துதவினார்.[8]

'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்', எனும் பழமொழியை அம்மரக்கலச் செல்வர் மெய்ப்பித்தார்.

கிழவன் சேதுபதியைப் போலவே சீதக்காதியின் மற்றொரு நண்பர் அந்நாளில் கீழக்கரையில் இருந்து வந்த ஷேக் சதக்கதுல்லா வலி (SHAYKH SADAQATULLAH) இவர் சிறந்த புலமையாளர். சமயப் பயிற்சியில் மேம்பட்டவர். அவருக்கு முகலாயச் சக்கரவர்த்தி அவுரங்கசீப்பின் தொடர்பிருந்தது. அப்பெரியவர் மூலம் அவுரங்கசீப் சீதக்காதியைப் பற்றித் தெரிந்து கொண்டார். தெரிந்துகொண்டதும் முகலாயச் சக்கரவர்த்தி, வங்கத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியுடனான தமது விவகாரங்களைக் கவனிக்கத் தமது பிரதிநிதியாகச் சீதக்காதியை நியமித்தார். வங்கத்தின் தட்பவெப்ப நிலை ஒத்துக் கொள்ளாததாலும், சேதுபதியிடம் பணிபுரிய அவாவுற்றதாலும், சீதக்காதி அந்தப் பதவியைத் துறந்துவிட்டு வந்தார். சில ஆண்டுக் காலம் அவர் கிழவன் சேதுபதியின் பிரதம அமைச்சராகவோ பிரதம ஆலோசகராகவோ விளங்கியிருந்திருக்கிறார். ஒரு தூதுவர் அளவுக்கு அவர் செயல் புரிந்தார் என்றும் கூறுவர்.

---

7 கலைக் களஞ்சியம்-தொகுதி V ப.9

8 Rajaram Row, RAMNAD MANUAL pp. 38,39.228

சேதுபதியின் அன்பிற்குப் பாத்திரமானவர்களுக்கு ''தம்பி'' என்ற பட்டம் சேர்த்து வழங்கப்பட்டது. சீதக்காதிக்கும் கிழவன் சேதுபதிக்கும் இருந்து வந்த நட்பின் காரணமாக சீதக்காதியை ''விஜயரகுநாதத் தம்பி'' என்று அழைத்தனர்.[9]

சீதக்காதி தமிழின்பால் கொண்ட காதலையும், வரையாது வழங்கும் அவரது வள்ளன்மையையும் கண்ட புலவர் குழாம், மலரைச் சுற்றி மொய்க்கும் வண்டுக்கூட்டம் போல் அவரது மாளிகையில் முகாமிட்டனர். அவர்களுள் உமறுப்புலவர், படிக்காசுப்புலவர், கந்தசாமிப்புலவர் ஆகியோர் குறிப்பிடத் தக்கோர் ஆவர்.

சீதக்காதி தன் சொந்த சார்பிலோ, கிழவன் சேதுபதிக்காகவோ கிழக்கிந்தியக் கம்பெனியாருடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தார். அவர் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் சென்னை அலுவலகத்திற்கு கி.பி.1686, 1687, 1690 ஆகிய ஆண்டுகளில் எழுதிய கடிதங்கள் கிடைத்துள்ளன.[10] இந்தப் பின்னணியில் தமிழுக்கு ஒரு நகைச்சுவை நாடக நூல் கிடைக்கப் பெற்றுள்ளது. அதுதான் ''சீதக்காதிநொண்டி நாடகம்''.

1690ல் சீதக்காதியின் தம்பி மாமு நயினாப்பிள்ளை மரக்காயர் கிழவன் சேதுபதிக்காக தன் அண்ணனும் அமைச்சருமான சீதக்காதி சார்பில் சென்னையிலிருக்கும் கிழக்கிந்தியக்கம்பெனி அதிகாரியிடம் சேதுக் கடற்கரையில் அவர்களுடைய குடியேற்றம் அமைப்பது சம்பந்தமாகப் பேசுவதற்கு அல்லது முகலாயருடனோ மராத்தியருடனோவாணிபம் சம்பந்தமாகப் பேசுவதற்குச் சென்றபோது வழியில் செஞ்சியில் முகாமிட்டிருந்த வேளையில் அப்பரிவாரத்தினரிடம் குதிரை திருடிய ஒருவன் தான் நொண்டியாக்கப் பட்டதைச் சித்திரித்து இசைநயம் மிளிர சீதக்காதியைப் புகழ்ந்து பாடுவதாக அமைந்தஇந்தநொண்டி நாடகம் 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றப்பெற்ற அங்கதச்சுவை (Satire) ப்பாட்டிலக்கியமாகும்.[11] இதை

---

9 Dr. S. Muhamad Husayn Nainar in his introduction to ''செய்தக்காதி நொண்டி நாடகம்'' p. x

10 It is stated that he (Sidak-Kadi) had trade connections with the East India Company of London and that his letters to the Company of the years **1686,1687** and **1690** to their office at Madras are found.
—A V. Subramania Aiyar TAMIL STUDIES -p.114.

11 Dr. S Muhammad Husayn Nainar in his introduction to ''செய்தக்காதி நொண்டி நாடகம்'' ப. xviii

உமறுப் புலவர் செய்ததாகக் கூறப்படுவதுண்டு. நடை அவ்வாறு சொல்லும்படியாக இல்லை.

'செய்தக்காதிறு மரக்காயர் திருமண வாழ்த்து' எனுமொரு அம்மானை நூலை எட்டயபுரம் உமறுகத்தாப்புலவர் சீதக்காதியை வாழ்த்திப் பாடி இருக்கிறார். சீதக்காதிக்கு மணப்பெண் நிச்சயம் செய்வது, மணமகன் உலா வருவது, மணவறையின் எழிற்கோலம் முதலியன குறித்து அழகுற மொழியும் எளிய நடையில் அமைந்த நூல் இது.[12]

இவரது வேண்டுகோளுக்கிணங்க, இவரது பேராதரவின் பேரில் உமறுப்புலவர் (1665-1717) நபிகள் பெருமானாரின் சரிதையை ஐயாயிரம் கவிதைகளால் 'சீறாப்புராணம்' எனும் சீர்மிகு காவியமாக ஆக்கியளித்தார்.

பண்பாகப் பகர்சந்தம் பாடுவதில் வல்லவர் என்று பெயரெடுத்தவர் படிக்காசுப்புலவர். இவர் பிறந்தது முதுகுளத்தூர் என்றும், செங்கற்பட்டு மாவட்டத்து க்களந்தையென்றும், இரு விதமாகக் கூறப்படுகிறது. இவரே 'தொண்டை மண்டல சதகம்' பாடியவர்.[13]

இவர் சீதக்காதி புகழ் கேட்டு காயலில் அவர் இருந்தபோது அவரைக் காண வந்தார். அவரது வள்ளல் தன்மையை,

> *''காய்ந்து சிவந்தது சூரியகாந்தி; கலவியிலே*
> *தோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங்கண்;தொல்பலநூல்*
> *ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்சம்;அநுதினமும்*
> *ஈந்து சிவந்தது மால் சீதக் காதியிருகரமே''*

—என்று புகழ்ந்து பாடினார். ஒரு வள்ளலைப் பற்றிப் பாடுவதில் கஞ்சத்தனம் கூடாது என்று எண்ணியிருக்கிறார் படிக்காசுப் புலவர். இந்தப் பாடல், வரையாது வழங்கும் வள்ளல்களுக்கு எக்காலத்தும் பொருந்துமாறு அமைந்திருப்பதால்தானோ என்னவோ, இப்பாடலைக் 'கர்ணன்' திரைப்படத்தில் கவிஞர் கண்ணதாசன் சேர்த்துக் கொண்டார். கவிஞர் நெஞ்சம் கவிஞரே காண்பார்.

சீதக்காதியைப் புகழ்ந்தால் மட்டும் போதுமா? ஈயாத கஞ்ச

---

12 கலைக்களஞ்சியம்-தொகுதி Vப. 9.
13 சி. கு. நாராயணசாமி முதலியார், ''படிக்காசுப் புலவர் சரிதம்'' ப,5

ரைத் தாக்கி, இரப்போர்க்குஈயும் இவர் போன்ருேரைப் புகழ்ந் தாலே எடுப்பாக இருக்கும் என்று எண்ணியதால்,

*''ஈயாத புல்லர் இருந்தென்ன? போயென்ன? எட்டிமரம்*
*காயா திருந்தென்ன? காய்த்துப் பலனென்ன? கைவிரித் துப்*
*போயா சகம் என் றுரைப்போர்க்குச் செம்பொன்பிடிபிடி*
*ஓயாமல் ஈபவன் வேள் சீதக் காதி யொருவனுமே''*

—என்ற பாடல் பிறந்திருக்க வேண்டும்.

சேது நாட்டில் 1709ல் தொடங்கி 1713 வரை நீடித்த பஞ்சத் தில் அரிசி விலை 32 மடங்கு விற்றதாம்.[14] அதாவது ஒரு தட்டுப் பொன்னுக்கு ஒரு தட்டு நெல் விற்கும் நிலை இருந்த தாகவும், அந்தச் சமயத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து அரிசியை விலை கொடுத்து வாங்கிவரச்செய்து, மக்க ளுக்கு வழங்கினுராம் வள்ளல் சீதக்காதி. இதை, படிக்காசுப் புலவர்,

*''ஓர்தட்டி லேபொன்னும் ஓர்தட்டி லேநெல்லும் ஒக்கவிற் கும்*
*கார் தட் டியபஞ்சக் காலத்தி லேதங்கள் காரியப்பேர்*
*ஆர் தட்டி னுந்தட்டு வாராம லேஅன்ன தானத்துக்கு*
*மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே''*

என்று நெஞ்சார வாழ்த்தினுர்.

1715ல் அத்தகைய வள்ளல் மறைந்தார். புலவர்களை சோகப் புலம்பலுக்கு ஆளாக்கிவிட்டது அவர் மறைவு.

*''மறந்தாகிலும் அரைக் காசுங்கொ டாமடமாந்தர் மண் மேல்*
*இறந்தாவ தென்ன இருந்தாவ தென்ன இறந்து விண் போய்ச்*
*சிறந்தாளுங் காயல் துரைசீதக் காதி திரும்பி வந்து*
*பிறந்தால் ஒழியப் புலவர் தமக்குப் பிழைப்பில்லையே''*

என்ற படிக்காசுப்புலவரின் இந்தப் பாட்டைக் கேட்ட வள்ள லின் உயிரற்ற உடல் அசைந்து தன் சுட்டுவிரலை நீட்டி வைர மோதிரத்தைக் கழட்டிக் கொள்ள குறிப்புத் தந்ததாயும், அது குறித்தே ''செத்துங் கொடுத்தான் சீதக்காதி'' எனும் பழ மொழி வழங்கி வருகிறது என்பர்.[15]

14 A. V. Subramania Aiyar, TAMIL STUDIES p. 115
15 சி. கு. நாராயணசாமி முதலியார் எழுதிய 'படிக்காசுப்புலவர் சரிதம்'' ப. 78-79.

கீழக்கரையில் புகழ்பெற்ற ஜும்மா மசூதி உள்ளது. அதனுள் அமைந்துள்ளது வள்ளலின் கல்லறை.[16] கீழ்த்திசைப்பாணியில் கட்டப்பட்ட அழகிய மண்டபம் போல் தோற்றமளிக்கிறது. கல்லறை இருக்குமிடம்.[17]

16 RAMANATHAPURAM DISTRICT-ARCHAELOGICAL GUIDE. p. 81
17 RAMANATHAPURAM DISTRICT GAZETTEER. p. 900

இணைப்பு: 2

# வீரத்தளவாய் வெள்ளையன் சேர்வைகாரர்

வீரத்தளவாய் வெள்ளையன் சேர்வைகாரன்1736 முதல் 1763 வரை நான்கு சேதுபதிகளின் ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்தில் சக்திவாய்ந்த தலைவனாக விளங்கியவன் ஆவான். அந்த 27ஆண்டுக் கால சேதுநாட்டு வரலாறு தளவாய் வெள்ளையன் சேர்வையின் வெற்றிப் புகழின் வரலாருகவே காணப்படுகிறது.

சேதுபதிகளின் ஆட்சியில் தளவாய் ஆகப் பணியாற்றியவர்களில் இவன் பெயர் தனியிடம் வகிக்கிறது. மதுரை நாயக்க மன்னர்கள் ஆட்சிக்காலத்தில்தளபதியும் அமைச்சரும் சேர்ந்த ஒரு பதவி உருவாக்கப்பட்டது. அதன் பெயரே தளவாய் என்பதாகும்.

''நாட்டின் ஆட்சி முறையெல்லாம் சேர்வைகாரருக்கு உட்பட்டே இருந்தது. இவருடையவீரம், புகழ் தமிழ் நாடெங்கும் பரவின''-என்று வரலாற்ருசிரியர் குறிப்பிடுகின்றனர்.[1] சுருங்கச் சொன்னல், அரசர்களை அரியணையில் அமர்த்தவும் அதிலிருந்து இறக்கவும் வல்லவன் (King-Maker) என்று குறிப்பிடுமளவு பெயரெடுத்தான்.

1735இல் கட்டையத்தேவர்என்றமுத்துவிஜயரகுநாதசேதுபதி காலமானர். இவரிடம் பிரதானியாக இருந்தவர் வைரவன் சேர்வைகாரர். பாம்பன் போன்ற இடங்களில் சத்திரங்கட்டி பயணிகள் துயர் துடைத்தவர். கட்டயத் தேவருக்குப்பின் சிவகுமார முத்துவிஜய ரகுநாத சேதுபதி(1746-1748) இராமநாதபுரம் மன்னரானர். அதேபோல் வைரவன் சேர்வைகாரரை அடுத்து வீராதிவீரன் எனப்புகழ் பெற்றிருந்த வெள்ளையன் சேர்வை தளவாயாகவும் பிரதானியாகவும் பொறுப்பேற்ருன்.

மதுரை மீனுட்சி அம்மன் ஆலயத்தில் உள்ள கடவுட் படிமங்களை வெள்ளையன் போன்ற வீரத்தளபதி ஒருவன் இல்லாது போயிருப்பின் முகமதியத் தளபதிகள் என்ருே கொண்டு சென்றிருப்பார்கள்.

அவன் பொறுப்பேற்ற சிலஆண்டுகளிலேயே அவன் வாளுக்கு வேலை வந்தது. கி.பி. 1739-ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் கடைசியில் திண்டுக்கல்லை முகமதிய தளபதிகள் பிடித்துக் கொண்டார்கள். மதுரை நாயக்க அரசருக்கு உதவியாக வெள்ளையன் சேர்வை படை நடத்திச் சென்ருன். மதுரை மீனுட்சி ஆலயத்தில் உள்ள சிலைகளுக்கு ஆபத்து என்றுதெரிய வந்ததும் அவற்றை சேதுபதிக்கு உட்பட்ட மானமதுரைக்கு அப்புறப் படுத்தினன். அங்கே இரண்டுஆண்டுகள் மீனுட்சியும் சுந்தரேசுவரரும் இருந்து வந்தனர். அதன்பின் ஆபத்து முற்றிலும் அகன்றபின் மீண்டும் கடவுட் படிமங்களை மதுரைக்குக் கொண்டுபோகச் செய்தான் வெள்ளையன் சேர்வை.[2]

சைவத்துரை என்றழைக்கப்பட்ட சிவகுமார முத்துவிஜயரெகுநாத சேதுபதி 1748இல் பிள்ளையின்றிக் காலமானர். முந்திய

1 வித்துவான் அ. நாராயணசாமி, ''மருதுபாண்டியர் வரலாறு''-ப.29

2 PANDYAN CHRONICLE or Madurai Thala Varalaru-Prose Introduction to ''திருப்பணிமாலை'' Appendix''E'' in Prof. Sathyanatha Aiyar's A HISTORY OF THE NAYAKS OF MADURA -p 378

சேதுபதி கட்டயத்தேவரின் ஒன்றுவிட்ட சகோதரன் இராக்கத் தேவரை தளவாய் வெள்ளையன் சேர்வை சேதுபதியாக நியமனம் செய்தான்.[3] அந்த அளவு அந்தத் தளவாய்க்கு ஆட்சியில் செல்வாக்கு மிகுந்திருந்தது.

கிழவன் சேதுபதி போன்ற வீரமறவர் மறைந்து விட்டனர் என்ற துணிச்சலில், இராக்கத்தேவர் என்ற சேதுபதி (1748-49)காலத்தில் தஞ்சாவூர் அரசன் முகவைமீது படையெடுத்து வந்தான். மறவர்மண்ணில் வீரம்இன்னும் மடிந்துவிட வில்லை என்பதை மாற்றருக்கு உணர்த்தினுன் வெள்ளையன். தஞ்சைப் படையை முறியடித்து மறவர் சீமையின் வெற்றிக் கொடியை உயர்த்தினுன்.

அதுமட்டுமா? ''தஞ்சாவூர், மதுரை முதலிய மாவட்டங்களில் உள்ள பாளையக்காரர்களை யெல்லாம் இராமநாதபுரத்துக்கு அடங்கியவர்கள் என்று ஏகோபித்து ஒத்துக் கொள்ளும்படி செய்தான்'',[4] தளவாய் வெள்ளையன் சேர்வை.

இன்னும் கொஞ்சம் தொல்லையிருந்து வந்தது. எங்கே? நெல்லையில்தான். நெல்லை மாவட்டத்திலே இராமநாதபுரம் சமஸ்தானத்திற்கு உட்பட்ட பாளையக்காரர்கள் சிலர் கலகம் செய்தனர். நெப்போலியன் போலக் கிளம்பினுன்.நெல்லையை நோக்கி. யாரோ ஒரு பாளையக்காரரை அடக்குவதற்கு என்ற குறிக்கோளில் அல்ல. படியாத பல பாளையக்காரர்களை அடி பணியவைப்பதற்காகவே புறப்பட்டான். சுருங்கச் சொன்னல் சக்கரவர்த்திகள் திக்குவிசயம் செய்யக் கிளம்புவது போல இருந்தது, புயல்போல அவன்புறப்பட்டது. வெள்ளையன் சேர்வையின் வீரத்தின் முன்னே பல பாளையங்கள் வீழ்ந்தன. நெல்லையில் எல்லையற்ற வெற்றிகளை அறுவடைசெய்துகொண்டிருந்தான். இனி எட்டயபுரம் மட்டுமே பாக்கி.

''எட்டுக்கண் விட்டெரிகிறது'' என்பார்களே, அதுபோல வீரத் தளவாய் வெள்ளையனின் புகழ் எட்டுத்திசைக்கும் பரவியது. இது எங்கு போய் முடியப் போகிறதோ, ஒருவேளை தன்னை மீறும் அளவு போய்விடுமோ என்று சேதுபதி அஞ்சினுர்.

3 T. Rajaram Row, RAMNAD MANUAL-p.237

4 எட்டயபுரம் எஸ். குருஹதாசப்பிள்ளை''திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம்'' -ப, 321 (இந்த குருஹதாசப்பிள்ளை வீட்டில் வைத்துத்தான் 1806 நவப்பர் திங்கள் கடைசியில் விருதை சிவஞான யோகியால் மகாகவி பாரதியாருக்கு ''பாரதி'' எனும் பட்டம் வழங்கப்பட்டது...பார்க்க—சக்திதாசன் சுப்ரமணியன் எழுதிய ''பாரதிலீலை'')

விளைவு? உடனே திரும்பிவரும்படி தன் தளவாய்க்கு ஓலை அனுப்பினார். இது விருந்தைப் பரிமாறிவிட்டு, வாயைக் கட்டியது போலிருந்தது, தளவாய்க்கு. இராமநாதபுரம் சீமையின் பெரும்புகழைத்திரும்பக்கொண்டுவரப்பாடுபடும் தளவாய்க்கு சேதுபதியின் மனப்போக்கு எரிச்சலை உண்டுபண்ணியது.[5]

தளவாயின் ஆத்திரம் பகைப் பாளையக்காரர்களை விட்டு சேதுபதியின் மேலேயே திரும்பியது. தன் தளவாய் தன்னையே எதிர்த்து வருகிறார் என்றசெய்தி சேதுபதிக்கு எட்டியது. பாம்பன் நோக்கிப் பறந்தார். ஆனால் வழியிலேயே கைதுசெய்யப்பட்டார். விரைவில் அவர் பதவிநீக்கம் செய்யப்பட்டார். அவர் பதவிக்கு வந்ததில் உண்மையில் மக்களுக்கும் விருப்பம் இல்லாமல் தானிருந்தது.[6]

இராக்கத் தேவருக்கு முந்திய சேதுபதியின் அத்தை பேரன் செல்லத்தேவர். இவனை அடுத்த சேதுபதியாக்கினான், தளவாய் வெள்ளையன் சேர்வை. செல்லமுத்துவிஜயரகுநாத சேதுபதி (1749-62)எனும் பெயரில் பட்டத்திற்கு வந்த இவன் கிழவன் சேதுபதி குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பார் நெல்சன் [7]

இச்சேதுபதியிடம் வெள்ளையன் சேர்வை தளவாயாகப் பணியாற்றுங்காலத்தில்தான் ஆங்கிலேயரை எதிர்த்து விடுதலைப் போர் நடத்திய மருதுபாண்டியனின் தந்தையார்மொக்கப்பழநியப்பன் சேர்வையும் ஒரு படைத்தலைவராகச் சேது நாட்டுப் படையில் பணியாற்றிவந்தார்.[8] பெரிய மருதுவின் இயற்பெயரும் வெள்ளையன் என்பதுதான். மருதுவின் தந்தையாருக்கு தளவாய் வெள்ளையன் சேர்வை இலட்சிய வீரனாகத்தோன்றியிருக்க வேண்டும். அதனாலேயே 1748-இல்[9] தனக்கு முதல் ஆண்மகவு பிறந்தபோது அதற்கு வெள்ளை மருது எனும் பெயரினைவைத்தார் போலும்!

செல்லமுத்து விஜயரகுநாதசேதுபதியின் ஆட்சி பதிமூன்றரை ஆண்டுகள் ஒன்பது நாட்கள் நீடித்தது. இவன் ஆட்சியில் தஞ்சை மறுபடியும் முகவை மீது படையெடுத்து வந்தது.

---

5 வித்துவான் அ. நாராயணசாமி, ''மருதுபாண்டியர் வரலாறு'' ப. 29
6 T. Rajaram Row, RAMNAD MANUAL-p 237
7 Ibid-p. 237
8 வித்துவான் அ. நாராயணசாமி, ''மருதுபாண்டியர் வரலாறு'' ப. 22.
9 RAMANATHAPURAM DISTRICT GAZETTEER-p-100

வெள்ளையன் இருக்கும்போது முகவையை வெல்லவும் முடியுமோ? தஞ்சை தோல்வியைத் தஞ்சம் என்றடைந்தது.[10]

மைசூர் மன்னருக்காக மதுரையைப் பிடித்துக்கொண்டிருந்த காப்டன் கோப் என்ற வெள்ளைத்தளபதியை விரட்டி மதுரையை மீட்கச் சேதுநாட்டின் உதவி கோரப்பட்டது. 1752-இல் தளவாய் வெள்ளையன் சேர்வையும் சிவகங்கை சமீனின் அமைச்சர் தாண்டவராயப்பிள்ளையும் தங்கள் நாட்டுப் படைகளுடன் மதுரையை ஆறுமாதங்கள் முற்றுகையிட்டனர். இந்தப் போரில் வெள்ளையன் சேர்வை இறந்துபோனதாக மதுரைத் தல வரலாறு தெரிவிக்கிறது.[11] ஆனால் வரலாற்று சிரியர்கள் அவ்வாறு குறிப்பிடவில்லை.

முற்றுகை வெற்றியில் முடிந்தது, வெள்ளையன் சேர்வைக் கும் தாண்டவராயருக்கும். அவர்கள் மதுரையை மீட்டி நாயக்க அரசி மீனாட்சியின் சுவீகார மகனை மன்னனாக்கினர். முகமது அலியின் ஆட்களால் 16 மாதங்களுக்குள் அந்நாயக்க மன்னன் பதவியினின்றும் நீக்கப்பட்டான். தளவாய் வெள்ளை யன் சேர்வை மீண்டும் மதுரை மீது தாக்குதலைத் தொடுத் தான். முகமதிய தளபதிகள் வீழ்ந்தனர். இராமநாதபுரம் அரசுக்குக் கப்பம் கட்டவேண்டுமென்ற நிபந்தனையுடன் மதுரை அவர்களிடம் விடப்பட்டது.

தளவாய் வெள்ளையன் சேர்வை யோசனைப்படி சேதுபதி, முகமது அலிக்கு எதிராக மைசூர் அரசர்-சந்தாசாகிப் ஆகி யோர் அணியில் நின்றார். ஆனால் 1755-இல் இந்த அணியிலி ருந்து விலகினார்.[12]

செல்லமுத்து விஜய ரகுநாதசேதுபதி 1762-இல் காலமானார். அவரது சகோதரியின் மைந்தன் முத்துராமலிங்கத்திற்கு முடி சூட்டுவதென்றும் முத்துராமலிங்கம் குழந்தையாய் இருந்த தால்தாயார் முத்திருவை நாச்சியார் ஆட்சிப் பொறுப்பைக் கவனித்துக்கொள்வதென்றும் தளவாய் முடிவு செய்தான்.

குழந்தை முத்துராமலிங்கத்திற்கு முடிசூட்டியவுடன் நான்கு சேதுபதிகள் காலத்தில் தளவாயாக இருந்த வெள்ளையன் சேர்வைகாரன் 1763-இல் நிம்மதியாகக் கண்மூடினான்.[13]

10 T. Rajaram Row RAMNAD MANUAL P.238
11 Prof. R. Sathyanatha Aiyar. A HISTORY OF THE NAYAKS OF MADURA-App.E P.381
12 T.Rajaram Row, RAMNAD MANUAL P.238
13 வித்துவான் அ. நாராயணசாமி, ''மருதுபாண்டியர் வரலாறு''-ப. 30-31.

வெள்ளையன் சேர்வை திருப்புல்லாணியில் பயணிகளுக்காக ஒரு சத்திரம் கட்டினன். அது வெள்ளையன் சேர்வை சத்திரம் என்றே அழைக்கப்பட்டு வந்தது இச்சத்திரம் நன்கு நடை பெற கட்டையத்தேவர் என்ற முத்து விஜயரகுநாத சேதுபதி காஞ்சிரங்குளம் என்ற கிராமத்தினை அளித்துத் தன் தளவாயின் செயலை ஆதரித்தான். தளவாய் ஆலோசனைக்கிணங்க, செல்லமுத்து விஜயரகுநாத சேதுபதி, முகவை-இலட்சுமிபுரத்தில் ஒரு சத்திரம் கட்டினன். அது 'செல்ல பூபாள சத்திரம்' என வழங்கப்பட்டது.[14]

தளவாய் வெள்ளையன் சேர்வைக்கு முகவையில் சிலை இருந்ததாகத் தெரிகிறது.[15]

14 T. Rajaram Row RAMNAD MANUAL P. 110, 238
15 பி. முத்துத்தேவர், ''மூவேந்தர் குலத்தேவமார் சமூக வரலாறு''-ப. 68

இணைப்பு: 3

## முதலமைச்சர்
## முத்து இருளப்பப் பிள்ளை

●

பாண்டியன் உக்கிரப் பெருவழுதி நாற்பத்தெண்ணுயிரம் வேளாளர் குடிகளைப் பாண்டிய நாட்டில் குடியேற்றியதாக ஒரு பழம்பாடல் செய்தி உண்டு. தொண்டை நாட்டில் சோழன் கரிகாலன் வேளாளரைத் துளுவ நாட்டிலிருந்து குடியேற்றினுன் என்று செவி வழிச்செய்தி நிலவுவதாகவும் செங்கற்பட்டு மாவட்டக்குறிப்பில் காணப்படுகிறது. ஆக, பாண்டிய நாட்டில் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும் தொண்டை நாட்டில் சோழன் கரிகாலனும் வேளாளரைப் பிற இடங்களிலிருந்து குடியேற்றினர்.[1]

---

1 இரா. தேவ. ஆசிர்வாதம், ''மூவேந்தர் யார்'', ப.75-76

இதேபோல, கிழவன் சேதுபதியை, அடுத்துவந்த ''முறையொழுகி நிற்குமெங்கள் முத்து ரகுநாதன்'', எனவும், ''சிலை வளைக்கும் போர் வீரசிங்கம்''[2] எனவும் சொக்கநாதக் கவிராயரால் பாடப்பட்டவரும், ''தளசிங்கமாலை'' இயற்றிய அழகிய சிற்றம்பலக்கவிராயருக்கு மிதிலைப்பட்டியை வழங்கியவருமான திருவுடையாத்தேவர் என்ற விஜயரகுநாத சேதுபதி[3] (1710-1725) கிராமக் கணக்குகளில் வல்ல வேளாளரை மதுரையிலிருந்து கொண்டு வந்து முகவையில் குடியேறச் செய்தான்.[4] கணக்கு எழுதுபவர்களை கணக்கப்பிள்ளை[5] என்று அழைக்கும் பழக்கம் இதனால் ஏற்பட்டது போலும்!

கிழவன் சேதுபதி காலத்தில் மதுரையிலிருந்து வந்த குமார பிள்ளை அவருக்கு எதிராக மாறிவிட்டார். ஆனால் கட்டயத் தேவர்என்ற குமாரமுத்து விஜயரகுநாத சேதுபதி (1729-35) யிடம் இராமலிங்கம் பிள்ளையும், முத்துராமலிங்கத் தேவர்—சேதுபதி(1762 —95)காலத்தில் தாமோதரம்பிள்ளை, பிச்சைப் பிள்ளை, வேலாயுதம்பிள்ளை, முத்தையாபிள்ளை, சங்கரம் பிள்ளை, முத்திருளப்பப் பிள்ளை, கட்ட முத்துக் குமாரபிள்ளை முதலியவர்களும்இராணிமங்களேசுவரி நாச்சியார் (1803-07) காலத்தில் தியாகராஜ பிள்ளையும் பிரதானிகளாக இராமநாதபுரம் சமஸ்தானத்தில் தொண்டாற்றிய வேளாண்குடிப் பெருமக்களாவர்.[6] பிரதானிஎன்பது பிற்காலத்தில் ஏற்பட்ட திவான்போன்ற பதவியாகும்; அரசருக்கு அடுத்தபடியாக முதல் அமைச்சருக்கு உரிய அதிகாரங்கள் இருந்தன.

இவர்களுள் முத்திருளப்பப்பிள்ளை இராமநாதபுரம் சீமையின் வரலாற்றில்குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒரு சிறந்த நிர்வாகியாவார். இவர்முத்துராமலிங்க சேதுபதி(1763-1772 & 1782-1795)யிடம் முதலமைச்சராக இருந்தார். இவருடன் கூட கிருஷ்ணய்யங்கார் சின்னப் பிரதானியாக இருந்திருப்பதால் பெரிய பிரதானியான இவரை 'முதலமைச்சர் முத்திருளப்பப் பிள்ளை', என்று சொல்வார்கள். இவரது தந்தையார் பெயர் சுந்தரபாண்டியம் பிள்ளை [7] கடலாடிக்கருகில் உள்ள கருங்குளம் இவர் பிறந்த ஊராகும்.[8]

2 இரா.நிர்மலா தேவி பதிப்பித்த சொக்கநாதக்கவிராயரின் 'பண விடு தூது'' —கண்ணிகள் 301, 328
3 இரா. இராகவையங்கார், ''சேதுநாடுந் தமிழும்''—ப 16
4 T. Rajaram Row, THE RAMNAD MANUAL—pp 231. 232, 236.
5 ''கால்தூக்கிக் கணக்கப்பிள்ளைக்கு மாசம் பத்து ரூபாய்—பழமொழி —பார்க்க; கி. ராஜநாராயணன் வட்டார வழக்குச் சொல்லகராதி'' ப.81
6 T. Rajaram Row, THE RAMNAD MANUAL-pp. 269 271
7 Ibid-p167
8 RAMANATHAPURAM DISTRICT GAZETTEER-P 888

சேது சீமையின் நிலவருவாய்த் துறையிலும், நிதித்துறையிலும் பல சீர்திருத்தங்களைச் செய்தார் இந்த முதலமைச்சர்.

திருவுடையாத் தேவர் என்ற விஜயரகுநாத சேதுபதி காலத்தில் இருந்த நாட்டு அமைப்புமுறையே கிழவன் சேதுபதி காலத்திலும் இருந்ததாகக் கொள்ளலாம். ஏனெனில் திருவுடையாத் தேவரே கிழவனை அடுத்து வந்தவர். அந்தக் கால கட்டத்தில் நாடு எட்டு நிலவருவாய்க் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது; இராணுவ ரீதியில் பாளையங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பாளையக்காரர்கள் வரி தரவேண்டியதில்லை. போர் மூளும்போது படை உதவி அளித்தால் போதும்[9].

முத்திருளப்பப்பிள்ளை இவ்வமைப்பைச் செம்மைப்படுத்தினர்; 96 மாகாணங்கள் நில உட்பிரிவுகளாக அமையும்படி சமஸ்தானத்தைப் பிரித்தார். ஒவ்வொன்றுக்கும் ஒரு மணியக்காரர் பொறுப்பாக்கப்பட்டார். மணியக்காரர் கிராம முன்சீபுகளிடமிருந்து வசூலான வரியை வாங்கி அரசுக்குச் சேர்க்க வேண்டும். அவருக்கு உதவியாக தண்டல்காரர் அல்லது காவல்காரர் எனும் கீழ்நிலை அலுவலர் உண்டு. 96 மாகாணங்களும் 17 தாலுகாக்களுககுள் அடங்கும். ஒவ்வொரு தாலுகாவும் ஒரு மேற்பார்வையாளர் மூலம் நிர்வகிக்கப்பட்டது[10].

கிராமாதிகாரிகளின் ஊழியம் (Service) ஊதியம் (Salary) குறித்துப் பல சீர்திருத்தங்கள் செய்தார்.[11] நாட்டுக்கணக்கு, நாட்டு அம்பலம் முதலிய கிராமாதிகாரிகளின் பதவிகள் இவரால் ஒழிக்கப்பட்டன.[12] 1792-இல் நிலங்களை அளக்கச் செய்து, தரம் பிரிக்கச் செய்தார்.[13] அதன் அடிப்படையில் நிலங்களுக்கு வரியும் மேல்வரியும் விதிக்கப்பட்டன.[14] அதற்கு முன்பு நிலவரி விளைபொருளாகவே வசூலிக்கப்பட்டது. முத்திருளப்பப் பிள்ளை சில மாறுதல்களைச் செய்தார். வாரத்திட்டமும் தீர்வைத்திட்டமும் ஏற்படுத்தினர். வான்பயிர்களுக்கு விளைவுக்குத் தக்கவாறு பணமாக வரிவிதிக்கச் செய்தார். குளம்

9 T. Rajaram Row, RAMNAD MANUAL, p. 232
10 Ibid-p. 336
11 Ibid-p. 306
12 Ibid-p. 120
13 RAMANATHAPURAM DISTRICT GAZETTEER -p. 889
14 Olugu Olais of Remnad Samasthanam'' quoted by Dr. S Kadhirvel in ''A HISTORY OF THE MARAVAS'' p. 54

கோர்வை நிலங்களுக்குச் சில இடங்களில் விளைபொருளாக வும் சில இடங்களில் பணமாகவும் வரி வசூலிக்கப்பட்டது. நஞ்சைகளுக்கு வரி விதிக்க 11 விதமான நிலவரித் திட்ட முறைகளைக் கையாண்டுள்ளார்.[15] சமஸ்தானம் முழுமையு மான நிலங்களின் வரி விவகாரங்களைத் தெரிவிக்கும் ''ஒழுகு'' தயாரிக்கச் செய்தார்.[16]

சங்கநிதி, பதுமநிதி போல தர்ம மகமை நிதி, ஜாரி மகமை நிதி என்று இரு நிதியங்களை இவர் ஏற்படுத்தினர். நல்ல பல அறப்பணிகள் நாட்டில் நடந்தேற இவை உதவின. சமஸ்தா னத்து அயன் கிராமத்து நெல் வருவாயில் ஒரு குறிப்பிட்ட அளவைக் கட்டாயமாகத் தர்ம மகமை நிதிக்கு ஒதுக்கும்படி கட்டளையிட்டார். இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில், வேத பாடசாலை பிற பள்ளிகள்-இவற்றுக்கும், ஏழை, முடமானோர், பார்வையிழந்தோர், நோயுற்று நலிந்தோர், அனாதைகள், ஹக்கீம் எனப்பட்டவர் உள்ளிட்ட நாட்டு வைத்தியர்கள் ஆகியவர்களுக்கும் இந்நிதி உதவிற்று. இதுபோலவே நில வருவாயிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு, ஜாரி மகமை நிதிக்கு ஒதுக்கப்பட்டது. அதிலிருந்து கோவில்கள், சத்திரங் கள், மடங்கள் உதவிபெற்றன. அதிலிருந்து அன்னதானத் திற்கும், தண்ணீர்ப் பந்தலுக்கும் புலவர்களுக்கும் நெல் வழங்கப்பட்டது.சர்க்கரைப் புலவர், வயிரவநாதக் கவிராயர், மாசிலாமணிப்புலவர், கமுதிகுமாருப்புலவர் ஆகிய புலவர்கள் இந்நிதியிலிருந்து உதவிபெற்றனர்.[17]

பெரியாறு அணைத்திட்டத்திற்குவித்திட்டவர் ஒரு தமிழர் அவர் வேறு யாருமல்ல—முதலமைச்சர் முத்திருளப்பப்பிள்ளையே, அந்தத் திறமைமிக்க தமிழர்,[18] அந்த நாளில் அவருக்கு ஆங்கிலேயரிடம் இருந்தசெல்வாக்கின் காரணமாக ஆங்கிலேய ஆட்சியாளரின் பரிசீலனைக்காக அத்திட்டம் அளிக்கப்பட்டது. 1789இல் அவர் கொடுத்த அத்திட்டம் போதிய நிதி வசதியில் லாததால் அப்போது கைவிடப்பட்டது.[19]எனினும் 1895-இல் ஒரு நூற்றுண்டு கடந்து அவரது கனவு நனவாயிற்று.

---

15 T.Rajaram Row ''RAMNAD MANUAL'' pp.288-289
16 இரா. இராகவையங்கார், ''சேதுபதிகள்'' (''செந்தமிழ்''— தொகுதி 2—சோபகிருது—தைஇதழ்)
17 R.Rajaram Row, RAMNAD MANUAL p.120-124
18 ''He (Muthirulappa Pillai) is credited with the conception of the Periyar Irrigation Project which has brought the arid areas of South Ramnad under wet cultivation''*-L.C.Richard COL. MARTINZ OF RAMANATHAPURAM'' (THE HINDU deted 15-3-1964)
19 RAMANATHAPURAM DISTRICT GAZETTEER—p.889

கந்தபுராணக்கீர்த்தனை, அழகர் குறவஞ்சி, திருக்கச்சூர் நொண்டி நாடகம் இவற்றின் ஆசிரியரும், கவி குஞ்சரபாரதியின் குருவுமான மதுரகவி இசைப்பதங்கள் பாடுவதில் புகழ் பெற்றவர். மருதுபாண்டியனின் அவைக்களப்புலவரான இம் மதுரகவி முதலமைச்சர் முத்திருளப்பப் பிள்ளையை அரிய பெரிய இசைப் பதங்களால் புகழ்ந்து பாடியுள்ளார்.[20]

முதுகுளத்தூர் அட்டாவதானி ஆதிசரவணக் கவிராயர் முத்திருளப்பப்பிள்ளை மீது காதற் பிரபந்தமொன்று பாடினர்.[21] அதனை முத்திருளப்பருக்கு,

''சேருடு குங்குமம் கொங்கையார் மடலெழுது
 திவ்யரம ணீய மோகன்
சேதுபதிவாசற் ப்ரதானிமுத் திருளப்ப
 சிங்கவே றெதிர்ந்து காண்க
சித்தபரி பூரண கடாட்சவீட் சணகுண
 த்யாகபர ணீயா கையாற்
செந்தமிழ்க் காதற்ப்ர பந்தமொன் றுன்மீது
 செய்துவந் தனம கிழ்ந்தே''[22]

என்று முடங்கல் மூலம் அக்கவிராயர் தெரிவித்தார்.

ஒருமுறை புலவரொருவர் பொருள்வேண்டி இவருக்கு ''சீட்டுக்கவி'' ஒன்று எழுதியனுப்பினர். பதில் இல்லை. மறுபடி இப்பாடலை எழுதி அனுப்பினர்:-

''உறுக்குமதி வேந்தருக்கும், கள்வருக்கும்
 நீதிதப்பி ஒளிக்கின் றோர்க்கும்
கிறுக்குவரச் செய்யுந் துரையே, பாவாணர்
 ஓலையினும் கிறுக் குண்டாமோ?
பொறுக்கும் அர சுரிமை முத்து ராமலிங்க
 சேதுபதி பூமி எல்லாம்
நிறுக்குமதி மந்திரி-முத் திருளப்பா
 அருளப்பா நிருபந் தானே'',[23]

முத்திருளப்பர் நல்ல புலமை பெற்றவராயிருந்ததால் புலவர்கள் இப்படியெல்லாம் அவரிடம் தங்கள் திறமையைக் காட்டினர்.

20 இரா. இராகவையங்கார், ''சேது நாடுந் தமிழும்''—ப-?1
21 Ibid-p.25. Also Vide''RAMANATHAPURAM DISTRICT GAZETTEER'' p 107
22 மு. இராகவையங்கார் திரப்டிய ''பெருந்தொகை'' ப.419
23 ——ஷை...... ——ஷை—— ப.299

ஒருமுறை முதலமைச்சரிடம் சில ஏழைப் பெற்றோர்கள் வந்து தங்கள் பெண்களுக்குத் திருமணம் செய்ய வசதி இல்லை என்று சொல்லி வருந்தினர். வருத்தத்தில் தானும் பங்கு கொள்வதாகச்சொல்லி விட்டுப்போயிருக்கலாம். ஆனால் செயல்திறம் மிக்க அமைச்சர் அல்லவா? அரசரிடம் சொல்லி, அரசாங்கச்செலவில் ஏழைப்பெண்களுக்குத் திருமணம் செய்ய ஏற்பாடு செய்தார்.

சேதுநாட்டுப் பிரதானி மன்மதன் நாட்டுக்கு மந்திரியானார். புலவர் கற்பனை அந்த முறையில்தான் அமைந்திருந்தது.

சேதுபதிக்குப் பகை மன்னரே இல்லையாம். அவரது மந்திரியின் செய்கையினால். ஒரே ஒருவன்தான் சமருக்கென்று வில்லை எடுத்துக்கொண்டு திரிகிறானாம். அவன் வேறுயாருமல்ல, மன்மதனே எனும் பொருள் படுமாறு

''அமரிக்கையாளன் முத்து ராமலிங்க
சேதுபதி அவனிக் கெல்லாம்
சுமுகப்ர தாபன்-எங்கள் முத்திருளப்
பேந்த்ரமந்திரி துலங்கு நாளில்
சமருக்கென் றெதிர்மன்னர் தரையில்இலை
மதன் ஒருவன் தவிர''[24]

என்று புலவர் ஒருவர் பாடினார். புலவர் மேலும் அங்கலாய்க்கிறார்:- ஏழைப்பெண்கள் இல்வாழ்க்கை பெற்றிட முத்திருளப்பர் இவ்வளவெல்லாம் செய்தும் என்ன பயன்? எல்லாக் கன்னிப்பெண்களுக்கும் அது கிட்டியதா? இன்னும் ஒருத்திக்கு மட்டும் திருமணம் ஆனபாடில்லை; அவள் யாராம்?... யாராம்?? இதோ புலவரே புதிரை விடுவிக்கிறார்.

''அமரிக்கை யாளன்முத்து ராமலிங்க
சேதுபதி அவனிக் கெல்லாம்
சுமுகப்ர தாபன்எங்கள் முத்திருளப்
பேந்த்ரமந்த்ரி துலங்கும் நாளில்
சமருக்கென் றெதிர்மன்னர் தரையில்இலை,
மதன் ஒருவன் தவிர மின்னார்
குமரிக்குள் கன்யாகு மரியல்லால்
மற்றிலைப் பெண் குமரிதானே,[25]

ஆம்! அவள்தான் நீலத்திரைக்கடல் ஓரத்திலே நின்றிருக்கும் ஒருத்தி.

24 மு. இராகவையங்கார் திரட்டிய பெருந்தொகை ப. 299
25 ஷை ஷை

முத்திருளப்பர் நாட்டில் போக்குவரத்தை எளிதாக்க சாலைகள் அமைத்தார். காடுகளை வெட்டச்செய்து அவற்றின் ஊடாகவும் சாலைகள் அமைத்திடச்செய்தார். பிரதான சாலைகளில் பயணிகள் தங்குவதற்கென சத்திரங்கள் கட்டச்செய்தார். பாழடைய இருந்த கோவில்களுக்கெல்லாம் பெரும் பொருட்செலவு செய்து திருப்பணி செய்தார். இராமேசுவரம் கோயிலில் உள்ள அற்புதமான சொக்கட்டான்மண்டபம் இந்த அமைச்சரால் நிறைவு செய்யப்பட்டது.[26]

1740இல் முத்துக்குமார விஜயரகுநாதசேதுபதியால் தொடங்கப்பட்ட இராமேஸ்வரம் கோயிலின் மூன்ருவது பிரகாரத் திருப்பணி முத்திருளப்பர் முயற்சியால் 1768-69இல் முற்றுப் பெற்றது[27] அந்தப்பிரகாரத்தின் தூண்கள் மலைகள் என்றும், அந்தத் திருப்பணியைச் செய்வதற்கென்றே பிறந்தவர் முத்திருளப்பர் என்றும் புலவர்கள் பாடிப்பரவினர்:-

*''பருப்பதங்கள் ஒவ்வொருதுண்; பாவுக்கல்*
*வளையாத பார மேரு;*
*கரிப்படங்காப் போதிகை நீ செய்தபணிப்*
*பெருமைஎன்ன சொல்வேன் ஐபா!*
*தருப்பொலியும் கரதலமுத் திருளப்ப*
*சாமி! நின்றன் தாய்பால் உன்னைக்*
*கருப்பணிநின் திருப்பணிக்கென் றுருப்பணிஞன்*
*மருப்பொலியும் கமலத்தோனே!''*[28]

என்றவாறு. அமைச்சரின் பணியைப்போற்றும் வண்ணம் மேற்குறிப்பிட்ட பிரகாரத்தின் மேற்குவாசலில் அவரது திருவுருவம் சிலைவடிவில் அமைக்கப்பட்டுள்ளது.[29]

1791ல் மதுரையில் மக்லாயிட் என்பவன் மாவட்ட ஆட்சியாளனுக இருந்த காலம். இராமநாதபுரம் சமஸ்தானம் ஒரு ஒப்பந்தப்படி வரி வசூலித்துக்கொள்ள ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டது. இராமநாதபுரம் ஆங்கிலேயர் ஆதிக்கத்தினை எதிர்க்கும் கலகப் பகுதி எனக் கருதப்பட்டதால் கர்னல் மாட்டின்ஸ்

26 T.Rajaram Row, RAMNAD MANUAL p.243
27 Ibid-p.167
28 மு. இராகவையங்கார் திரட்டிய ''பெருந்தொகை'' ப-299 சகி.வா.ஜகந்நாதன ''அமைச்சர் முத்திருளப்பர்'' (முந்நீர் விழா ப.94)
29 T. Rajaram Row, RMANAD MANUAL-p167

என்ற தளபதி ஆங்கிலேயரின் பிரதிநிதியாக ஒரு படையுடன் அனுப்பப்பட்டான். முகவையில் தற்போது ''சங்கரவிலாசம்'' என வழங்கும் மாளிகையில் தங்கினன். இவன் முகவையில் கிறித்தவர்களுக்கு மாதாகோவில்கள் கட்ட உதவினன். இந்து சமயக் கோவில்களை இடிக்கச் செய்தான். இராமலிங்கவிலாசம் எனும் சேதுபதியின் அரசவை மாளிகையில் மார்ட்டின்ஸ் உருவம் ஓவியமாகத் தீட்டப்பெற்றுள்ளது. 1810-இல் இவ்வோவியம் வரையப்பட்டிருக்கலாம்.

இதில் மார்ட்டின்ஸ் இராணுவ உடையில் அமர்ந்திருக்கிருன். பருமனுகவே தோன்றுகிருன். இருபக்கமும் இரண்டு உதவி இராணுவ அதிகாரிகள் அமர்ந்துள்ளார்கள். கர்னலின் கனிந்த பார்வை கண்களில் தெரிகிறது.[30] அவர்களுக்கு எதிரில் சேதுபதி பட்டத்தரசியுடன் ஆசனத்தில் அமர்ந்திருக்கிருர். கர்னலுடன் நெருங்கிப் பழகக் கூடியவர் என்று சொல்லப்பட்ட முத்திருளப்பப் பிள்ளை சேதுபதிக்குப் பின்புறம் நிற்கிருர். ஆங்கிலேயரிடம் முத்திருளப்பப்பிள்ளைக்கு இருந்த செல்வாக்கு வளரவளர அவர் மமதையாளராக மாறிவிட்டதாகவும், முடிவில் அதனுல் அவர் பதவிநீக்கம் செய்யப்பட்டு, அவருக்குப் பதிலாக முத்துக்குமாருபிள்ளை நியமிக்கப்பட்டதாகவும் சமஸ்தான வரலாறு தெரிவிக்கிறது.

எனவே, முகவையில் இருந்து முத்திருளப்பர் மதுரை போய்ச் சேர்ந்தார். ஆங்கிலேயரிடம் அவருக்கிருந்த செல்வாக்கின் காரணமாக வரி ஆளுநர் (Renter) எனும் பதவி அளிக்கப் பெற்றது. இராமநாதபுரம் சமஸ்தானத்து வரிக் கணக்குகளைச் சரிபார்த்து, அதில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்து வைக்க முகவைக்கு அனுப்பப்பட்டார்.[31]

விலக்கப்பட்ட முதலமைச்சர், விலக்கிய சமஸ்தானத்தின் கணக்குகளைச் சரிபார்க்கும் மேலதிகாரியாக அதே சமஸ்தானத்திற்கு அனுப்பப்பட்டது விந்தையல்லவா?

இன்றைய பெரியாறு அணைக்கு வித்திட்டவர் என்ற முறையிலும், பல அறப் பணிகள் செய்தவர் என்ற முறையிலும் இவர் நினைவு என்றென்றும் நம் நெஞ்சில் நிற்கும்.

30 L.C.Richard, "COL MARTINZ OF RAMANATHAPURAM" in THE HINDU dated 15-3-1964.

31 T.Rajaram Row, RAMNAD MANUAL p.244.

இணைப்பு: 4

## சேதுபதிகளின் ஆட்சியாண்டுகள்

நான்கு நூற்றாண்டுகள் காலத்திற்குள் வாழ்ந்திருந்த அறுதியிட்டுக் கூற முடியவில்லை, வட்டார வரலாறு ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கும்வரை ஆண்ட சேதுபதிகளின் கலத்திலுள்ள ஆட்சியாண்டுகளே இந்நூலில் எடுத்தாளப்

| சேதுபதிகளின் பெயர் | பேராசிரியர் S. திருவேங்கடாச்சாரி எழுதிய 'THE SETUPATIS OF RAMNAD' மற்றும் தொல்பொருளாய்வுத் துறையின் துணைமடல் ''இராமலிங்க விலாசம்'' இவற்றுள் கண்டுள்ளபடி | ரா. இராகவையங்காரின் ''செந்தமிழ்'' இதழ்க் கட்டுரையிலும் ராபர்ட் சூவெல் எழுதிய ''A SKETCH OF THE DYNASTIES OF SOUTHERN INDIA'' நூலிலும் கண்டுள்ளபடி |
|---|---|---|
| | 1 | 2 |
| 1 சடைக்கத்தேவர் உடையன் சேதுபதி | கி.பி.1604-21 | 1604-21 |
| 2 கூத்தன் சேதுபதி | 1621-35 | 1621 35 |
| 3 இரண்டாவது சடைக்கன் என்ற தளவாய் சேதுபதி | 1635-46 | 1635-45 |
| 4 ரகுநாத சேதுபதி என்ற திருமலை சேதுபதி | 1647-72 | 1645-70 |
| 5 இராஜசூர்ய சேதுபதி | 1672-... | 1670-... |
| 6 அதனரகுநாத சேதுபதி | 1672-73 | ... ... |
| 7 இரண்டாவது ரகுநாதத் தேவர் என்ற கிழவன் சேதுபதி | 1674-10 | 1673-08 |
| 8 திருவுடையாத்தேவர் என்ற விஜய ரகுநாத சேதுபதி | 1710-25 | 1709-23 |
| 9 தண்டர்த்தேவர் சுந்தரேஸ்வர ரகுநாத சேதுபதி | 1726-29 | 1723-24 |
| 10 பவானிசங்கரன் | — — | 1724-28 |
| 11 கட்டயத்தேவர் என்ற முத்து விஜய ரகுநாத சேதுபதி | 1729-35 | 1728-34 |
| 12 சிவகுமார முத்து விஜயத் தேவர் என்ற முத்துக்குமாரரகுநாதசேதுபதி | 1735-48 | 1734-47 |
| 13 இராக்க தேவர் | 1748-49 | 1747-48 |
| 14 செல்லத் தேவர் என்ற செல்ல முத்து விஜய ரகுநாத சேதுபதி | 1749-62 | 1748-60 |
| 15 சேதுபதி முத்துராமலிங்கத் தேவர் | 1762-95 | 1760-72<br>1780-94 |

—கால பேத அட்டவணை

சேதுபதிகளின் ஆட்சியாண்டுகளைக் கூட நமது வரலாறுகளில் வளர்ச்சியுருத காரணத்தினுல். ஆராய்ச்சி நோக்கில் ஆட்சியாண்டுகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. (முதல் பட்டுள்ளன.

| இராமநாதபுரம் சமஸ்தான திவான் T. ராஜாராமராவ் எழுதிய RAMNAD MANUAL-இல் கண்டுள்ளபடி. | டாக்டர் ந. சுப்ரமணியன் எழுதியுள்ள HISTORY OF TAM.LNAD-இல் கண்டுள்ளபடி | கே. ஆர். வெங்கட்ராம அய்யர் எழுதிய ''A MANUAL OF PUDUKKOTTAI STATE''இல் கண்டுள்ளபடி. | பாண்டித்துரைத் தேவர் பொருளுதவியால் உருவான ''அபிதான சிந்தாமணி''யில் கண்டுள்ளபடி. |
|---|---|---|---|
| 3 | 4 | 5 | 6 |
| கி.பி, 1605-21 | 1605-22 | 1605-21 | 1604-21 |
| 1622-35 | 1627-36 | 1621-35 | 1621-35 |
| 1635-46 | 1636-45 | 1635-45 | 1635-45 |
| 1647-72 | 1645-70 | 1645-72 | 1645-70 |
| 1672-... | 1670-... | 1672-... | 1670-73 |
| 1673-... | — — | ... ... | — — |
| 1674-10 | 1671-10 | 1673-08 | 1673-08 |
| 1711-25 | 1710-20 | 1709-23 | 1707-23 |
| 1726-... | 1720-... | 1723-24 | 1724-... |
| 1726-29 | 1720-29 | 1724-28 | 1724-28 |
| 1730-35 | 1748-61 | 1728-34 | 1728-34 |
| 1736-48 | 1735-46 | 1734-47 | 1734-47 |
| 1748-49 | 1747-... | 1747-48 | 1747-48 |
| 1749-62 | 1748-61 | 1748-60 | 1748-60 |
| 1763-72<br>1782-95 | 1761-72 | 1760-94 | 1760-94 |

# மேற்கோள் நூல்கள்


| | |
|---|---|
| Wilhem Geiger | THE MAHAVAMSA or the Great Chronicle of Ceylon (Ceylonl Government Publication.) |
| C. Rasanayagam | ANCIENT JAFFNA (The History of Jaffna from very early times to the Portuguese Period) |
| Edgar Thurston | THE CASTES AND TRIBES OF SOUTHERN INDIA-Vol. V |
| N. Vanamamalai Pillai | THE SETHU AND RAMESWARAM |
| Robert Sewell | A SKETCH OF THE DYNASTIES OF SOUTHERN INDIA. |
| Burton Stein | ESSAYS ON SOUTH INDIA |
| Busnagi Rajannan & Tamizh Nadan | SOUTH INDIAN STUDIES (Abstracts of American Doctoral Dissertations relating to South India) |
| A.V. Subramania Aiyer | TAMIL STUDIES (Second Series) |
| William H. Prescott | CONQUEST OF PERU |
| Henry Doering, S.J | FROM ROYAL PAGE TO MARTYR-The Blessed John De Britto—1647-93 (The Original by H.Hennessy was based on Dr. Bittner's German translation of the life of John De Britto by Father Prat in French) |

| | |
|---|---|
| Joseph C. Houpert, S.J. | THE MADURA CATHOLIC MISSION FROM 1535 TO 1935. |
| Rev.L.Besse, S.J | FATHER BESCHI OF THE SOCIETY OF JESUS — HIS TIMES AND HIS WRITINGS. |
| W. Francis, I.C.S., | MADURA DISTRICT GAZETTEER-Vol I |
| Dr. A. Ramaswami | RAMANATHAPURAM DISTRICT GAZETTEER. |
| H.R.Pate, I.C.S., | TINNEVELY DISTRICT GAZETTEER. |
| K.R.Venkatarama Ayyar | A MANUAL OF PUDUKOTTAI STATE. |
| S.Radhakrishna Ayyar | A GENERAL HISTORY OF THE PUDUKKOTTAI STATE. |
| T.Rajaram Row | RAMNAD MANUAL |
| Dr.R.Nagaswami & N.S.Rameswami | RAMANATHAPURAM DISTRICT ARCHAEOLOGICAL GUIDE. |
| Lt.Col. F.G.Phythian Adams | THE MADRAS SOLDIER |
| Swami Vivekananda | LECTURES FROM COLOMBO TO ALMORA |
| Dr.K.Rajayyan | RISE AND FALL OF POLIGARS OF TAMILNADU |
| Prof. S.Krishnaswamy Aiyangar | SOUTH INDIA AND HER MUHAMMADAN INVADERS. |
| Prof. K. A. Nilakanta Sastri | FOREIGN NOTICES OF SOUTH INDIA |
| Dr.N.Subrahmanian | HISTORY OF TAMILNAD 1565-1956. |
| R.Edwin Rajan & D. Gnanasekar | HISTORY OF TAMILNADU FROM VISWANATHA NAYAKA TO M.G. RAMACHANDRAN |
| Prof.R.Sathyanatha Aiyar | A HISTORY OF THE NAYAKS OF MADURA |

| | |
|---|---|
| Bishop R. Caldwell | A HISTORY OF TINNEVELY (Asia Educational Services, New Delhi) |
| V. Vridhagirisan | THE NAYAKS OF TANJORE |
| Dr. S. Kadhirvel | A HISTORY OF THE MARVAS |
| Prof. S. Thiruvenkatachari | THE SETUPATIS OF RAMNAD |
| B. Arunachalam | THE HISTORY OF THE PEARL FISHERY OF THE TAMILL COAST. |
| Alfred Clark | CEYLON (Macmillan Company, London) |
| Taylor | MANUSCRIPTS OF MAC-KENZIE'S COLLECTIONS |
| Taylor | A DESCRIPTIVE CATALOGUE OF THE TAMIL MANUSCRIPTS IN THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS. |
| V. L. Sastri | ENCYCLOPAEDIA OF THE MADRAS PRESIDENCY AND THE ADJACENT STATES - 1920 — 21 (The Oriental Encyclopaedic Publishing Company, Cocanada) |
| சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் பதிப்பித்த | ''இராம(ப்ப)ய்யன் அம்மானை'' |
| க. சி. கமலையா | ''இராமப்பய்யன் அம்மானை - ஓர் ஆராய்ச்சி. |
| கா. நயினார் முகமது பதிப்பித்த | அமுதகவிராயரின் ''நாணிக் கண் புதைத்தல் எனும் ஒருதுறைக் கோவை'' |
| சு. இராமச்சந்திரன் பதிப்பித்த | கடிகை முத்துப் புலவரின் ''மதன வித்தார மாலை'' (கழகவெளியீடு) |

| | |
|---|---|
| இரா. நிர்மலாதேவி (பதிப்பாசிரியர்) | சொக்கநாதக் கவிராயரின் பண விடுதூது (உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு) |
| மு. இராகவையங்கார் | பெருந் தொகை பாடல் திரட்டு (மதுரைத்தமிழ்ச் சங்க வெளியீடு) |
| டாக்டர் எஸ். முகமது உசைன் நயினர் | செய்தக்காதி நொண்டி நாடகம் (சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு) |
| சி.கு. நாராயணசாமி முதலியார் | படிக்காசுப்புலவர் சரிதம் |
| கண்ணதாசன் | கண்ணதாசன் கவிதைகள் |
| தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் | பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி I, II |
| எஸ் குருஹதாசப்பிள்ளை | திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம் |
| கே. இராமசுவாமி அய்யர் | புதுக்கோட்டை ராஜ்ஜியச் சரித்திரம் பாகம் I, II |
| அ.கி. பரந்தாமனர் | மதுரை நாயக்கர் வரலாறு |
| வித்வான் அ. நாராயணசாமி | மருது பாண்டியர் வரலாறு |
| பி. முத்துத்தேவர் | மூவேந்தர் குலத்தேவமார் சமூக வரலாறு |
| ந.சி. கந்தையா பிள்ளை | திராவிடர் நாகரிகம் பகுதி I |
| இரா. தேவ ஆசீர்வாதம் | மூவேந்தர் யார்? |
| இரா. இராகவையங்கார் | சேதுநாடுந் தமிழும் |
| அ. சம்பந்த மூர்த்தி | வைகைக் கரையிலே |
| கி.வா. ஜகந்நாதன் | முந்நீர் விழா |
| ரா. பி. சேதுப்பிள்ளை | தமிழர் வீரம் |
| ஆ. சிங்காரவேலு முதலியார் | அபிதான சிந்தாமணி (An Encyclopaedia of Tamil Literature) |
| ந. சி. கந்தையா பிள்ளை | தமிழ்ப்புலவர் அகராதி |
| ந. சி. கந்தையா 'பிள்ளை | தமிழ் ஆங்கில அகராதி |
| தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்ட | கலைக்களஞ்சியம் தொகுதி V |

## இதழ்கள், மலர்கள், இன்ன பிற


| | |
|---|---|
| Dr. K. Seshadri | THE SETUPATIS OF RAMNAD (Doctoral dissertation submitted to the Madurai Kamaraj University 1976) TYPEWRITTEN SCRIPT (Unpublished) |
| — — — | ABSTRACTS OF PAPERS read at THE II INTERNATIONAL CONFERENCE - SEMINAR OF TAMIL STUDIES Madras 1968 |
| N. Subrahmanian (Ed) | ,'TAMIL STUDIES" (Quarterly) July 1982 (International Institute of Tamil Historical Studies, Madurai) |
| — — — | THE HINDU/15-3-1964 |
| டாக்டர் இரா. நாகசாமி | இராமநாதபுரம் சேதுபதி அரண்மனை— இராமலிங்க விலாசம் தொல்பொருளாய்வுத் துறை வெளியிட்டுள்ள துணை மடல் |
| — — — | இராமநாதசுவாமி (இராமேசுவரம்) திருக்கோயில் கும்பாபிஷேக மலர், 1975 |
| சென்னை அரசாங்க செய்தித்துறை (1957) | 1857 விடுதலைப் போராட்ட நூற்றுண்டு விழா மலர். |
| — — — | செந்தமிழ் திங்களிதழ் (சோபகிருது மார்கழி, தை) மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு-தொகுதி 2 |
| — — — | செந்தமிழ்ச் செல்வி (திங்களிதழ்) 1935 தொகுதி xiv பிப்ரவரி-மார்ச், ஜூலை- ஆக, ஆக-செப், நவ-டிச இதழ்கள் |
| — — — | தினமலர் 12-4-81 |

இணைப்பு : 5

# கிழவன் சேதுபதியின் முன்னோர் - வம்சாவளி

(Robert Sewell's "A SKETCH OF THE DYNASTIES OF SOUTHERN INDIA"-வில்உள்ள வம்சாவளியைத் தழுவியது)

## கொடிவழிப் பட்டியல்

- சடைக்கத்தேவர் உடையன் சேதுபதி
  - கூத்தன் சேதுபதி
  - கங்கை நாச்சியார்
    - ரகுநாதத்தேவர் என்ற திருமலை சேதுபதி
    - தனக்கத் தேவர்
    - நாராயணத்தேவர்
      - சூரியத்தேவர்
        - இரண்டாவது ரகுநாதத்தேவர் என்ற கிழவன் சேதுபதி
        - செல்லத் தேவர்
        - தண்டாரத் தேவர்
  - இரண்டாவது சடைக்கத் தேவர் என்ற தளவாய் சேதுபதி
  - பெத்தன நாயக்கர் என்ற தம்பித் தேவர்

84180
V2196
N83

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | அடிக்குறிப்பு எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 22 | 20-21 | | புருஷன் மிருதன், ஆனல் | புருஷன் மிருதன் ஆனல் (இறந்து விட்டால்) |
| 27 | 14 | | என்றும் பராக்கிரமபாகு | மூன்றும் பராக்கிரமபாகு |
| 31 | | 23 | expuesion | expulsion |
| 37 | 20 | | எஸ், வேங்கடாச்சாரியின் | எஸ். திருவேங்கடாச்சாரியின் |
| 43 | | 10 | Sewel's | Sewell's |
| 47 | | 23 | Robert Sewel | Robert Sewell |
| 61 | 29 | | அமரச் செய்தவன் | அமரச் செய்தான் |
| 75 | | ⭑ | தென்கரையில் | தென்கிழக்குக் கரையில் |
| | | | L.C. Richared | L. C. Richard |
| 89 | | 6 | the palace of the being in Liston | the palace of the King in Lisbon |
| 107 | | 3 | P. Sathyanatha MARUA | R: Sathyanatha MADURA |
| 127 | 5 | | புலவர்களால் புகழ் பெறும் | புலவர்களால் புகழப்பெறும் |

## ○ குறிப்புரை ○

28-5-1932 ஆம் நாள் மீனாட்சி சுந்தரம் —இலக்குமி தம்பதியினரின் மூத்த மகனாகப் பிறந்த இந்நூலாசிரியர் கல்வி பயின்றது முகவை அரசர் மேல்நிலைப் பள்ளியிலும் மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும். கவிஞர் மீரா இவர் தம்பியாவார்.

இவரது முதல் நூல் ''தென் அமெரிக்காவின் சோழர்கள்'' 1976-இல் வெளியிடப்பெற்றது.

மானிடவியல், வரலாறு மற்றும் இலக்கியத்திறன் குறித்த இவரது கட்டுரைகள், கலைக்கதிர், அணுக்கதிர், முத்தாரம், திராவிட நாடு, அறப்போர், ஆராய்ச்சி, அன்னம் விடு தூது SPAN, *KURAL NERI*, *LITTCRIT* முதலிய இதழ்களில் வெளிவந்துள்ளன.

அவற்றுள் சில, பத்திரிகைகளின் பாராட்டையும் பெற்றுள்ளன.

இவர் தமிழ்நாடு நீதிஅமைச்சியல் துறையில் பணியாற்றுகிறார்.

'தென் அமெரிக்காவின் சோழர்கள்' பற்றி வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் கே. சேஷாத்ரி ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' (13-1-79) இதழில் எழுதிய மதிப்புரையில் ஒரு பகுதி;

''*In the book the author discusses striking similarities between the later Cholas of South India and the Mayas and Incas of South America in their customs and manners in the course of seven conveniently divided chapters. With an excellent forward from the reputed historian Dr. N. Subrahmanian, the book is well documented and will be of real use to those interested in comparative study of the two cultures.*